பூசலார் நாயனார் சரித்திரம்



தரணி அச்சகம்
சர் கிருஷ்ணராவ் ரோடு, பித்தாபுர நகர்
தேனாம்பேட்டை, சென்னை
1949

இப் புராணம் கிடைக்குமிடம் :

தரணி அச்சகம்

சர் கிருஷ்ணராவ் ரோடு, பித்தாபூரநகர
தேனாம்பேட்டை, சென்னை 18.

திருநீலகண்டதேவர்
நேட்டிவ் டாக்டர்

ராஜராஜேஸ்வரி வைத்தியசாலை

திருவின்நகர்

உ

சிவமயம்.

பூசலார் நாயனார் புராணம்

1. அன்றினார் புரமெ ரித்தார்க் காலய மெடுக்க வெண்ணி
யொன்றுமங் குதவா தாக வுணர்வினா லெடுக்குந் தன்மை
நன்றென மனத்தி னாலே நல்லவா லயந்தான் செய்த
நின்றவூர்ப் பூசலார்தந் நினைவினை யுரைக்க லுற்றாம்.

2. உலகினில் ஒழுக்கம் என்னும் உயர்பெருந் தொண்டை நாட்டு
நலம்படு சிறப்பின் மிக்க நான்மறை விளங்கு மூதூர்
குலமுதற் சைவம் என்றும் குறைவிலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வம் மல்கி நிகழ்திரு நின்ற ஊராம்.

3. அருமறை மரபு வாழ அப்பதி வந்து சிந்தை
தருமுணர் வான எல்லாம் தம்பிரான் கழல்மேற் சார
வருமுறை மாறு அன்பு வளர்ந்தெழ வளர்ந்து வாய்மைப்
பொருள்பெறு வேத நீதிக் கலையுணர் பொலிவின் மிக்கார்.

4 "அடுப்பது சிவன்பால் அன்பர்க்(கு) ஆம்பணி செய்தல்" என்றே
கொடுப்பதற் கவையுந் தேடி அவர்கொளக் கொடுத்துக் கங்கை
மடுப்பொதி வேணி ஐயர் மகிழ்ந்துறை வதற்கோர் கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டார் இருநிதி இன்மை எண்ணார்.

5. மனத்தினாற் கருதி எங்கும் மாநிதி வருந்தித் தேடி
"எனைத்துமோர் பொருட்பே றின்றி என்செய்கேன்" என்று நைவார்
நினைப்பினால் எடுக்க நோக்கி நிகழ்வுறு நிதியமெல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையால் திரட்டிக் கொண்டார்

6 சாதனத் தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக் காலயஞ்செய் நலம்பெறு நன்னாட் கொண்டே
ஆதரித் தாக மத்தால் அடிநிலை பாரித் தன்பால்
காதலிற் கங்குற் போதும் கண்படா தெடுக்க லுற்றார்.

7. அடிமுதல் உபானம் ஆதி யாகிய படைக ளெல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்ற மனத்தினால் வகுத்து மான
முடிவுறு சிகரந் தானும் முன்னிய முழத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக் கோயில் நிரம்பிட நினைவால் செய்தார்.

8. தூபியும் நட்டு மிக்க சுதையுநல் வினையுஞ் செய்து
கூவலும் அமைத்து மாடு கோயில்சூழ் மதிலும் போக்கி
வாவியுந் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து மன்னும்
தாபனஞ் சிவனுக் கேற்க விதித்தநாள் சாரு நாளில்,

9. காடவர் கோமான் கச்சிக் கற்றளி யெடுத்து முற்ற
மாடெலாஞ் சிவனுக் காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமால் அறியா தாரைத் தாபிக்கும் அந்நாள் முன்னாள்
ஏடலர் கொன்றை வேய்ந்தார் இரவிடைக் கனவில் எய்தி,

10. "நின்றவூர்ப் பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து நாளைநாம் புகுவோம் நீ இங்(கு)
ஒன்றிய செயலை நாளை ஒழிந்துபின் கொள்வாய்" என்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில்கொண் டருளப் போந்தார்

11. தொண்டரை விளக்கத் தூயோன் அருள்செய்த துயிலை நீங்கித்
திண்டிறல் மன்னன் "அந்தத் திருப்பணி செய்தார் தம்மைக்
கண்டுநான் வணங்க வேண்டும்"; என்றெழுங் காத லோடும்
தண்டலைச் சூழல் சூழ்ந்த நின்றவூர் வந்து சேர்ந்தான்.

12. அப்பதி அணைந்து "பூசல் அன்பர்இங்கு, அமைத்த கோயில்
எப்புடை யது?" என் றங்கண் எய்தினர் தம்மைக் கேட்க,
"செப்பிய பூசல் கோயில் செய்ததொன் றில்லை" என்றார்
மெய்ப்பெரு மறையோ ரெல்லாம் வருகவென் றுரைத்தான் வேந்தன்

13. பூசுரர் எல்லாம் வந்து புரவலன் தன்னைக் காண
"மாசிலாப் பூச லார்தாம் யார்?" என மறையோர் எல்லாம்
"ஆசில்வே தியன் இவ் ஊரான்" என்றவர் அழைக்க ஒட்டான்
ஈசனார் அன்பர் தம்பால் எய்தினான் வெய்ய வேலான்

14 தொண்டரைச் சென்று கண்ட மன்னவன் தொழுது நீங்கிக்
கெண்திசை யோரும் ஏத்த எடுத்தவா லயந்தான் யாதிங்
கண்டநா யகனைத் தாபித் தருளுநாள் இன்றென் றும்மைக்
கண்டடி பணிய வந்தேன் கண்ணுதல் அருள்பெற் றென்றான்.

15. மன்னவன் உரைப்பக் கேட்ட அன்பர்தாம் மருண்டு நோக்கி
என்னையோர் பொருளாக் கொண்டே எம்பிரான் அருள்செய் தாரேல்
முன்வரு நிதியி லாமை மனத்தினால் முயன்ற கோயில்
இன்னதாம் என்று சிந்தித் தெடுத்தவா றெடுத்துச் சொன்னார்.

16. அரசனும் அதனைக் கேட்டங் கதிசயம் எய்தி என்னே
புரையறு சிந்தை யன்பர் பெருமையென் றவரைப் போற்றி
விரைசெறி மாலை தாழ நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து
முரசெறி தானை யோடு மீண்டுதன் மூதூர்ப் புக்கான்-

17. அன்பரும் அமைத்த சிந்தை ஆலயத் தரனார் தம்மை
நன்பெரும் பொழுது சாரத் தாபித்து நலத்தி னோடும்
பின்பூச னைகள் எல்லாம் பெருமையிற் பலநாட் பேணிப்
பொன்புனை மன்று ளாடும் பொற்கழல் நீழல் புக்கார்

18. நீண்டசெஞ் சடையி னார்க்கு நினைப்பினாற் கோயி லாக்கிப்
பூண்டவன் பிடைய ருத பூசலார் பொற்றாள் போற்றி
யாண்டகை வளவர் கோமா னுலகுய்ய வளித்த செல்வப்
பாண்டிமா தேவி யார்தம் பாதங்கள் பரவ லுற்றேன்.

சிவமயம்.

பூசலார் நாயனார் சரித்திரம்

'சான்றோ ருடைத்து' என்னும் பெருமை வாய்ந்த தொண்டை நாட்டிலே சீலம் நிறைந்த மறையவர் சிறப்போடு வாழ்ந்திருந்த செல்வம் நிறைந்த ஊர் *திருநின்றவூர் என்பது. அந்தத் திருநின்றவூரிலே, சிவபெருமான் திருவடியில் மாறாத அன்பு வளர்ந்தெழுந்த மனத்தவரும், வாய்மை வழியைக் காட்டும் வேத நீதிக் கலைகளை உணர்ந்த அறிவினரும், சிவனடியார்க்குப் பணி செய்வதே தக்கதென உணர்ந்து தாம் எவ்வகையால் தேடிய பொருள்களையும் அவர்க்கே அளித்து வந்தவருமான ஒரு பெரியார் இருந்தார். அவர் தாமிடத்துப் பொருள் இல்லாமையையும் எண்ணாது, சிவபிரான் மகிழ்ச்சியுடன் வீற்றிருந்தருளுவதற்கு ஒரு கோயில் கட்டுதற்கு எண்ணங் கொண்டார். அந்த எண்ணத்துடன் பல இடங்களிற் பொருள் பெற முயன்றார். பொருளோ கிடைக்கவில்லை. என் செய்வேன் என மனம் நொந்தார். நன்று; என் மனத்தாலேயே பொருள் சேர்ப்பேன்; மனத்தினாலேயே கோயில் ஒன்று எடுப்பேன் என ஓர் உறுதி கொண்டு வேண்டிய பொருள்களை மனத்தினாலேயே திரட்டிச் சேர்த்தார். கட்டடத்துக்கு வேண்டிய கல், மரம் முதலிய சாதனங்களைச் சேர்த்தார். தச்சர், கொல்லர் முதலிய பணியாளர்களையும் மனத்தினாலே ஏற்பாடு செய்தார். ஒரு நல்ல நாளிற் கட்டடத்தை மனத்தாற் கட்ட ஆரம்பித்தார். ஆகம விதிப்படி அஸ்திவாரம் நியமித்தார். இரவிலும் துயில் கொள்ளாமல் கட்டட வேலையை ஒன்றன்பின் ஒன்றாக மனத்தினாலே பூர்த்தி செய்து வந்தார். ஸ்தூபி, மதில், கிணறு, குளம் முதலிய மனத்தினால் வகுத்தார். இங்ஙனம் பலநாள் மனத்தினால் பல பாகங்களையும் அமைத்து வகுத்துக் கோயில் வேலைகளை முற்றுவித்தார். பின்பு தாம் கட்டிய மனக் கோயிலில் இறைவனைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்ய ஒரு தக்க நாள் குறித்தார்.

இது இப்படி யிருக்க காடவர் ராஜன் காஞ்சீபுரத்தில் சிவபிரானுக்குக் கற் கோயில் ஒன்று கட்டிப் பெருந் தொகை செலவிட்டு லிங்கப்பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்ய எண்ணித் தக்கதொரு நாள் குறிப்பிட்டு வைத்தான். அவன் ப்ரதிஷ்டை செய்ய எண்ணிய தினத்துக்கு முன் நாள் இரவில் சிவபிரான் அவனுடைய கனவில் தோன்றி "திருநின்றவூரிலுள்ள அன்பன் "பூசல்" என்பான் பல நாள் நினைந்து நினைந்து செய்த பெரிய ஆலயத்துக்கு நாம் நாளைக்குப் புக இருக்கின்றோம். நீ இங்கு செய்ய இருக்கும் பிரதிஷ்டை வேலையை

---

* இது 'தின்னனூர்' என வழங்கும்; சென்னை அறக்கோணம் ரெயில் பாதையில் சென்னைக்கு 20 மைல் தூரத்திலுள்ளது ரெயில் ஸ்டேஷன்.

ஜெய் ஹிந்த்

எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது நன்றி

மேலும் தேவையைப் பூர்த்தி செய்ய காத்துக்கொண்டு இருக்கின்றோம்

ஸ்ரீ கிருஷ்ணா மெட்டல் கம்பெனி,

அலுமினியப் பாத்திர உற்பத்தியாளர்

மொத்தம் & சில்லறை வியாபாரம்

5/1, ஈவினிங் பஜார், சென்னை 3.

(தொழிற்சாலை : [illegible])

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான

அலுமினியப் பாத்திரங்களை

TRADE

PURE ALLUMINIUM JAIHIND S.K.M.C. GUARANTEED

MARK

உயர்ந்த அலுமினியக் கட்டிகளிலிருந்து அழகு, உறுதி, பளபளப்பு

இவையனைத்தும் ஒருங்கே அமைந்த

அலுமினியப் பாத்திரங்களை தயார்செய்கிறோம்

மிகக் குறைந்த ஹோல்சேல் ரேட்டுகள்

நேரில் அல்லது தபால்மூலம்

உங்கள் தேவைகளைக் கேளுங்கள்

வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன்

கவனிக்க வருகிறோம்.

உ



வேலு மயிலுந் துணை

நெய்வேலி வில்லுடையான்பட்டி தலவரலாற்றுச் சுருக்கமும் அருட்புகழும்

சுபகிருது வருஷ பங்குனி உத்திரத் திருவிழா (7—4—63)
அன்று வெளியிடப்பட்டது.

விலை 50 காசு

உ

வேலுமயிலுந்துணை.

நெய்வேலி வில்லுடையான்பட்டி

தலவரலாற்றுச் சுருக்கமும் அருட்புகழும்

ஆசிரியர்கள் :

உயர்திருவாளர் S. S. சென்றாயனாரும்

அருட்கவி S. V. சேதுராமனாரும்

வெளியிடுவோர் :

N. நாராயணய்யர்,

G-51, பார்க் வெஸ்ட் ரோடு, பிளாக் நெ. 24,

புதுநகர், நெய்வேலி-1.

சுபகிருது வருஷ பங்குனி உத்திரத் திருவிழா (7-4-63) அன்று வெளியிடப்பட்டது.

 ஏப்ரல் 1963 [விலை 50 காசு.

முதற் பதிப்பு : 2000 பிரதிகள் — ஏப்ரல் 1963

இந்நூல் கிடைக்குமிடங்கள் :

ஸ்ரீ S. S. சென்றயனார்,
C-96, சுரங்கச் சாலை, பிளாக் நெ. 24,
நெய்வேலி-1.

❊

ஸ்ரீ S. V. சுப்ரமண்யம்,
141, லிங்க செட்டித் தெரு,
சென்னை-1.

❊

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அய்யர்,
போஸ்ட் மாஸ்டர்,
வேலுடையான்பட்டி.

உ

வேலும் மயிலும் துணை

முன்னுரை

நெய்வேலி வில்லுடையான்பட்டு தலவரலாறு சுருக்கமும் அருட்பாடல்களும் என்னும் இந்நூலிலுள்ள அருட்பாக்களை அருளியவர் அருட்கவி S. V. சேதுராமனார் ஆவர். இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள நாடார்குடி என்ற ஊரின்கண் அவதரித்தவர். சென்னை மாநகரில் கல்வி பயின்று, பணிபுரிந்து வருகிறார்.

இவரும் இவர் குடும்பத்தாரும் ஸ்ரீலஸ்ரீ வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகளின் அடியவர்கள் ஆவர். சுவாமிகளின் தனிக்கருணையினால் இவர் திருப்போரூர் முருகவேளிடமிருந்து "ஹர ஹரோ ஹரா கும்மி 108" என்ற பாடலை கிடைக்கப் பெற்றார். இத்தெய்வ நூலை கிடைக்கப்பெற்றபின் இவருக்கு எல்லாம் வல்ல இறைவனின் பூர்ண அருள் கிடைக்கப்பெற்றவராய் விளங்குகிறார்.

இவர் ஆண்டவனின் முன் நிற்கும்போது தன்னை மறந்து திருவருளில் தோய்ந்து தமது சுய முயற்சி சிறிதும் இன்றி அருட்பாடல்கள் இவர் உள்ளத்திலிருந்து இயல்பாக ஊற்றெடுத்துப் பொங்கி வழிகின்றன. இவர் படித்திராத, கேட்டறிந்திராத பல சமயச் செய்திகளும், வரலாறுகளும், பல்வகைப்பட்ட பா இனங்களும் பாடப் பெறுவது அருளின் பொங்கி வழிந்தமை என்பதற்குச் சான்று வேறு தேவையில்லை.

முருகக் கடவுள் தமிழ்க் கடவுள், தமிழ்ப் பிரியர், தமிழ் விநோதர், தமிழ்க் குரு, தமிழ்ப் புலவர், தமிழ்ப்பித்தர், முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவர். இவ்வுண்மையினை மெய்ப்பிக்க அருட்கவி அவர்களை இங்கு வந்து தம்மைப் பாடச் செய்து தம் வரலாற்றையும், தமிழ்ப்பற்றுக் கொண்டவர் என்பதனையும், தம் ஆற்றலையும், தம்மை அன்புடனழைப்பவர்களை ஆதரிப்பவன் என்பதனையும், நெய்வேலி இனி உலகில் சிறப்பிடமாகத் திகழ இருப்பதனையும் இவ்வருட்பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளதைக் காணலாம்.

இவரது தமையனார் அருளிசை S.V. சுப்ரமணியம் அவர்கள் உடனிருந்து பாடும்பொழுது பிழையற குறித்துக்கொள்வது நம் பெரும் பாக்கியமாகும். இப்பாடல்களுக்கு பதவுரை, கருத்துரை இவரே எழுதியிருப்பது மிகப் போற்றத்தக்கது.

திருப்போரூர் முருகனால் அருட்கவி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட "ஹர ஹரோ ஹரா கும்மி 108" என்னும் புத்தகம் அன்பர் திரு. S. S. சென்றாயன், C-66, சுரங்கச்சாலை, பிளாக் 24, புதுநகர், நெய்வேலியில் கிடைக்கும். இதில் இவர் அருள்பெற்ற முறையைக் காணலாம். இப்பாடல் பாராயணத்திற்குரியது.

இந்நூலை பக்த கோடிகள் அனைவரும் பெற்று முருகனைத் துதித்து அருள்பெற்று உய்யுமாறு வேண்டுகிறேன்,

F-12, அஞ்சல் அலுவலகச்சாலை,
பிளாக் 16.
புதுநகர், நெய்வேலி-1.

இங்ஙனம்,
B. சுப்ரமணியம்.



வள்ளியம்மை தேவசேனா ஸமேத முருகப்பெருமான்
உற்சவ மூர்த்தி

(ஸ்ரீ [illegible] கோயில்)

ஓம்

ஸ்ரீ ரெட்டியபட்டி சுவாமிகள் துணை

வில்லுடையான்பட்டி

தலவரலாறு

வேலுடையான்பட்டி, வேல்ராம்பட்டு என்று வழங்கப்படுகின்ற வில்லுடையான்பட்டி என்ற தலமானது தென்னார்க்காடு மாவட்டத்தில் வடலூர் புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே நாலுகல் தொலைவிலும் நெய்வேலி புதுநகருக்குக் கீழ்ப் புறத்திலும் அமைந்துள்ளது.

இக்கோயிலின்கண் முருகப்பெருமான் வள்ளியம்மை, தேவசேனா சமேதராய் எழுந்தருளியுள்ளார் ஸ்ரீமுருகன் திருக்கரங்களில் வில்லும் அம்பும் ஏந்தியவராய் விரிசடையுடனும் இடுப்பில் சல்லடந்துடனும் வேடர் கோலத்தில் ஒருமுகத்துடன் காட்சி அளிக்கிறார். வள்ளி தெய்வயானை இருவரும் இருபுறத்திலும் ஒரே கல்லில் நின்ற கோலத்தில் விளங்குகின்றனர். இது சுயம்புவாய் உள்ளது.

உற்சவமூர்த்தியும் திருக்கரங்களில் வில்லும் அம்பும் கொண்டு விரிந்த சடையுடன் வேடர் கோலத்தில் வள்ளி தெய்வயானையோடு மிக அற்புதமாய் நிற்கிறார். மேலும் விநாயகர், திரிசூலம், நடராஜர், சோமாஸ் கந்தர் முதலிய உற்சவ மூர்த்திகளும் உள்ளன. உட்பிராகாரத்தில் விஸ்வநாதர், விசாலாட்சி, தண்டபாணி ஆலயங்களும் தனித்தனியே அமைந்திருப்பதுடன் வடகிழக்குப் பக்கத்தில் சனி பகவானின் விக்கிரகமும் அமைந்து உள்ளது. வெளிப்பிராகாரத்தில் கலியாண மண்டபமும் நவக்கிரகங்களின் கோயிலும் விநாயகர் கோயிலும் யாகசாலையும் மடப்பள்ளியும் தனித்தனியே

அமைந்துள்ளன. மேலும் இக்கோயிலுக்குத் தென் கிழக்கில் ஐயனாருடைய குதிரைக்கு ஒரு கோயிலும் வீரனுக்கு ஒரு கோயிலும் சேர்ந்து அமைந்துள்ளன. மேலும் பலகுதிரை உருவங்களும் அமைந்துள்ளன. கோயிலின் அருகில் நல்ல தொரு நீரோடை ஓடுகிறது. படிக்கட்டுகளோடு ஒரு பெரிய திருக்குளமும் உள்ளது. கோயிலுக்குக் கிழக்கே அரச மரமும் வேப்ப மரமும் கூடியதாய் அதன்கீழ் நாகரும் விநாயகரும் பிரதிஷ்டை செய்யப்பட்டு நல்ல தொரு மேடையுடன் வழிபடும் முறையில் அமைந்துள்ளது. தலவிருக்ஷமும் வன்னி மரம்.

இத்தலத்தின் விசேடமானது ஸ்ரீ முருகன் தனக்குரிய வேலாயுதத்தைத் திருக்கரத்தில் கொள்ளாது வேடர் உருவத்தில் கையில் வில்லும் அம்பும் உடையவராய் இடுப்பில் சல்லடத்துடன், வள்ளி தெய்வயானை இருவரும் பக்கத்தில் நிற்க திருக்காட்சி அளித்து அருள்பாலிப்பது ***ஒப்பற்ற*** ஒரு அற்புத காட்சியாகும். (இத்தகைய காட்சியை ஸ்ரீ அருணகிரி நாதருக்குத் திருச்செந்தூரில் செந்தில் ஆண்டவனை "காலனார் வெங்கொடுந் தூதர்" என்ற திருப்புகழில், "சூலம் வாள் தண்டு செஞ்சேவல் ***கோதண்டமுஞ்*** சூடு தோளுந் தடந் திருமார்பும் தூயதாள் தண்டையுங் காண ஆர்வஞ் செயுந் தோகைமேல் கொண்டு முன்வர வேணும்" என்று திருப்புகழில் வேண்டுவதினால் முருகப்பெருமான் தன் பன்னிரு கரங்களில் வில்லையும் ஒரு ஆயுதமாகக் கொண்டுள்ளார் என்பதை அறிகிறோம்.)

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இம்மாவட்டமானது அடர்ந்த பெருங்காடாக இருந்தது. அப்போது அழகே உருவமான ஸ்ரீ முருகன் கையில் வில்லும் அம்பும் ஏந்திய வராய் வேடர் கோலத்தில் காட்சி அளித்திருக்கிறார் போலும். மேலும் ஸ்வாமி வளையாபதி சாந்தயோகி என்பவர் இங்கு வந்து தங்கியபோது தனக்கு "அருட்காட்சி ஈந்தருளிய முருகனின் அடிதொழுது அந்த ஆவேசத்தில் இந்நூலை எழுதினேன்" என்று எழுதியுள்ள நூலிலிருந்து நாம் அறிந்து கொள்வதாவது :—

'ஸ்ரீ சுப்ரமணியர் வள்ளியை மணம் செய்து கொள்ளச் சென்றபோது தேவர்களும் முனிவர் முதலானவரும் தேடி, சிதம்பரத்திலும் காணுது துதிக்க, "வடமேற்கே இரண்டரை காத தூரத்தில் நாம் காட்சி தருவோம்" என்று திருவாய் மலர்ந்தருளினுர். உடனே இடும்பன், வீரன், ஐயனுர் மூவரும் புறப்பட்டு வர ஒரு அழகிய சோலையின் இடையே ஜோதி வடிவைக் கண்டுகளித்தனர் பின்பற்றி வந்த சப்த கன்னிமார், முனிவர்கள், தேவர்கள் பூசாரிகுப்பம் அல்லது கன்னிமார் கோயில் என்ற இடத்திலிருந்தே தரிசனம் செய்தார்கள். தேவர் களும் முனிவர்களும் வேண்ட வள்ளி தெய்வயானையுடன் வில்லும் அம்பும் கொண்டு அழலுருவில் காட்சி அளித்தார். "வில்லும் அம்பும் கொண்டு காட்சியளித்ததால் இத்தலம் *"வில்லுடையான் பட்டி"* எனப் பெயர் பெறும் என அருளினுர், பிறகு வேலாயுதத்தை ஊன்றி ஒரு நீரோடை உண்டாக்கி 'இது சரவண தீர்த்தமாகும்' எனத் திருவாய் மலர்ந்தார். இதனுல் இப்பொழுது "வேல் ஊன்றினுன் பட்டி" என்றும் "வேலுடையான் பட்டி" எனவும் பெயர் வழங்கி வருகிறது. பிறகு ஒரு கல்லுருவமாய் மாறி பூமியின்கண் மறைந் தருளினுர்.

தற்போது 'வில்லேஜ் சமுர்த்தியார்'. என்ற பிரிவினரின் மூதாதையர்கள் சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன் இக் கோயிலைக் கட்டியதாகக் கூறப்படுகிறது. இன்றும் கோயிலில் திருவிழாக்களின் போது இப்பரம்பரையின் தலை வருக்கு முதல் மரியாதை அளிக்கப்படுகிறது. இவர்கள் வன்னியர் வகுப்பைச் சார்ந்தவர்களாவர். அருட்கவி சேது ராமனுர் அவர்கள், "பல்லவ வேந்துக்குள் மாகலை வல்லவனுஞ் சித்ர காடவ பல்லவன் வேண்டிச்செய் கோயில எனையாள் வாய்" என்று அருள் வாக்காய் அருளியுள்ளார். இதனுல் பல்லவ அரசருள் சித்ரகாடவ பல்லவன் என்பவர் விரும்பிக் கட்டிய கோயில் என்பது புலப்படுகிறது. இன்றுள்ள சமுர்த்தியார்களே பல்லவ பரம்பரையினர் என்று சிலர் கூறுகிறுர்கள்.

இவ்வரசனுடைய பசுக்கள் பால் கறவாமையைக் கண் ணுற்று, காட்டின் நடுவில் பசுக்கள் முருகப்பெருமான்

வள்ளியம்மை தேவசேனை சமேதராய் மறைந்த இடத்தில் தாமேபால் சொரிவதைக் கண்டார். அந்த இடத்தை தோண்டிப்பார்த்தார். ஒரே கல்லில் வேடர் கோலத்தில் கையில் வில்லும் அம்பும் கொண்டு இரு தேவிகளுடன் ஸ்ரீமுருகப் பெருமான் இருப்பதைக்கண்டு அதிசயத்தார். மண்வெட்டியால் முதலில் வெட்டியபோது தோளின் மேல் மண் வெட்டிபட்டு இரத்தம் கசிந்த இடம் இன்றும் யாவரும் காணத் தழும்பு உள்ளது. அன்றிரவு கனவில் கோயில் கட்ட உத்தரவு பெற்றவராய் பெருமகிழ்வோடு தற்போதுள்ள கோயிலை பெரியதாகத் திட்டமிட்டுத் திருப்பணி செய்து வழிபட்டு வரலாயினர்.

இதன் பிறகு வளவனூர் திரு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் வகையறுக்களால் நவக்கிரகங்களின் கோயிலும், கடலூர் திரு. ந. முத்துசாமி செட்டியாரவர்கள் துணைவியாரால் மண்டபமும், சென்னப்ப நாய்க்கன் பாளையம் திரு. இராஜ கோபால் செட்டியாரவர்கள் மூதாதையர் காலத்திலிருந்து தள வரிசைப்பணிகளும் நடந்திருப்பதாகத் தெரிகிறது.

இக்கோயிலுக்குத் தெற்கே இரண்டு கல் தொலைவில் சேப்பளாநத்தம் என்கிற செப்ப இளாநத்தம் என்ற இடத்தில் ஐயனார் கோயில் உள்ளது. சமீபத்தில் சமரச சுத்த சன்மார்க்க சங்கம் தோற்றுவித்தருளிய இராமலிங்க அடிகளார் ஏற்படுத்திய சத்திய ஞானசபையும், குறிஞ்சிப்பாடிக்கருகில் கன்னியார் கோயில் என்கிற பூசாரிகுப்பத்தில் சக்தியின் வடிவமாகிய பச்சை வாழியம்மன் கோயிலும், வெள்ளையங்குப்பத் (நெய்வேலி 27-வது பிளாக்) தில் ஸ்ரீசுப்பிரமணியர் கோயிலும், சீனிவாசப் பெருமாள் கோயிலும் அமைந்திருக்கின்றன.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி அருள் பாலித்த இம்மாவட்டத்தில் நடராஜப் பெருமான் சதா திரு நடம் புரிகின்ற உலக மையமாக விளங்கும் சிதம்பரத்திற்கும் ஐம்பூதங்களில் நடுவாகிய ஜோதி ரூபத்தில் ஞானிகள் கண்டு தரிசிக்கத் தக்கதாகும் சத்திய ஞான சபை விளங்கும் வடலூருக்கும் அருகே அமைந்துள்ள வேலுடையான்பட்டி

என்னும் இத்தலத்தில் இறைவன் வேட உருவத்தில் கிரியா சக்தி, இச்சா சக்தியாகிய தெய்வயானை வள்ளியுடன் அருள் பாலிக்கின்ற நிலை, நெய்வேலியில் இருந்து உலகம் உய்ய உழைக்கும் பலவிதத் தொழில் ஞானம் நிறைந்த அடியார்களை மாயையிலிருந்து விடுவித்து ஆட்கொள்ளும் பொருட்டே ஆகும் என நாம் நம்புவோமாக.

இத்தன்மை வாய்ந்த புண்ணியதலமாகும் வில்லுடையான் பட்டிக்கு அருட்கவி சேதுராமன் அவர்கள் 26—2—63 தேதி வருகை தந்து ஸ்ரீசிவ சுப்ரமணியத்தைத் தரிசனம் செய்து அருட்கவி அருளிச் செய்தனர்.

அவரது அருட்கவியில் "உயர் வில்லுடையான் பட்டி மேவிய பெருமாளே" என்றும், "நெய்வேலி யெனர் பாங்கர்க் கண் நீள்முது வேலுடையான் பட்டி வாழ்வுறு பெருமாளே" என்றும் வருவதனால் இத்தலத்தின் பெயர் அறியலாகும்.

"வேடனுயவன் வேலுடையான் பட்டி ஆடகக் குன்றை ஆதரஞ் செய்ம்மினே" என்பதனால் வேட உருவத்தில் தரிசனம் தருகிறார் என்பதை அறிகிறோம்.

"நெய்வேலி வில்லுடையான் பட்டி வேடனைப்போலி யின்றிப்புனைந்துரை செய்ம்மினே" என்பதனால் உண்மையான அன்புடன் துதிக்க வேண்டுமென்றும் அப்படித் துதித்தால்,

"நல்ல காலம் நமக்குண்டு ஞாலத்தீர்!
அல்ல வற்றை அகற்றி அருள்கென
மெல்ல வேலுடை யான்பட்டி வேளிடம்
சொல்ல வல்லிரேற் சோகம் தொலையுமே"

என்பதனால் நம் சோகம் தொலைந்து சுகம் உண்டாகும் என்றும் தெள்ளத் தெளிவாகிறது.

பொதுவாக இக்கோயிலைக் காணும்போது இது மிகப் பழமையானது என அறியலாகும். இதன்கண் விசாலமான இடமும் மண்டபமும் யாகசாலையும் அமைந்துள்ளன. பெரும் கற்களால் கோயிலும் மதிற்சுவரும் அமைந்துள்ளன.

ஓடையில் கற்களால் அமைந்த சிறந்த படித்துறை அமைந்திருந்ததின் ஒரு பகுதி இன்றும் காணக் கிடக்கிறது. முன்பு கூறியபடி அதன் அருகில் மிகப் பெரியதொரு திருக்குளம் நாற்புறமும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டு சிறப்புடன் விளங்கியதாகவும் இதன்கண் ஆண்டுதோறும் தெப்ப உற்சவம் மிகச் சிறப்பான முறையில் நடந்துவந்ததாகவும் முதியவர் சிலர் கூறுகின்றனர். இன்றும் தெப்ப உற்சவம் நடைபெற்று வருவது உன்னற்பாலது. சமீப காலத்திற்கு முன் இத்தலத்தில் புகழ்பெற்ற ஒரு நட்டுவனுர் இருந்தார் என்றும் அவரிடம் நம் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெண்கள் வந்து நாட்டியம் பயின்று சென்றதாகவும் தெரிகிறது. இக்கோயிலில் தேவதாசிகள் இருந்தார்கள் என்பதும் கருதத்தக்கது. மேலும் இப்பொழுது இருக்கும் தேர் அழகிய சிற்பங்கள் நிறைந்து விளங்குவது கருத்தில் கொள்ளத் தக்கது. இக்கோயிலுக்கு சென்னே, கடலூர், பண்ருட்டி முதலிய வெளியூர்களில் உபயக்காரர்கள் இருந்து திருவிழா நடத்துவதானது நாம் அறிந்ததாகும். பங்குனித்திங்களில் பத்து தினங்கள் பெருவிழாவாகப் பல கிராமத்தார்கள் ஒன்று சேர்ந்து நடத்திவருவதையும் காவடிகள் பல எடுத்து ஆடுவதையும் மிகப் பெரியதான பாதக்குறடு முதலியன காணிக்கையாக செலுத்துவதையும் நாம் இன்றும் காணலாம். இக்காரணங்களே எல்லாம் நாம் மனதில் கொண்டால் இத்தலம் மிகப் பழமையானது என்பதனே மறுக்க இயலாதது ஆகும். மேலும் "*நீள்முது* வேலுடையான்பட்டி" என்னும் அருட்கவி சேதுராமனுர் அருள்வாக்கைக் கருத்திற் காணும்பொழுது இத்தலத்தின் தொன்மை விளங்கும்.

நம் எல்லோரையும் மிக ஆச்சரியத்தில் ஆழ்த்துமாறு இப்பதிக்கு "நெய்வேலி" என்ற பெயரை யார் வைத்தார்களோ தெரியவில்லே. மிக யோசனேயுடன் பிற்காலத்தில் இது அடையும் சிறப்பினே அறிந்து தீர்க்கதரிசனமாக இதற்கு யாரோ எக்காலத்திலோ இப்பெயர் இட்டுள்ளார்கள். நெய்வேலி என்பதானது நெய் + வேலி எனப் பிரித்து நெய் = எரிபொருள் (லிக்னேட்), வேலி = இடம். எரியக்கூடிய பொருளாகிய நிலக்கரி உடைய இடம் என்ற பொருள் பொதிந்

துள்ள இப்பெயரினை நாம் இன்று நேரில் காண்கிறோம். மேலும் வடலூர் இராமலிங்க அடிகளார் "பொன்விளையும் பூமி" என்று கூறிப் போந்துள்ளதின் உண்மைப் பொருள் இப்பொழுது தெள்ளெனத் தெரிகிறது. இக்கரியின் நிமித்தமாக தோன்றும் பல தொழில்களாலும் அதன் மூலம் கிடைக்கப்படும் பொருள்களாலும் (பொன்) நம் நாடு மிகவும் பொருளாதாரத் துறையில் உயர்வு பெற இருப்பதை யாவரும் அறிவார்கள்.

நெய்வேலி வட்டத்தைச் சற்றுச் சிந்திந்துப் பார்த்தால் இதன் சிறப்பான அம்சம் தெரியவரும். நாம் இன்று தோண்டி எடுக்கும் லிக்னைட் என்கிற பழுப்பு நிலக்கரியானது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இம்மாவட்டம் ஒரு பெரிய அடர்ந்த காட்டுப்பிரதேசமாய் இருந்திருக்க வேண்டு மென்பதும் காடுகள் பலமுறை அழிந்து பூமியின் அதிர்ச்சியாலும் அழுத்த சக்தியாலும் இன்று நமக்குக் கரியாகக்கிடைக்கிறது என்பதும் நாம் யாவரும் அறிந்ததாகும். காடாக இருந்த காலத்தில் இதன்பால் அழகே உருவமான முருகன் கையில் வில்லும் அம்பும் விரிந்த சடையுடனும் இடுப்பில் சல்லடத்துடனும் வேடர் கோலத்தில் காட்சி தந்தருளியுள்ளார். முதன் முதலில் இவர் ஜோதி உருவத்தில் தோன்றினார் என்றும் பிறகு பூமியின்கண் மறைந்தார் என்றும் அறிகிறோம். மறைந்தவரைத் தோண்டி எடுத்துக் கோயில் அமைத்து வழிபட்டனர். நாம் இன்று பூமியில் மறைந்து கிடக்கும் பொருள்களை எடுத்து நம் உலகவாழ்விற்கு வேண்டிய பொருளையும் பொன்னையும் பெறுகிறோம். இது இன்னும் அதிகமாக வளர்ச்சி பெற்று நம் நாடும் உயர்வு பெறும் என்பது திண்ணம். இங்கு "வேலை யீதர வாய்ந்துற்ற பூமி நெய்வேலி வேலுடையான்பட்டி மேவிய பெருமாளே" என்பதையும் "மேதினி யோங்கற்கு மேவு நெய்வேலி யொர்பாங்கர்க்கண் நீள்முது வேலுடையான்பட்டி வாழ்வுறு பெருமாளே" என்ற அருள் வாக்கையும் காணலாம். இத்தகைய உயர்ந்த நிலையை அடையும் நம் நெய்வேலியில் பலதிறப்பட்ட மக்கள் பல துறைகளில் ஆற்றல் பெற்றவர்களாய் பணி புரிகின்றனர். இவர்களின் உலக வாழ்க்கையும் ஆன்ம வாழ்க்கையும்

உயர்வு பெறத்தக்கதாய் அமைந்துள்ளன. வேலுடையான் பட்டி சிவசுப்ரமணியன் அழகுருவமாய்க்காட்சி அளித்ததையே பின்பற்றி வள்ளலார் அவர்களும் ஜோதி தரிசனம் ஏற்படுத்தி சத்திய ஞான சபையை இங்கு நிறுவியுள்ளாரோ என வியப்படைகிறோம். மேலும் கிறிஸ்தவர்களும் முகமதியர்களும் புத்த மதத்தினரும் ஹிந்துக்களும் "**ஜோதி**" உருவத்தை ஏற்றுக்கொள்கின்றனர். இதனால் யாவரும் எந்தமதத்தினரும் எந்தக் கொள்கையுடையவரும் வழிபட ஞானசபை அமைந்திருப்பது சிறப்பினதாகும். இத்தகைய ஆண்டவன் அருளை நினைத்து உண்மை நெறியினை பின்பற்றுபவர்களுக்கு வேலுடையான்பட்டி காவலன் கையில் வில்லும் அம்பும் கொண்டு நம்மைக் காத்து சோகத்தை (பிறப்பை)த் தொலைத்துச் சுகத்தை அருளுவான் வேண்டியே இப்பதிக்கு அருகில் கோயில் கொண்டுள்ளான் போலும்!

இத்தல அமைப்பானது மேலும் ஆச்சரியப்படும்படி அமைந்துள்ளது. இத்தலத்தின் அடியில் மிகுந்த நீரும் அதன்மேல் எரிபொருளாகிய பழுப்பு நிலக்கரியும் இருக்க அவற்றின் மேல் தான் இருசக்திகளுடன் திருக்கோயில் கொண்டுள்ளார் முருகன். பக்கத்தில் வற்றா நீரோடை அமைந்துள்ளது. இந்நிலையைக்காணும்போது படை வீடுகளில் ஒன்றாகிய திருச்செந்தூர் தலத்தின் ஞாபகம் யாவருக்கும் வரும்.

உலகத்தவர் அனைவரின் கவனத்தையும் பெற்று விளங்கி வருகிற நெய்வேலிப் புதுநகரின் கண் கீழ்பால் அமைந்துள்ள வேலுடையான்பட்டிக் கோயிலானது இங்குள்ள அடியார்களின் தொண்டினால் சீரும் சிறப்பும் பெற்று வருகிறது. தற்போது கோயிலினுள் நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் வருமாறு செப்பனிடப்பட்டுள்ளது, சுவாமி உலாவர சகடை ஒன்று செய்யப்பட்டுள்ளது. மூலவருக்கும், விஸ்வநாதர், விசாலாட்சி, விநாயகர் முதலிய விக்கிரஹங்களுக்கும் வெள்ளி கவசங்கள் செய்யப்பட்டுள்ளன. வெளிப்பிராகாரத்தில் விநாயகருக்குத் தனி ஆலயமும் கட்டப்பட்டு வருகின்றது. நவராத்திரி, கந்தர்சஷ்டி, தைபூசம் முதலிய



[illegible]
S. V. [illegible]

[illegible]
S. V. [illegible]


விசேட உற்சவங்களில் லட்சார்ச்சனை நடைபெறுகிறது. மயில் வாகனம் புதுப்பிக்கப் பட்டு அதன்மேல் ஆண்டவன் அமர்ந்து புதுநகரின் கண் உலாவந்ததை யாவரும் தரிசித்து அருள் பெற்றனர். மேலும் அடியவர்கள் ஊக்கம் அதிகம் செலுத்தி அழியும் நிலையிலுள்ள பக்கத்து கோயில், நீரோடையிலுள்ள படித்துறை, திருக்குளம் ஆகியவற்றைச் செப்பனிட வேண்டும்.

இவ்வில்லுடையான்பட்டி நெய்வேலி கார்ப்பரேஷனால் எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. இக்கோயிலின் அடிப் பாகத்தில் பழுட்டு நிலக்கரி தோண்டி எடுக்கக்கூடிய அளவில் இல்லை என்று தெரிகிறது. எவ்வாறாயினும் கார்ப்பரேஷன் முன்வந்து மிகவும் பழமையாய்ச் சக்தி வாய்ந்த தெய்வம் விளங்கும் இக்கோயிலை நல்லமுறையில் சீர்திருத்தி என்றும் விளங்குமாறு செய்வது மிகவும் நல்லதாகும் என்று அடியார்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,

S. S. ரெங்கையன்,
ஆசிரியர்,
N. L. C. உயர்நிலைப்பள்ளி,
புதுநகர்.

நெய்வேலி - 1
2-4-63



உ

அருட்புகழ்
(26—2—1963)

நெய்வேலி—வில்லுடையான்பட்டி முருகவேள் திருக்கோயில்

முருகவேள் திருமுன்

சௌராஷ்டிரம்] 1. ஆளப்பெற [திரிபுடை

தய்யதனுந் தத்த தானன
தய்யதனுந் தத்த தானன
தய்யதனுந் தத்த தானன தனதான

கல்வமராம் பிச்சி கூவிளை
மௌவல்குராங் கொட்டி நிமைமலர்
கள்ளவிழ்பூஞ் செச்சை கோடல்மெல்லிய தாமரையாம்

கைதைவிளாங் கற்பு தாருவின்
நொய்யலர்கோங் கிற்பொ னுர்மலர்
கைரவமாம் பற்ற லரிமலர் கரவிரம்

பல்வகையாம் புட்ப ஜாதிகள்
வெளவமொடேந் தூற்ற நேரான்பிசை
பள்ளுவமேந் திக்கை யார்சரம் உடையானே—

பல்லவவேந் துக்குள் மாகலை
வல்லவனுஞ் சித்ர காடவ
பல்லவன்வேண் டிச்செய் கோயில! எனையாள்வாய்,

செல்வமுளான் பொற்கு பேரனெர்
கல்வியெலாங் கற்ற ஊரர்சொல்
தெய்விகவாஞ் சைச்சி நேகிதர் எனவேபேண—

செவ்வியகாஞ் சிப்பு ராதனர்
பவ்வியசாந் தத்து மாமகிழ்
திவ்வியதாம் பத்ய வாழ்வினன் முடிமேலே;

வில்வமுளான் புச்சி தாதகி
வெள்ளிலெலாங் கற்றை வேணியில்
வெள்ளிரவோன் பக்கல் சூடிறை மிகுநூப—

வெல்கொடியான் பச்சை மேனிகொள்
தொல்கொடியான் புத்ர னே! உயர்
வில்லுடையான் பட்டி மேவிய பெருமாளே.

வராளி) 2. ஆட்கொள்ளப்பெற (திரிபுடை

தானதனந் தத்த தானன
தானதனந் தத்த தானன
தானதனந் தத்த தானன தனதான

ஆணவமோகங் குற்ற வாழ்வினில்
ஆதரவாந் தற்ப மாயையில்
ஆயிரமாம் பற்று மாசையும் அகலாதே-
ஆழ்வுறுவேன் கெட்ட நோய்களில்
மாழ்குறுவேன் பற்றொ டாகமம்
ஆரணநான் கற்றி லேனக விடமூடே;

காணவமாம் பித்த ரோடுழல்
காரியனேன் கற்பி லேனுன
கால்பணியேன் கற்ற மூடரொ டெ துநாளுங்-
கால்தொடர்வேன் பச்சை மாமிசை
நீவரல்காண் டற்கெ னுவொரு
காலுமெணேன் பித்த னேனெனை இனிதாள்வாய்;

மானவமாஞ் சொற்ற மாமணி
பூணழகாம் பொற்பின் மார்பக
மாயவனும் பச்சை மால்திரு மருகோனே-
மாதவசாந் தத்து யோகியர்
பாதகமாந் தப்பி லாரவர்
வார்கழல்பூண் டர்ச்ச னைதிகள் புரிவார்தாம்;

வேணதெலாம் பெற்று வாழ்வுற
வீறுடனெய்ந் தற்பு நாரிகள்
வேளையொடாங் குச்செய் வேதியர் தலைவோனே-
மேதினியோங் கற்கு மேவுநெய்
வேலியொர்பாங் கர்க்கன் நீள்முது
வேலுடையான் பட்டி வாழ்வுறு பெருமானே;

மத்யமாவதி) 3. திருவருளை வியத்தல் (கண்ட ஏகம்

தத்த தானதனந் தத்த தானதனந்
தத்த தானதனந் தனதான

கற்ற மாதவர்தாஞ் சொற்ற தூநெறிபோங்
கற்பி லேனடியேன் கடைநாயேன்-
கற்றை வார்சடைவாய்த் துற்ற வேலவனுங்
கர்த்த னே! உனைவேண் டுவதேது;

சுற்ற மாய்சனிசூழ்ந் துற்ற மாதுணையாஞ்
சுத்த னே! இவன் வேண் டுவயாவும்-

சொற்றி டாமலெலாங் கற்று நீயறிவோன்
துற்று நாயடியேன் சொலலேதோ;

பெற்ற மேறிடுவான் பிச்சை போயுழல்வான்
பித்தர் போலவெலாந் திரிவான்மா-

பெத்தர் தாமறியான் புற்ற ராஅணிவான்
பெற்ற சேயவனுஞ் சிறியோனே;

பற்ற தார்சிவமாஞ் சத்தி காசியிலோம்
பத்ர காளிநெடூஉங் கணிபாலா-

பட்டை நீறணிசாங் தத்த வேலுடையான்
பட்டி வாழ்குருவாம் பெருமானே.

பியாகடை] 4. திருவடிமலர் பெற [கண்ட திரிபுடை

தய்ய தனுந் தத்தத் தனதான

1 பிள்ளையெலாம் பெற்றிட் டவள்போலே-
பிள்ளையனேன் சொற்குப் பரிவாகக்.

கொள்ளைகொளாண் சத்திக் குமரா! நாட்-
கொய்யலர்தாஞ் சற்றெற் குதவாயோ;

தள்ளையனுன் பச்சைத் திருமேனிச்-
சையமனுன் புத்ரிக் கொருகேள்வா;

வெள்ளையுபேந்த் ரற்குற் றுறவோனே-
வில்லுடையான் பட்டிப் பெருமானே.

நாதநாமக்ரியை] 5 கதிபெற [ஆதி

தான தானன தாந்தத்த தானன
தான தானன தாந்தத்த தானன
தான தானன தாந்தத்த தானன தனதான

ஏது காரணம் யான்சற்று மோர்கிலன்
ஏழை யேனெனை ஈண்டுற் றவாவுடன்
ஈச னீயழை ஆந்த்ரக்கு ணுதிச யமதேதான்-

ஏறு போல்நடை காண்டற்கு னேரெதிர்
வீறு சேவகர் தாஞ்சுற்ற மாயுற
ஈடி லாவகை நான்சொற்கள் பாடுதல் அறியாயோ;

காது கேள்தமிழ் வேண்டிக்கொ ளோ!பல
காலும் நானுனை ஆண்டிக்கு கா!எது
காலம் ஆள்வைகொல்! ஆண்டற்பு தாதிகள் புரியாயோ-

காரணு!என வேண்டிக்கொள் காரண
மோசொ லாய்!உமை கோன்பெற்ற காதல!
காயம் வாய்மன மூன்றுக்கும் நாயக! கதிதாராய்;

சாது பூஜித சேந்தப்பி ரான்!வடி
வேலும் நீள்விலும் ஏந்தப்பெ ருவுள
தாழும் வார்சடை வேந்தப்பி ரான்!உயர் கொடிசேவல்-

தாவு பாணிகொள் சாந்தப்பி ரான்!அபி
ராணி வானவர் கோன்புத்ரி மான்மகள்
தாவில் கானவர் கோன்புத்ரி மான்மகள் தழைதோகை;

மீது பாலுற ஏந்திக்கொ ளாசநனி
நீடு லாவரும் ஏந்தற்பி ரான்!அவர்
மேவு மோரிரு பாங்குற்ற தோருரு வுடையோனே-

வேலை சூழ்கடல் மாந்தர்க்கெ லாமிக
வேலை யீதர வாய்ந்துற்ற பூமிநெய்
வேலி வேலுடை யான்பாடி மேவிய பெருமாளே.

ஹரிகாம்போதி] 6. திருநாமோச்சாரணம் செய்ய [ஜம்பை;

தானதன தாந்தத்த தானதன தாந்தத்த
தானதன தாந்தந்த தனதானந் தந்ததான

காமமறு சாந்தத்தர் கோபமறு வாஞ்சித்தர்
கானிலுறை காந்தத்தர் கனஞானங் கண்டுமோனம்-

காணவிழை கோன்சத்தி பாணிசடை யான்சித்ர
காசினியெ லாம்பெற்ற கருணேசன் கந்தவேளெம்

சேம(ம்) நினை வோன்செட்டி யாயபெரு மான்சிட்டர்
தேவர்தொழு வாஞ்சைச்சொல் முருகேசன்
செந்திலோன்மெய்த்-

தேவகுரு தான்சொற்ற காதைசெவி வாங்கிக்கொள்
தேவனென யான்செப்பி நிதமோதும் பண்புதாராய்;

காமமுதல் மூன்றுக்கும் நாடரிய தாஞ்சத்தி
காரண! ம கேந்த்ரற்கு மருகோனென கண்டியூரா-

காதலிய ராஞ்சத்தி தாமிருவர் பாங்கர்க்கொள்
காவலக ஜேந்த்ரற்கொ ரிளையோனென் தண்டபாணீ;

நேமநெறி வாய்ந்துற்ற யோகியர்கள் காண்டற்கும்
நேடரிய நோன்புற்ற பெருமானென் சிந்துவேலா-

நீளயில்கொள் வான்பட்டி வேலியரு காம்பட்டி
நீள்விலுடை யான்பட்டி தனில்வாழுந் தம்பிரானே

சௌராஷ்டிரம்] முருகவேள் பதிகம் [ஆதி

(கலிவிருத்தம்)

7

இலகு ஞானியர் எண்ணுந்து ளேஉறை
தலக நாயக னான தயாபரன்
விலகுந் தீவினை *வில்லுடை யான்பட்டி*
உலக நாயகன் மைந்தனை ஓதுமே. (1)

8

காலி லேவிழுங் கண்ணியர் புண்ணியர்
வாலி தாம்வகை வாழ வுறி செய்நெய்
வேலி வேலுடை யான்பட்டி மேவிய
வேலி னானை விளம்புமின் மாந்தரே. (2)

9

நல்ல வர்க்கெலாம் நல்லவன், நண்ணரும்
பொல்ல வர்க்கெலாம் பொல்லவன், பொற்கையில்
வில்ல வன்விழை வில்லுடை யான்பட்டித்
தொல்ல வன்தனைத் தோத்திரஞ் செய்யுமே. (3)

10

நாட ருந்தவம் நண்ணிய வாழ்க்கையார்
தேட ருந்தெய்வத் தேசின் உருவினன்
வேட னுயவன் வேலுடை யான்பட்டி
ஆட கக்குன்றை ஆதரஞ் செய்ம்மினே. (4)

11

இரைந்தி ரைந்திசைத் தேந்துவார் தங்களைக்
கரைந்து காதலி னுற்கடைக் கண்செய
விரைந்து வந்தருள் வில்லுடை யான்பட்டித்
துரந்த ரற்குத் தொழும்புகள் செய்ம்மினே. (5)

12

முருக வென்று நீர்வண்ண மொய்ம்புறர்
மருக வேள்மயி லூர்தி யுறுவரை
வெருவ வேசெயும் வில்லுடை யான்பட்டி
ஒருவனைத்தினம் உள்குதி நெஞ்சமே. (6)

13

அகல்நெ டுங்கண்ணி அம்பிகை நந்தனன்
குகனெ னும்பெயர் கொண்ட குமரவேள்
மிகஅ மர்ந்தருள் வேலுடை யான்பட்டிப்
பகவனைப் பணிந் தால்விடும் பாவமே (7)

14

ஒன்று கூறுவன் நெஞ்சே! உணர்ந்துகொள்!
இன்று தொட்டென் றும் மறந்தி ருந்திடாய்!
வென்று சூரைக்கொல் வில்லுடை யானபட்டி
மன்று ளாடியை வாழ்த்துக் கடவையே (8)

15

பள்ள மின்றி யிருக்கலாம் நித்தமும்
வள்ளல் மாணிக்க வண்ணன் மகிழருள்
வெள்ள மாயவன் வேலுடை யான்பட்டி
உள்ள வன்தனை ஓதி உருகிலே. (9)

16

பணத்தைத் தேடிப் புதைத்துவை பாவிகாள்!
குணத்தைத் தேடிக் குமரனைக் கண்கொண்டு
விணத்தைச் சார்பொழில் வில்லுடை யான்பட்டி
மணத்தை நோக்கவும் வந்துவந் தார்மினே. (10)

17

போரில் வெல்லலாம் பொய்யின் விலகலாம்
சூரி னைத்தொலைத் தான்கழல் சொல்லியே
வேரி ருந்தருள் வேலுடை யான்பட்டி
ஆரி யன்றனை அண்டி அடைகிலே. (11)

18

பாலி னல்முழுக் காட்டல்கொள் பண்பினன்
நாலி ரண்டுரு வானவன் நங்கள்தெய்
வேலி வில்லுடை யான்பட்டி வேடனைப்
போலி யின்றிப் புனைந்துரை செய்ம்மினே. (12)

19

நல்ல காலம் நமக்குண்டு ஞாலத்தீர்!
அல்ல வற்றை அகற்றி அருள்கென
மெல்ல வேலுடை யான்பட்டி வேளிடம்
சொல்ல வல்லிரேற் சோகந் தொலையுமே. (13)

(வில்லுடையான்பட்டி முருகவேள் அருட்புகழ் முற்றும்)

௮

நெய்வேலி வில்லுடையான்பட்டி

அருட்புகழ் - பொழிப்புரை

கல்வம்-கழுநீர் மலர், மராம-வெண்கடம்பு, பிசி பிசிபூ, கூவிளம-வில்வம, மௌவல - முல்லை, குராம-குராமலா, கொட்டி-நீருகொட்டியென்னும் ஒருவகை நீர்ப்பூ, நில்மலா-நீலோறபலப்பூ, கள் அவிழ் - தேன்கமழும, பூஞ்செசசை - வெட்சிப்பூ, கோடல்-காந்தள் மலர், நெய்தலொடு-நெயதல் என்னும் நீரபூவோடு, ஆரம்-செஙகடம்பு, கைதை-தாழம்பூ, விளாம்-விளா இலை, கறபதாருவின்-கற்பகதருவின், நொய் அலா-மெல்லியபூ, கோஙகின்-கோஙகமரத்தின், பொன் ஆமலர்-அழகிய பூ, கைரவம-கைரவம் (செவ்வல்லி), ஆம்பல்-அல்லி, (வெள்ளல்லி) முதலிய, தணீர் மலர்-நீர்ப்பூக்கள், கரவீரம் - அலரி ஆதிய, பல்வகையாம் - பலதிறத்தனவான, புட்ப ஜாதிகள் - பூவகைகள், வெளவமொடு-தாமரைப்பூவோடு, ஏநதுற்ற-தாஙகியுள்ள, தோள்மிசை-திருத்தோளின்மேல், பள்ளுவம-வில்லை, ஏநதி-தாஙகி, கைஆர்சரம-கையிற்பொருந்திய அம்பையும். உடையானே-உடையவனே! பல்லவ வேந்துக்குள்-பல்லவ அரசாகளுள், மா - சிறநத, கலை வல்லவனும்-கலைகளில் வல்லமை பெற்றவனும், சித்ரகாடவ பல்லவன் - ‘சித்திர காடவ பல்லவன்’ என்ற திருப்பெயரையுடைய பல்லவஅரசன், வேணடிசசெய்-விரும்பிக் கட்டிய, கோயில்! - திருக்கோயிலையுடையவனே! எனை ஆள்வாய்-என்னை ஆட்கொள்வாயாக!, செல்வம் உளான்-நிறைநத செல்வமுடையவன், பொற்குபேரன்-அழகிய குபேரன், ஊா-ஒப்பறற, கல்வி எலாம் கற்றக-ல்விகளெல்லாம் கற்றறிந்த, ஊரா - ஆரூராகிய சுந்தரர் இவர்களை, சொல் - சொல்லபபடுகினற, தெயவீகவாஞ்சை-தெய்வீக அன்பு பொருத்திய, சிநேகிதா எனவே - நணபாகள் எனறு, பேண-விரும்புகின்ற, செவ்விய - செம்மையான, காஞ்சிப்புராதனா-காஞ்சீபுரத்திலுள்ள பழையவர், பவ்விய - பணிவுள்ள, சாந்தத்து சாந்தியோடு (அமைதியோடு) கூடிய, உமாமகிழ்; உமாதேவியாா மகிழ்கின்ற, திவ்விய-திவ்யமான, தாம்பத்ய வர்ழ்வினன்-தம்பதிவாழ்க்கை வாழ்கின்றவன், முடிமேலே-திருமுடியின்மேல், வில்வம் உனான-

வில்வ இலைகளைச் சூடினவன், புகசி - எருக்கு, தாதகி - ஆத்தி, வெள்ளில் எலாம் - விளா இலை இவற்றையெல்லாம், கற்றைவேணியில் - அடர்ந்த சடையின்மேல், வெள் இரவோன் பகல் - வெளுத்த சந்திரனுக்கருகே சூடு இறை - சூடிக்கொண்டுள்ள இறைவன், மிகு - (சிறப்பால்) மிக்க, நாக வெல் கொடியான் - ரிஷபக்கொடியாகிய வெற்றிக்கொடியையுடையவன், பச்சை மேனி கொள் - பசுமையான திருமேனியையுடைய, தொல் கொடியான - பழைய, கொடிபோல வாளாகிய பார்வதியை, உடையவனான சிவபிரானின், புத்ரனே - புதல்வனே! உயர் - (சிறப்பால்) உயர்ந்த, வில்லுடையான பட்டி - வில்லுடையான பட்டி என்னும் ஊரில், மேவிய - விரும்பி வீற்றிருக்கின்ற, பெருமாளே - பெருமைக்குரியவனே!

(என்னை ஆள்வாய் என்றபடி)

கருத்துரை :

சிவபிரான் குமாரனே! வில்லுடையான் பட்டிப்பெருமாளே! பல வகைய பூக்களணிந்த தோள்மீது வில்லும் அம்பும் ஏந்தியுள்ளவனே! சித்ரகாடவ பல்லவன் கட்டிய திருக்கோயிலில் இருப்பவனே! என்னை ஆட்கொள்வாயாக.

2

ஆணவம் மிகுந்த - அகங்காரம் மேம்பட்டுள்ள, வாழ்வினில் - வாழ்க்கையில் ஆதரவாம் - அதற்குப் பற்றுக்கோடாய் நிற்கின்ற, தற்ப மாயையில்; காயத்திலும், மாயா விகாரங்களிலும், ஆயிரமாம் பற்றும் - ஆயிரக்கணக்கான பற்றுதல்களும், ஆசையும் - பேராசைகளும், அகலாதே - நீங்காமல், ஆழ்வுறுவேன் - மூழ்கி நிற்பேன், கெட்ட நோய்களில் - கெடுதலான நோய்வகைகளில், மாழ்குறுவேன் - அழுகிப்போய் அழிவேன், பற்றொடு - ஆசையோடு, ஆகமம், ஆரணம் - சிவாகமம், வேதம் இவற்றையெல்லாம், நான் கற்றிலேன் - அடியேன் கற்றுக் கொண்டேனில்லை, அகலிடமூடே - அகன்ற பூமியின்மேல், காண் அவமாம் - காணப்படுகின்ற வீணான, பித்தரோடு - பித்துப்பிடித்த புலையர்களோடு, உழல் - திரிகின்ற காரியனேன் - செயல்களையுடையவன், கற்பிலேன்; நல்ல கற்பொழுக்கங்களில்லாதவன், உன் கால் பணியேன் - உன் திருவடிகளைத் தொழமாட்டேன், கற்றமூடரொடு - கல்வி கற்றும் அறிவில்லாத மூடஜனங்களோடு, எந்நாளும் - என்றைக்கும், கால் தொடர்வேன்; (அவர் வழியையே) பின்பற்றுவேன், பச்சைமாமிசை - பச்சைக்குதிரையாகிய மயிலின் மீது, நீ வரல் - நீ

திருவுலா வருதலைக், காண்டற்கு ஏறு — காண்பதற்கென்று, ஒருகாலும் எண்ணேன் — ஒருபோதும் எண்ணமாட்டேன், பித்தனேன்-பித்துப்பிடித்தவனான, எனை — என்னை, இனிது ஆள்வாய—இனிய முறையில் ஆட்கொள்வாயாக, மாண் நவமாம — சிறந்த ஒன்பதாகிய, சொற்ற மாமணி-சொல்லப்பெறுகின்ற பெரிய ரத்தினங்களைப், பூண அழகாம் — பூண்டுகொண்டுள்ள அழகுக்கு, பொற்பின் — அழகு செய்யும், மார்பக — திருமார்பகத்தையுடையவனே! மாயவனும - மாயையில்லாதவனும, பசசைமால் — பசுநிறமுடைய திருமாலுக்கும, திரு-இலக்குமிக்கும், மருகோனே — மருமகனே! மாதவ — மஹா தபஸ்விகளாகிய, சாந்தத்துயோகியா—மனசசாந்தியெபற்ற யோகீசவரர்கள், பாதகமாம்—பஞ்சமாபாதகம் எனப்படும, தப்பு இலார — தவறுகள் இல்லாதவர்கள், அவர வாரகழல்பூண்டு—அவர்களுடைய திருவடியைத திருமுடிமேற்சூடி, ஆசசனாதிகள—ஆசசனை முதலிய வழிபாடுகளெல்லாம், புரிவார்தாம்—செய்பவர்களே, வேண்டுதலாம—வேண்டியவற்றையெல்லாம, பெற்று வாழ்வுற—பெற்றுப் பேரின்ப வாழ்வையும் பெற, வீறுடன ஆய்ந்து—வீறுப்புடன் ஆராயச்சி செய்து, அற்புதாதிகள — அற்புதச செயல்கள் முதலியவற்றை, வேளையொடு; காலததுககொட்டியவாறு குறித்தநேரங்களில், ஆங்குசெய—அங்குசசெயது காட்டுகின்ற, வேதியா தலைவோனே—அந்தணர் தலைவனே! மேதினி—(இந்தப்)பூமியானது, ஓங்கற்கு—மேலோங்குவதற்கென்றே, மேவு-வாயததுள்ள, நெயவேலி-நெயவேலி என்ற நகரத்துக்கு ஓரபாரிசததை, ஒருபககததில் (அமைந்திருக்கின்ற), நீள்—நீண்ட(பெரிய), முது-பழைய, வேலுடையானபட்டி—வேலுடையான்பட்டி என்னும் தலத்தில் வாழ்வுறு—வாழ்ந்திருக்கின்ற, பெருமாளே — பெருமைக்குரியனே! (என்)னை இனிது ஆள்வாய என்றபடி)

கருத்துரை:—

நவரதனமாலை மார்பனே! திருமால் மருகனே! அடியார்க்கு அடியாராயிருப்பவர்க்கெல்லாம அருள்பவனே! உலகுபுகழ் நெயவேலியின ஒரு புறத்தே வேலுடையானபட்டியிலிருக்கும முருகவேளே! எவ்வகையிலும் உததமன் அலலாத எனனை இனிமையுற ஆட்கொள்வாயாக!

3

பதவுரை:—

கற்ற மாதவர்தாம—கல்வியில் வல்லமை பெற்ற மஹா தபஸ்விகள், சொற்ற-சொல்லிக்கொடுத்துள்ள தூநெறி போம்—தூயவழியிற் செல்

கின்ற, கற்பிலேன் அடியேன்—நல்லொழுக்கமில்லாத அடியேன், கடை நாயேன்—மிகவும் கடைப்பட்ட நாயினேன், கற்றை வார்சடை—அடர்ந்த நீண்ட சடைகள், வாய்ந்து உற்ற—(தலையின்கண்) பொருந்திய, வேல வனும—வேலாயுதனும், கர்த்தனே—தலைவனே, உனை வேண்டுவது எது—உன்னிடம் நான் வேண்டிக் கொள்ள வேண்டுவது என்ன உண்டு? சுற்றமாய்—(எனக்கு) உறவாய், நனி—நன்றாக, சூழ்ந்துற்ற—வந்து பொருந்திய, மாதுணையாய்—சிறந்த துணையாகிய, சுத்தனே!—பரி சுத்தனே இவண் வேண்டுவ—அடியேன் வேண்டிக்கொள்பவை, யாவும்—எல்லாம், சொற்றிடாமல்—(யான்) சொல்லாமலேயே, எலாம கற்று—அனைத்தையும் உணர்ந்து, நீ அறிவோன்—நீயே தெரிந்து கொள்பவனாயிருக்க, துற்று—பொருந்தி வந்து, நாயடியேன்—நாயினும் கீழ்பட்ட அடியேன், சொலல் ஏதோ—உன்னிடம் வந்து சொல்லுவது எதுண்டு? (ஒன்றுமில்லை யென்றபடி) பெற்றம்—இடப வாகனத்தின்மேல், ஏறிடுவான்; ஏறித்திருவுலா வருவான். பிசசை—பிசசைக்கு, போய உழல்வான்—போயப் போய் ஊர்தோறும் திரிபவன், பித்தாபோல எ(ல்)லாம—பித்துப பிடித்தவர்களைப்போலெல்லாம, திரி வான்—திரிகின்றவன், மா பெதத தாம—பெரிய பந்தபாசததுக்கு உட் பட்டவர்களெலலாம, அறியான்—அறிந்துகொள்ள முடியாதவன், புற்று அரா அணிவான—புற்றில வாழும பாமபை அணிந்துகொள்பவன் ஆன சிவபிரான, பெற்ற—பெற்றருளிய சேயவனும சிறியோனே—குழந்தை யாம சிறியவனே (சிறிய குழந்தையே;) பற்று அது ஆர்—(தன்னிடத்தில்) ஆசை பொருந்திய, சிவமாம சகதி—சிவமாகிய சக்தி, காசியில்—காசியில் வாழ்கினற, ஓம பத்ரகாளி—ஓம பதர காளி எனப்படும, நெடுஉன கணி (நெடுங்கணி)—விசாலாட்சியமமையின் பாலா, குழந்தையே, பட்டை நீறு அணி—பட்டை பட்டையாகத திருநீறணிந்துள்ள, சாந்தத்தச—சாந்த மூர்த்தியே! வேலுடையான்பட்டிவாழ்—வேலுடையான்பட்டி திருக் கோயிலில வாழ்கினற. குருவாம பெருமானே—குருமூர்த்தியாய் அருள் செய்யும் பெருமைக்குரியவனே! (உன் திருவருள் என்னே! என்றவாறு)

கருத்துரை:—

சிவகுமாரனே! உமைபாலனே! திருநீறணியும் வேலுடையான் பட்டிப் பெருமானே! எனக்கு வேண்டியவை அனைத்தையும் அறிபவன் நீயிருக்க எனக்கு இன்னின்ன வேண்டும் என நான் விண்ணப்பிக்க வேண்டுவது எதுண்டு? (ஒன்றுமில்லை எனறபடி).

இப்பாடலில் வில்லுடையான்பட்டி முருகவேள் சடையுடைய ரென்பதும், இவ்வூரத் தேவி திருநாமம் விசாலாட்சி யென்பதும் குறிக கப்பெற்றுள்ளது.

4

பதவுரை :—

பிள்ளையெலாம் – (ஆண், பெண) குழந்தைகளையெல்லாம், பெற்றிட்டவள் போலே–பெற்ற தாயைப் போல, 'பிள்ளையனேன்–குழந்தையாகிய அடியேனுடைய, சொற்கு – சொல்லுக்கு, பரிவாக – அன்பாக (இருந்து என் உளளத்தை), கொள்ளைகொள்; கொள்ளை கொள்ளும், ஆண் சக்தி–ஆண மகனும் சிவபிரானுடைய ஆண சக்தியாக அவதாரம் செய்த, குமரா–குமாரவேளே! தாள் கொய் அலர் தாம, (கொய் அலர் தாள் தாம)–பறிக்கப்பெறும் புட்பத்தைப்போல மலாந்த உன் திருவடியிணையை, சற்று–சிறிதேனும், எற்கு உதவாயோ – எனக்குத் தந்தருள மாட்டாயோ! தள்ளை அ(ன்)ஞன்–தாய்போன்றவன, பசைத் திருமேனி –பசிய திருமேனி கொணட, சையம் அனன் – மலைபோன்றவன் ஆகிய திருமாலின், புத்ரிக்கு–மகளாகிய தெய்வநாயகிக்கு, ஒரு கேள்வா–ஒப்பற்ற கணவனே! வெள்ளை – வெண்ணிற மேனி படைத்த அல்லது வெள்ளையுள்ளமுடைய, உபேந்த்ரற்கு; உபேந்திரனின அவதாரமான நமபிராஜனுக்கு, (அதாவது திருமாலுக்கு மாப்பிள்ளையென்னும்) உற்ற உறவோனே–நெருங்கிய உறவு பூணடவனே! வில்லுடையான் பட்டி–வில்லுடையான் பட்டி என்னும ஊரில் வீற்றிருக்கும், பெருமாளே – பெருமைககுரியவனே! (கொஞ்சம திருவடி தந்தருளக என்றபடி)

கருத்துரை :—

திருமால் மகளிர்க்குத் தலைவனே! நமபிராஜனின் மருமகனே! வில்லுடையான் பட்டி முருகவேளே! தாய்போல் என்னைப் பரிந்தாட்கொள்ளும் ஆணபிள்ளையே! உன் திருவடியைத் தந்தருள்க!

இப்பாடலில் முருகவேள் ஆணுக்கே பிறந்தபிள்ளை, ஆண பிள்ளையென்பதும், திருமால் 'பசைமாமலை போல் மேனியர' என்பதும், உபேந்திரன் வெள்ளை நிறமுடையவனென்பதும கூறப்பெற்றுள. ஸ்த்ரீ சம்பந்தமின்றிச சிவபிரான் நெற்றிக்கணகளிலிருந்து வந்த தீப்பொறி

களாலுண்டான முருகவேள் ஆறுமுகனே உதித்த பிள்ளை, அவனொருவனே ஆண்பிள்ளை மற்றையோரெல்லாம் பெண் பிள்ளைகள் என்ற விஷயம் இப்பாடலில் குறிக்கப் பெற்றுள்ளது

5

ஏது காரணம்-என்ன காரணமோ, யான் சற்றும் ஓர்கிலன்-எனக்கு ஒன்றும் புரியவில்லை, ஏழையேன் எனை-ஏழை எளியவனாகிய என்னை, ஈண்டு உற்று-இவ்விடத்திற்குப் பொருத்தமாக, அவாவுடன் - ஆசையோடும். ஈச - ஈசனே ! நீ அழை-நீ இன்று அழைத்தருளிய. ஆந்த்ரக் குணாதிசயம அது-அந்தரங்கமான அதிசயக்குணமானது (ஏ, தான்-அசை நிலைகள்) ஏறுபோல் நடைகாண்டற்கு-ரிஷபம் போன்ற உன் நடையழகைத் தரிசிப்பதற்கு, உன் நேர் எதிர் - உனக்கு நேரெதிரில், வீறு சேவகர் தாம - விளங்குகின்ற வீரத்தொண்டர்களெல்லாம், சுற்றமாய உற - சுற்றுப்புறங்களிலெல்லாம சூழ்ந்து நிற்க, ஈடு இலா வகை; ஒப்பில்லா வகையில் நான சொற்கள் பாடுதல்-அடியேன் சொற்றமிழ் பாடுவதை, அறியாயோ-நீ அறிந்துகொள்ள மாட்டாயோ ! காதுகேள்-நீ காதிலே கேட்டுக்கொள்கின்ற தமிழ் வேண்டிக்கொலோ - தமிழ் விருப்பத்தாலோ! பலநாளும - பலசமயங்களிலும், நான் உனை-நாயேன் உன்னை, ஆண்டிக் குகா - ஆண்டியாகிய குகப்பெருமானே ! ஏது காலம ஆளவைகொல - எந்தக்காலம ஆண்டுகொள்வாயோ, ஆண்டு-அங்ஙனம ஆட்கொண்டு, அற்புதங்கள - அற்புத விஷயங்கள் முதலியவற்றை. புரியாயோ-செய்யமாட்டாயோ, காரண என - அனைத்துக்கும் காரணமானவனே என்று, வேண்டிக்கொள் காரணமோ - வேண்டிக் கொள்கின்ற காரணத்தினாலோ, சொலாய்-சொல்லியருளுக ! உமைகோன் பெற்ற காதல-உமாதேவியின் கணவனும் சிவபிரான் பெற்றருளிய புதல்வனே ! காயம், வாய், மனம் மூன்றுக்கும்; (என்) மனோ, வாக், காயம் மூன்றினுக்கும, நாயக; தலைவனே! கதி தாராய்-பரகதியைத் தந்தருள்வாயாக! ஸாது பூஜித-நல்ல பெரியவர்களால் வழிபடப் பெறுகின்ற, சேந்தப் பிரான்-சேந்த னென்னும பெயர் கொண்ட தலைவனே! வடிவேலும நீள்விலும - வடிவேலாயுதமும்; நீண்ட விற்படையும், ஏந்தப்பெரு உள! (கைகளில்) ஏந்தப்பெற்றுள்ள, தாழும் வார் சடை-தொங்குகின்ற நீண்ட சடைகளையுடைய, வேந்தப்பிரான்-அரசனாகிய தலைவனே, உயர்கொடி சேவல்-உயர்ந்த சேவற்கொடியானது. தாவு பாணிகொள்-தாவியமர்ந்துள்ள கையைக் கொண்ட, சாந்தப்பிரான்! அமைதியின் உருவமான தலைவனே! அயிராணி. வான

வர் கோன்-இந்திராணிக்கும், தேவர் தலைவனும் இந்திரனுக்கும், புத்ரி-மகளும், மான மகள்-திருமாலின் மகளும் ஆகிய தெய்வயானையம்மை, தா இல்-குற்றமற்ற, கானவர் கோன் புதரி - வேடர் தலைவனும் நம்பி ராஜன் மகளாகிய வள்ளியம்மை இருவரும், தழை தோகைமீது-தழைத்த தோகை மயிலின் மேல், பால் உற-இரு பக்கங்களிலும் பொருந்த, ஏந்திக் கொள்ளா-ஏந்திக்கொண்டு; நனி-நன்கு நீடு உலா வரும்-பெருமையுடன் திருவுலா வருகின்ற, எந்தப்பிரான்-சிறந்த ஆண் மகனாகிய தலைவனே! அவர்-அந்த வள்ளி தெய்வயானை இருவரும் மேவும்-வீற்றிருக்கின்ற ஓர் இரு பாகு உற்றது-ஒப்பற்ற இரு பக்கங்களைக் கொண்டதான, ஓருரு உடையோனே-ஓர் உருவத்தைக் கொண்டவனே! வேலை சூழ்கடல் (வேலைக் கடல்சூழ்) - அலைகள் நிறைந்த கடலால் சூழப்பட்டதும், மாந்தர்களெலாம் - உலக மக்களுக்கெல்லாம், மிகவேலைதர - மிகவும் வேலைகளை கொடுக்கும்பொருட்டு, வாய்ந்துற்ற - ஏற்பட்டுள்ளதுமான, பூமி நெயவேலி - பூமிப்பரப்பைக் கொண்ட நெய்வேலியைச் சேர்ந்த, வேலுடையான்பட்டி-வேலுடையான்பட்டி என்னும் திருத்தலத்தில், மேவிய-விரும்பி வீற்றிருக்கின்ற, பெருமானே-பெருமைக்குரியவனே! (நற்கதியைத் தந்தருள்க என்றபடி)

கருத்துரை: -

சேந்தனே! வேலும் வில்லும் ஏந்திய சடையப்பனே! சேவற்கொடியாய்! வள்ளியும் தேவானையும் இருபுறமும் மயில்மீது உலா வருபவனே! அவர்களை எப்போதும் அருகிலும் வீற்றிருக்கக் கொண்ட ஒரே சிலா மூர்த்தமான மூர்த்தியே! உலகில் யாவர்க்கும் மேன் மேலும் வேலை தர வல்லதான பூமியைக் கொண்ட நெய்வேலியைச் சார்ந்த வேலுடையான்பட்டிப் பெருமானே! என்னை நீ இங்கு அழைத்ததன் காரணம் என்னவென்றறியேன் தமிழாசையாலோ! அல்லது நான் உன்னை சதா அழைப்பதாலோ! உமாபதி குமரனே! மனோவாக்காய நாயகனே! உயர்ந்த கதியைத் தந்தருள்வாயாக.

இப்பாடலில் முருகவேள் கற்சிலை யொன்றிலேயே வள்ளி தெய்வானை இருவருருவமும் அமைந்துள்ளதும், நெயவேலி மிகச் சிறந்த பொருளாதார அபிவிருத்தி தொழிற்சாலையாக அமைந்துள்ள பெருமையும் குறிக்கப்பெற்றுள்ளமை கவனிக்கற்பாலது.

6

பதவுரை :—

காமம் அறு சாந்தத்தா — காமவிகாரமில்லாத சாந்தமூர்த்திகள், கோபம் அறு—கோபமற்ற, வான்சித்தர்—விசாலமான மனமுடையவர்கள், கானில் உறை — காடுகளில் வாழ்கின்ற, காந்தத்தா — விருப்பமுடைய வாகன், (இவர்களெல்லாம்), கனஞானம் கண்டு—மகாஞானத்தை அறிந்து கொண்டு, மோனம் காண—மௌனநிலையை உணர்ந்துகொள்ள, விழை கோன்—விரும்பி வழிபடுகின்ற தலைவன், சத்திபாணி—வேலேந்துகையான் சடையான—சடைமுடியுடையான, சித்ர காசினிஎலாம்—அழகிய உலகங்களையெல்லாம், பெற்ற — பெற்றருளிய, கருணேசன் — கருணைமூர்த்தி, கந்தவேள்—கந்தபிரான், எம் சேமம் நினைவோன்—எங்களுடைய க்ஷேமத்தையே கருதுபவன், செட்டி ஆய பெருமான் — வளைசெட்டியாய்த் திருவிளையாடல் செய்த பிரான், சிட்டா—சிஷ்டாசாரமுடையவர்கள், தேவா—வானவர்களெல்லாம், தொழு—வழிபடுகின்ற, வாஞ்சைச்சொல்—விரும்பத்தக்க இன்சொல்பேசுகின்ற, முருகேசன் — முருகவேள், செந்திலோன் — திருச்செந்தூரான், மெய்த்தேவகுருதான் — உண்மையே பேசும் வியாழ பகவானானவா, சொற்ற காதை—சூராதியர்களைப் பற்றிச் சொன்ன கதைகளையும், செவி வாங்கிக்கொள்—காதில் வாங்கிக்கொண்ட, தேவன்—தேவாதிதேவன், என—என்றெல்லாம், யான் செப்பி—நான் புகழ்ந்து, நிதம் ஓதும்—நித்யம் (உன்னைத்) துதிசெய்யும், பண்பு தாராய்—நற்பண்புகளைத் தந்தருள்க!. காமம் முதல் மூன்றுக்கும்—காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றுக்கும், எட்டரியதாம—கிட்டமுடியாததான, சுத்தி காரண; (யோக) சகதிக்குக் காரணமாயிருப்பவனே!,—மகா இந்த்ரற்கு—பெரிய தேவேந்திரனுக்கு, மருகோன் என- மருமகன் என்று சொல்லப் படுகின்ற, கண்டியூர்—திருக்கண்டியூரானே!. காதலியராம் (உன்னைக்) காதலித்தவர்களாம், சத்திதாம் இருவர்—சத்தியராம் (வள்ளி, தெய்வயானையெனும்) இருவரையும், பாங்கர்கொள்—(இரு) பக்கங்களிலும் கொண்ட, காவல—காவலனே!, கஜேந்த்ரற்கு — கஜபதியாகிய விநாயகக் கடவுளுக்கு, நூ — ஒப்பற்ற, இளையோனென்—தம்பியெனப்படுகின்ற, தண்டபாணீ—தண்டாயுதபாணியே!. நேமநெறி—நியமநிட்டை நெறிகள் வழியாக, வாய்ந்துற்ற—அமையப்பெற்ற, யோகியர்கள்—யோகீஸ்வரர் களுங்கூடக, காணற்கும்—கண்டு கொள்ளுதற்கும், நேடரிய—விரும்பு தற்கும் அரிய, நோன்புற்ற—தவம் வாய்ந்த, பெருமானென்—பெரியவன் என்று சொல்லப்பெறும், சிந்துவேலா — வைடூரியத்தாலான வேலாயு

தனே!, நீள் அயில் கொள்வான்பட்டி; — நீண்ட வேலைக் கொண்டவனுடைய பட்டி (வேலுடையான்பட்டி)யும், வேலி அருகாம்பட்டி - நெய்வேலிக்கு அருகிலுள்ள பட்டியுமான, நீள் விலுடையான்பட்டி தனில் - நீண்ட வில்லுடையான்பட்டியில், வாழும் - வீற்றிருக்கும், தம்பிரானே - தலைவனே! (ஓதும் பணபு தந்தருள்க என்றபடி)

கருத்துரை :

முக்குற்றங்களால் அறியப்படாதவனே! இந்திரன மருகனே! வள்ளி, தெயவயானை கேளவனே! கணபதி தமபியே! யோகியா களும காணரிய ரத்ன வேலனே! நெய்வேலிக கருகானதும, வேலுடையான்பட்டி எனப்படுவதுமான வில்லுடையான் பட்டியில வாழும தம்பிரானே! முனிவாகள் பணியும தலைவன; வேலாயுதபாணி உலகைப்படைத்த கருணையாளன், கந்தன், எமமை நினைந்து காப்பவன், செட்டி, தேவாதொழுதலைவன், முருகன், செநதூரன், வியாழகுரு சொன்ன சூரபுராணஙகளைச செவிசாயததுக கேட்டவன் என்றெல்லாம சொல்லிததினமும தோத்திரம் செய்யும் நறபணைபைத் தந்தருளுக

7

பொழிப்புரை :

(மக்களே!) விளங்குகின்ற ஞானிகளின் மன எண்ணங்களில் வாழ்பவனும் குளத்திற் பிறந்த தலைவனும, தயாநிதியும் தீவினைகளெல்லாம விலகக்கூடிய வில்லுடையான் பட்டியில் மேவும் உலக நாயகனுகிய விசவநாதனின் மகனுமாகிய முருகவேளை ஓதுஙகள்.

குறிப்பு ; வில்லுடையான்பட்டிச சிவபிரான் 'விசுவநாதா' உலகநாயகனெனக்குறிக்கப்பட்டாா.

8

பொழிப்புரை :

மானிடர்களே! (தன்) காலடியில் • வீழ்ந்து வணஙகும் மேதைகளையும், புண்யாத்மாக்களையும் சிறந்த வகையில் வாழும்படி அவாகட்கு நல்வழிசெய்கின்ற நெய்வேலியைச சார்ந்த வேலுடையான்பட்டியில் வீற்றிருக்கும் வேலவனைப்புகழுஙகள்.

9

பொழிப்புரை :

(உலகீரே!) நல்லவர்களுக்கெல்லாம் நல்லவனும், அடைதற்கரியவனும், பொல்லாதவர்களுக்கெல்லாம் பொல்லாதவனும், அழகியகையில் வில்லேந்தியவனும், விரும்பி வீற்றிருக்கும் விலலுடையானபட்டிப் பழைய பெருமானுமான முருகவேளைத் துதிசெய்யுங்கள்.

10

பொழிப்புரை :

(மனிதர்களே!) அடைய முடியாத தவம் செய்த நல்வாழ்வினர்களாலுங்கூட தேடியடைய முடியாத தெய்விகதேஜஸ் பொருந்திய திருவுருவமுடையவனும், வேடவேடமெடுத்தவனும், வேலுடையான் பட்டியில் வாழும் செம்பொனமலை போலயவனுமான கந்தவேளிடம் அன்பு செலுத்துங்கள்.

11

பொழிப்புரை :

(மாந்தர்களே!) மிகப்பலத்த குரலோடு புகழ்ந்து பாடுபவர்களுக்கு அன்பினாற் கனிந்து ஆசையால் கடைக்கண்ணருள் செய்ய வேகமாக வந்தருளும் வில்லுடையானபட்டித் தலைவனாகிய செவ்வேளுக்குத் திருத்தொண்டு செய்யுங்கள்.

12

பொழிப்புரை .

மனமே! முருகவேளும், கடல்போல் நிறம் படைத்த பலசாலியான திருமாலின் மருகவேளும், மயில்வாகனனும், வேடர்களையெல்லாம் அஞ்சும்படிச்செய்யும் விலலுடையானபட்டி மேவும் ஒப்பற்றவனுமான கந்தக்கடவுளைத் தினந்தோறும் நினைப்பாயாக

13

பொழிப்புரை :

விசாலாட்சியம்மையின் திருக்குமாரனும், 'குகன' என்ற பெயரைக் கொண்ட குமரவேளும், மிகவும் மதிந்துகொண்டு அருள் செய்யும் வேலுடையான பட்டிப் பகவானுமான வேலனைப் பணிந்தால் பாவங்கள் விட்டுப்போகும்.

14

பொழிப்புரை :

மனமே! ஒன்று சொல்கின்றேன்; உணர்ந்துகொள்வாயாக! இன்று முதல் என்றென்றும் புகழ்ந்து கொண்டே இருப்பாயாக. (யாரையெனில்), சூரனை வெற்றிகொண்டு அவனைக்கொன்றருளிய வில்லுடையான் பட்டிக்கோயிலாகிய சபையில் நடனமாடுகின்ற குகனை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றாய் நீ.

15

பொழிப்புரை :

தினந்தோறும், வளர்பிறையானும், மணிபோல் சிறந்தவனான சிவபிரான் மகிழ்கின்ற அருள் வெள்ளமயமானவனும் வேலுடையான் பட்டியில் உள்ளவனுமான குமரனை ஓதி ஓதி உருகினால் (உலகில்) இகழ்ச்சியின்றி இருக்கலாம்.

16

பொழிப்புரை :

பணத்தைத் தேடித் தேடிப் புதைத்து வைக்கின்ற பாவிகளே! நல்ல குணங்களைத் தேடி வைத்துக்கொண்டு குமரவேளும், ஆறும் பள்ளமும் சோலைகள் சூழ்ந்த வில்லுடையான் பட்டியில் வாழும் நறுமணமாகிய முருகனுமான கடவுளைக் கண்களாற் பார்த்துத் தரிசிக்கவும் வந்து வந்து நிறையச் சேருங்கள்.

17

பொழிப்புரை :

சூரபத்மாவைத் தொலைத்தவனும், வேர்முதல் உச்சி வரை அருள்மயமாயிருக்கின்ற வேலுடையான்பட்டியில் வாழும் ஆரியசரோஜடருமான முருகனின் திருவடிப்புகழ் சொல்லி அவனை நெருங்கி அடைக்கலமடைந்தால் போரில் வெற்றி பெறலாம்; பொய்யினின்று விலகியிருக்கலாம்.

18

பொழிப்புரை: –

(ஜகத்தீரே!) பாலபிடேகம் செய்யப்பெறுகின்ற நற்பண்பாளனும், அட்டமூர்த்தங்கள் கொண்டவனும், நமது செயவேலி வில்லுடையான் பட்டி செவ்வேளுமானவனைப் பொய்மை யில்லாமல் உண்மையாகப் பாக்கள் புனைந்து புகழ்பாடுங்கள்.

19

பொழிப்புரை :—

உலகத்தவர்களே! நமக்கு நல்லகாலம் உண்டு. நன்மை அல்லாதனவற்றை யெல்லாம் அகற்றியருள வேண்டும் என்று மெதுவாக வேலுடையான்பட்டி செவ்வேளிடம் சொல்ல வல்லீர்களானால் துன்பமெல்லாம் தொலைந்துபோகும்.

வில்லுடையான்பட்டி அருட்புகழ்

(குறிப்புரை, பொழிப்புரை யாதிய முற்றும்)

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்
தோத்திர மஞ்சரி

(தொகுத்து வெளியிட்டோர்; எஸ். வி. சுப்ரமண்யம் சகோதரர்கள்)

திருவருணையில் அவதரித்துச், சந்தப்பாக்கள் பாடி அழியா இன்பம் பெற்றவர் அருணகிரிநாத சுவாமிகள். அன்னார் மீது பல பெரியோர்கள் தனித் தோத்திரங்கள் பல பாடியிருக்கின்றனர். மேலும் பற்பல நூல்களிலும் அவரைப் பற்றிக் குறிப்பிட்டுப் போந்துள்ளனர். இயன்றவரை சேகரித்த அத்தோத்திரங்களும், குறிப்புக்களுமே இத் 'தோத்திர மஞ்சரி' ஆகும். அருணகிரியார் படமும் அதில் இணைக்கப்பட்டுளது.

56 பக்கங்கள் கொண்டது. விலை 75 காசு,

(புத்தக அஞ்சற் செலவு 8 காசு)

அருட்புகழ்

[ஆசிரியர் : அருட்கவி-சேதுராமனார்]

ஆசிரியர் 1954-இல் நவராத்திரி தினங்களில் (1-10-54 முதல் 8-10-54 வரை) யாத்திரை செய்தபோது நாகப்பட்டினம், திருச்செங்காட்டங்குடி, திருக்கண்ணபுரம், திருப்புகலூர், பஞ்சட் கொல்லை, சிக்கல், கீழ்வேளூர், எட்டிகுடி, திருவாய்மூர், திருவாரூர், சுவாமிமலை ஆகிய தலங்களில் கோயில் கொண்டுள்ள விநாயகர், முருகர், சிவபிரான், உமையம்மை, சட்டைநாதர், திருமால், இராமர், இலக்குமி ஆகிய மூர்த்தங்களின் மீது தோத்திரங்களாகப் பலவகைப் பா இனங்களிற் பாடிய 256 பாடல்கள் குறிப்புரைகளுடன் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன.

காஞ்சி காமகோடி பீடம்-சங்கராசார்ய ஸ்வாமிகள் அருளிய ஸ்ரீ முகத்துடன் கூடியது.

112 பக்கங்கள் கொண்டது. விலை 75 காசு.

(புத்தக அஞ்சற் செலவு 14 காசு)

இந் நூல்கள் ஒரே காலத்திற் பத்துப் பிரதிகள் வாங்கினும் ஒரு பிரதி விலையின்றிக் கொடுக்கப்படும்.

கிடைக்குமிடம் :

S. V. சுப்ரமண்யம்

141, லிங்க செட்டித் தெரு, சென்னை-1.

சரஸ்வதி பிரஸ்,
திருப்பாதிரிப்புலியூர்.
1963

ரங்கநாடு

ஸ்ரீ நடராஜர் இரட்டைமணி மாலை



திராவிடக்கவிமணி ஸ்ரீ வே. முத்துசாமி அய்யர், M. A., L. T.

பாலகவி மு. கோதண்டராமன்

இவர்கள் இயற்றியது.

ஸ்ரீ மஹாபாரதம் பிரஸ்

கும்பகோணம்

1957

சாற்றுக் கவிகள்

முருகவேள் பன்னிரு திருமுறையின் உரையாசிரியர்
சென்னை உயர்திரு தணிகை மணி இராவ் பகதூர்
வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A. அவர்கள் இயற்றியன.

இரட்டை மணிமாலை கோத்தற்கு வேண்டும் எழிற்கவிஞர்
இரட்டையர் என்றே திராவிடப் பாமணி என்றபுகழ்
திரட்டிய நம்பியும் அன்னார் குமாரரும் செம்மணிபொன்
புரட்டிடு காவிரி சூழ்ரங்க நாத புரந்தனிலே.

கூத்தப் பிரானது கோலத்தைக் கண்டு குதூகலித்தே
ஏத்தற் குரிய எழில்மாலை ஒன்றை இனிதமைத்துச்
சாத்திக் களிப்புறு கின்றார் அவர்தம் சமயபத்திச்
சோத்தத்தை எம்பெரு மான்மகிழ்ந் தேற்பன் சுவையுடனே.

(சோத்தம் – தோத்திரம், துதி.)

முகவுரை

இந்நூல் எமமூர்ச் சிவாலயததில் 6—12—56-ல எங்களால் நூதனமாகப பிரதிஷ்டை செயயபபட்ட ஸ்ரீ நடராஜப் பெருமான் திருவடிப் புகழாக எங்களால் பாடப்பட்டது.

இதில் வெண்பாவும், கலித்துறையும் ஆக அந்தாதி வரிசையில் 20 பாக்கள வருகின்றன. இவறறில் வெணபாககள திராவிடக் கவிமணியும் கலிததுறை பாலகவியும பாடியவை.

எஙகள ஊருக்கு ரங்கநாதபுரம் என்ற வழக்கப பெயருடன கஜாரண்யம் எனற பெயரும இருததலால ஊாப்பெயர் கஜாரண்யம, கரிவனம, ஆனைவனம, வேழவனம், அரஙகபுரம், அரங்கநாதபுரம், ரஙகபபதி எனறு பாக்களில விரவி இருக்கினறன.

இநநூலைக் கையெழுததுப் பிரதியிலேயே பார்வையிட்டுச் சாற்றுக கவிகளை உதவிய சென்னை இராவ பகதூர் தணிகை மணி அவாகளுக்கு எம நன்றி என்றும உரியது.

இங்ஙனம்

ரங்கநாதபுரம்
திருக்காட்டுப்பள்ளி P. O.

திராவிடக் கவிமணி
வே. முத்துசாமி அய்யர்
பாலகவி மு. கோ. ராமன்

உ

திருச்சிற்றம்பலம்

ரங்கநாதபுரம்
ஸ்ரீ நடராஜர் இரட்டைமணி மாலை

காப்பு

(உள்ளூர் வலம்புரி விநாயகர் துதி)

தேசம் விளங்கத் திருவரங்க நாதபுர
ஈசர் நடேசர் இசைஏத்திப்—பேசும்
இரட்டைமணி மாலைக்(கு)இன்(பு) ஈக வலப்பால்
புரட்டு புழைக் கையான்முன் போந்து.

நூல்

வெண்பா

சீரார் அரங்கபுரத் தெய்வச் சிவாலயத்தெம்
நாரார் நடராசர் நண்ணுசெயல்—பாரேற
மேயது துன்முகிஇம் மேன்மையால் இங்கணியா
ஆயது நன்முகி இவ் ஆண்டு. 1

கலித்துறை

ஆண்டவ னே!அயன் மாலறி யாவணம் அண்டமுட்ட
நீண்டவ னே!அரா அம்புலி கங்கை நிமிர்சடையிற்
பூண்டவ னே!பொன்னி சூழும் அரங்க புரத்தெழிலார்
தாண்டவ னே!சரண் நின்சரண் நாயனைத் தாங்குகவே. 2

வெண்பா

குகவேளை ஞான குருவாக முன்னாள்
தகவே உகந்த தலைவன்—மிக வேண்ட
எம்மூர் அரங்கபுரத்(து) இன்ப நடம்புரியும்
பெம்மான் அருட்டிறமே பேசு. 3

கலித்துறை

பேசுநா ளெல்லாம் பிறந்தநா ளென்பர் பெரியர்;உனைத்
தேசுலாம் தெய்வ உருவே! நடம்பயில் சின்மயனே!
மூசுவண் டார்பொழில் சூழுங் கஜாரண்ய முன்னவனே!
ஆசு முதல்நாற் கவியுனைப் பாடற் கருள்புரியே, 4

வெண்பா

புரிகுழ லாரொடு பொன்மண்ணில் ஆசை
புரிகுதல் வீண்;முப் புரத்தை—எரிகொளுவும்
ஈசன் கரிவனத்(து) எய்தும்ஆ னந்தநட
ராசன் பதம்பரமா நாட்டு. 5

கலித்துறை

நாட்டுப் பலவளம் நாளும் மலிரங்க நாதபுரம்
காட்டும் புகழ்ச்செங் கணான்மாடக் கோயிலின் கண்ணமர்ந்தே
ஆட்டம் பயிலும் அணிநட ராச! அரியதமிழ்ப்
பாட்டுப் பகர்ந்துன் பதம்பெறச் செய்வாய் பரம்பொருளே! 6

வெண்பா

பொருளிதுஎன்(று) உன்எழிலார் பொன்னுருவைச் சுட்டி
மருளேதுமில் வாதவூர் வள்ளல் — அருளியும்
அம்மா! அரங்கபுரத்(து) ஆடும் நடத்தரசை
இம்மா நிலம்உணரா தேன்? 7

கலித்துறை

என்னுட் பரந்துள மும்மல மாயை இரிந்தொழிய
மின்னிப் பொலிகின்ற செஞ்சடா பாரம் விரிந்தசைய
உன்னற் கரிய எடுத்தபொற் பாதம் உவந்தருள்வாய்;
பொன்னித் துறைரங்க நாத புரத்தொளிர் புண்ணியனே. 8

வெண்பா

புண்ணுறுக நெஞ்சகமே! பொன்வேணி வீசி;மண்
விண்ணதிர ஆடும் விமலன்தாள்—எண்ணியே;
மண்ணுறுக மற்றையரின் மாண்பெல்லாம் வேழவனத்(து)
அண்ணல்நட ராசனரு ளால். 9

கலித்துறை

ஆலடிக் கீழன்று நால்வர்க்கு ஞானம் அருளியவா !
காலடிக் கீழம் முயலகற் செற்ற கருணையனே !
மாலடிப் பட்டு மயங்கா வணம்செய்; மருங்குபொன்னி
சேலடித் தோடும் கரிவனத் தாடுமெய்ச் சீர்த்தியனே. 10

வெண்பா

அனேகனென ஏகனென் ஆனாய் குபேரன்
சினேகனும் ஆனாய் சிவமார்—விநோத
அரங்க புரம்வந்தின்(று) ஆடல்போல் நெஞ்சத்(து)
அரங்கிலும் ஆடி அருள். 11

கலித்துறை

அருணங் திருச்சடை ஆரும் பரமா ! அகிலமெலாம்
கருணை மலியக் கரிவனத் தேநடங் காண்பவனே !
மருணங் தியமனப் பேயனைச் சேயனை வாழவைக்கும்
தருணம் இதுவே; தயைபுரி தாய்போற் றகநினைந்தே. 12

வெண்பா

ஐந்தலைக்கண் இன்பநடம் ஆடுபவன் ஆனைவனம்
வந்துலகம் ஈடேறும் மாட்சியால்—சந்தம்
தனக்கேதும் ஒப்பில்லான் தாண்டவப் பொற்றாள்
மனக்கேதம் மாற்றும் மருந்து. 13

கலித்துறை

மருந்தே எனினும்யான் வேண்டேன்நின் னருளன்றி வாழ்வுமுற்ற
இருந்தேன் பவநோய்க்(கு) இடமா;இவ் ஏழையை ஏன்றருள்வாய்
பொருந்தார் புரமெரி தேவா! அரங்க புரத்துநடம்
அருந்தா ரணிமிசை ஆடுவாய் அன்பர்க்(கு) அணிகலனே. 14

வெண்பா

கலனணிந்து நல்லாடை கட்டி உணவின்
நலனுகரும் பேதையே நாளைக்(கு)—அலமந்தே
ஆவிரையும் போதுகதி ஆவதுனக்(கு) ஆனைவனத்
தேவுநட ராசனென்றே தேர். 15

கலித்துறை

தேர்பரி யானைகா லாட்படை வேந்தும் சிவபரன்றாட்
சேர்வரி யாரெனிற் சேர்வர் துயர்எனத் தேர்தி நெஞ்சே
வரு செல்வங் கொழிகயா ரண்யத்(து) எழிற்றளியில்
கூரருள் பாலிக்கும் வண்ணம் வணங்குநம் கூத்தனையே. 16

வெண்பா

அனையாகி அப்பனுய் அத்தனும் ஆகி
அனைய உறவனைத்தும் ஆனுய்—இனியதுணை
தூய கரிவனத்துன் தாக்கியபொற் றுளிருக்க
மாயவினை செய்வதென் மற்று. 17

கலித்துறை

மற்றடங் தோள்தச கண்டனை வாட்டிப்பின் மாண்பருளும்
கற்றையஞ் செஞ்சடைக் கைலாயத் தேவைக் கரிவனத்தே
உற்றுத் திருநடம் ஆடும் ஒருவனை ஓங்குபதம்
மற்றெப் பொழுதும் மறவாது மாநிலம் வாழ்த்துகவே. 18

வெண்பா

வாழிய சோழ வளநாடு நாளுளும்
வாழிய சைவம் வளர்தளிகள்—வாழி
அரங்க புரத்துநடம் ஆடுகின்ற அண்ணல்
திரங்கொள் அடிச்சீர் செழித்து. 19

கலித்துறை

செழியன் விரும்பிடக் கால்மாறி ஆடும் சிவச்சுடரே
பழியஞ் சியபர! வாழி அரங்கப் பதியுகந்தோய்!
அழிய கிலாதுல(கு) உய்யற்(கு) அகங்குழைந்(து) அஞ்சலெனும்
செழிய நடத்தருள் வாழி வழிவழி சீருறவே. 20

இத்தேவஸ்தான நித்திய சுதந்திர ஆதீனமாகிய திருக்கயி லாய பரம்பரைத் தருமபுர வாதீனத்து 24-வது பரமாச்சாரிய ராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம் பந்த மகா சன்னிதானம் அவர்கள் இவ்வாதீன ஆலயங்களில் எல்லாம் செய்துவரும் முறைமையை யொட்டி இவ்வாலயத்தில் முக் கியமாக முதலில் செய்யவேண்டிய திருப்பணிகள் செய்தும் இருப்பதோடு இன்னும் செய்யவேண்டிய திருப்பணிகளை செய் தும் வருகின்றார்கள். நித்திய நைமித்திக உபகரணமாகிய நந்தன வன முதலிய பலவும் பயன்பெறச்செய்துவருவதோடு தமிழறிஞர் கட்கும் சைவாபிமானிகட்கும் பெரும்பயன் விளையும்படி இவ் வாலயத்தில் கற்றல் கேள்விகளிற் சிறந்த அறிஞர்களைக்கொண்டு அடிக்கடியும் திருவிழாக் காலங்களிலும் உபந்நியாசம் நிகழ்த்தும் படி செய்தும் வருகின்றார்கள். இப்பெருமானது அருட்டன் மையை யாவருமுணர்ந்து வழிபட்டு உய்யவேண்டுமென்ற பெரு நோக்கத்தோடு இத்தல மான்மியம் முதலியன அச்சியற்றி வழங்கிவருவது தெரிந்த விஷயம். இத்தலப் பெருமையை தெற்றென ஓதியும் கேட்டும் அறிந்துகொள்வதற்கு ஏதுவாக சமயாச்சாரியார்களாகிய நால்வர்கள் இத்தலத்தைபபற்றியருளிய தேவார திருவாசகங்களோடு அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ்ப பதிகங்களையும் சேர்தது சிறு புத்தகமாய் அச்சி யற்றி மககளுககு இலவசமாக வழங்கவும் வேண்டுமென்று திரு வுளங்கொண்டபடி அச்சியற்றப்பெறறிருக்கிறது.



உ

சிவமயம்.

திருவையாறு

என்னும்

திவ்ய ஸ்தலத்தைப்பற்றிய

தேவாரத் திருப்பதிகங்கள்.

திருஞானசம்பந்த சுவாமிகள்.

பண் — தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கலையார் மதியோ டரநீரும்
நிலையார் சடையா ரிடமாகும்
மலையா ரமுமா மணிசந்தோ
டலையார் புனல்சே ருமையாறே. க

மதியொன் றியகொன் றைவடத்தன்
மதியொன் றவுதைத் தவர்வாழ்வு
மதியின் னொடுசேர் கொடிமாடம்
மதியம் பயில்கின் றவையாறே. ௨

கொக்கின் னிறகின் னொடுவன்னி
புக்க சடையார்க் கிடமாகும்
திக்கின் னிசைதே வர்வணங்கும்
அக்கின் னரையா ரதையாறே. ௩

சிறைகொண் டபுரம் மவைசிந்தக்
கறைகொண் டவர்கா தல்செய்கோயில்
மறைகொண் டநல்வா னவர்தம்மில்
அறையும் மொலிசே ருமையாறே. ௪

உமையா ளொருபா கமதாகச்
சமைவா ரவர்சார் விடமாகும்
அமையா ருடல்சோர் தரமுத்தம்
அமையா வருமந் தணையாறே.

தலையின் றொடைமா லையணிந்து
கலைகொண் டதொர்கை யினர்சேர்வாம்
நிலைகொண் டமனத் தவர்நித்தம்
மலர்கொண் டுவணங் குமையாறே. ௬

வரமொன் றியமா மலரோன்றன்
சிரமொன் றையறுத் தவர்சேர்வாம்
வரைநின் றிழிவார் தருபொன்னி
அரவங் கொடுசே ருமையாறே. ௭

வரையொன் றதெடுத் தவரக்கன்
சிரமங் கநெரித் தவர்சேர்வாம்
விரையின் மலர்மே தகுபொன்னித்
திரைதன் னொடுசே ருமையாறே. ௮

சங்கக் கயனு மறியாமைப்
பொங்குஞ் சுடரா னவர்கோயில்
கொங்கிற் பொலியும் புனல்கொண்டு
அங்கிக் கெதிர்காட் டுமையாறே. ௯

துவரா டையர்தே ருடையார்கள்
கவர்வாய் மொழிகா தல்செய்யாதே
தவரா சர்கடா மரையானோ
டவர்தா மணையந் தணையாறே. ௰

கலையார் கலிக்கா ழியர்மன்னன்
நலமார் தருஞா னசம்பந்தன்
அலையார் புனல்சூ ழுமையாற்றைச்
சொலுமா லைவல்லார் துயர்வீடே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பணிந்தவ ரருவினை பற்றறுத் தருள்செயத்
துணிந்தவன் றோலொடு நூற்றுதை மார்பினில்
பிணித்தவ னரவொடு பேரெழி லாமைகொண்
டணிந்தவன் வளநக ரந்தணை யாறே.

கீர்த்திமிக் கவனகர் கிளரொளி யுடனடப்
பார்த்தவன் பனிமதி படர்சடை வைத்துப்
போர்த்தவன் கரியுரி புலியத ளரவரை
ஆர்த்தவன் வளநக ரந்தணை யாறே. ௨

வரிந்தவெஞ் சிலைபிடித் தவுணர்தம் வளநகர்
எரிந்தற வெய்தவ னெழிறிகழ் மலர்மேல்
இருந்தவன் சிரமது விமையவர் குறைகொள
அரிந்தவன் வளநக ரந்தணை யாறே. ௩

வாய்ந்தவல் லவுணர்தம் வளநக ரெரியிடை
மாய்ந்தற வெய்தவன் வளர்பிறை விரிபுனல்
தோய்ந்தெழு சடையினன் றொன்மறை யாறங்கம்
ஆய்ந்தவன் வளநக ரந்தணை யாறே. ௪

வானமர் மதிபுல்கு சடையிடை யரவொடு
தேனமர் கொன்றையன் றிகழ்தரு மார்பினன்
மானன மென்விழி மங்கையொர் பாகமும்
ஆனவன் வளநக ரந்தணை யாறே. ௫

முன்பனை முனிவரோ டமரர்க ளடிதொழும்
இன்பனை யிணையில விறைவனை யெழிறிகழ்
என்பொனை யேதமில் வேதியர் தாந்தொழும்
அன்பன வளநக ரந்தணை யாறே. ௬

வன்றிற லவுணர்தம் வளநக ரெரியிடை
வெந்தற வெய்தவன் விளங்கிய மார்பினில்
பந்தமர் மெல்விரல் பாகம தாகிதன்
அந்தமில் வளநக ரந்தணை யாறே. ௭

விடைத்தவல் லரக்கனல் வெற்பினை யெடுத்தலும்
அடித்தலத் தாலிறை யூன்றிமற் றவனது
முடித்தலை தோளவை நெரிதர முறைமுறை
அடர்த்தவன் வளநக ரந்தணை யாறே. ௮

விண்ணவர் தம்மொடு வெங்கதி ரோனல்
எண்ணிலி தேவர்க ளிந்திரன் வழிபடக்
கண்ணனும் பிரமனுங் காண்பரி தாகிய
அண்ணறன் வளநக ரந்தணை யாறே. ௯

மருளுடை மனத்துவன் சமணர்கண் மாசறு
இருளுடை யிணைத்துவர்ப் போர்வையி னார்களும்
தெருளுடை மனத்தவர் தேறுமின் றிண்ணமா
அருளுடை யடிகட மந்தணை யாறே. ௰

நலமலி ஞானசம் பந்தன தின்றமிழ்
அலைமலி புனன்மல்கு மந்தணை யாற்றினைக்
கலைமலி தமிழிவை கற்றுவல் லார்மிக
நலமலி புகழ்மிகு நன்மையர் தாமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென்
றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே. ௧

விடலேறு படநாக மரைக்கசைத்து
வெற்பரையன் பாவையோடும்
அடலேறொன் றதுவேறி யஞ்சொலீர்
பலியென்று மடிகள்கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி
னுடன்வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங்
கீன்றலைக்குந் திருவையாறே. ௨

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங்கோயில்

கொங்காளப் பொழினுழைந்து கூர்வாயா
லிறகுலர்த்திக் கூதனீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கான
லிரைதேருந் திருவையாறே. ௩

ஊன்பாயு முடைதலைகொண் டேரூரின்
பலிக்குழல்வா ருமையாள்பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனார்
தழலுருவர் தங்குங்கோயில்
மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கடோறுந்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலருந் திருவையாறே. ௪

நீரோடு கூவிளமு நிலாமதியும்
வெள்ளெருக்கு நிறைந்தகொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனார் தங்குங்கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார்வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலுந் திருவையாறே. ௫

வேந்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கு
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணுங்கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே. ௬

நின்றுலா நெடுவிசும்பி னெருக்கிவரு
புரமூன்று நீள்வாயம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங்கோயில்
குன்றெலாங் குயில்கூவக் கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவையாறே. ௭

அஞ்சாதே கயிலாய மலையெடுத்த
வரக்கர்கோன் றலைகள்பத்தும்
மஞ்சாடு தோணெரிய வடர்த்தவனுக்
கருள்புரிந்த மைந்தர்கோயில்
இஞ்சாய விளந்தெங்கின் பழம்வீழ
விளமேதி யிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியுந் திருவையாறே. ௮

மேலோடி விசும்பணவி வியனிலத்தை
மிகவகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனு மறியாத
வகைநின்றான் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே. ௯

குண்டாடி குற்றுடுக்கைச் சமணரொடு
சாக்கியருங் குணமொன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே
யாளாமின் மேவித்தொண்டீர்
எண்டோளர் முக்கண்ண ரெம்மீச
ரிறைவரினி தமருங்கோயில்
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்குந் திருவையாறே. ௰

அன்னமலி பொழில்புடைசூ ழையாற்றெம்
பெருமானை யந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையா லிவைபத்து மிசையுங்கா
லீசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகிற் றவநெறிசென்
றெய்துவார் தாழாதன்றே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கோடல் கோங்கங் குளிர்கூ விளமாலை குலாயசீர்
ஓடு கங்கை யொளிவெண் பிறைசூடு மொருவனார்
பாடல் வீணை முழவங்குழன் மொந்தைபண் ணாகவே
ஆடுமா றுவல் லானுமை யாளுடை யையனே. ௧

தன்மை யாரு மறிவாரில்லை தாம்பிற ரெள்கவே
பின்னு முன்னுஞ்சில பேய்கக ணஞ்சூழத் திரிதர்வர்
துன்ன வாடை யுடுப்பர் சுடலைப்பொடிப் பூசுவர்
அன்ன மாலுந்துறை யானுமை யாளுடை யையனே. ௨

கூறு பெண்ணுடை கோவண முண்பதும் வெண்டலை
மாறி லாருங்கொள் வாரிலலை மார்பி லணிகலம்
ஏறு மேறித்திரி வரிமை யோர்தொழ தேத்தவே
ஆறு நான்குஞ்சொன் னானுமை யாளுடை யையனே. ௩

பண்ணி னல்லமொழி யார்பவ ளத்துவர் வாயினார்
எண்ணி னல்லகுணத் தாரிணை வேல்வென்ற கண்ணினார்
வண்ணம் பாடிவலி பாடிததம் வாய்மொழி பாடவே
அண்ணல் கேட்டுகந் தானுமை யாளுடை யையனே. ௪

வேன லானை வெருவவுரி போர்த்துமை யஞ்சவே
வானை யூடறுக கும்மதி சூடிய மைந்தனார்
தேனெய் பாறயிர் தெங்கிள நீர்கரும் பின்றெளி
ஆனஞ் சாடுமுடி யானுமை யாளுடை யையனே. ௫

எங்கு மாகி நின்றானு மியல்பறி யப்படா
மங்கை பாகங்கொண் டானு மதிசூடு மைந்தனும்
பங்க மில்பதி னெட்டொடு நான்குக் குணர்வுமாய்
அங்க மாறுஞ்சொன் னானுமை யாளுடை யையனே. ௬

ஓதி யாருமறி வாரில்லை யோதி யுலகெலாம்
சோதி யாய்நிறைந் தான்சுடர்ச் சோதியுட் சோதியான்
வேதி யாகிவிண் ணாகிமண் ணோடெரி காற்றுமாய்
ஆதி யாகிநின் றானுமை யாளுடை யையனே. ௭

குரவ நாண்மலர் கொண்டடி யார்வழி பாடுசெய்
விரவி நீறணி வார்சில தொண்டர் வியப்பவே
பரவி நாடொறும் பாடநம் பாவம் பறைதலால்
அரவ மார்த்துகந் தானுமை யாளுடை யையனே. ௮

உரைசெய் தொல்வழி செய்தறி யாவிலங் கைக்குமன்
வரைசெய் தோளடர்த் தும்மதி சூடிய மைந்தனூர்
கரைசெய் காவிரி யின்வட பாலது காதலான்
அரைசெய் மேகலை யானுமை யாறுடை யையனே. ௯

மாலுஞ் சோதி மலரானு மறிகிலா வாய்மையான்
காலங் காம்பு வயிரங் கடிகையன் பொற்கழல்
கோல மாய்க்கொழுந் தீன்று பவளந் திரண்டதோர்
ஆல நீழலு ளானுமை யாறுடை யையனே. ௰

கையி லுண்டுழல் வாருங் கமழ்துவ ராடையான்
மெய்யைப் போர்த்துழல் வாரு முரைப்பன மெய்யல
மைகொள கண்டதெண் டோண்முக்க ணான்கழல் வாழ்த்தவே
ஐயந் தேர்ந்தளிப் பானுமை யாறுடை யையனே. ௧௧

பலிதி ரிந்துழல் பண்டங்கன் மேயவை யாற்றினைக்
கலிக டந்தகை யான்கடற் காழியர் காவலன்
ஒலிகொள் சம்பந்த னொண்டமிழ் பத்தும்வல் லார்கள்போய்
மலிகொள் விண்ணிடை மன்னிய சீர்பெறு வார்களே. ௧௨

திருச்சிற்றம்பலம்.

திருவிராகம். பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்திகழ் மலைச்சிறுமி யோடுமிகு தேசர்
உருத்திக ழெழிற்கயிலை வெற்பிலுறை தற்கே
விருப்புடைய வற்புத ரிருக்குமிட மேரார்
மருத்திகழ் பொழிற்குலவு வண்டிருவை யாறே. ௧

கந்தமர வுந்துபுகை யுந்தலில் விளக்கேர்
இந்திர னுணர்ந்துபணி யெந்தையிட மெங்கும்
சந்தமலி யுந்தரு மிடைந்தபொழில் சார
வந்தவளி நந்தணவு வண்டிருவை யாறே. ௨

கட்டுவட மெட்டுமுறு வட்டமுழ வத்தில்
கொட்டுகர மிட்டவொலி தட்டும்வகை நந்திக்
கிட்டமிக நட்டமவை யிட்டவ ரிடஞ்சீர்
வட்டமதி லுட்டிகழும் வண்டிருவை யாறே. ௩

நண்ணியொர் வடத்தினிழ னால்வர்முனி வர்க்கன்
றெண்ணிலி மறைப்பொருள் விரித்தவ ரிடஞ்சீர்த்
தண்ணின்மலி சந்தகிலொ டுந்திவரு பொன்னி
மண்ணின்மிசை வந்தணவு வண்டிருவை யாறே. ௪

வென்றிமிகு தாரகன தாருயிர் மடங்கக்
கன்றிவரு கோபமிகு காளிகத மோவ
நின்றுநட மாடியிட நீடுமலர் மேலால்
மன்றன்மலி யும்பொழில்கொள் வண்டிருவை யாறே. ௫

பூதமொடு பேய்கள்பல பாடநட மாடிப்
பாதமுதல் பையரவு கொண்டணி பெறுத்திக்
கோதைய ரிடும்பலி கொளும்பர னிடம்பூ
மாதவி மணங்கமழும் வண்டிருவை யாறே. ௬

துன்னுகுழன் மங்கையுமை நங்கைசுளி வெய்கப்
பின்னொரு தவஞ்செய்துழல் பிஞ்ஞகனு மங்கே
என்னசதி யென்றுரைசெ யங்கண னிடஞ்சீர்
மன்னுகொடை யாளர்பயில் வண்டிருவை யாறே. ௭

இரக்கமில் குணத்தொடுல கெங்குநலி வெம்போர்
அரக்கன்முடி யத்தலை புயத்தொடு மடங்கத்
துரக்கவிர லிறசிறிது வைத்தவ ரிடஞ்சீர்
வரக்கருணை யாளர்பயில் வண்டிருவை யாறே. ௮

பருத்துருவ தாகிவி ணடைந்தவனொர் பன்றிப்
பெருத்துருவ தாயுல கிடந்தவனு மென்றும்
கருததுரு வொணாவகை நிமிர்ந்தவ னிடங்கார்
வருத்துவகை தீர்கொள்பொழில் வண்டிருவை யாறே. ௯

பாக்கியம தொன்றுமில் சமண்பதகர் புத்தர்
சாக்கியர்க ளென்றுடல் பொதிந்துதிரி வார்தம்
நோக்கரிய தத்துவ னிடம்படியின் மேலால்
மாக்கமுற நீடுபொழில் வண்டிருவை யாறே. ௰

வாசமலி யும்பொழில்கொள் வண்டிருவை யாற்றுள்
ஈசனை யெழிறபுகலி மன்னவன்மெய்ஞ் ஞானப்
பூசுர னுரைத்ததமிழ் பத்துமிவை வல்லார்
நேசமலி பத்தரவர் நின்மல னடிக்கே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

பண் — காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாம லையா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். க

போழிளங் கண்ணியி னானைப் பூந்துகி லாளொடும் பாடி
வாழியம் போற்றியென றேத்தி வட்டமிட் டாடா வருவேன்
ஆழி வலவனின் றேத்து மையா றடைகின்ற போது
கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். உ

எரிப்பிறைக் கண்ணியி னானை யேந்திழை யாளொடும் பாடி
முரித்த லயங்க ளிட்டு முகமலர்ந் தாடா வருவேன்
அரித்தொழு கும்வெள் ளருவி யையா றடைகின்ற போது
வரிக்குயில் பேடையொ டாடி வைகி வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௩

பிறையிளங் கண்ணியி னானைப் பெய்வளை யாளொடும் பாடித்
துறையிளம் பன்மலர் தூவித் தோளைக் குளிரத் தொழுவேன்
அறையிளம் பூங்குயி லாலு மையா றடைகின்ற போது
சிறையிளம் பேடையொ டாடிச் சேவல் வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௪

ஏடு மதிக்கண்ணி யானை யேந்திழை யாளொடும் பாடிக்
காடொடு நாடு மலையுங் கைதொழு தாடா வருவேன்
ஆட லமர்ந்துறை கின்ற வையா றடைகின்ற போது
பேடை மயிலொடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௫

தண்மதிக் கண்ணியி னானைத் தையனல் லாளொடும் பாடி
உண்மெலி சிந்தைய னாகி யுணரா வுருகா வருவேன்
அண்ண லமர்ந்துறை கின்ற வையா றடைகின்ற போது
வண்ணப் பகன்றிலொ டாடி வைகி வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௬

கடிமதிக் கண்ணியி னானைக் காரிகை யாரொடும் பாடி
வடிவொடு வண்ண மிரண்டும் வாய்வேண் டுவசொல்லி வாழ்வேன்
அடியிணை யார்க்குங் கழலா னையா றடைகின்ற போது
இடிகுர லன்னதோ ரேன மிசைந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௭

விரும்பு மதிக்கண்ணி யானை மெல்லிய லாளொடும் பாடிப்
பெரும்புலர் காலை யெழுந்து பெறுமலர் கொய்யா வருவேன்
அருங்கலம் பொன்மணி யுந்து மையா றடைகின்ற போது
கருங்கலைப் பேடையொ டாடிக் கலந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௮

முற்பிறைக் கண்ணியி னானை மொய்குழ லாளொடும் பாடிப்
பற்றிக் கயிறறுக் கில்லேன் பாடியு மாடா வருவேன்
அற்றருள் பெறுநின் றோரா டையா றடைகின்ற போது
நற்றுணைப் பேடையொ டாடி நாரை வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௯

திங்கண் மதிக்கண்ணி யானைத் தேமொழி யாளொடும் பாடி
எங்கரு ணல்குங்கொ லெந்தை யெனக்கினி யென்று வருவேன்
அங்கிள மங்கைய ராடு மையா றடைகின்ற போது
பைங்கிளி பேடையொ டாடிப் பறந்து வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௰

வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததோர் காலங் காண்பான் கடைக்கணிக் கின்றேன்
அளவு படாததோ ரன்போ டையா றடைகின்ற போது
இளமண நாகு தழுவி யேறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன். ௧௧

திருச்சிற்றம்பலம்.

பண் — பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விடகிலே னடிநாயேன் வேண்டியக்கா லியாதொன்றும்
இடகிலே னமணர்கட மறவுரையே கேட்டலமந்தேன்
தொடர்கின்றே னுன்னுடைய தூமலர்ச்சே வடிகாண்பான்
அடைகின்றே னையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே. ௧

செம்பவளத் திருவுருவர் திகழ்சோதி குழைக்காதர்
கொம்பமருங் கொடிமருங்குற கோல்வளையா ளொருபாகர்
வம்பவிழு மலர்க்கொன்றை வளர்சடைமேல் வைத்துகந்த
அம்பவள வையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே. உ

நணியானை சேயானை நம்பானை செம்பொன்னின்
துணியானை தோலானை சுண்ணவெண் ணீற்றானை
மணியானை வானவர்க்கு மருந்தாகிப் பிணிதீர்க்கும்
அணியானை யையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே. ௩

ஊழித்தீ யாய்நின்றா யுள்குவா ருள்ளத்தாய்
வாழித்தீ யாய்நின்றாய் வாழ்த்துவார் வாயானை
பாழித்தீ யாய்நின்றாய் படர்சடைமேற் பணிமதியம்
ஆழித்தீ யையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே. ௪

சடையானை சடையிடையே தவழுந்தண் மதியானை
விடையானை விடையேறிப் புரமெரித்த வித்தகனை
உடையானை யுடைதலைகொண் டூருருண் பலிக்குழலும்
அடையானை யையாறர்க காளாய்நா னுய்ந்தேனே. ௫

நீரானை தீயானை நெதியானை கதியானை
ஊரானை யுலகானை யுடலானை யுயிரானை
பேரானை பிறைசூடி பிணிதீர்க்கும் பெருமானென்
றூபாத வையாறர்க காளாய்நா னுய்ந்தேனே. ௬

கண்ணானாய் மணியானாய் கருத்தானா யருத்தானாய்
எண்ணானா யெழுத்தானா யெழுத்தினுக்கோ ரியல்பானாய்
விண்ணானாய் விண்ணிடையே புரமெரித்த வேதியனை
அண்ணானை வையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே. ௭

மின்னானா யுருவானாய் வேதத்தின் பொருளானாய்
பொன்னானாய் மணியானாய் பொருகடல்வாய் முத்தானாய்
நின்னானா ரிருவர்க்குங் காண்பரிய நிமிர்சோதி
அன்னானை யையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே. ௮

முத்திசையும் புனற்பொன்னி மொய்பவளங் கொழித்துந்தப்
பத்தர்பலர் நீர்மூழ்கிப் பலகாலும் பணிந்தேத்த
எத்திசையும் வானவர்க ளெம்பெருமா னெனவிறைஞ்சும்
அத்திசையா மையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே. ௯

கருவரைசூழ் கடலிலங்கைக் கோமானைக் கருத்தழியத்
திருவிரலா லூதகரணஞ் செய்துகந்த சிவமூர்த்தி
பெருவரைசூழ் வையகத்தார் பேர்நந்தி யென்றேத்தும்
அருவரைசூ ழையாறர்க் காளாய்நா னுய்ந்தேனே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கங்கையைச் சடையுள்வைத்தார் கதிர்பொறி யரவும்வைத்தார்
திங்களைத் திகழவைத்தார் திசைதிசை தொழவும்வைதார்
மங்கையைப் பாகம்வைத்தார் மான்மறி மழுவும்வைத்தார்
அங்கையு ளனலும்வைத்தா ரையனை யாறனாரே. ௧

பொடிதனைப் பூசவைத்தார் பொங்குவெண் ணூலும்வைத்தார்
கடியதோர் நாகம்வைத்தார் காலனைக் காலவைத்தார்
வடிவுடை மங்கைதன்னை மார்பிலோர் பாகம்வைத்தார்
அடியிணை தொழவும்வைத்தா ரையனை யாறனாரே. ௨

உடைதரு கீளும்வைத்தா ருலகங்க ளனைத்தும்வைத்தார்
படைதரு மழுவும்வைததார் பாய்புலித் தோலும்வைத்தார்
விடைதரு கொடியும்வைத்தார் வெண்புரி நூலும்வைத்தார்
அடைதர வருளும்வைத்தா ரையனை யாறனாரே. ௩

தொண்டர்க டொழவும்வைத்தார் தூமதி சடையில்வைத்தார்
இண்டையைத் திகழவைத்தா ரெமக்கென்று மின்பம்வைத்தார்
வண்டுசேர் குழலினாளை மருவியோர் பாகம்வைத்தார்
அண்டவா னவர்களேத்து மையனை யாறனாரே. ௪

வானவர் வணங்கவைத்தார் வல்வினை மாயவைத்தார்
கானிடை நடமும்வைத்தார் காமனைக் கனலாவைத்தார்
ஆனிடை யைந்தும்வைத்தா ராட்டுவார்க் கருளும்வைத்தார்
ஆனையி னுரிவைவைத்தா ரையனை யாறனாரே. ௫

சங்கணி குழையும்வைத்தார் சாம்பர்மெய்ப் பூசவைத்தார்
வெங்கதி ரெரியவைத்தார் விரிபொழி லனைத்தும்வைத்தார்
கங்குலும் பகலும்வைத்தார் கடுவினை களையவைத்தார்
அங்கமே தோதவைத்தா ரையனை யாறனாரே. ௬

பத்தர்கட் கருளும்வைத்தார் பாய்விடை யேறவைத்தார்
சித்தத்தை யொன்றவைத்தார் சிவமதே நினையவைத்தார்
முத்தியை முற்றவைத்தார் முறைமுறை நெறிகள்வைத்தார்
அத்தியி னுரிவைவைத்தா ரையனை யாறனாரே. ௭

ஏறுகந் தேறவைத்தா ரிடைமரு திடமும்வைத்தார்
நாறுபூங் கொன்றைவைத்தார் நாகமு மரையில்வைத்தார்
கூறுமை யாகவைத்தார் கொல்புலித் தோலும்வைத்தார்
ஆறுமோர் சடையில்வைத்தா ரையனை யாறனாரே. ௮

பூதங்கள் பலவும்வைத்தார் பொங்குவெண் ணீறும்வைத்தார்
கீதங்கள் பாடவைத்தார் கின்னரந் தன்னைவைத்தார்
பாதங்கள் பரவவைத்தார் பத்தர்கள் பணியவைத்தார்
ஆதியு மந்தம்வைத்தா ரையனை யாறனாரே. ௯

இரப்பவர்க் கீயவைத்தா ரீபவர்க் கருளும்வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாங் கடுநர கங்கள்வைத்தார்
பரப்புநீர்க் கங்கைதன்னைப் படர்சடைப் பாகம்வைத்தார்
அரக்கனுக் கருளும்வைத்தா ரையனை யாறனாரே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

குண்டனாய்ச் சமணரோடே கூடிநான் கொண்டமாலைத்
துண்டனே சுடர்கொள்சோதீ தூநெறி யாகிநின்ற
அண்டனே யமரரேறே திருவையா றமர்ந்ததேனே
தொண்டனேன் றொழுதுன்பாதஞ் சொல்லிநான் றிரிகின்றேனே. ௧

பீலிகை யிடுக்கிநாளும் பெரியதோர் தவமென்றெண்ணி
வாலிய தறிகள்போல மதியிலார் பட்டதென்னே
வாலியார் வணங்கியேத்துந் திருவையா றமர்ந்ததேனோ
டாலியா வெழுந்தநெஞ்ச மழகிதா வெழுந்தவாறே. ௨

தட்டிடு சமணரோடே தருக்கிநா னவமென்றெண்ணி
ஒட்டிடு மனத்தினீரே யும்மையான் செய்வதென்னே
மொட்டிடு கமலப்பொய்கைத் திருவையா றமர்ந்ததேனோ
டொட்டிடு முள்ளத்தீரே யும்மைநா னுகந்திட்டேனே. ௩

பாசிப்பன் மாசுமெய்யர் பலமிலாச் சமணரோடு
நேசத்தா லிருந்தநெஞ்சை நீக்குமா றறியமாட்டேன்
தேசத்தார் பரவியேத்துந் திருவையா றமர்ந்ததேனை
வாசத்தால் வணங்கவல்லார் வல்வினை மாயுமன்றே. ௪

கடுப்பொடி யட்டிமெய்யிற் கருதியே தவமென்றெண்ணி
வடுக்களோ டிசைந்தநெஞ்சே மதியிலி பட்டதென்னே
மடுக்களில் வாளைபாயுந் திருவையா றமர்ந்ததேனை
அடுத்துநின் றுன்னுநெஞ்சே யருந்தவஞ் செய்தவாறே. ௫

துறவியென் றவமதோரேன் சொல்லிய செலவுசெய்து
உறவினோ டமணரோடு முணர்விலே னுணர்வொன்றின்றி
நறவமார் பொழில்கள்சூழ்ந்த திருவையா றமர்ந்ததேனை
மறவிலா நெஞ்சமேநன் மதியுனக் கடைந்தவாறே. ௬

பல்லுரைச் சமணரோடே பலபல காலமெல்லாம்
சொல்லிய செலவுசெய்தேன் சோர்வனு னினைந்தபோது
மல்லிகை மலருஞ்சோலைத் திருவையா றமர்ந்ததேனை
எல்லியும் பகலுமெல்லா நினைந்தபோ தினியவாறே. ௭

மண்ணுளார் விண்ணுளாரும் வணங்குவார் பாவம்போக
எண்ணிலாச் சமணரோடே யிசைந்தனை யேழைநெஞ்சே
தெண்ணிலா வெறிக்குஞ்சென்னித் திருவையா றமர்ந்ததேனைக்
கண்ணினாற் காணப்பெற்றுக் கருதிற்றே முடிந்தவாறே. ௮

குருந்தம தொசித்தமாலுங் குலமலர் மேவினானும்
திருந்துநற் றிருவடியுந் திருமுடி காணமாட்டார்
அருந்தவ முனிவரேத்துந் திருவையா றமர்ந்ததேனைப்
பொருந்திநின் றுன்னுநெஞ்சே பொய்வினை மாயுமன்றே. ௯

அறிவிலா வரக்கனோடி யருவரை யெடுக்கலுற்று
முறுகினான் முறுகக்கண்டு மூதறி வாளனோக்கி
நிறுவினான் சிறுவிரலா னெரிந்துபோய் நிலத்தில்வீழ
அறிவினா லருள்கள்செய்தான் திருவையா றமர்ந்ததேனே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தானலா துலகமில்லை சகமலா தடிமையில்லை
கானலா தாடலில்லை கருதுவார் தங்களுக்கு
வானலா தருளுமில்லை வார்குழன் மங்கையோடும்
ஆனலா தூர்வதில்லை யையனை யாறனார்க்கே. க

ஆலலா லிருக்கையில்லை யருந்தவ முனிவர்க்கன்று
நூலலா னொடிவதில்லை நுண்பொரு ளாய்ந்துகொண்டு
மாலுநான் முகனுங்கூடி மலரடி வணங்கவேலை
ஆலலா லமுதமில்லை யையனை யாறனார்க்கே. உ

கரிபுரி சுடலைதன்னி னடமலா னவிற்றலில்லை
சுரிபுரி குழலியோடுந் துணையலா லிருக்கையில்லை
தெரிபுரி சிந்தையார்க்குத் தெளிவலா லருளுமில்லை
அரிபுரி மலர்கொண்டேத்து மையனை யாறனார்க்கே. ௩

தொண்டலாற் றுணையுமில்லை தோலலா துடையுமில்லை
கண்டலா தருளுமில்லை கலந்தபின் பிரிவதில்லை
பண்டைநான் மறைகள்காணாப் பரிசின னென்றென் றெண்ணி
அண்டவா னவர்களேத்து மையனை யாறனார்க்கே. ௪

எரியலா லுருவமில்லை யேறலா லேறலில்லை
கரியலாற் போர்வையில்லை காண்டகு சோதியார்க்குப்
பிரிவிலா வமரர்கூடிப் பெருந்தகைப் பிரானென்றேத்தும்
அரியலாற் றேவியில்லை யையனை யாறனார்க்கே. ௫

என்பலாற் கலனுமில்லை யெருதலா லூர்வதில்லை
புன்புலா னறுகாட்டிற் பொடியலாற் சாந்துமில்லை
துன்பிலாத் தொண்டர்கூடித் தொழுதழு தாடிப்பாடும்
அன்பலாற் பொருளுமில்லை யையனை யாறனார்க்கே. ௬

கீளலா லுடையுமில்லை கிளர்பொறி யரவம்பைம்பூண்
தோளலாற் றுணையுமில்லை தொத்தலர் கின்றவேனில்
வேளலாற் காயப்பட்ட வீரரு மில்லைமீளா
ஆளலாற் கைம்மாறில்லை யையனை யாறனார்க்கே. ௭

சகமலா தடிமையில்லை தானலாற் றுணையுமில்லை
நகமெலாந் தேயக்கையா னாண்மலர் தொழுதுதூவி
முகமெலாங் கண்ணீர்மல்க முன்பணிந் தேத்துந்தொண்டர்
அகமலாற் கோயிலில்லை யையனை யாறனார்க்கே. ௮

உமையலா துருவமில்லை யுலகலா துடையதில்லை
நமையெலா முடையராவர் நன்மையே தீமையில்லை
கமையெலா முடையராகிக் கழலடி பரவுதொண்டர்க்
கமைவிலா தருள்கொடுப்பா ரையனை யாறனார்க்கே. ௯

மலையலா விருக்கையில்லை மதித்திடா வரக்கன்றன்னைத்
தலையலா னெரித்ததில்லை தடவரைக் கீழடர்த்து
நிலையிலார் புரங்கள்வேவ நெருப்பலால் விரித்ததில்லை
அலையினார் பொன்னிமன்னு மையனை யாறனார்க்கே.

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குறவித்த வாகுற்ற நோய்வினை காட்டிக் குறவித்தநோய்
உறவித்த வாவுற்ற நோய்வினை தீர்ப்பா னுகந்தருளி
அறிவித்த வாறடி யேனையை யாற னடிமைக்களே
செறிவித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழெனையே.

கூர்வித்த வாகுற்ற நோய்வினை காட்டியுங் கூர்வித்தநோய்
ஊர்வித்த வாவுற்ற நோய்வினை தீர்ப்பா னுகந்தருளி
ஆர்வித்த வாறடி யேனையை யாற னடிமைக்களே
சேர்வித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழெனையே.

தாக்கின வாசல மேவினை காட்டியுந் தண்டித்தநோய்
நீக்கின வாநெடு நீரினின் றேற நினைந்தருளி
ஆக்கின வாறடி யேனையை யாற னடிமைக்களே
நோக்கின வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழெனையே.

தருக்கின நான்றக வின்றியு மேமோடச் சலமதனால்
நெருக்கின வாநெடு நீரினின் றேற நினைந்தருளி
உருக்கின வாறடி யேனையை யாற னடிமைக்களே
பெருக்கின வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழெனையே.

இழிவித்த வாறிட்ட நோய்வினை காட்டி யிடர்ப்படுத்துக்
கழிவித்த வாகட்ட நோய்வினை தீர்ப்பான் கலந்தருளி
அழிவித்த வாறடி யேனையை யாற னடிமைக்களே
தொழுவித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழெனையே.

இடைவித்த வாறிட்ட நோய்வினை காட்டி யிடர்ப்படுத்து
உடைவித்த வாறுற்ற நோய்வினை தீர்ப்பா னுகந்தருளி
அடைவித்த வாறடி யேனையை யாற னடிமைக்களே
தொடர்வித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழெனையே.

படக்கின வாபட நின்றுபன் னாளும் படக்கினநோய்
அடக்கின வாறது வன்றியுந் தீவினை பாவமெல்லாம்
அடக்கின வாறடி யேனையை யாற னடிமைக்களே
தொடக்கின வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழெனையே.

மறப்பித்த வாவல்லை நோய்வினை காட்டி மறப்பித்தநோய்
துறப்பித்த வாதுக்க நோய்வினை தீர்ப்பா னுகந்தருளி
இறப்பித்த வாறடி யேனையை யாற னடிமைக்களே
சிறப்பித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழெனையே.

துயக்கின வாதுக்க நோய்வினை காட்டித் துயக்கினநோய்
இயக்கின வாறிட்ட நோய்வினை தீர்ப்பா னிசைந்தருளி
அயக்கின வாறடி யேனையை யாற னடிமைக்களே
மயக்கின வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழெனையே.

கறுத்துமிட் டார்கண்டங் கங்கை சடைமேற் கரந்தருளி
இறுத்துமிட் டாரிலங் கைக்கிறை தன்னை யிருபதுதோள்
அறுத்துமிட் டாரடி யேனையை யாற னடிமைக்களே
பொறுத்துமிட் டார்தொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழெ
[னையே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாற னடித்தலமே.

இழித்தன வேழேழ்ப் பிறப்பு மறுத்தன வென்மனத்தே
பொழித்தன போரெழிற் கூற்றை யுதைத்தன போற்றவர்க்காய்க்
கிழித்தன தக்கன் கிளரொளி வேள்வியைக் கீழ்முன்சென்
றழித்தன வாறங்க மானவை யாற னடித்தலமே. ௨

மணிநிற மொப்பன பொன்னிற மன்னின மின்னியல்வாய்
கணிநிற மன்ன கயிலைப் பொருப்பன காதல்செய்யத்
துணிவன சீலத்த ராகித் தொடர்ந்துவி டாததொண்டர்க்
கணியன சேயன தேவர்க்கை யாற னடித்தலமே. ௩

இருடரு துன்பப் படல மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருடரு கண்ணிழந் துண்பொரு ணாடிப் புகலிழந்த
குருடருந் தம்மைப் பரவக் கொடுநர கக்குழிநின்
றருடரு கைகொடுத் தேற்றுமை யாற னடித்தலமே. ௪

எழுவா யிறுவா யிலாதன வெங்கட் பிணிதவிர்த்து
வழுவா மருத்துவ மாவன மாநர கக்குழிவாய்
விழுவா ரவர்தம்மை வீழ்ப்பன மீட்பன மிக்கவன்போ
டழுவார்க் கமுதங்கள் காண்கவை யாற னடித்தலமே. ௫

துன்பக் கடலிடைத் தோணித் தொழில்பூண்ட தொண்டர்தம்மை
இன்பக் கரைமுகந் தேற்றுந் திறத்தன மாற்றயலே
பொன்பட் டொழுகப் பொருந்தொளி செய்யுமப் பொய்பொருந்தா
அன்பர்க் கணியன காண்கவை யாற னடித்தலமே. ௬

களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் னின்றவிப் பத்தரைக் கோதில்செந்தேன்
தெளித்துச் சுவையமு தூட்டி யமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வ மாக்குமை யாற னடித்தலமே. ௭

திருத்திச் சருத்தினைச் செவ்வே நிறுத்திச் செறுத்துடலை
வருத்திக் கடிமலர் வாளெடுத் தோச்சி மருங்குசென்று
விருத்திக் குழக்கவல் லோர்கட்கு விண்பட் டிகையிடுமால்
அருத்தித் தருந்தவ ரேத்துமை யாற னடித்தலமே. ௮

பாடும் பறண்டையு மாந்தையு மார்ப்பப் பரந்துபல்பேய்
கூடி முழவக் குவிகவிழ் கொட்டக் குறுநரிகள்
நீடுங் குழல்செய்ய வைய நெளிய நிணப்பிணக்காட்
டாடுந் திருவடி காண்கவை யாற னடித்தலமே. ௯

நின்போ லமரர்க ணீண்முடி சாய்த்து நிமிர்த்துகுத்த
பைம்போ திழக்கிப் பவளந் தழைப்பன பாங்கறியா
என்போ லிகள்பறித் திட்ட விலையு முகையுமெல்லாம்
அம்போ தெனக்கொள்ளு மையனை யாற னடித்தலமே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மலையார் மடந்தை மனத்தன வானோர் மகுடமன்னி
நிலையா யிருப்பன நின்றோர் மதிப்பன நீணிலத்துப்
புலையாடு புன்மை தவிர்ப்பன பொன்னுல கம்மளிக்கும்
அலையார் புனற்பொன்னி சூழ்ந்தை யாற னடித்தலமே. க

பொலம்புண் டரிகப் புதுமலர் போல்வன போற்றியென்பார்
புலம்பும் பொழுதும் புணர்துணை யாவன பொன்னனையாள்
சிலம்புஞ் செறிபா டகமுஞ் செழுங்கிண் கிணித்திரளும்
அலம்புந் திருவடி காண்கவை யாற னடித்தலமே. உ

உற்றா ரிலாதார்க் குறுதுணை யாவன வோதிநன்றாற்
கற்றார் பரவப் பெருமை யுடையன காதல்செய்ய
கிற்பார் தமக்குக் கிளரொளி வானகந் தானகொடுக்கும்
அற்றார்க் கரும்பொருள் காண்கவை யாற னடித்தலமே. ங

வானைக் கடந்தண்டத் தப்பான் மதிப்பன மந்திரிப்பார்
ஊனைக் கழித்துய்யக் கொண்டருள் செய்வன வுத்தமர்க்கு
ஞானச் சுடராய் நடுவே யுதிப்பன நங்கையஞ்ச
ஆனை யுரித்தன காண்கவை யாற னடித்தலமே. ச

மாதிர மானில மாவன வானவர் மாமுகட்டின்
மீதன மென்கழல் வெங்கச்ச வீக்கின வெந்நமனார்
தூதரை யோடத் துரப்பன துன்பறத் தொண்டுபட்டார்க்
காதர மாவன காண்கவை யாற னடித்தலமே. ரு

பேணித் தொழுமவர் பொன்னுல காளப் பிறங்கருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக் கொடுத்திமை யோர்முடிமேல்
மாணிக்க மொத்து மரகதம் போன்று வயிரமன்னி
ஆணிக் கனகமு மொக்குமை யாற னடித்தலமே. சு

ஓதிய ஞானமு ஞானப் பொருளு மொலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியு மாவன விண்ணுமண்ணுஞ்
சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறு மொப்பன தூமதியோ
டாதியு மந்தமு மானவை யாற னடித்தலமே. எ

சுணங்கு முகத்துத் துணைமுலைப் பாவை சுரும்பொடுவண்
டணங்குங் குழலி யணியார் வளைக்கரங் கூப்பிநின்று
வணங்கும் பொழுதும் வருடும் பொழுதுமவண காந்தளொண்போ
தணங்கு மரவிந்த மொக்குமை யாற னடித்தலமே. அ

சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர்துன்னும்
நிழலா வனவென்று நீங்காப் பிறவி நிலைகெடுத்துக்
கழலா வினைகள் கழற்றுவ கால வனங்கடந்த
அழலா ரொளியன காண்கவை யாற னடித்தலமே. கூ

வலியான் றலைபத்தும் வாயவிட் டலற வரையடர்த்து
மெலியா வலியுடைக் கூற்றை யுதைத்துவிண் ணோர்கண்முன்னே
பலிசேர் படுகடைப் பார்த்துப்பன் னாளும் பலரிகழ
அலியா நிலைநிற்கு மையனை யாற னடித்தலமே. ய

திருச்சிற்றம்பலம்.

திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அந்திவட் டத்திங்கட் கண்ணிய னையா றமர்ந்துவந்தென்
புந்திவட் டத்திடைப் புக்குநின் றானையும் பொய்யென்பனோ
சிந்திவட் டச்சடைக் கற்றை யலம்பச் சிறிதலர்ந்த
நந்திவட் டத்தொடு கொன்றை வளாவிய நம்பனையே. க

பாட கக் கால்கழற் கால்பரி திக்கதி ருக்கவந்தி
நாடகக் கானங்கை முன்செங்க ணானைத்தின் பின்னடந்த
காடகக் கால்கணங் கைதொழுங் காலெங்க ளாய்நின்றகால்
ஆடகக் காலரி மான்றேர் வலவனை யாறனவே.

திருச்சிற்றம்பலம். உ

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தை வாய்தலு ளான்வந்து சீரியன்
பொந்து வார்புலால் வெண்டலைக் கையினன்
முந்தி வாயதோர் மூவிலை வேல்பிடித்
தந்தி வாயதோர் பாம்பரை யாறரே. க

பாக மாலை மகிழ்ந்தனர் பாணமாதி
போக மாலைமி னீருதி போர்த்தவர்
கோக மாலை குலாயதோர் கொன்றையும்
ஆக வாமினையஞ் சாடுமை யாறரே உ

நெஞ்ச மென்பதோர் நீள்கயந் தன்னுளே
வஞ்ச மென்பதோர் வான்சுழிப் பட்டுநான்
துஞ்சும் போழுதுநின் னாமத் திருவெழுத்
தஞ்சுந் தோன்ற வருளுமை யாறரே. ங

நினைக்கு நெஞ்சினுள் ளார்நெடு மாமதில்
அனைத்து மொள்ளெரி வாயெரி யூட்டினார்
பனைக்கை வேழத் துரியுடல் போர்த்தவர்
அனைத்து வாய்தலுள் ளாருமை யாறரே. ச

பரியர் நுண்ணியர் பார்த்தற் கரியவர்
அரிய பாடல ராடல ரன்றியும்
கரிய கண்டத்தர் காட்சி பிறர்க்கெளார்
அரியர் தொண்டர்க் கெளியரை யாறரே. ரு

புலரும் போது மிலர்பட்ட பொற்சுடர்
மலரும் போதுக ளாற்பணி யச்சிலர்
இலரும் போதுமி லாதது மன்றியும்
அலரும் போது மணியுமை யாறரே. சா

பங்க மாலைக் குழலியொர் பாணிறக்
கங்கை மாலையர் காதன்மை செய்தவர்
மங்கை மாலை மதியமுங் கண்ணியும்
அங்க மாலையுஞ் சூடுமை யாறரே. எ

முன்னை யாறு முயன்றெழு வீரெலாம்
பின்னை யாறு பிரியெனும் பேதைகாள்
மன்னை யாறு மருவிய மாதவன்
தன்னை யாறு தொழுதல யாகுமே. அ

ஆனை யாறென வாடுகின் றான்முடி
வானை யாறு வளாயது காண்மினே
நானை யாறுபுக் கேற்கவ னின்னருள்
தேனை யாறு திறந்தாலே யொக்குமே. ௯

அரக்கின் மேனி யணங்களிர் மேனிய
அரக்கினை செவடி யாலடர்த் தெய்திலன்
றரக்க னிளைந்து மெய்யு மறுகின
அரக்கி னுணவு யாறுடை யாறரனே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தை வண்ணத்த ராய்த்திறம் பாவணம்
முந்தி வண்ணத்த ராய்முழு நீறணி
சந்தி வண்ணத்த ராய்த்தழல் போல்வதோர்
அந்தி வண்ணமு மாவரை யாறரே. ௧

மூல வண்ணத்த ராய்முத லாகிய
கோல வண்ணத்த ராகிக் கொழுஞ்சுடர்
நீல வண்ணத்த ராகி நெடும்பளிங்
கால வண்ணத்த ராவரை யாறரே. ௨

சிந்தை வண்ணமுந் தீயதோர் வண்ணமும்
அந்திப் போதழ காகிய வண்ணமும்
பந்திக் காலனைப் பாய்ந்ததோர் வண்ணமும்
அந்தி வண்ணமு மாவரை யாறரே. ௩

இருளின் வண்ணமு மேழிசை வண்ணமும்
சுருளின் வண்ணமுஞ் சோதியின் வண்ணமும்
பருளு நான்முகன் மாலொடு வண்ணமும்
அருளும் வண்ணமு மாவரை யாறரே. ௪

இழுக்கின் வண்ணங்க ளாகிய வெவ்வழல்
குழைக்கும் வண்ணங்க ளாகியுங் கூடியும்
மழைக்கண் மாமுகி லாகிய வண்ணமும்
அழைக்கும் வண்ணமு மாவரை யாறரே. ௫

இண்டை வண்ணமு மேழிசை வண்ணமும்
தொண்டர் வண்ணமுஞ் சோதியின் வண்ணமும்
கண்ட வண்ணங்க ளாய்க்கனன் றாமணி
அண்ட வண்ணமு மாவரை யாறரே. ௬

விரும்பும் வண்ணமும் வேதத்தின் வண்ணமும்
கரும்பி னின்மொழிக் காரிகை வண்ணமும்
விரும்பு வார்வினை தீர்த்திடும் வண்ணமும்
அரும்பின் வண்ணமு மாவரை யாறரே. ௭

ஊழி வண்ணமு மொண்சுடர் வண்ணமும்
வேழ விருரி போர்த்ததொர் வண்ணமும்
வாழித் தீயுரு வாகிய வண்ணமும்
ஆழி வண்ணமு மாவரை யாறரே. ௮

செய்த வன்றிரு நீறணி வண்ணமும்
எய்த நோக்கரி தாகிய வண்ணமும்
கைது காட்சி யரியதோர் வண்ணமும்
ஐது வண்ணமு மாவரை யாறரே. ௯

எடுத்த வாளரக் கன்றிறல் வண்ணமும்
இடர்க்கண் போற்பெரி தாகிய வண்ணமும்
கடுத்த கைந்நரம் பாலிசை வண்ணமும்
அடுத்த வண்ணமு மாவரை யாறரே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரார் திரிபுரங்க ணீறு நோக்கு
 மனலாடி யாரமுதே யென்றே னானே
கூரார் மழுவாட் படையொன் றேந்தி
 குறட்பூதப் பல்படையா யென்றே னானே
பேரா யிரமுடையா யென்றே னானே
 பிறைசூடும் பிஞ்ஞகனே யென்றே னானே
ஆரா வமுதேயென் னையா றன்னை
 யென்றென்றே நானரற்றி நைகின் றேனே.

தீவாயின் முப்புரங்க ணீறா நோக்குந்
தீர்த்தா புராணனே யென்றே னானே
மூவா மதிசூடி யென்றே னானே
முதல்வா முக்கண்ணனே யென்றே னானே
ஏவார் சிலையானே யென்றே னானே
யிடும்பைக் கடலினின் றேற வாங்கி
ஆவாவென் றருள்புரியு மையா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. ௨

அழலன்ன வண்ணனே யென்றே னானே
யடியார்கட் காரமுதே யென்றே னானே
நஞ்சணி கண்டனே யென்றே னானே
நாவலர்க ணான்மறையே யென்றே னானே
நெஞ்சுணா வளைபுக் கிருந்த போது
நிறையு மமுதமே யென்றே னானே
அஞ்சாதே யாளவானே யையா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. ௩

தொல்லைத் தொடுகடலே யென்றே னானே
துலங்கு மிளம்பிறையா யென்றே னானே
எல்லை நிறைந்தானே யென்றே னானே
யேழுநரம்பி னின்னிசையா யென்றே னானே
அல்லற் கடல்புக் கழுந்து வேனை
வாங்கி யருள்செய்தா யென்றே னானே
எல்லையா ரையாறு வென்றே னானே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. ௪

இண்டைச் சடைமுடியா யென்றே னானே
யிருசுடர் வானத்தா யென்றே னானே
தொண்டர் தொழப்படுவா யென்றே னானே
துருத்திநெய்த் தானத்தா யென்றே னானே
கண்டங் கறுத்தானே யென்றே னானே
கனலாருங் கண்ணானே யென்றே னானே
அண்டத்துக் கப்பாலா மையா றன்னே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே. ௫

பற்றார் புரமெரித்தா யென்றே னானே
பசுபதீ பண்டரங்கா வென்றே னானே
கற்றார்க ணாவினா யென்றே னானே
கடுவிடையொன் றூர்தியா யென்றே னானே

பற்றானார் நெஞ்சுளா யென்றேனானே
பார்த்தற் கருள்செய்தா யென்றேனானே
அற்றார்க் கருள்செய்யு மையா தன்னை
யென்றென்றே நானரற்றி நைகின்றேனே. ௬

விண்ணோர் தலைவனே யென்றேனானே
விளங்கு மிளம்பிறையா யென்றேனானே
மண்ணோரு மெய்யிலிக்கா யென்றேனானே
மெய்யாப் பொய்யானே யென்றேனானே
பண்ணோர் பறைபாடி யென்றேனானே
பசுபதீ பாணிறா யென்றேனானே
அண்ணா மலையானே யென்றேனானே
யென்றென்றே நானரற்றி நைகின்றேனே. ௭

அவனென்று நானுன்னை யஞ்சாதேனை
யல்ல லறுப்பானே யென்றேனானே
சிவனென்று நானுன்னை யெல்லாஞ் சொல்லச்
செல்வந் தருவானே யென்றேனானே
பவனாகி யென்னுள்ளத் துள்ளே நின்று
பண்டை வினையறுப்பா யென்றேனானே
அவனென்றே யாதியே யையா தன்னை
யென்றென்றே நானரற்றி நைகின்றேனே. ௮

சச்சிமேய கம்பனே யென்றேனானே
கயிலாயா காரோணா வென்றேனானே
நிச்சன் மணாளனே யென்றேனானே
நினைப்பார் மனத்துளா யென்றேனானே
உச்சம்போ தேறேறி யென்றேனானே
யுள்குவா ருள்ளத்தா யென்றேனானே
அச்சம் பிணிதீர்க்கு மையா தன்னை
யென்றென்றே நானரற்றி நைகின்றேனே. ௯

வில்லாடி வேடனே யென்றேனானே
வெண்ணீறு மெய்க்கணிந்தா யென்றேனானே
சொல்லாய சூழலா யென்றேனானே
சுலாவாய தொன்னெறியே யென்றேனானே
எல்லாமா யென்னுயிரே யென்றேனானே
யிலங்கையர்கோன் றோளிறுத்தா யென்றேனானே
அல்லா வினைதீர்க்கு மையா தன்னை
யென்றென்றே நானரற்றி நைகின்றேனே. ௰

திருச்சிற்றம்பலம்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓசை யொலியெலா மானாய் நீயே
யுலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிது மினியாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. க

நோக்கரிய திருமேனி யுடையாய் நீயே
நோவாமே நோக்கருள வல்லாய் நீயே
காப்பரிய வைம்புலனுங் காத்தாய் நீயே
காமனையுங் கண்ணழலாற் காய்ந்தாய் நீயே
ஆர்ப்பரிய மாநாக மார்த்தாய் நீயே
யடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தீர்ப்பரிய வல்வினைநோய் தீர்ப்பாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. உ

கனத்தகத்துக் கடுஞ்சுடராய் நின்றாய் நீயே
கடல்வரைவா னாகாய மானாய் நீயே
தனத்தகத்துத் தலைகலனாக் கொண்டாய் நீயே
சார்ந்தாரைத் தகைந்தாள வல்லாய் நீயே
மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே
மலர்ச்சேவ டியென்மேல் வைத்தாய் நீயே
சினத்திருந்த திருநீல கண்ட னீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. ங

வானுற்ற மாமலைக ளானாய் நீயே
வடகயிலை மன்னி யிருந்தாய் நீயே
ஊனுற்ற வொளிமழுவாட் படையாய் நீயே
யொளிமதியோ டரவுபுனல் வைத்தாய் நீயே
ஆனுற்ற வைந்து மமர்ந்தாய் நீயே
யடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தேனுற்ற சொன்மடவாள் பங்க னீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. ச

பெண்ணாண் பிறப்பிலியாய் நின்றாய் நீயே
பெரியார்கட் கெல்லாம் பெரியாய் நீயே
உண்ணா வருநஞ்ச முண்டாய் நீயே
யூழி முதல்வனாய் நின்றாய் நீயே
கண்ணா வுலகெல்லாங் காத்தாய் நீயே
கழற்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்ணார் மழுவாட் படையாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி. ௫

உற்றிருந்த வுணர்வெலா மானாய் நீயே
யுற்றவர்க்கோர் சுற்றமாய் நின்றாய் நீயே
கற்றிருந்த கலைஞான மானாய் நீயே
கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்றாய் நீயே
பெற்றிருந்த தாயவளி னல்லாய் நீயே
பிரானா யடியென்மேல் வைத்தாய் நீயே
செற்றிருந்த திருநீல கண்ட னீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி. ௬

எல்லா வுலகமு மானாய் நீயே
யேகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி. ௭

ஆவினி லைந்து மமர்ந்தாய் நீயே
யளவில் பெருமை யுடையாய் நீயே
பூவினி னாற்றமாய் நின்றாய் நீயே
போர்க்கோலங் கொண்டெயி லெய்தாய் நீயே
நாவி னடுவுரையாய் நின்றாய் நீயே
நண்ணி யடியென்மேல் வைத்தாய் நீயே
தேவ ரறியாத தேவ னீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி. ௮

எண்டிசைக்கு மொண்சுடராய் நின்றாய் நீயே
யேகம்ப மேய விறைவ னீயே
வண்டிசைக்கு நறுங்கொன்றைத் தாராய் நீயே
வாரா வுலகருள வல்லாய் நீயே

தொண்டிசைத்துன் னடிபரவ நின்றாய் நீயே
 தூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்சிலைக்கோர் சரங்கூட்ட வல்லாய் நீயே
 திருவையா றகலாத செம்பொற் சோதீ. ௯

விண்டார் புரமூன்று மெய்தாய் நீயே
 விண்ணவர்க்கு மேலாகி நின்றாய் நீயே
கண்டாரைக் கொல்லுநஞ் சுண்டாய் நீயே
 காலங்க ளூழியாய் நின்றாய் நீயே
தொண்டா யடியேனை யாண்டாய் நீயே
 தூமலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
திண்டோள்விட் டெரியாட லுகந்தாய் நீயே
 திருவையா றகலாத செம்பொற் சோதீ. ௰

ஆரு மறியா விடத்தாய் நீயே
 யாகாயந் தேரூர வல்லாய் நீயே
பேரும் பெரிய விலங்கை வேந்தன்
 பெரிய முடிபத் திறுத்தாய் நீயே
ஊரும் புரமூன்று மட்டாய் நீயே
 யொண்டா மரையானு மாலுங் கூடித்
தேரு மடியென்மேல் வைத்தாய் நீயே
 திருவையா றகலாத செம்பொற் சோதீ. ௧௧

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

பண் — காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பரவும்பரிசொன் றறியேனான் பண்டேயும்மைப் பயிலாதேன்
இரவும்பகலு நினைந்தாலு மெய்தநினைய மாட்டேனான்
கரவிலருவி கமுகுண்ணத் தெங்கங்குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந்திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய வடிகேளா. ௧

எங்கேபோவே னாயிடினு மங்கேவந்தென் மனத்தீராய்ச்
சங்கையொன்று மின்றியே தலைநாள்கடைநா ளொக்கவே
கங்கைசடைமேற் கரந்தானே கலைமான்மறியுங் கனன்மழுவும்
தங்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையா றுடைய வடிகேளா. ௨

மருவிப்பிரிய மாட்டேனான் வழிநின்றொழிந்தே னொழிகிலேன்
பருவிவிச்சி மலைச்சாரற் பட்டைகொண்டு பகடாடிக்
குருவியோப்பிக் கிளிகடிவார் குழன்மேன்மாலை கொண்டோட்டம்
தரவந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. ௩

பழகாநின்று பணிசெய்வார் பெற்றபயனொன் றறிகிலேன்
இகழாதுமக்காட் பட்டோர்க்கு வேசாடமொன் றுரைச்சார்த்தி
குழகாவாழைக் குலைத்தெங்கு கொணர்ந்துகரைமே லெறியவே
அழகார்திரைக்கா விரிக்கோட்டத தையாறுடைய வடிகளோ. ௪

பிழைத்தபிழையொன் றறியேனான் பிழையைத்தீரப் பணியாயே
மழைக்கணல்லார் குடைந்தாட பலையுநிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள்பிரசங் கலந்தெங்குங் கழனிமண்டிக் கையேறி
அழைக்குந்திரைக்காவிரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ. ௫

காக்கொள்கொன்றை சடைமேலொன் றுடையாய்விடையாய்கையினான்
மூர்க்கர்புரமூன் றெரிசெய்தாய் முன்னீபின்னீ முதல்வனீ
வார்க்கொளருவிபலவாரி மணியுமுத்தும் பொன்னுங்கொண்
டார்க்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. ௬

மலைக்கண்மடவா ளொருபாலாய்ப் பற்றியுலகம் பலிதேர்வாய்
சிலைக்கொள்கணையா லெயிலெய்த செங்கண்விடையாய் தீர்த்தனீ
மலைக்கொளருவி பலவாரி மணியுமுத்தும் பொன்னுங்கொண்
டலைக்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. ௭

போழுமதியும் புனக்கொன்றை புனல்சேர்சென்னிப் புண்ணியா
சூழுமரவச் சுடர்ச்சோதீ யுன்னைத்தொழுவார் துயர்போக
வாழுமவர்க ளங்கங்கே வைத்தசிந்தை யுய்த்தாட்ட
ஆழுந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. ௮

கதிர்க்கொள்பசியே யொத்தேநான் கண்டேனும்மைக் காணாதேன்
எதிர்த்துநீந்த மாட்டேனா னெம்மான்றம்மான் றம்மானே
விதிர்த்துமேக மழைபொழிய வெள்ளம்பரந்து நுரைசிதறி
அதிர்க்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. ௯

கூசியடியா ரிருந்தாலுங் குணமொன்றில்லீர் குறிப்பிலீர்
தேசவேந்தன் றிருமாலு மலர்மேலயனுங் காண்கிலாத்
தேசமெங்குந் தெளித்தாடத் தெண்ணீரருவிகொணர்ந்தெங்கும்
வாசந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. ௰

கூடியடியா ரிருந்தாலுங் குணமொன் றில்லீர் குறிப்பிலீர்
ஊடியிருந்து முணர்கிலே னும்மைத்தொண்ட னூரனேன்
தேடியெங்குங் காண்கிலேன் றிருவாரூரே சிந்திப்பன்
ஆடுந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. ௧௧

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவாசகம்—திருவம்மானை.

திருச்சிற்றம்பலம்.

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

திருவெண்காட்டடிகள் திருவாக்கு.

நேரிசைவெண்பா.

மண்ணுந் தணலாற வானும் புகையாற
எண்ணரிய தாயு மிளைப்பாற—பண்ணுமயன்
கையாற வும்மடியேன் காலாற வுங்கண்பார்
ஐயா! திருவையா றா!

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளியது.

திருவெண்பா.

குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி யேங்கி நுரைத்தேறி—வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமு னெஞ்சமே!
ஐயாறு வாயா லழை.

திருச்சிற்றம்பலம்.

அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ்.

தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன　　தனதான.

சொரியு மாமுகி லோஇரு ளோகுழல்
　　சுடர்கொள் வாளிணை யோபிணை யோவிழி
　　சுரர்த மாரமு தோகுயி லோமொழி　　இதழ்க்கோவை

துவர தோஇல வோதெரி யாவிடை
　　துகளி லாவன மோபிடி யோநடை
　　துணைகொள் மாமலை யோமுலை தானெ　　உரையாடிப்

பரிவி னுலெனை யாளுக நாளொரு
　　பழுதி லானென வாணுத லாரொடு
　　பகடி யேபடி யாவொழி யாவிடர்　　படுமாயப்

பரவை மீதழி யாவகை ஞானிகள்
　　பரவு நீள்புக ழேயது வாமிரு
　　பரம வீடது சேர்வது மாவதும்　　ஒருநாளே

கரிய மேனிய னானிரை யாள்பவன்
　　அரிய ராவணை மேல்வளர் மாமுகில்
　　கனகன் மார்பது பீறிய வாளரி　　கனமாயக

கபடன் மாமுடி யாறுட னாலுபோர்
　　கணையி னால்நில மீதுற நூறிய
　　கருணை மால்கவி கோபக்ரு பாகரன்　　மருகோனே

திரிபு ராதிகள் தூளெழ வானவர்
　　திகழ வேமுனி யாவருள் கூர்பவர்
　　தெரிவை பாதியர் சாதியி லாதவர்　　தருசேயே

சிகர பூதரம் நீறுசெய் வேலவ
　　திமிர மோகர வீரதி வாகர
　　திருவை யாறுறை தேவக்ரு பாகர　　பெருமாளே.

தனன தானன தானன தத்தன
தனன தானன தானன தத்தன
தனன தானன தானன தத்தன தனதானா.

மருவு லாவிடு மோதிகு லைப்பவர்
சமர வேலெனு நீடுவி ழிச்சியர்
மனதி லேகப டேருப் ரதையர் அதிகேளவர்

மதன னோடுறழ் பூசலி டைச்சிய
ரிளைஞ ராருயிர் வாழுமு கைச்சியர்
மதுர மாமொழி பேசுகு ணாதியர் கெருமீதே

சருவி யாரையும் வாவென ழைப்பவர
பொருளி லேவெகு ஆசைப ரப்பிகள
சகல தோதக மாயைப டிப்பரை அணுகாதே

சலச மேவிய பாதநி னைத்துமு
னருணை நாடதி லோதுதி ருப்புகழ்
தனிய வோகையி லோதவெ னக்கருள புரிவாயே

அரிய கானக மேவுகு றித்தித
னிதணி லேசில நாளும னத்துட
னடவி தோறுமெ வாழியல் பதினி மணவாளா

அசுரர் வீடுகள் நூறுபொ டிப்பட
உழவர் சாகர மோடியொ ழித்திட
அயரர் நாடுபொன் மாரிமி குத்திட நினைவோனே

திருவின் மாமர மார்பழ னப்பதி
அயிலு சோறவை யாளுது றைப்பதி
திசையி ஞன்மறை தேடிய முற்குடி விதியாதிச்

சிரமு மாநிலம் வீழ்தரு மெய்ப்பதி
பதும நாயகன வாழ்பதி கெய்ப்பதி
திருவை யாறுட னேழுதி ருப்பதி பெருமாளே.

குகப்பெருமான் பாதமலர்களே துணை !

பதிப்பாசிரியர்களின் அறிக்கை

எமது திருப்பணியைப் போற்றி எமக்கு ஆதரவளித்துவரும் தமிழபிமானி களுக்கும் பத்திரிகாசிரியர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் மனப்பூர்வமாய் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். 4, 5 வருஷங்களுக்கு முன்பாகவே, திரு வாசகப் பதிப்பு ஒன்று அச்சிட்டு (2 அணா விதம் பதுவத்திகை என்னும் நூல் கொடுக்கப்பட்டதுபோல்) பிரதி ஒன்று இரண்டணா விதம் தமிழர்களுக்கு வழங்க வேண்டுமென்ற எங்கள் பேராவல், ஒருவாறு சைவ சமய பரிபாலன சபையா ரால் நிறைவேற விருக்கிறதைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றோம். அவர்கள் எடுத்துக்கொண்ட அரிய திருப்பணி அதிவிரைவில் நன்கு முடிவுபெறுமாறு ஆண்ட வன் அருள்புரிவாராக. பெரிய புராணம், கம்ப ராமாயணம், (உரையுடன்) திருக்குறள் (பாக்கெட் அளவில்), அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ் முதலிய அரிய நூல்களின் உயர்ந்த பதிப்புகள் வெளியிட வேண்டுமென்ற பேராவல் எங்களுக்குப் பல்லாண்டுகளாக உண்டு. இப்பெரும் முயற்சிகள் நன்கு நிறைவேறு வதற்கு எங்கள் அறிக்கையில் வெளியிட்டுள்ளபடி, கருணைக்கடலான குகப்பெருமா னுடைய திருவருளும், அப்பெருமானது அடியார்களின் ஆதரவும் துணைசெய்யுமென நம்பியே முதன் முதலாக திருப்புகழ் விருத்தி உரை - முதல் தொகுதியை (ஆறு படை வீடுகள் கொண்டது) டெமி அளவில் 64 - பக்கங்கள் கொண்ட 12 சஞ்சிகைகளாக வெளியிட முன்வந்துள்ளோம். பெதர் வெயிட் எனும் விலையுயர்ந்த காகிதத்தில் ஒரு பதிப்பும், சாதாரண கனமான கிளேஸ் காகிதத்தில் ஒரு பதிப்பும் ஆக இரண்டு பதிப்புகள் குரோதன ஹு ஐப்பசி மீ முதல் வெளியிடப்படுகின்றன.

வருஷ சந்தா விவரம்

(தபாற் செலவுடன்)	வெளியூர்	உள்ளூர்
உயர்ந்த காகிதப் பதிப்பு	6—0	5—4
ஷை தனிச் சஞ்சிகை	0—9	0—8
சாதாரண கிளேஸ் காகிதப் பதிப்பு	4-12	4—0
ஷை தனிச் சஞ்சிகை	0—7	0—6

ஒரே மொத்தமாகப் பணம் கட்டுவோருக்கு, எளிய நடையில் எழுதப்பெற்ற ஸ்காந்த புராணச் சுருக்கமான "ஷண்முக விஜயம்" என்னும் நூல் இனமாய் அளிப்பதாக முன் அறிக்கையில் வெளியிடப்பட்டது (கைவசம் சில பிரதிகளே இருப்பதால்) முதல் 300-சந்தாதாரருக்கு மாத்திரம் கிடைக்கும். ஆகையால் "ஷண் முக விஜயம்" எனும் நூலை இனமாய்ப் பெற விரும்புவோர், திருப்புகழ் விருத்தி உரைக்கு வருஷ சந்தாவை விரைவில் அனுப்புதல் நலம். ஒரே மொத்தமாய்ப் பணம் அனுப்ப முடியாதவர்கள் மாதவாரியாக சந்தா செலுத்தியும் பெறலாம். அப்படி ஆர்டர் செய்பவர்கள், தவறாமல் பிரதிமாதமும் சஞ்சிகைகள் வாங்கிக் கொண்டால்தான் எங்களுக்குச் சௌகரியம் உண்டு. நடுவில் கைவிட்டு விட்டால் எங்களுக்கு மிக்க அசௌகரியம் ஏற்படுமென்பதை அபிமானிகள் அறிவார்களாக.

மயிலாப்பூர்,
குரோதன ஹு ஐப்பசி மீ 13உ
29—10—25.

பதிப்பாசிரியர்கள்.

[illegible] 14

[illegible] 18

[illegible] - 22

[illegible] - 16
[illegible] - 31
[illegible]

[illegible] - 1, 5

[illegible] 6

[illegible]

[illegible] - 61

[illegible] 5051

[illegible] - 57

[illegible] - 41

[illegible] - 60

[illegible] - 53

[illegible]

[illegible] - 12

[illegible] 49 46

[illegible] 9
45 48

[illegible] 78

[illegible] - 36



சிவபெருமானுக்குக் குமாரக்கடவுள் ஞானோபதேசம் செய்தது.



குகப்பெருமான் பாதமலர்களே துணை !

திருப்புகழ் விருத்தி உரை

"நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம் !

காளைக் குமரேச னெனக் கருதி
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே !"—கந்தரனுபூதி.

---

1. திருவேரகம் எனும் சுவாமிமலை

தனனதன தனதனன தனனா தனத்தனன
தனனதன தனதனன தனனா தனத்தனன
தனனதன தனதனன தனனா தனத்தனன—தனதான.

குமரகுரு பரமுருக குகனே குறச்சிறுமி
கணவசர வணநிருதர் கலகா பிறைச்சடையர்
குருவெனவு ளுரையுதவு மயிலா எனத்தினமு முருகாதே
குயில்மொழிநன் மடவியர்கள் விழியா லுருக்குபவர்
தெருவிலன வரதமன மெனவே நடப்பர்நகை
கொளுமவர்க ளுடைமைமன முடனே பறிப்பவர்க ளெனவோரும்

தமதுவச முறவசிய முகமே மினுக்கியர்கள்
முலையிலுறு துகில்சரிய நடுவீ திநிற்பவர்கள்
தனமிலியர் மனமுறிய நழுவா வுழப்பியர்கண் வலையாலே
சதிசெய்தவ ரவர்மகிழ அணைமீ துருக்கியர்கள்
வசமொழுகி யவரடிமை யெனமா தரிட்டதொழில்
தனிலுழலு மசடனையு னடியே வழுத்தஅருள் தருவாயே !

சமரமொடு மசுரர்படை களமீ தெதிர்த்தபொழு
தொருநொடியி லவர்கள்படை கெடவே லெடுத்தவனி
தனில்நிருதர் சிரமுருள ரணதூள் படுத்திவிடு செருமீதே
தவனமொடு மலகைநட மிடவீ ரபத்திரர்க
ளதிரநிண மொடுகுருதி குடிகா ளிகொக்கரிசெய்
தசையுணவு தனின்மகிழ விடுபேய் நிரைத்திரள்கள் பலகோடி
திமிதமிட நரிகொடிகள் கழுகா டரத்தவெறி
வயிரவர்கள் சுழலவொரு தனியா யுதத்தைவிடு
திமிரதின கரஅமரர் பதிவாழ் வுபெற்றுலவு முருகோனே !
திருமருவு புயனயனொ டயிரா வதக்குரிசி
லடிபரவு பழநிமலை கதிர்கா மமுற்றுவளர்
சிவசமய அறுமுகவ திருவே ரகத்திலுறை பெருமாளே ! (க)

(பதவுரை) சமரமொடும் அசுரர்படை களமீது எதிர்த்தபொழுது - போர் புரியக்கருதி அசுரசேனைகள் போர்க்களத்தில் நின்னை எதிர்த்தபொழுது, ஒரு நொடியில் அவர்கள் படை கெட வேல் எடுதது - ஒரு நொடிப் பொழுதில் அந்த அசுரசேனைகள் அழிந்துபோகுமாறு வேலாயுதத்தைக் கையில் எடுத்து, அவனி தனில் நிருதர் சிரம் உருள - தரையினமீது அசுரர்களின் தலைகள் உருளுமாறு, ரணம் தூள்படுத்திவிடு செருமீதே - பகைவர்களைப் பொடியாக்கிய போர்க்களத்தில், தவனமொடும அலகை நடமிட - ஆசையுடன் பேய்கள் நிர்த்தனஞ்செய்யவும், வீரபத்திரர்கள் அதிர - வீரபத்திரர்கள் ஆரவாரஞ் செய்யவும், நிணமொடு குருதி குடி காளி கொக்கரிசெய்து - மாமிசத்தையுண்டு இரத்தபானஞ்செய்த காளி கர்ச்சித்து, தசையுணவுதனில் மகிழவிடு - மாமிசத்தையுண்டு மகிழ்ச்சியடையுமாறு அவிழ்த்து விட்ட, பேய் நிரைத் திரள்கள் - வரிசை வரிசையாகவுள்ள பேய்க் கூட்டங்கள், பலகோடி - அநேககோடி, திமிதமிட - பெருத்த ஓசையுண்டாகுமாறு (களிப்பினால்) கூத்தாடவும், நரி கொடிகள் கழுகு ஆட - நரிகளும் காக்கைகளும் கழுகுகளும் கூத்தாடவும், ரத்தவெறி வயிரவர்கள் சுழல - இரத்தபானஞ் செய்த

தனால் வெறிகொண்ட வயிரவர்கள் சுழன்று ஆடவும், ஒரு தனி ஆயுதத்தை விடும்- ஒப்பற்ற வேலாயுதத்தைப் பிரயோகிக்கும், திமிர தினகர - (அஞ்ஞான) இருளை நீக்கும் (ஞான) சூரியனே !, அமரர்பதி வாழ்வுபெற்று உலவு முருகோனே-தேவர்களுக்கு இறைவனாகிய மேலான பதவியைப் பெற்று உலாவுகின்ற ஞான சொரூபியே !, திருமருவு புயன் - இலக்ஷ்மியை அணைந்துகொள்ளும் புயங்களை யுடைய திருமாலும, அயன் - பிரமதேவரும், அயிராவதக் குரிசில் - ஐராவதத்தை வாகனமாகவுடைய அரசனாகிய தேவேந்திரனும், அடிபரவு - நினது அடியை வணங்கும்படியான மேன்மையுடையோனாய், பழநிமலை கதிர்காமம் உற்று வளர் - பழநிமலை கதிர்காமம் என்னும திவ்ய ஸ்தலங்களில் வந்து (அடியார் கலிகளைத் தீர்ப்பதற்காக வரதனாய்) அமர்ந்திருக்கும், சிவசமய அறுமுகவ - சைவசமயத்தோருக்கே கிடைக்கத்தக்க பெரும்பேறாகிய ஆறுமுகனே !, திருவேரகத்தில் உறை பெருமாளே - அழகிற்சிறந்த திவ்ய ஸ்தலமாகிய சுவாமிமலையில் அமர்ந்திருக்கும் பெரியோனே ! குமர - என்றும் இளமைப் பருவத்திலிருப்பவனே !, குருபர - பரம்பொருளை யடைவதற்குரிய நெறியைப் போதிக்கும் குருவே !, முருக - (ஞான) வாசனை வீசுபவனே !, குகனே - மெய்யன்பரது இதயத் தாமரையில் வசிப்பவனே !, குறச்சிறுமி கணவ - யௌவன பருவமுள்ள குறப்பெண்ணான வள்ளிநாயகியின் நாயகனே !, சரவண - (தாமரைமலர் நிறைந்த) சரவணப்பொய்கையில் அவதரித்தவனே !, நிருதர் கலகா - அசுரர்கள் மனத்தில் கலக்கத்தை விளைவித்தவனே !, பிறைச்சடையர் - பிறைச்சந்திரனைச் சடாமுடியில் தரித்தருளிய சிவபெருமான், குரு என நல் உரை உதவும் அயிலா - (தாம் சிஷ்யனாக நின்று) நீ குரு என்று சொன்னபொழுது (பிரணவத்துக்குச்) சிறப்பாகப் பொருள் உரைத்தருளிய (ஞானசக்தியாம்) வேலாயுதத்தைக் கையில் தாங்கியவனே !, என தினமும் உருகாதே - என்று(உனது திருநாமங்களைக் கூறிப்புகழ்ந்து)தினம் மனம் உருகாமல் ; குயில் மொழி நல் மடவியர்கள் - குயில் கூவுவதுபோல் இனிமையாகப் பேசும் பெண்கள், விழியால் உருக்குபவர் - கண்களின் பார்வையினால் (காமத்தை மூட்டி) மனத்தை உருகச்செய்பவர்கள், தெருவில் அனவரதம் அனம் எனவே நடப்பர்-(தெருவில் நடப்பவர்கள் மனத்தில் காமத்தீயை மூட்டுவதற்காக) எப்போதும் தெருவில் அன்னபக்ஷியைப்போல் அழகாக நடப்பவர்கள், நகை கொளுமவர்கள் உடைமை மனம் உடனே பறிப்பவர்கள்-(தங்கள் அழகைக் கண்டு ஆனந்தமடைந்து, அதன் அறிகுறியாக) நகைப்பவர்களுடைய கைப்பொருளையும் மனத்தையும் தக்ஷணத்திலேயே கொள்ளை கொள்ளுகிறவர்கள், அனைவோரும் தமது வசம் உற - எல்லோரும் தமக்கு வசப்படும் வண்ணம், வசிய முகமே மினுக்கியர்கள் - மனத்தைக் கவரத்தக்க (அழகுவாய்ந்த) முகத்தை ஒளிபெறச்செய்து காட்டுபவர்கள், முலையில் உறு துகில் சரிய நடுவீதி நிற்பவர்கள் - தங்கள் தனபாரங்கள்(சிறிது காணப்படும் வண்ணம் அவைகளின்)மீதுள்ள புடவை சரிந்துவிழத் தெருவின் நடுவில் நிற்பவர்கள், தனம் இலியர் மனம் முறிய நழுவா உழப்பியர் -

பொருள் இல்லாத ஏழைகளின் மனம் ஒடிந்து போகும் வண்ணம் அவர்கள் கைகளுக்கெட்டாமல் நழுவி அவர்களை வருத்துபவர்கள், கண் வலையாலே சதி செய்து - தங்கள் கண்களாகிய வலைகளை வீசி வஞ்சித்து(மனத்தைக் கவர்ந்து,)அவ ரவர் மகிழ அணைமீது உருக்கியர்கள் - அந்தந்தக் காலங்களில் தாங்கள் வஞ்சித்த புருஷர்கள் மனமகிழுமாறு அவர்களைப் பஞ்சணைக்கு அழைத்துச் சென்று அதன்மீது தங்கள் (கலவிகளினால்) அவர்களை மனமுருகச் செய்பவர்கள், வசம் ஒழுகி - (அப்படிப்பட்ட குணங்களையுடைய பொதுமாதர்களுக்கு) வசப்பட்டு நடந்து, அவர் அடிமையென - அவர்களுடைய அடிமையென்று கூறுமாறு, மாதர் இட்டதொழில்தனில் உழலும் - அம்மாதர்கள்இட்ட வேலைகளைச் செய்வதிலேயே மனத்தைச் செலுத்தித் திரியும், அசடனை உன் அடியே வழுத்த - புத்தியீன னாகிய என்னை உனது பாதாரவிந்தங்களையே துதிக்கச்செய்ய, அருள்தருவாயே - கிருபை புரியவேண்டும்.

(விருத்தியுரை) 'அன்புக்கு அருள் காரணமா, அருளுக்கு அன்பு காரணமா' என்னும் கேள்விக்கு **அருணகிரிநாத சுவாமிகள்** அருளே அன்புக்குக் காரணம் என்று பல விடங்களிற் கூறியுள்ளவாறு இப்பாடலிலும் முருகப்பெருமானுடைய பாதாரவிந்தங்களைத் துதிக்கும் பாக்கியத்தைப்பெற அப்பெருமானுடைய அருள் வேண்டுமென்று குறித்துககாட்டுவதற்காக, 'அசடனை உன் அடியே வழுத்த அருள்தருவாயே' என்று கூறியருளினர். 'அராப்புனைவேணியன் சேய் அருள் வேண்டும், அவிழ்ந்த அன்பாற் குராப்புனை தண்டையந்தாள் தொழல்வேண்டும்' என்று **கந்தரலங்காரத்திலும்** அன்புக்கே அருள் காரணம் என்னும் பெரிய உண்மையை விளக்கிக் காட்டியிருக்கிறார்.

'பிறைச்சடையர் குருவென நலுரையுதவு மயிலா' என்ற விடத்தில், முருகப்பெருமான் ஞானபோதகனாய் இருப்பதைக் கூறுகிறபடியால், 'உதவும் மயிலா' என்று பிரிப்பதைவிட 'உதவும் அயிலா' என்று பிரித்து உதவும் ஞான சக்திதரனே என்று பொருள் கூறுவதே சிறந்ததாகும். சைவசமயத்தைத் தழுவி நிற்பவர் பெறும் சிவஞானமும் பேரின்பமும் சிவஞான சொரூபியாகிய முருகப் பெருமானே யாதலாலும், ஒரு ஜீவாத்மாவானது உலகமாயையை அகற்றிவிட்டுத் தம்மை அடைவதற்கு அவசியமான ஆறு உதவிகளையும் செய்யத் தாம் தயாராக இருப்பதை யுணர்த்துவதற்காகவே முருகப்பெருமான் ஆறுமுகங்களுடன் விள ங்குகிறு ராதலாலும், சுவாமிகள் அப்பெருமானை 'சிவசமய அறுமுகவ' என்று விளித்தார்போலும். முருகப்பெருமான் மிகுந்த அழகுவாய்ந்தவர் என்பதைக் குறிக்க 'குழகன்' என்னும் திருநாமமும், அவர் என்றும் இளமைப்பருவம் மாறு தவர் என்பதைக் குறிக்க 'குமரன்' என்னும் திருநாமமும் இருப்பதனாலும், முருகு என்ற பதத்துக்கு அழகு, இளமை அல்லது வாசனை என்று பொருள் கூறலாமாகையினாலும், ஞானசொரூபியாகிய முருகப்பெருமான் எங்கும் ஞான வாசனை கமழச்செய்கிறுராகையினாலும், 'முருகன்' என்னும திருநாமத்துக்கு ஞானவாசனை வீசும் ஞானசொரூபி என்று பொருள்கூறத் துணிந்தேன். (க)

1. திருவேரகம் எனும் சுவாமிமலை

தனன தனதன தனன தனதன
தனன தனதன—தனதான.

குமர குருபர முருக சரவண
குகசண் முககரி பிறகான
குழக சிவசுத சிவய நமவென
குரவ னருள்குரு மணியேயென்
றமுத இமையவர் திமிர்த மிடுகட
லதென அநுதின முனையோதும்
அமலை அடியவர் கொடிய வினைகொடு
மபய மிடுகுர லறியாயோ ?
திமிர எழுகட லுலக முறிபட
திசைகள் பொடிபட வருசூரர்
சிகர முடியுடல் புவியில் விழவுயிர்
திறைகொ டமர்பொரு மயில்வீரா !
நமனை யுயிர்கொளு மழலி னிணைகழல்
நதிகொள் சடையினர் குருநாதா !
நளின குருமலை மருவி யமர்தரு
நவிலு மறைபுகழ் பெருமாளே! (உ)

(ப - ரை) *திமிர எழுகடல் உலகம்* - இருள்நிறைந்ததும் ஏழு கடல்களினால் சூழப்பட்டதுமான பூவுலகம், *முறிபட* - ஒடிந்து போகுமாறும், *திசைகள் பொடிபட* - எட்டுத்திக்குகளும் பொடியாகுமாறும், *வருசூரர்* - (எண்ணிறந்த சேனைகளுடன் ஆரவாரித்துப்) போருக்குவந்த சூரர்களுடைய, *சிகரமுடி உடல் புவியில்விழ*-கிரீடங்களைத் தரித்த தலைகளும் தேகங்களும்(தனித்தனியாக) பூமியில் விழும் வண்ணம், *உயிர் திறைகொடு* - அவர்களது உயிர்களை அரசனுக்குரிய இறையாக வாங்கிக்கொண்டு, *அமர்பொரும் அயில்வீர* - போர்செய்தவனும் வேலாயுதத்தைக் கரத்தில் ஏந்தியவனுமான வீரனே ! *நமனை உயிர்கொளும் அழலின் இணைகழல்*-(எல்லோருடைய உயிர்களையும் கொள்ளை கொள்ளும்) இயமனுடைய உயிரைக் கவர்ந்தவைகளும் அக்கினியையொத்தவைகளுமான இரு பாதாரவிந்தங்களையும், *நதிகொள் சடையினர்* - கங்காநதியைத் தாங்கிக்கொண்ட சடாமுடியையும் உடைய சிவபெருமானுக்கு, *குருநாதா* - ஞானகுருவாக வந்த நாதனே !, *நளின குருமலை மருவி அமர்தரு* - நீர்வளப்பம் பொருந்திய சுவாமிமலையில் வந்து (வரதனாக) வீற்றிருப்பவனும், *நவிலும் மறைபுகழ்* - முத்தி நெறி

யைப் போதிக்கும் வேதத்தினால் (கருணைக்கடல் என்று) புகழப்படுபவனுமான பெருமானே - பெருங்குணமுடையோனே !, குமர-என்றும் இளமைப்பருவத்தி லிருப்பவனே !, குருபர - பரம்பொருளை யடைவதற்குரிய நெறியைப்போதிக கும் குருவே!, முருக - (ஞான) வாசனை வீசுபவனே !, சரவண - தாமரைமலர் நிறைந்த சரவணப்பொய்கையில் அவதரித்தவனே !, குக - மெய்யன்பரது இதயத்தாமரையில் வசிப்பவனே !, சண்முக - ஆறுமுகனே !, கரிபிறகான குழக - விநாயகக் கடவுளுக்குத் தம்பியாக அவதரித்த சௌந்தரியமிக்க மூர்த் தியே !, சிவசுத - சிவபெருமான் (தம்மைச் சரண்புகுந்த தேவர்களுக்கு அரிய வரமாக அளித்தருளிய) புதல்வனே ! சிவயநம என குரவன் அருள் குரு மணியே - சிவயநம என்னும் பஞ்சாக்ஷரத்தின் நாயகனும் என்னுடைய தந் தையுமான சிவபெருமான் (உலகத்தோருக்கு ஞானத்தைப் போதிப்பதற்காக) அளித்தருளிய ஒப்புயர்வற்ற ஞானகுருவே ! என்று - என்று கூறி, அமுத இமையவர் திமிதமிடு கடலதென - அமுதத்தைப் பெற விரும்பிய தேவர்கள் பெருத்தவொலி யுண்டாகுமாறு கடைந்த கடலேபோல, அநுதினம் உனை யோதும்-(பெருத்த கோஷமுண்டாகுமாறு) தினந்தோறும் உன்னைத் துதித்துப் புகழும், அமலை அடியவர் - எண்ணிறந்த அடியார்கள், கொடியவினை கொடும் - முற்பிறப்புக்களிற் செய்த வினைகள் கொடுமையாக வருத்துவதைப் பொறுக்க முடியாமல், அபயமிடு குரல் அறியாயோ - அபயம் கொடுத்து இரக்ஷிக்கும்படி உன்னைப் பிரார்த்தித்து முறையிடும் அவர்களது தீனக்குரல் யாருடையதென்று உனக்குத் தெரியாதோ ?

(வி - ரை) சர்வ சகதி வாய்ந்தவராகவும், முந்தை வினைகளின் பயனை யொழிக்கும் வல்லமையுடையவராகவுமுள்ள முருகப்பெருமான் தம்மைச் சரண் புகுந்து மெய்யன்புடன் தம்மை வழுத்துவோர்கள் இச் சன்மத்தில் அனுபவிக்கும் வினைப்பயனையும் அகற்றி இரக்ஷிப்பாரென்னும் உண்மையை இப்பாடலில் ‘ அமலை அடியவர் கொடிய வினைகொடு மபய மிடுகுர லறியாயோ ’ என்னும் கேள்வியிலிருந்து குறிப்பாக உணர்ந்துகொள்ளக்கூடும். (உ)

தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன—தனதான.

கோமள வெற்பினை யொத்தத னத்தியர்
காமனை யொப்பவர் சித்தமு ருக்கிகள்
கோவையி தழ்க்கனி நித்தமும் விற்பவர் மயில்காடை

கோகில நற்புற வத்தொடு குக்குட
ஆரணி யப்புள்வ கைக்குரல் கற்றிகல்
கோலவி ழிக்கடை யிட்டும ருட்டிகள் விரகாலே

தூமம லர்ப்பளி மெத்தைப டுப்பவர்
யாரையு மெத்திம னக்குள ழைப்பவர்
சோலைவ னக்கிளி யொத்தமொ ழிச்சியர் — நெறிகூடா

தூசுநெ கிழ்த்தரை சுற்றியு டுப்பவர்
காசுப றிக்கம றித்துமு யக்கிகள்
தோதக வித்தைப டித்துந டிப்பவ — ருறவாமோ ?

மாமர மொத்துவ ரிக்குள்நெ ருக்கிய
சூரனை வெட்டிநிணக்குட லைக்கொடி
வாரண மெச்சஅ ளித்தஅ யிற்குக — கதிர்காம

மாமலை யிற்பழ நிப்பதி யிற்றனி
மாகிரி யிற்றணி கைக்கிரி யிற்பர
மாகிரி யிற்றிரை சுற்றிவ ளைத்திடும் — அலைவாயில்

ஏமவெ யிற்பல வெற்பினி னற்பதி
னாலுல கத்தினி லுற்றுறு பத்தர்கள்
ஏதுநி னைத்தது மெத்தஅ ளித்தரு — ளிளையோனே !

ஏரக வெற்பெனு மற்புத மிக்கசு
வாமிம லைப்பதி மெச்சிய சித்தஇ
ராஜத லக்ஷண லக்ஷ்மி பெற்றருள் — பெருமாளே ! (௯)

(ப - ரை) மாமரம் ஒத்து உவரிக்குள் நெருக்கிய (நெருங்கிய) சூரனை வெட்டி - மாமரத்தின் வடிவத்தை யெடுத்துக்கொண்டு சமுத்திரத்துக்குள்போய் ஒடுங்கிய சூரபதுமனை வெட்டி, நிணக்குடலை கொடி வாரணம் மெச்ச அளித்தருள் - அவனது மாமிசத்தையும் குடலையும் காகமும் வாரணமும் தன்னைப் புகழும்படி அவைகளுக்குத் தந்தருளிய, அயில்குக - கைவேலாயுதத்தைக் கையி லேந்திய குகப்பெருமானே, கதிர்காம மாமலையில் பழநிப்பதியில் தனிமாகிரியில் தணிகைக்கிரியில் பரமாகிரியில் - கதிர்காமம் என்னும் சிறந்த மலையின்மீதும், பழநி என்னும் தலத்திலும், ஒப்பற்ற கந்த மலையின்மீதும், திருத்தணிகை என்னும் சிறந்த மலையின்மீதும், திருப்பரங்குன்றம் என்னும் சிறந்த மலையின்மீதும், சமுத்திரத்தினாற் சூழப்பெற்ற சீரலைவாய் என்னும் திருச்செந்தூரிலும், ஏம வெயில் பல வெற்பினில் - பொன்னைப்போல் பிரகாசிக்கும் மற்றும் பல மலைகளிலும், நல் பதினாலு உலகத்தினில் உற்று - நல்ல பதினான்கு உலகங்களிலும் அமர்ந்தருளி, உறு பத்தர்கள் - தன்னைச் சரண்புகும் பக்தர்கள், ஏது நினைத்தது மெத்த அளித்தருள் இளையோனே - எப்பொருளை இச்சித்தாலும் அப்பொருளை

ஏராளமாக உதவியருளும் குமாரக்கடவுளே !, ஏரக வெற்பு எனும் அற்புதம் மிக்க சுவாமிமலைப்பதி - ஏரகம் (அழகியதலம்) என்னும் மிகவும் அற்புதமான சுவாமி மலையாகிய திவ்யஸ்தலத்தை, மெச்சிய சித்த - (மிகவும் சிறந்த தலமாகக்) கொண்டாடும் சித்த புருஷனே !, இராஜத லக்ஷண லக்ஷ்மி பெற்றருள் பெருமாளே - இராஜதகுணத்தைச் சிறப்பான இலக்ஷணமாகவுடைய (சிவ சக்தியான) பார்வதி தேவியார் பெற்றருளிய பெருங்குணமுடையோனே !, கோமள - இளமைபொருந்தியவைகளும், வெற்பினை ஒத்த - மலைபோல் உயர்ந்து பருத்தவைகளுமான, தனத்தியர் - தனபாரங்களையுடையவர்கள், காமனை ஒப் பவர் சித்தம் உருக்கிகள் - மன்மதனைப்போல் காமம் மிகுதியாகவுடைய ஆடவர்க ளது மனமானது காமத்தினால் உருகும்படி செய்பவர்கள், கோவை இதழ் கனி - கோவைப் பழத்தைப்போல் சிவந்தவைகளும் பழத்தைப்போல் இனிமை பொருந்தியவைகளுமான உதடுகளை, (அவைகளினால் முத்தங்கொடுத்து அவை களின்மீது முத்தமிடப் பெறுவதற்கு) விற்பவர் - பணத்துக்கு விற்பவர் கள், மயில் காடை கோகிலம் நல்புறவம் (ஒடு - இசை) குக்குடம் ஆரணியப்புள்வகை - மயில், காடை, குயில், நல்ல புறா, கோழி, பல வகையான காட்டுப்பறவைகள் (இவைகளின்), குரல் கற்று - குரலை யொத்த குரலுடன் பேசக் கற்றுக்கொண்டு, இகல் கோல விழி கடை இட்டு மருட்டிகள் - (மனத்தைக் கவரும்) வலிமைபொருந்தியதும் அழகுமிக்கதுமான கண்ணின் கடையினால் நோக்கி (கடைக்கண்ணால் பார்த்து) ஆடவர் மனம் மயக்கமுறும்படி செய்பவர்கள், விரகாலே - காமத்தீயினால் வருத்தப்பெற்று, தூம மலர்பளி - (நறுமணமுள்ள) புகையினாலும் மலர்களினாலும் வாசனை யூட்டப் பெற்ற பள்ளியறையில், மெத்தை படுப்பவர் - பஞ்சணையின்மீது படுப்பவர்கள், யாரையும் எத்தி - எல்லோரையும் வஞ்சித்து, மனைக்குள் அழைப்பவர் - தங்கள் வீட்டுக்குள் வரும்படி அழைப்பவர்கள், சோலை வனக்கிளி ஒத்த மொழிச்சியர் - பூஞ்சோலைகளிலும் நந்தவனங்களிலும் வசிக்கும் கிளிகளைப்போல் இனிய குர லுடன் பேசுபவர்கள், நெறிகெடா தூசு நெகிழ்த்து அரைசுற்றி உடுப்பவர் - நல் லொழுக்கத்துக்குப் பொருத்தமில்லாதபடி புடவையைத் தளரவிட்டு அரையைச் சுற்றி உடுப்பவர்கள், காசு பறிக்க மறித்து முயக்கிகள் - கைப்பொருளைப் பறிக் கும் நோக்கத்துடன் தெருவிற்செல்லும் ஆடவர்களை வழிமறித்து அவர்களுடன் கலவி செய்பவர்கள், தோதக வித்தை படித்து நடிப்பவர் - வஞ்சிக்கும் வித்தை யைக் கற்றுக்கொண்டு பாசாங்கு செய்பவர்கள்,(இப்படிப்பட்ட விலைமாதர்களின்) உறவாமோ - சம்பந்தம் வைத்துக்கொள்ளத் தக்கதோ ? (தக்கதல்ல என்றபடி).

(வி - ரை) ஸத்வகுணத்தைத் தமது இலக்ஷணமாகக்கொண்ட சிவபெரு மான், உலகத்திலுள்ளவர்களது துயரத்தையும் அதற்குக் காரணமான அக்ஞா னத்தையும் நீக்குவதற்காக அவர்களுக்கு ஞானத்தைப் புகட்ட நிச்சயித்து, தாம் சுத்த ஸாத்விகமூர்த்தியாதலாலும், ஞானத்தைப் புகட்டுவதற்கு ஸத்வமும்

இராஜதமும் பொருந்திய மூர்த்தி அவசியமாதலாலும், தமது சக்தியான - இராஜத குணத்தை இலக்ஷணமாகக்கொண்ட - பார்வதிதேவியாருடன் கலந்து, பரம ஞானத்துக்குக் காரணமான ஸத்வகுணமும் போதகத்துக்கு அவசியமான இராஜதகுணமும் பொருந்திய மூர்த்தியான குமாரக்கடவுளைத் தந்தருளினர். சிவபெருமானது ஐந்து திருமுகங்களும் பார்வதிதேவியாரது ஒரு திருமுகமும் சேர்ந்து ஷண்முகப்பெருமானது ஆறு திருமுகங்க ளாயினவென்று ஓர் ஐதிகமும் உண்டு. முருகப்பெருமான் சிவபெருமானுக்குப் பிரணவத்தின்பொருளை எடுத்துரைத்தது சுவாமிமலை என்னும் திவ்ய ஸ்தலத்தி லென்பது ஐதிகமாதலால், முருகப்பெருமான் ஞானத்தைப் போதிக்க வந்த மூர்த்தியென்பதை விளக்குவதற்காக இப் பாடலில், "இராஜத லக்ஷண லக்ஷ்மி பெற்றருள் பெருமாளே" என்று கூறப்பட்டிருக்கிறது. (ரு)

தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன—தந்ததான.

வார்குழ லைச்சொரு கிக்கரு விற்குழை
காதொடி ணைத்தசை யக்கதிர் பற்கொடு
வாயிதழ் பொற்கம லர்க்குமி ழொத்துள துண்டக்ரீவ
வார்கமு கிற்புய நற்கழை பொற்குவ
டாடிள நிச்சுரர் பொற்குட மொத்திணை
மார்பழ கிற்பொறி முதசொளிர் சித்திர ரம்பைமாதர்
காருறும் வித்திடை யிற்கத லித்துடை
சேரல்குல் நற்பிர சத்தட முட்கொடு
கால்மறை யத்துவ ளச்செறி பொற்கலை யொண்குலாவக்
கார்குயி லைக்குர லைக்கொடு நற்றெரு
மீதில்நெ ளித்துந கைத்துந டிப்பவர்
காமனு கப்பம ளிச்சுழல் குத்திரர் சந்தமாமோ!
சூரர்ப டைக்கர வுட்கிநெ ளித்துய
ராழியி ரைப்பநி ணக்குட லைக்கழு
கூழுந ரிக்கெரு டக்கொடி பற்பல சங்கமாகச்
சூழ்கிரி யைக்கைத டித்தும லைத்திகை
யானையு ழற்றிந டுக்கிம தப்பொறி
சோரந கைத்தயி லைக்கொடு விட்டருள் செங்கைவேலா!

ஏரணி நற்குழ லைக்கக னச்சசி
மோகினி யைப்புணர் சித்தொரு அற்புத
வேடமு தச்சொரு பத்தகு றத்திம ணங்கொள்வோனே !

ஏரக வெற்பெனு மற்புத மிக்கசு
வாமிம லைப்பதி நிற்குமி லக்ஷண
ராஜத லக்ஷண லக்ஷ்மி பெற்றருள் தம்பிரானே ! (ச)

(ப - ரை) சூரர் பதைக்க - சூரபதுமன் முதலான அசுர வீரர்கள் மனம் பதைக்கவும், அரவு உட்கி நெளித்து ஆழி உயர இரைப்ப - (பூமியைத் தாங்கும்) ஆதிசேஷன் என்னும் பாம்பு அச்சமுற்றுத் தனது உடலை நெளித்துச் சமுத்திரமானது உயரமான அலைகளை வீசிக் கோஷிக்கும்படி செய்யவும், நிண குடலை கழு சூழ - மடிந்து விழும் அசுரர்களது மாமிசம் நிறைந்த குடலை (உண்ணுவதற்காக) கழுகு சூழவும், நரி கெருடன் கொடி பற்பல சங்கமாக சூழ் - நரி, பருந்து காக்கை இவைகள் பற்பல கூட்டங்களாகக் கூடிச் சூழ்ந்துகொண்டிருந்த, கிரியை - கிரௌஞ்ச மலையை, மலை திசை யானை உழற்றி நடுக்கி மதப்பொறி சோர - எட்டுத் திக்குகளிலும் நின்று பூமியைத் தாங்கும் மலையையொத்த யானைகள் துன்புற்று நடுங்குமாறும் மதநீர் பொழியும் அவைகளின் வன்மையுடைய பொறிகளும் சோர்வடையுமாறும், நகைத்து அயிலை கொடு கைதடித்துவிட்டு அருள் - முகத்தில் புன்சிரிப்புடனே (விளையாட்டாக) கைவேலைக்கொண்டு தறித்துப் பிளந்தருளிய, செங்கைவேலா - தாமரையையொத்த சிவந்த கையினில் வேலாயுதத்தைத் தாங்குபவனே !, ஏர் அணி நல்குழலை ககனச்சசி மோகினியை புணர் சித்த - மிகவும் அழகு பொருந்திய நல்ல கூந்தலை யுடையவளும், ஆகாயத்தில் உலாவும் இந்திராணியின் மகளாக உதித்தவளும் மனத்தைக்கவரும் பேரழகு வாய்ந்தவளுமான தெய்வயானையம்மையை மணந்துகொண்ட சித்தனே!, ஒரு அற்புத வேட அமுத சொருபத்த குறத்தி மணங்கொள்வோனே - ஒப்பற்ற அழகுடையவளாய் வேடர்குலத்தில் அமுதத்தையொத்த இனிய உருவத்தை யுடையவளாய் உதித்த குறவர் சிறுமியான வள்ளிநாயகியை மணந்துகொண்டவனே ! ஏரகவெற்பு எனும் அற்புதமிகக சுவாமி மலைப்பதி நிற்கும் இலக்ஷண - திருவேரகமலை என்று பெயர் வழங்கும் சுவாமிமலை யென்னும் மிகவும் அற்புதமான திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சகல லக்ஷணங்களும் வாய்ந்துள்ள குமரனே ! ராஜதலக்ஷண லக்ஷ்மி பெற்றருள் தம்பிரானே - ராஜதகுணத்தைத் தனக்கு முக்கியகுணமாகக் கொண்ட லக்ஷ்மியான சிவசக்தி உலகத்துக்குத் தந்தருளிய கடவுளே !, வார்குழலைச் சொருகி - நீண்ட கூந்தலைச் சொருகிக் கொண்டு, கருவில் குழை காதொடு இணைத்து அசைய - மேன்மை பொருந்தியவைகளாய் மிக்க ஒளி வீசும் குழைகளைக் காதுகளில் அணிந்துகொண்டு அவைகள் அசையவும், கதிர் பல்கொடு வாய் இதழ் பொறக - ஒளிவீசும் பற்களினால்

வாயும் உதடுகளும் அழகுபெற்றுத் தோன்றவும், மலர்க்குமிழ் ஒத்தன துண்டம் - மலரும் பருவத்திலுள்ள அரும்பைப் போன்றதாயுள்ள மூக்கினாலும், க்ரீவ வார் கமுகின் - நீண்ட பாக்குமரத்தை ஒத்ததாயுள்ள கழுத்தினாலும், புய நல் கழை - நல்ல மூங்கிலையொத்த தோள்களினாலும், பொன் குவடு ஆடு இளநீ சுர பொற் குடம் ஒத்த இணை மார்பு அழகின் - பொன்னொளி வீசும் குன்றையும், ஆடும் இளநீர்க்காயையும், மது நிறைந்த பொன்குடத்தையும் ஒத்த இரண்டு தனபாரங் களின் அழகினாலும், பொறி - விளங்குகிறவர்களும், முத்து ஒளிர் சித்திர ரம்பை மாதர் - முத்தைப்போல் பிரகாசிப்பவர்களும் பேரழகு வாய்ந்தவர்களும் அரம்பை மாதர்களை ஒத்தவர்களுமான மாதர்கள், கார் உறும் வித்து இடையில் - மழை காலத்தில் தோன்றும் மின்னலையொத்த இடையில், கதலித் துடை - வாழை மரத்தையொத்த துடைகளையும், சேர அல்குல நல பிரசதடம் - அவைகளைச் சேர்ந்த அல்குலின் இனியதேன் நிறைந்த விசாலமான இடத்தையும், உட்கொடு - (அவைகள் மறையுமாறு) மூடி, கால்மறைய - கால்கள் மறையும் வண்ணம், நுவள செறி பொன் கலை ஒண் குலாவ - தளரவிட்டு அடர்த்தியாய்க் கட்டியுள்ள பொன்னுடையின் ஒளியானது அழகாகத்தோன்ற, கார்குயிலைக்கொடு - கருமை நிறமுள்ள குயிலின் இனிய குரலுடன், நல் தெருமீதில நெளித்து நகைத்து நடிப்பவர் - நல்ல தெருவின்மீது தங்கள் தேகத்தை நெளித்து நகைத்து அழகாக நடையிடுபவர்கள், காமன் உகப்பு அமளிச்சுழல் குத்திரர் - மன்மத லீலைகளைச் செய்து களிக்கும் பஞ்சணையாகிய சுழலில் சேர்க்கும் வஞ்சகர்கள்(மீது), சந்தம் ஆமோ - ஆசை கொள்ளுதல் தகுதியோ?

(வி - ரை) ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களின் சொரூப மான திரிபுரர்களைச் சிவபெருமான் நகைத்து எரித்தது போலவே, அவர் குமார ராகிய ஷண்முகக் கடவுளும் மாயையின் சொரூபமாகிய கிரௌஞ்சத்தை ஞான சக்தியாம் வேலாயுதத்தினால் பிளந்து அழித்தபொழுது அவர் முகத்தில் புன்ன கை தோன்றிற்று. ஏனெனில், ஈசன் ஒருவனே ஆண், ஜீவர்களெல்லோரும் அவனைப் பதியாக அடையவேண்டிய பெண்களே யென்னும் உண்மையையும், செய்கையும் செய்பவனும் செய்யப்படுவதும் யாவும் ஈசன் ஒருவனே என்னும் உண்மையையும் ஜீவர்கள் அறிந்தால், கன்மம மாயை இரண்டுக்கும் காரணமாய் மும்மலங்களுள் முதன்மைபெற்று நிற்கும் தான் என்னும அகங்காரம் அழியுமாத லால், தங்களைச் சுற்றி நடக்கும் சம்பவங்களை ஊன்றிப் பார்ப்பதனாலேயே எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய மேற்கூறிய உண்மைகளை அறிந்து கொள்ளாம லிருக்கிறார்களே யென்று ஜீவர்களது பேதைமையை நினைத்து முக்க ணெந்தையும் அவரது செல்வப் புதல்வரும் நகைத்தனர்போலும்! உலகத் தைக் காப்பாற்றும் மழைக்கு அதிபதியான இந்திரனது குமாரத்தியும் கிரியா சக்தியுமான தெய்வயானையம்மையைப் புணர்ந்த சித்தனே என எம்பெருமானை விளித்ததனால், கிரியா மார்க்கத்தில நின்றவர்களுக்கு ஞானம் சித்திக்குமென்றும்,

இச்சா சக்தியான குறத்தியை மணங்கொள்வோனே என விளித்ததனால், அப் பெருமானை அடையவேண்டுமென்று மிருந்த இச்சையிருக்குமாயின், குமார சுவாமி தாமே வலியச்சென்று தடுத்தாட்கொள்வா ரென்றும் அறிந்துகொள்ளக் கூடியதாயிருக்கிறது. சுத்த ஸத்வமூர்த்தியான சிவபெருமான் ஜீவர்களுக்கு ஞானத்தைப் புகட்டுவதான ரஜோகுணத்தை மேற்கொண்டபோது சுப்ரமண்ய மூர்த்தியாகத் தோன்றினார் என்பதை சுவாமிகள் "ராஜதலக்ஷண லக்ஷ்மி பெற்றருள் தம்பிரானே" என்னும் மொழிகளினால் குறிப்பாகக் காட்டியிருக்கிறார். ஸத்தான சிவபெருமானது ஐந்து முகங்களும் சித்தான சிவசக்தியின் ஒருமுகமும் சேர்ந்தே சச்சிதாநந்த மூர்த்தியான ஷண்முககடவுளது ஆறு முகங்களாயின வென்பதும், சிவபெருமான் தேவர்களின் வேண்டுகோளின்படி குமாரசுவாமியைத் தமயிடத்தேயே உதிக்கச்செய்தாரேயெனினும், அப்படிச்செய்யுமுன் உமாதேவியாரை அன்புடன் நோக்கினார் என்பதும் கந்தபுராணத்தில் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. (௪)

தனனா தனதத தனனா தனதத
தனனா தனத்த—தனதானா.

மருவே செறித்த குழலார் மயக்கி
மதனா கமத்தின் விரகாலே

மயலே யெழுப்பி யிதழே யருத்த
மலைபோல் முலைக்கு

பெருகாத லுற்ற தமியேனை நித்தல்
பிரியாது பட்ச மறவாதே

பிழையே பொறுத்து னிருதாளி லுற்ற
பெருவாழ்வு பற்ற அருள்வாயே!

குருவா யரற்கு முபதேச மவைத்த
குகனே குறத்தி மணவாளா!

குளிர்கா மிருத்த வளர்பூக மெத்து
குடகா விரிக்கு வடபாலார்

திருவே ரகத்தி லுறைவா யுமைக்கொர்
சிறுவா கரிக்கு மிளையோனே!

திருமால் தனக்கு மருகா அரக்கர்
சிரமே துணித்த பெருமாளே! (௫)

(ப - ரை) குருவாய்அரற்கும் உபதேசம்வைத்த - சிவபெருமானுக்கும் குருவாகநின்று பிரணவப்பொருளை உபதேசஞ்செய்த, குகனே-குகனே, குறத்தி மணவாளா - வேடுவா குலத்தில் வந்து வளர்ந்த வள்ளிநாயகியை (வலுவிற் சென்று) மணந்துகொண்டவனே! குளிர் கா மிகுத்த - குளிர்ச்சியைத் தரும் சோலைகள் மிகுதியாக இருக்கப்பெற்றதும், வளர் பூகம் மெத்தும் - ஓங்கி வளரும் கமுகு மிகுதியாக இருக்கப்பெற்றதும், குடகாவிரிக்கு வடபால் - மேற்குத் திசையிலிருந்து ஓடிவரும் காவிரி நதிக்கு வடபுறத்தில் உள்ளதுமான, ஆர் திருவேரகத்தில் உறைவா - அருமையான திருவேரகம் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருப்பவனே! உமைக்கு ஓர் சிறுவா - உமைக்கு ஒரு பிள்ளையான சிறுவனே! கரிக்கும் இளையோனே - யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளுக்குத் தம்பியே! திருமால் தனக்கு மருகா - மகாவிஷ்ணுவுககு மருகனே! அரக்கர் சிரமே துணித்த பெருமாளே - அசுரர்களுடைய தலைகளை வெட்டிய கடவுளே! மருவே செறித்த குழலார் - (வாசனைபொருந்திய) மருவைச் சூட்டியுள்ள கூந்தலையுடைய மாதர்கள், மயக்கி - (அடியேனது) புத்தியை மயக்கி, மதன் ஆகமத்தின் விரகாலே - மன்மதனுக்குரிய சாஸ்திரத்திற் கூறியுள்ள தந்திரத்தினாலே, மயலே எழுப்பி - (அடியேன் மனத்தில்) காமவிகாரத்தை உண்டாக்கி, இதழே அருத்த - தங்கள் கனிவாயின் அமுதத்தைப் பானம் பண்ணச் செய்ததனால், மலைபோல் முலைக்குள் உறவாகி - மலைபோல் வளர்ந்து பருத்துள்ள அவர்கள் தனபாரங்களில் ஆசையுடையவனாகி, பெருகாதல் உற்ற - அவர்களிடத்து அளவற்ற காதல்கொண்ட, அடியேனை - நினது அடிமையாகிய என்னை, நித்தல்பிரியா உதுபட்சம் - என்றும் (ஜீவாத்மாவை விட்டுப்) பிரியாமல் (அதைக் காத்திருக்கும் நின் கருணையான) அந்தப் பிரியத்தை, மறவாதே - (என்பால் காட்ட) மறந்திடாமல், பிழையே பொறுத்து - அடியேன் செய்துள்ள பிழைகளை மன்னித்து, உன் இரு தாளில் உற்ற - நினது இரண்டு பாதத்தாமரைகளில் பொருந்தியிருக்கும், பெரு வாழ்வு - உயர்ந்த வாழ்வான பேரின்பத்தை, பற்ற அருள்வாயே - அடியேன் ஆசையுடன் நாடொறு அடியேனுக்கு மெய்யுணர்ச்சியைத் தந்தருள்வாயே!

(வி - ரை) உலகத்திலுள்ள அஞ்ஞான விருளை யகற்றுவதற்காக அவதரித்து, அந்த அஞ்ஞானத்துக்குக் காரணமான பிரமதேவரைச் சிறையிலடைத்து, சிருஷ்டித்தொழிலைத் தானே நடத்தி, பிரணவப்பொருளை நீ அறிவாயோ என்று கேட்ட சிவபெருமானுக்குக் குருவாக இருந்து பிரணவப்பொருள் ஈதென்று உரைத்தருளிய ஞானதேசிகனே! நீ ஜீவர்களது இதயத்தை விட்டுப் பிரியாது அதில் வசித்தருளும் குகனல்லவோ? ஐம்புலன்களாகிய வேடர்கள் கையிற்சிக்கி அவர்கள் செலுத்திய வழியே சென்று நின்னையடைய வழியறியாமல் தியங்கிய வள்ளிநாயகியைத் தடுத்தாட்கொண்டு மணந்துகொண்ட கருணைவள்ளலே! ஞானகுருவாக அவதரித்த நீ குருவாகநின்று ஞானோபதேசம் செய்த திவ்யத் தலமான அழகிய சுவாமிமலையில் எழுந்தருளியிருக்கும் முருகனே! உலகத்தி

ளுள்ள ஜீவராசிகளையெல்லாம் ஈன்றருளிய தாயான உமாதேவியாரின் செல்வப் புதல்வனே ! என்றும் இளையவனுகவே யிருப்பவனே ! உமாதேவியாரின் அண்ணனும் உலகத்தைக் காப்பாற்றும் தொழிலையுடையவருமான மகா விஷ்ணுவின் மருகனே ! சத்துவகுணங்களின் சொரூபிகளான தேவர்கள் தலையெடுக்கவொட்டாது அவர்களைத் துன்புறுத்திவந்த தமோ குணங்களின் சொரூபிகளான அசுரர்களைச் சங்காரஞ்செய்த கடவுளே ! அடியேன் காமவலையிற்சிக்கித் தியங்குகிறேன் ; ஜீவர்களைவிட்டுப் பிரியாமல் எப்போதும் அவர்களது இதயத்தில் குகனுய் நின்று அவர்களுக்கு நன்மையே புரிந்துவரும் நீ அப்படிப்பட்ட கருணையை அடியேன்பால் காட்ட மறந்துபோகாமல், அடியேன்செய்த பிழைகளைப் பொறுத்துக்கொண்டு, நினது பாதாரவிந்தங்களிற் சேர்வதாகிய பேரின்பத்தை அடைய வேண்டுமென்ற இச்சையுடன் அவ்வின்பத்தை ஆவலுடன் நாடும்படியான மெய்யுணர்ச்சியை அடியேனுகருத் தந்தருளவேண்டும்.

அப்படிப்பட்ட இச்சை உண்டாவதற்கும் அப்பெருமானது திருவருள் அவசியம் என்பது, பழநித் திருப்புகழில்,

" மறைமுறையி னிறுதிநிலை முததிக கிசைததபடி
உடலுயிர்கள் கரணவெளி பட்டுக் குணததிரயம
வழிபடவும் நினதடிமை யிச்சைப்படுததுவது மொருநாளே ?"

என்று சுவாமிகள் முறையிடுவதனுல் விளங்குகிறது. (௯)

தனதனன தானந் தனதனன தானந்
தனதனன தானந்—தனதான.

இராவினிருள் போலும் பராவுகுழ லாலும்
இராமசர மாகும் விழியாலும்

இராகமொழி யாலும் பொருதமுலை யாலும்
இராதஇடை யாலும் இளைஞோர்நெஞ்

சராவியிரு போதும் பராவிவிழ வேவந்
தடாதவிலை கூறும் மடவாரன்

படாமலடி யேனும் சுவாமியடி தேடும்
அநாதிமொழி ஞானந் தருவாயே !

குராவினிழல் மேவுங் குமாரனென நாளுங்
குலாவியினி தோதன் பினர்வாழ்வே

குணாலமிடு சூரன் பணமுடிக டோறுங்
குடாவியிட வேலங் கெறிவோனே !

தூராலுமிகு தீமுன் பிராதவகை போலும்
தொடாமல்வினை யோடும் படிநூறும்

சுபானமுறு ஞானந் தபோதனர்கள் சேருஞ்
சுவாமிமலை வாழும் பெருமாளே! (சு)

(ப - ரை.) குராவின நிழல் மேவும் குமாரன் என - (நறுமணமிக்க மலர்களை யுடைய) குரவமரத்தினடியில் (பழநியில்) ஆசையுடன் அமரும் குமாரன் என்று, நாளும் - தினந்தோறும், குலாவி இனிது ஓது - அன்புடனும் சந்தோஷத்துடனும் நினது திருநாமங்களை மொழியும், அன்பினர் வாழ்வே - மெய்யன்பர்பெறும் பேரின்பமே! குலைமிடு சூரன் - போர்க்களத்தில் வீராவேசத்தால் கொக்கரித்த சூரபதுமனுடைய, பணமுடிகள் தோறும் குடாவியிட - கிரீடங்களைத் தரித்த தலைகள் ஒவ்வொன்றையும துளைக்குமாறு, வேல் அங்கு எறிவோனே - அப்போர்க்களத்தில் வேலாயுதத்தைப் பிரயோகித்தவனே! தூரால் மிகுதீ முன்பு இராதவகைபோலும் - துரும்பானது பெரிய அக்கினியின் முன்னே அழியாமல் நிலை நிற்க முடியாதது போலவே, வினை தொடாமல் ஓடும்படி நூறும் - வினைப் பயன் பீடிக்காமல் விலகி ஓடும்படி அதைப் பொடியாக்கும், ஞானம் சுபானம் உற்று தபோதனர்கள் - ஞானத்தை இனிமையாய் உட்கொண்ட சிறந்த தவசிகள், சேரும் - போய்ச்சேரும், சுவாமிமலை வாழும் பெருமாளே - சுவாமிமலையில் எழுந்தருளியிருக்கும் கடவுளே!, இராவின் இருள்போல் பரவு குழலாலும் - இரவில் பரவி உலகத்தை மூடும் இருளைப்போலப் பரவியுள்ள கரிய கூந்தலினாலும், இராம சரம் ஆகும் விழியாலும - இராமபாணத்தையொத்த வலிமையும் கூர்மையுமுள்ள கண்களினாலும், இராக மொழியாலும் - சங்கீதத்தைப்போல் இனிமை தருபவைகளும் மோகத்தை யுண்டுபண்ணக் கூடியவைகளுமான மொழிகளினாலும், பொருத முலையாலும் - தாங்கமுடியாமல் பருத்துள்ள தனபாரங்களினாலும், இராத இடையாலும் - இல்லையென்று சொல்லும்படி அவ்வளவு மெல்லியதாயுள்ள இடையினாலும், இளைஞோர் நெஞ்சு அராவி - காளைப்பருவத்தினுள்ள ஆடவர்களது மனத்தைத் துன்புறச்செய்து, வந்து இருபோதும் பாவி விழவே - அவ்வாடவர்கள் வந்து அவர்களது மலர்களையொத்த பாதங்களில் வீழ்ந்து வணங்கிய காலத்து, அடாத விலை கூறும் மடவார் அன்பு - (தம்மை அனுபவிப்பதற்கு) தகாத அளவு மிகுந்த பொருள் கேட்கும் விலைமாதர்களது (பொய்யான) பிரியம், அடாமல் - அடியேனை வென்று அடிமையாக்கிக் கொள்ளாவண்ணம், அடியேனும் சுவாமி அடிதேடும் - (குணமொன்றுமில்லாத) அடியேனும் இறைவனை நினது பாதாரவிந்தங்களை அடைய விரும்பித் தேடுமாறு, அநாதி மொழி ஞானம் தருவாயே - ஆதியில்லாத மொழியான பிரணவத்தில் அடங்கியுள்ள ஞானத்தை அடியேனுக்கு உபதேசித்தருளவேண்டும்.

(வி - ரை) குமாரக்கடவுளுடைய திருநாமங்களை அன்புடனும் களிப்புடனும் மொழிந்து அப்பெருமானிடத்து மெய்யன்பு பாராட்டுபவர்கள் அப்பெருமானது

பாதாரவிந்தங்களாகிய பேரின்பவீட்டை யடைவது திண்ணம். சூரன் எம்பெருமானைப் போர்க்களத்தில் எதிர்த்தபொழுது, எம்பெருமான் அவனது சிரத்தை யறுக்க வறுக்க, அவன் வெவ்வேறு சிரங்கள் முளைக்கப்பெற்று எம்பெருமானுடன் போர்புரிந்தான். அவனுக்கு அவ்வாறு புதிதுபுதிதாக முளைத்த தலைகளையெல்லாம் குமாரக்கடவுள் துளைத்தெறிந்தார். சூரன் அகங்கார சொரூபி, ஈசனது அனுக்கிரகத்தைப் பெறவேன் என்ற அகங்காரத்துடன் கொடிய தவம் புரிந்தான். அவரிடமிருந்து சிறந்த வரங்களைப்பெற்றான். பிறகு 'என்னை வெல்லுபவர் எவருமில்லை, நான் என்னிஷ்டப்படி நடப்பேன்' என்று கூறி அகங்காரத்துடன் நடந்துகொண்டான். அவனை அழிப்பதற்குச் சிவசக்தியாகும் குமரக்கடவுள் வந்தார். அவன் பலவித சொரூபங்களை எடுத்துக்கொண்டான். அந்த அகங்காரத்தின் பலவித சொரூபங்களும் எம்பெருமானருளினால் அழிந்தன. பிறகு எம்பெருமானருளினால் அந்த அகங்காரமானது எம்பெருமானைச் சுமப்பேன் என்ற அகங்காரமாகவும் (மயிலாகவும்), எம்பெருமான் புகழை எடுத்துக்கூறுவேன் என்ற அகங்காரமாகவும் (கோழியாகவும்) மாறினபிறகு, அவ்விரண்டு அகங்காரங்களும் அழியாமல் நிலைபெற்று நிற்கின்றன. அகங்காரமானது, எம்பெருமானுக்குத் தொண்டு செய்வேன், எம்பெருமான் புகழை ஓதுவேன் என்னும் சொரூபங்களை எடுத்துக் கொண்டால் அழியாமல் நிலைத்து நின்று நன்மை பயக்கும் ; வேறு எந்தச் சொரூபத்தை எடுத்துக்கொண்டாலும் அழிவதுமன்றி தீமையும் விளைவிக்கும. ஞானத்தைப் பெற்றவர்களது முந்தை வினைப்பயன் அவர்களையணுகாமல் விலகியோடும்

தனதான தத்த தந்த தனதான தத்த தந்த
தனதான தத்த தந்த—தனதான.

கொடிமாம லர்க்கு ளின்ப முளவேரி கக்கு நண்பு
தருமாக டப்ப மைந்த தொடைமாலை
கனமேரு வொத்தி டும்ப னிருமாபு யத்த ணிந்த
கருணாக ரப்ர சண்ட கதிர்வேலா !
வடிவார்கு றத்தி தன்பொ னடிமீது நித்த முந்தண்
முடியான துற்று கந்து பணிவோனே !
வளவாய்மை சொற்ப்ர பந்த முளகீர னுக்கு கந்து
மலர்வாயி லக்க ணங்க ளியல்போதி
அடிமோனை சொற்கி ணங்க வுலகாமு வப்ப என்று
னருளால ளிக்கு கந்த பெரியோனே !
அடியேனு ரைத்த புன்சொ லதுமீதும் நித்த முந்த
னருளேத ழைத்து கந்து வரவேணும் !

செடிநேரு டற்கு டம்பை தனின்மேவி யுற்றி டிந்த
படிதான லக்க ணிங்க ளுறலாமோ ?

திறமாத வர்க்க ளிந்து னிருபாத பத்ம முய்ந்த
திருவேர கத்த மர்ந்த பெருமாளே ! (எ)

(ப - ரை) கடிமா மலர்க்குள் இன்பமுள வேரி கக்கு - அப்போது மலர்ந்து வாசனை வீசும் சிறந்த மலர்க்குள்ளிருந்து இனிமைதரும் தேன்சொரியப் பெறுவதும், நண்புதரும் மா - நினக்கு அணிவிப்பதனால் நினது அருளைப் பெறும்படி செய்யத்தக்க மாட்சிமை பொருந்தியதுமான, கடப்பு அமைந்த தொடை மாலை - கடம்ப மலர்கள் தொடுக்கப்பெற்ற மாலையை, கனமேரு ஒத்திடும் ப(ன்)னிரு மாபுயத்து அணிந்த - வலிமைமிக்க மேருமலையையொத்த சிறந்த பன்னிரு தோள்களிலும் அணிந்துகொண்ட, கருணாகர - கருணையின் சொரூபமான மூர்த்தியே ! ப்ரசண்ட கதிர் வேலா - மிகுந்த வெப்பமும் வேகமும் பொருந்தியதும் மிகுந்த ஒளிவீசுவதுமான வேலாயுதத்தைக கையிலேந்தியவனே ! வடிவு ஆர் குறத்தி தன் பொன்னடிமீது - அருமையான அழகுவாய்ந்த குறப்பெண்ணான வள்ளிநாயகியின் அழகிய அடிகளின்மீது, நித்தமும் தண் முடியானது உற்று உகந்து பணிவோனே - தினந்தோறும் நினது குளிர்ந்த கிரீடமானது பொருந்துமாறு உளமகிழ்ச்சியுடன் அந்நாயகியை வணங்குபவனே ! வளவாய்மை சொல் ப்ரபந்தம் உள கீரனுக்கு - அழகும் வன்மையும் பொருந்திய சொற்களைத் தொடுத்துப் பாக்கள் பாடவல்ல நக்கீர தேவருக்கு, உகந்து இலக்கணங்கள் இயல்பு மலர்வாய் ஓதி - (அவர் பாடிய பாக்களைக் கேட்டு) மகிழ்ச்சியுற்று இலக்கணத்தின் இயல்பை நீயே திருவாய்மலர்ந்து ஓதுவித்து, அடிமோனை சொற்கு இணங்க - அடி மோனை சொல் இவைகளுக்கு இசைவாக, உலகம் உவப்ப என்று உன் அருளால்அளிக்க உகந்த - (அப்புலவர்) உலகமானது களிப்படையுமாறு உனது அருளினால் திருமுருகாற்றுப்படையைப் பாடி உலகத்தோருக்கு உதவியதைக்கண்டு மகிழ்ச்சியுற்ற, பெரியோனே - பெருங்குணமுடையோனே! அடியேன் உரைத்த புன்சொல் அதுமீது - (இயற்கையாகவே சொல் வன்மையில்லாதவனும் நின்னிடம் இலக்கணம் கல்லாதவனுமாகிய) அடியேன் அற்பமான சொற்களினால் தொடுத்த பாடல்மீதும், தண் அருளை தழைத்து - நினது குளிர்ந்த அருள் வந்து படியச்செய்து, நித்தமும் உகந்து வரவேணும் - தினந்தோறும் மனமகிழ்ந்து வந்தருளவேண்டும் ; செடி நேர் உடல் குடம்பை தனில் மேவி உற்று - புதரையொத்த தேகமாகிய பறவைக்கூட்டில் பொருந்தியிருந்து, இடிந்தபடி இங்கண் அலக்கண் உறலாமோ - அது அழிந்த காலத்தில் (அடியேன்) இவ்விடத்தில் துன்பமுறுவது நினது கருணைக்குத் தகுதியோ ? திறமாதவர் களித்து உன் இருபாத பத்மம் உய்ந்த - மேன்மைபொருந்திய தவசிகளின்மீது அன்புகூர்ந்து நினது இருபாதத் தாமரைகளில் அவர்களைச் சேர்த்து

வாழ்வுபெறச் செய்த, திருவேரகத்து அமர்ந்த பெருமானே - திருவேரகம் என்னும் சுவாமிமலையில் எழுந்தருளியிருக்கும் கடவுளே !

(வி - ரை) "மொய்தாரணி குழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால், வைதாரையுமங்கு வாழவைப்போன்" என்று கந்தரலங்காரத்திற் கூறியுள்ளபடி, குமாரசுவாமிக்குத் தமிழின்மீது மிகுந்த பிரியமுண்டாதலால், அப்பெருமான் நக்கீரதேவர் முன்பே மிகுந்த கவித்திறமை வாய்ந்த தமிழ்ப்புலவராயிருந்தும், அவருக்குத் தாமே தமிழ்ப்பாஷையின் இலக்கணத்தை நன்கு கற்பித்து, தமது புகழை அப்புலவர் முன்னிலும் அதிகத் திறமையோடு இனிய தமிழ்ப்பாடல்களினால் உலகத்தார் கேட்டு மகிழுமாறு எடுத்துரைக்கும்படி அருள் செய்தார். அப்பெருமானுக்குக் கடம்பமலர்மாலையின்மீதுள்ள பிரியமானது அவருக்குக் கடம்பன் என்று ஒரு திருநாமம் இருப்பதனாலேயே நன்கு விளங்கும். தேவாதிதேவரான முருகப்பெருமானுடைய பாதமலர்களில் பிரமதேவர் முதலிய தேவர்கள் பணிகின்றார்களேயாயினும், அப்பெருமான் தமக்கு ஜீவர்களிடத்துள்ள அளவற்ற கருணையினால் அவர்களைத் தடுத்தாட்கொள்வதற்காக அவர்களைப் பணிவது, உருமாறுவது, திருடுவது முதலிய அவர் பெருமைக்குத் தகாத காரியங்களையும் செய்யத் தயாராகவிருக்கின்றார் என்பது 'குறத்தி தன் பொன்னடிமீது நித்தமும் தண் முடியானதுற்றுகந்து பணிவோனே' என்று அப்பெருமானை விளித்ததனால் விளங்குகிறது. இவ்வுண்மை கந்தரனுபூதியில், 'வேதாமுதல் விண்ணவர் சூடு மலர்ப்பாதா குறமின் பதசேகரனே !' என்று விளக்கமாய்க் கூறப்பட்டிருக்கிறது.

'ப்ரசண்ட' என்ற பதத்துக்கு மிகுந்த வேகம், வெப்பம் என்னும் இரண்டு பொருள்களையும் கூறத் துணிந்தேன். ஏனெனில், வேறொரு பாடலில் "அசுரனதகல மிடந்து போக வகிர்ந்த வேகம், விரிகடல் துகளெழ வென்ற வேலவா !" என்று எம்பெருமானை சுவாமிகள் விளித்திருக்கின்றார். கருணாகார என்பது கருணாகர என்று மாறியது செய்யுள் விகாரம். (௭)

தந்தத் தனதன தனதன தனதன
தந்தத் தனதன தனதன தன்தன
தந்தத் தனதன தனதன தனதன—தனதான

எந்தத் திகையினு மலையினு முவரியி
னெந்தப் படியினு முகடினு முளபல
எந்தச் சடலமு முயிரியை பிறவியி னுழலாதே

இந்தச் சடமுட னுயிர்நிலை பெறநளி
னம்பொற் கழலிணை களில்மரு மலர்கொடு
என்சித் தமுமன முருகிநல் சுருதியின் முறையோடே

சந்தித் தரஹர சிவசிவ சரணென
கும்பிட் டிணையடி யவையென தலைமிசை
தங்கப் புளகித மெழுஇரு விழிபுனல் குதிபாயச்

சம்பைக் கொடியிடை விபுதையி னழகுமு
னந்தத் திருநட மிடுசர ணழகுற
சந்தச் சபைதனி லெனதுள முருகவும் வருவாயே !

தொந்தத் திகுகுட தகுகுட டிமிடிமி
தந்தத் தனதன டுடுடுடு டமடம
துங்கத் திசைமலை யுவரியு மறுகச லரிபேரி

துன்றச் சிலைமணி கலகல கலினென
சிந்தச் சுரர்மல ரயன்மறை புகழ்தர
துன்புற் றவுணர்கள் நமனுல குறவிடு மயில்வேலா !

கந்தச் சடைமுடி கனல்வடி வடலணி
யெந்தைக் குயிரென மலைமகள் மரகத
கந்தப் பரிமள தனகிரி யுமையரு ளிளையோனே !

கஞ்சப் பதமிவர் திருமகள் குலமகள்
அம்பொற் கொடியிடை புணரரி மருகநல்
கந்தப் பொழில்திகழ் குருமலை மருவிய பெருமாளே ! (அ)

(ப - ரை) (போர்க்களத்தில்) தொந்தத் திகுகுட தகுகுட டிமிடிமி தந்தத் தனதன டுடுடுடு டமடம என்று, துங்க திசை மலை - எட்டுத் திக்குகளிலுமுள்ள சிறந்த குலபர்வதங்களும், உவரியும் - சமுத்திரமும், மறுக - சுழன்று புரளும்படி, சலரி பேரி துன்ற - அநேக கைத்தாளங்களும் பேரிகைகளும் நெருங்கி முழங்கவும், சிலை மணி கலகல கலின் என—(பூத சேனைகளிலுள்ள வீரர்களது) விற்களில் கட்டிய மணிகள் கலகலகலின் எனச் சத்திக்கவும், சுரர் மலர் சிந்த - தேவர்கள் புஷ்பமாரி பொழியவும், அயன் மறை புகழ்தர - பிரமதேவரும் வேதங்களும் நினது கீர்த்தியைப் பாடித் துதிக்கவும், அவுணர்கள் துன்புற்று நமன் உலகு உறவிடும் - அசுரர்கள் பூதவீரர்களால் வெட்டுண்டு அங்கங்கள் துடிக்க இயமலோகத்துக்குப் போய்ச்சேரும்படி செய்த, அயில் வேலா - கைவேலாயுதத்தை யுடையவனே ! கந்தச் சடைமுடி - (வாசனை பொருந்திய மலர்மாலைகளைச் சூடியதனால்) வாசனை வீசும் சடாமுடியை யுடையவரும், கனல் வடிவு - நெருப்பையொத்த திருமேனியை யுடையவரும், அடல் அணி எந்தைக்கு - வலிமை பொருந்திய உருவான எமது தந்தையாகிய சிவபெருமானுக்கு, உயிர்

எனும் மலைமகள் - உயிரென்று சொல்லத்தக்க பர்வதராஜபுத்திரியும், மரகத கந்தப் பரிமள தனகிரி உமை - பச்சைமேனியை யுடையவரும் நல்ல வாசனை வீசும் (சந்தனம், முதலியவைகளை அணிந்துள்ள) தனபாரங்களை யுடையவருமான உமாதேவியார், அருள் இளையோனே - (உலகத்தாருடைய துயரத்தையும் அதற்குக் காரணமான அஞ்ஞானத்தையும் நீக்குவதற்காக) உலகத்தாருக்குத் தந்தருளிய (என்றும் இளமைப்பருவம் மாறாத) சிறுவனே! கஞ்சப்பதம் இவர் திருமகள் - தாமரை மலரின்மீது எழுந்தருளியிருக்கும் இலக்ஷ்மிதேவியாகிய, அம்பொன் கொடியிடை குலமகள் - மிகுந்த அழகு வாய்ந்தவளும், மின்னற்கொடியை யொத்த மெல்லிய இடையையுடையவளுமான உத்தமமான பெண்மணியை, புணர் அரி - சதா காலமும் தமது இதயத்தில் அமர்த்தி அவளுடன் கலந்திருக்கும் ஸ்ரீமந் நாராயணனுடைய, மருக - சகோதரியின் புத்திரனே! நல் கந்த பொழில் திகழ் - நல்ல வாசனை வீசும் பூஞ்சோலைகள் அழகாய்த் தோன்றும், குருமலை மருவிய பெருமாளே - சுவாமிமலையில் எழுந்தருளியிருக்கும் பெருங்குணமுடையோனே! எந்த திசையினும் மலையினும் - எந்தத் திசையிலும் எந்த மலையிலும், உவரியின் எந்த படியினும் - சமுத்திரத்திலுள்ள எந்த நீர்நிலையிலும், முகடினும் - மலையின் உச்சியிலும், உள - வாழும், எந்த சடலமும் - எந்தப் பிராணிக்குரிய சரீரத்திலும், உயிர் இயை பிறவியின் உழலாதே - (அடியேன்) உயிர்பொருந்தி அடியேன் பிறந்து ஜனன (மரணமாகிய) கடலில் அகப்பட்டு வருந்தாமல், இந்த சடமுடன் உயிர் நிலைபெற - (இனி வேறு உடல் பெறுவதற்கு வழியில்லாமல்) அடியேனது இவ்வுடலுடன் அடியேனது உயிர் அலைச்சலொழிந்து (முத்திவீட்டில்) நிலையாய்ப் பொருந்துமாறு, (அடியேன்), என் சித்தமும் மனம் உருகி - அடியேனுடைய அந்தக்கரணமான மனம் (நின்னிடத்துக்கொள்ளும்) மெய்யன்பினால் உருகி, நல்சுருதியின் முறையோடே - சன்மார்க்கத்தைப் போதிக்கும் வேதங்களிற் கூறியுள்ள விதிப்படி, நளினம் பொன் கழலிணைகளில் - தாமரை மலரையொத்த அழகிய இரு பாதாரவிந்தங்களிலும், மருமலர்கொடு சந்தித்து - வாசனை பொருந்திய புஷ்பங்களைச் சொரிந்து அப்பாதமலர்களில் வந்துசேர்ந்து, அரஹரா சிவசிவ சரண் என - அரகரா! சிவ சிவா! தாமே எனக்குப் புகலிடம் என்று கூறி, கும்பிட்டு - கைகளைக் கூப்பி, இணையடி அவை என தலைமிசை தங்க - அவ்விருபாதமலர்களும் அடியேனது தலையின்மீது பொருந்தும்படி கின்னை வணங்கி, புளகிதம் எழ - அடியேனது தேகமெங்கும் உரோமம் சிலிர்க்கவும், இரு விழிபுனல் குதிபாய - அடியேனது இருகண்களிலிருந்தும் ஆநந்தபாஷ்பம் வேகமாய்ப்பெருகவும், எனது உளம் உருகவும் - அடியேனது உள்ளம் உருகவும், சம்பை தொடி இடை விபுதையின் அழகும் - மின்னற்கொடியை யொத்த இடையையுடைய தேவகுமாரியான தெய்வயானையம்மையின் அழகும், திருநடம் இடு உன் அந்த சரண் அழகு(ம்) உற - (பொன்னம்பலத்தில் எமது தந்தையான சிவபெருமானுடன்) அற்புதமாக நிர்த்தனஞ்செய்யும் நினது அழகிய பாதங்களின் அழ

கும் தோன்றும்படி, சந்த சபைதனில் வருவாயே - சந்தக்கவி பாடும் இந்தச் சபைதனில் வந்தருளவேண்டும் !

(வி - ரை) விரிந்த உலகத்தின் எண் திசைகளிலும் நிலத்திலும் நீரிலும் ஆகாயத்திலும் வாழும் எண்ணிறந்த வகைப்பட்ட ஜீவராசிகளுள் எதுவாகப் பிறந்து இறந்தபோதிலும் ஜீவன் மறுபடியும் பிறந்து மற்றொரு உடலையடைவது நிச்சயமாதலின், ஜீவன் அல்லற்படுவது ஒழிந்து எம்பெருமானது பாதாரவிந்தங் களில் நிலையாக இருக்கவேண்டுமாயின், ஜீவனை அது ஒரு பிறவியில் அடைந்த உடலிலேயே நிலைபெறச்செய்து, அந்த உடலைத் தெய்வத்தன்மை பொருந்திய தாகச்செய்து, அந்த உடலுடன் ஜீவனை எம்பெருமானது பாதாரவிந்தங்களான நித்தியமான முத்தி வீட்டிற்சேர்க்கும்படி பிரார்த்திப்பதே தகுந்த வழியெனக் கருதி சுவாமிகள் முருகப்பெருமானை இப்பாடலில் இவ்வாறு பிரார்த்தித்தார் போலும்! அன்றியும், ஒரு ஜீவன் அது எடுத்த ஒரு உடலை விட்டுப் பிரிந்தால், அது அந்த ஜன்மத்தில் செய்த பாபங்களுக்குத்தக்க இயமதண்டனையை அனுப விக்கவேண்டி யிருக்குமாதலின், அத்தண்டனையை அடையாமல் தப்புவதற்காக வும் இவ்வாறு பிரார்த்தித்திருக்கலாம். ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளுக்கு இவ் விரண்டு நோக்கங்களும் உண்டு என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. **திருப்புகழில்,**

“ எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி அவதாரம்
இனியுன தபய மெனதுயி ருடலு
மினி யுடல் விடுக முடியாது;
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு மயர்வானூர் ;
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் தருவாயே !” என்றும்,

கந்தரலங்காரத்தில்,

“ கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள் பேசியவா !” என்றும்,

திருப்புகழில்,

“ வருபவர்க ளோலை கொண்டு
நமனுடைய தூத ரென்று
மடிபிடிய தாக நின்று தொடர்போது
மயலதுபொ லாத வம்பன்
விரகுடைய னாகு மென்று
வசைகளுட னேதொ டர்ந்து அடைவார்கள் ;

கருவியத ஞலெ றிந்து
சதைகன்றனை யேய ரிந்து
கரியபுன லேசொ ரிந்து விடவேதான்

கழுமுனையி லேயி ரென்று
விடுமெனும வேளை கண்டு
கடுகிவர வேணு மென்றன் முனமேதான்!"

என்றும் சுவாமிகள் கூறியுள்ளவைகளே தகுந்த ஆதாரங்களாகும்.

பிரபுடதேவ மகாராஜன் சபையில், சம்பந்தாண்டான் என்னும் உமாதேவியாருடைய அடியானுடன் நமது சுவாமிகள் வாதஞ்செய்த காலத்தில், அவனுடன் போட்ட பந்தயத்துக்காகத் தாம் வழிபட்டுவந்த முருகப்பெருமானை அச்சபையில் வரவழைப்பதற்காக இப்பாடலைப் பாடினதாகப் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். (அ)

தனதனன தனதனன தான தந்தனம்
தனதனன தனதனன தான தந்தனம்
தனதனன தனதனன தான தந்தனம்—தனதான.

ஒருவரையு மொருவரறி யாம லுந்திரிந்
திருவினையி னிடர்கலியொ டாடி நொந்துநொந்
துலையிலிடு மெழுகதென வாடி முன்செய்வஞ் சனையாலே-

ஒளிபெறவெ யெழுபுமர பாவை துன்றிடுங்
கயிறுவித மெனமருவி யாடி விண்படிந்
தொளிருமின லுருவதென வோடி யங்கம்வெந திடுவேனைக் ;

கருதியொரு பரமபொரு ளீது என்றுஎன்
செவியினையி னருளியுரு வாகி வந்தஎன்
கருவினையொ டருமலமு நீறு கண்டுதண் டருமாமென்-

கருணைபொழி கமலமுக மாறு மிந்துளந்
தொடைமகுட முடியுமொளிர் தூபு நஞ்சரண்
கலகலென மயிலின்மிசை யேறி வந்துகந் தெனையாள்வாய் ;

திரிபுரமு மதனுடலும் நீறு கண்டவன்
தருணமழ விடையனட ராஜ னெங்களுந்
திகழருண கிரிசொருப ஞான யந்தமங் கறியாத-

சிவயநம நமசிவய கார ணன்சுரந்
தமுதமதை யருளியெமை யாளு மெந்தைதன்
திருவுருவின் மகிழெனது தாய்ப யந்திடும் புதல்வோனே;
குருகுகொடி யுடன்மயிலி லேறி மந்தரம்
புவனகிரி சுழலமறை யாயி ரங்களும்
குமரகுரு வெனவலிய சேட னஞ்சவந் திடுவோனே.
குறமகளி னிடைதுவள பாத செஞ்சிலம்
பொலியவொரு சசிமகளொ டேக லந்துதிண்
குருமலையின் மருவுகுரு நாத வும்பர்தம் பெருமாளே. (௬)

(ப - ரை) திரிபுரமும் மதன் உடலும் நீறு கண்டவன் - திரிபுரத்தையும் மன்மதனுடைய தேகத்தையும் சாம்பலாகச் செய்தவரும், தருண மழ விடையன் - மிகவும் இளமை பொருந்திய இடபத்தை வாகனமாக உடையவரும், நடராஜன் - பொன்னம்பலத்தில் நடனஞ்செய்பவரும், எங்கணும் திகழ் அருணகிரி சொருபன் - உலகமெங்கும் ஒளிவீசி ஜோதிப்பிழம்பாய் நின்று பிறகு திருவருணை மலையின் சொரூபத்தைத் தரித்தவரும், அங்கு ஆதி அந்தம் அறியாத - அக்காலத்தில் அடியையும் முடியையும் அறியமுடியாதவண்ணம் நின்றவரும், சிவயநம நமசிவய - நமசிவாய என்னும் பஞ்சாக்ஷரத்துக்குக் காரணபூதராயிருப்பவரும், அமுதமதை சுரந்து அருளி எமை ஆளும் - சிவஞானம் என்னும் அமுதத்தை ஏராளமாய்ச் சுரந்து அளித்து எம்மை ஆட்கொண்டருளும், எந்தை தன் திருவுருவின் மகிழ் - எமது தந்தையுமாகிய சிவபெருமானது அழகிய திருமேனியைக் கண்டு மனமகிழும், எனது தாய் பயந்திடும் புதல்வோனே - எனது தாயாராகிய பார்வதிதேவியார் பெற்றருளிய புத்திரனே! குருகு கொடியுடன் மயிலில் ஏறி - கோழிக் கொடியுடன் மயிலின்மீது ஏறி, மந்தரம் புவனகிரி சுழல - மந்தரமலையும் (உலகத்தைச் சுற்றி வளைந்து வளர்ந்திருக்கும்) சக்கரவாள பர்வதமும் அசைந்து சுழலவும், மறை ஆயிரங்களும் குமரகுரு என - ஆயிரம் சாகைகளையுடைய வேதமானது ஞானகுருவான குமாரசுவாமி வருகிறார் என்று களிப்புடன் கூறவும், வலிய சேடன் அஞ்ச - வலிமைபொருந்திய ஆதிசேஷன் பயப்படவும், வந்திடுவோனே - (உலகத்தை வலமாகச் சுற்றி) வந்தவனே! குறமகளின் இடைதுவள - வேடர்குலத்தில் வளர்ந்த வள்ளிநாயகியின் இடை நெளியும்படியாகவும், பாத செம் சிலம்பு ஒலிய - அத்தேவியார் பாதங்களில் அணிந்திருந்த அழகிய சிலம்புகள் சத்திக்கும்படியாகவும், (அத்தேவியாரைப் புணர்ந்தும்), ஒரு சசிமகளொடே கலந்து - இந்திராணியின் புதல்வியான ஒப்பற்ற தெய்வயானையம்மையுடனும் புணர்ந்து, திண் குருமலையின் மருவு குருநாத - சிறந்த சுவாமிமலையின்மீது எழுந்தருளியிருக்கும் ஞானகுருவாகிய நாதனே! உம்பர்தம் பெருமாளே - தேவர்

களுக்குத் தலைவனுகிய தேவாதி தேவா! ஒருவரையும் ஒருவர் அறியாமலும் திரிந்து - (எங்கும் வியாபித்திருப்பது ஒன்றே என்பதை யுணரமுடியாததனுல்) ஒருவரை யொருவர் அறிந்துகொள்ளாமல் (மாயையினுலும் ஆசாபாசங்களினு லும்) அலைந்து திரிந்து, இருவினையின் இடர் கலியொடு ஆடி நொந்து நொந்து - முற்பிறப்புக்களிற் செய்த நல்வினை தீவினைகளின் பயனுக நேரிடும் துன்பங் களையும் கெடுதிகளையும் அனுபவித்து மனம் மகவும்நொந்து, உலையில் இடு மெழுக தென வாடி - நெருப்பின்மேல் வைத்த மெழுகைப்போலத் துவண்டு வருந்தி, முன் செய் வஞ்சனையாலே - முற்பிறப்புக்களிற் செய்த வஞ்சனையான காரியங் களினுலே, ஒளி பெறவே எழுபு மர பாவை - (பொம்மலாட்டத்தில்) பிரகா சத்துடன் எழும்பிக் குதிக்கும் மரப்பொம்மை, தன்றிடும் கயிறு விதமென (தன்னை யாட்டுவிக்கத் தன்னை அதனுல் கட்டப்பட்டதனுல்) தன்னுடன் கயிறு பொருந்தப்பெற் றிருப்பதுபோலவே, மருவி - (அவ்வஞ்சனைச் செயல்களின் பயனுடன்) நெருங்கிப் பொருந்தி, ஆடி - (அவ்வினைப்பயனுல் ஆட்டுவிக்கப் பெற்று) ஆடி, விண்பறிந்து ஒளிரும் மினல் உருவது என ஓடி - ஆகாயத்தில் ஓடிப் பிரகாசிக்கும் மின்னல்தான் என்று சொல்லும்படி (சொற்பகாலம் கீர்த்தி யுடன் விளங்கி உலகில்) சஞ்சரித்து, அங்கம் வெந்திடுவேனை - தேகமெங்கும் நொந்து வருந்தும் அடியேனை, கருதி - (நினது கருணையைப் பெறத்தக்கவனுக) நினைத்து, ஒரு பரமபொருள் ஈது என்று என் செவியினையின் அருளி - ஒப் புயர்வற்றதும் பரகதியைத் தரத்தக்கதுமான மெய்ஞ்ஞானம் இதுதான் என்று தெளிவாக அடியேனது இருகாதுகளிலும் உபதேசித்து, உருவாகி வந்த என் கருவினையொடு அருமலமும் நீறகண்டு-(அழியும்) தேகத்தை யெடுத்துக்கொண்டு வந்திருக்கும் அடியேனை ஓயாமல் ஜனனமரண சாகரத்தில் புகுத்தும் அடியே னது பிறவி வினையும் அடியேன் தானுக நீக்கிக்கொள்ளமுடியாத ஆணவம், காமி யம், மாயை என்னும் மும்மலங்களும் வெந்து சாம்பலாகும்படிசெய்து, தண் தரு மா மென் கருணைபொழி கமலமுகம் ஆறும் - (வெந்துயரையாற்றி மனத்தைக்) குளி ரச்செய்வதும், மாட்சிமை பொருந்தியதும், (அடியார்களது துயரத்தைக்கண்டு சற்றும் சகிக்கமுடியாதவளவு) மென்மை பொருந்தியதுமான கருணையை மழை போற் பொழியும் தாமரையை யொத்த ஆறு திருமுகங்களும், இக்துளம் தொடை - கடப்பமலர் மாலையும், மகுடமுடியும் - கிரீடங்களும் (தோன்றவும்), சரண் ஒளிர் நூபுரம் கலகலென - பாதாரவிந்தங்களில் அணிந்துள்ள பிரகாச மான தண்டைகள் கலகலவென ஒலிக்கவும், மயிலின்மிசை ஏறிவந்து உகந்து எனை ஆள்வாய் - மகிழ்ச்சியுடன் அடியேனை ஏற்றுக்கொண்டு ஆண்டருள வேண்டும்.

(வி - ரை) முன்பு ஒருகாலத்தில் பிரமதேவரும் திருமாலும் மருட்சியுற்று, தங்களுக்குள் யார் பரம்பொருள் என்பதைப்பற்றி ஒருவரோடொருவர் வாதாடிப் போர் புரிந்தபோது, தேவாதிதேவரான சிவபெருமான் அடிமுடி தெரியாத

ஜோதிப்பிழம்பாய்த் தோன்றினார். அப்போது "உங்களுள் எவர் இச்சோதிப்பிழம்பின் அடிமுடிகளைக் கண்டுபிடிக்கிறாரோ அவரே பரம்பொருள்" என்று ஓர் அசரீரிவாக்கு வானத்தில் உதித்தது. உடனே பிரமதேவர் அன்னபக்ஷி வடிவத்தையும் திருமால் பன்றியின் வடிவத்தையும் எடுத்துக்கொண்டு முடியையும் அடியையும் முறையே தேடியும் காணாமல் அயர்ந்து திரும்பினர். அப்போது எம்பெருமான் அவர்கள் முன்னே தோன்றி அவர்களது மயக்கத்தை அகற்றியருளினார். பிறகு அஜ்ஜோதிப்பிழம்பானது சிவலிங்கஸ்வரூபமான ஒரு மலையாக மாறிற்று. அதுவே தற்காலம் திருவருணை அல்லது திருவண்ணாமலை என்னும் பெயருடன் விளங்கி வருகிறது.

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களின் உருவமான திரிபுரங்களையும், பிறவிப்பிணியை உண்டாக்கி வளர்க்கும் மன்மதனது தேகத்தையும் எரித்துச் சாம்பலாக்கியவரும், சிறிதும் வலிகுன்றாமல் எப்போதும் இளமைப் பருவத்திலுள்ள வலிமையுடையதாகவே இருந்துகொண்டு உலகம் நிலைகுலையாம லிருக்கும்படி காத்துவருகிற தருமதேவதையையே இடபமாக்கித் தமது வாகன மாக்கிக்கொண்டவரும், திருவண்ணாமலையின் சொரூபத்தைத் தரித்தவரும், நமசிவாய என்னும் பஞ்சாக்ஷரத்தின் நாயகரும், கருணை சுரந்து எம்மைக் காப்பவரும் எமது தந்தையுமான சிவபெருமானது திருவுருவத்தைக் கண்டு மகிழும் எமது தாயாகிய பார்வதிதேவியார் பெற்ற புதல்வராகிய தேவரீர்-அடியேனது சகோதரராகிய தேவரீர்-அன்று விநாயகக் கடவுளோடு பந்தயமாக உலகப் பிரதக்ஷணம் செய்து தமது பராக்கிரமத்தைக் காட்டியருளினீர். தமது சகோதரனாகிய அடியேன் முந்தைவினைப் பயனால் ஆட்டுவிக்கப்பட்டு ஆடி நொந்து வாடுகிறேன்; உலகமாயையில் உழலும் அடியேன் தமது அருளைப் பெறும் தகைமையுடையவனல்லன்; ஆயினும், தேவரீர் அடியேனது சகோதரராகையினால், அடியேன்மீது கருணைகூர்ந்து, தமது கருணைபொழியும் திருமுகங்களையும் கடம்பமாலையையும் அடியேனுக்குப் புகலிடமான இரு பாதாரவிந்தங்களையும் அடியேன் கண்டு மகிழ்ச்சியடையுமாறு அடியேன் முன்னே தோன்றி, பரகதியைத் தரும் மெய்ஞ்ஞானத்தை உபதேசித்து, நீக்குவதற்கரிய மும்மலங்களையும், பிறவிநோய்க்குக் காரணமான வினைப்பயனையும் அழித்தருளவேண்டும். தேவரீரது தந்தையாகிய சிவபெருமான் உலகத்தைக் காப்பதற்காகவே திரிபுரங்களையும் மன்மதன் உடலையும் அழித்தருளினார்.

இவ்வுலகத்தில் ஜீவர்கள் ஒருவரோடொருவர் போராடி ஒருவரையொருவர் வஞ்சிக்க முயன்று அலைந்து திரிவதற்குக் காரணம் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளாததுதான். சகல ஜீவராசிகளினிடத்தும் உறைந்திருப்பது பரம்பொருள் தான். ஜீவர்களாகவுமிருந்து ஜீவர்களை ஆட்டுவிப்பவனாகவு மிருப்பவன் பரம்பொருளே யாதலால், உலகத்தில் காணப்படும் பூதபேதங்கள் சரீரபேதங்களேயன்றி, பொருள் பேதங்களல்ல. எங்கும் உறையும் பொருள் ஒன்றே என்னும் உண

மையை யறிவதே மெய்ஞ்ஞானமாகும். அந்த மெய்ஞ்ஞானத்தை யடைந்தால், பூதபேதங்கள் ஒழிந்து, ஆணவம் முதலிய மலங்களும், அவைகளினால் உண்டாகும் ஆசாபாசங்களும் ஒழியும். அவையொழிந்தால், ஜீவன் அல்லற்பட்டு அலைந்து திரிவதும் ஒழியும். எம்பெருமான் அருள்கிடைத்தால்,'தாராவு மிகுதீமுன் பிராதவகைபோலும்', இருவினைப் பயன் அணுகாமல் விலகியோடும். (௯)

தனாதன தனாதன தனாதன தனாதன
தனாதனன தானந்—தனதானா.

அவாமரு வினாவசு தைகாணும டவாரெனு
மவார்கனலில் வாழ்வென் றுணராதே
அராநுகர வாதையு றாதேனைக திநாடும
திவாகியுள மால்கொண் டதனாலே
சிவாயமெ னுநாமமொ ருகாலுநி னையாததி
மிராகரனை வாவென் றருள்வாயே!
திரோதம லமாறும டியார்கள ருமாதவர்
தியானமுறு பாதந் தருவாயே!
உவாவினி யகானவி னிலாவும யில்வாகன
முலாசமுட னேறுங் கழலோனே!
உலாவுத யபானுச தகோடியு ருவானவொ
ளிவாகுமயில் வேலங் கையிலோனே!
துவாதச புயாசல சடானன வராசிவ
சுதாஎயினர் மானன் புடையோனே!
சுராதிப திமாலய னுமாலொடு சலாமிடு
சுவாமிமலை வாழும் பெருமாளே! (௧௦)

(ப - ரை) உவா - இளையோனே! இனிய கான் உ - இனிய வாசனை வீசும் கடவுளே!, வில் நிலாவு மயில்வாகனம் உல்லாசமுடன் ஏறும் - வில்லைப் போல் தனது தோகையை விரிக்கும் மயில்வாகனத்தின்மீது களிப்புடன் ஏறும், கழலோனே - வீரக்கழல்களை யணிந்த பாதாரவிந்தங்களை யுடையோனே! உலா உதயபானு சதகோடி உருவான ஒளிவாகும் - உதயகாலத்தில் மெல்ல எழும் சூரியர்கள் ஆயிரங் கோடி சேர்ந்து ஒரு உருவெடுத்தாற் போல் பிரகாசிக்கும், அயில் வேல் அம் கையிலோனே - கைவேலாயுதத்தை அழகிய கையில் தரித்துக்கொண்டிருப்பவனே!, துவாதச புயாசல - மலைகளை யொத்த பன்னிரண்டு தோள்களை

யுடையவனே !, சடானன - [illegible] மு[illegible]களை யுடையோனே !, வரா - சிவபெருமானால் தேவர்களுக்கு வரமாக அளிக்கப்பட்டவனே !, சிவ சுதா - சிவ பெருமானது புதல்வனே ! எயினர் மான் அன்பு உடையோனே - வேடர்கள் பெண்ணான அழகிய வள்ளிநாயகியினிடத்து அன்புடையவனே !, சுர அதிபதி மால் அயனும் - தேவராஜனாகிய இந்திரனும் திருமாலும் பிரமதேவரும், மாலொடு சலாமிடு - அன்புடன் வணங்கும், சுவாமிமலை வாழும் பெருமாளே - சுவாமிமலை யில் எழுந்தருளியிருக்கும் பெருமாளே !, அவா மருவின் - (மனத்தில்) ஆசை யுண்டாகுமாயின், ஆவசுதை காணு(ம்) - உலகமுழுவதையும் தோன்றச் செய்யும் இயல்புள்ள, மடவார் எனும் அ(வ்)வார் கனல் இல்வாழ்வு - பெண்கள் என்று உலகோர் சொல்லும் நீண்ட நெருப்புத்தான் இல்லறவாழ்க்கை, என்றுணராதே - என்று அறிவினால் அறிந்துகொள்ளாமல், அரா நுகர வாதையுறு தேரை கதி நாடும் அறிவாகி - பாம்பினால் தின்னப்படும்போது பெருந்துன்பத்தை அனுபவிக் கும் தவளையின் துன்ப நிலைமையை அடைய ஆசைப்படுமளவு அறிவில் கீழ்ப் பட்டவனாகி, உள(ம்)மால் கொண்டு அதனாலே - மனம் மயக்க மடையப் பெற்று அக்காரணத்தினால், சிவாயம் எனு(ம்)நாமம் ஒருகாலும் நினையாத - சிவாயம் என் னும் சிவபெருமானது திருநாமத்தை எச்சமயத்திலும் நினைக்கவும் நினைக்காத, திமிர ஆகரன் - (அஞ்ஞான) இருளில் வசிப்பவனை, வா என்று அருள்வாயே - வா என்று சொல்லி அழைத்து அருள்புரிவாயே ! திரோதமலம் மாறும் அடியார் கள் அருமாதவர் - ஞானத்தை மறைக்கும் மும்மலங்களையும் அகற்றிய மெய்யடி யார்களும் அரிய சிறந்த தவத்தைச் செய்த பெரியோர்களும், தியானமுறு பாதம் தருவாயே - (எப்போதும்) மனத்திலமர்த்தி வணங்கும் நினது பாதாரவிந்தங்களை அடியேனுக்குத் தந்தருளவேண்டும்.

(வி - ரை) ஆசையற்றவர்களுக்கு உலகத்தில் யாவர் புலப்பட்டாலும் எப் பொருள் புலப்பட்டாலும் அவர்கள் கருத்து மாறாது. உலகத்தில் காணப்படும் ஜடபேதங்கள் அவர்களுக்குத் தோன்றா. அவர்களுக்கு எல்லாம் ஒன்றே. கந்தரனுபூதியில் "சும்மா விரு சொல் லறவென் றலுமே, அம்மா பொரு ளொன்று மறிந்திலனே" என்று இப்பொருளையே சுவாமிகள் தெளிவாய் உரைத் தருளி யிருக்கிறார். ஒருவருக்கு ஆசை உதித்தால், பூதபேதங்களெல்லாம் தோன்றும். ஏனெனில், அவர் தமது ஆசைகளில் ஒவ்வொன்றையும் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய பொருள்களை நாடித் தேடி, அவைகளில் எவை உயர்ந்த வை எவை தாழ்ந்தவை என்று ஆராய்ந்து பார்க்கிறார். அப்போது உலகத்தில் காணப்படும் வஸ்துக்களின் வித்தியாசங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஆசைகளுக்கெல்லாம் மூலகாரணமாய் நிற்பவை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் மூன்று ஆசைகள்தாம். அம்மூவாசைகளுள் தலைமை பெற்றுள்ளது பெண்ணாசைதான் என்பது சற்று ஆலோசித்தால் எளிதில் விளங் கும். அப்பெண்ணாசைதான் உலகத்திலுள்ள பொருள் வித்தியாசங்களை விசேஷ

மாய் எடுத்துக்காட்டி மற்ற ஆசைகளான அக்கினிகளையும் தொடர்ச்சியாய் மூட்டி, உயிர்கள் அவைகளில் வீழ்ந்து வெந்தழியும்படி செய்கிறது. ஆகையினால்தான் பெண்கள் உலகத்தையெல்லாம் தோன்றச் செய்பவர்களென்றும், நீண்ட தீயை யொத்தவர்களென்றும் கூறப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தீயில் வீழ்ந்து நொந்து அழிவதே இல்லறவாழ்க்கை யென்னும் மெய்யுணர்ச்சியில்லாமல், பாம்பின்வாயி லகப்பட்ட தவளையின் நிலைமையை அடைய விரும்பும் அறிவீனத்துக்குச் சமானமான அறிவீனத்துடன் அந்த இல்லறவாழ்க்கையை அடைய விரும்புகிறேன். அடியேன் அவ்வாறு மனம் மயங்கி யிருப்பதனால், அடியேன் அஞ்ஞான விருள் நிறைந்த வீட்டில் குடியிருந்துகொண்டு, நமசிவாய என்னும் பஞ்சாக்ஷரத்தை மனத்தினால் ஒரு முறை நினைப்பதுமில்லை. ஆயினும், அடியேன் ஆசைகளையும், அவைகளுக்குக்காரணமான ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அகற்றிக்கொள்ளச் சக்தியற்றவனா யிருப்பதனால்தான் மூலமந்திரத்தை ஒருமுறையேனும் நினையாமலு மிருக்கிறே னாகையினாலும், அவைகளை அகற்றிக்கொள்வது நின்னருளைப் பெற்றவர்க்கன்றி வேறு எவர்க்கும் சாத்தியமானதல்ல வாதலாலும், நீ ‘வா வா வென வாவென்றழைத்து வானோர் பரிதாபம் தவிர்த்த’ பெருமாளாதலாலும், நீ அடியேனையும் ‘நீ வாவென நீ யிங் கழைத்து பாராவர வானந்த சித்தி நேரே பரமானந்த முத்தி தரவேணும்’; நீ அடியேனை வா என்று அழைத்துத் தடுத்தாட்கொண்டு, அஞ்ஞானத்தை யுண்டாக்கும் மும்மலங்களையும் நினது திருவருளினால் அகற்றிக்கொண்ட மெய்யடியார்களும் சிறந்த தவசிகளும் சதாகாலமும் தமது சிந்தையில் அமர்த்தி வணங்கும் நினது பாதாரவிந்தங்களை அடியேனுக்கு உதவியருளவேண்டும். இப்படிப்பட்ட உதவியை எனக்குப் புரியும்படி பிறரை வேண்டாமல் நின்னை ஏன் வேண்டுகிறேன் என்றால்; — ஜீவனிடத்து உனக்கு உள்ள காதல் ஒருபோதும் சிறிதளவும் குன்றா வண்ணம் நீ என்றும் இளையோனாய்க் காளைப் பருவத்திலேயே இருக்கிறாய்; துயருற்றவர்கள் வேறு கதியின்றி நின்னைச் சரண் புகுந்து நின்னை அழைத்த மாத்திரத்தில் விரைவில் வந்து அவர்களைக் காப்பதற்காக மயில்மீதேறி எப்போதும் சேவகனாய்க் காத்துக்கொண் டிருக்கிறாய்; நீ ஒப்பற்ற கொடையாளியென்றும் நிகரற்ற வீரனென்றும் உணர்த்துவதற்காக நினது பாதாரவிந்தங்களில் கழல்களை அணிந்துகொண் டிருக்கிறாய்; இரவில் உலகத்தைப் போர்த்திருந்த இருளை அகற்ற உதிக்கும் சூரியனைப்போல் - தீயிலிட்டு நன்றாய்க் காய்ச்சின பொன்னைப்போல் இனிமையான ஒளி மிகுதியாய் வீசும் சூரியனைப்போல் - ஆயிரங்கோடி சூரியர்களைச் சேர்த்துத்திரட்டி ஓர் உருவமாகச் செய்தால் அது எவ்வளவு ஒளி வீசுமோ அவ்வளவு ஒளி வீசும் வேலாயுதத்தை - அஞ்ஞான விருளை கொடிப்பொழுதில் அகற்றவல்ல வேலாயுதத்தை - கையில் வைத்துக்கொண்டிருக்கிறாய்; என்னைக் காப்பதற்கு வலிமை பொருந்திய பன்னிரு புயங்களையும், என்னைக் கருணையுடன்

1. திருவேரகம் எனும் சுவாமிமலை

பார்ப்பதற்குப் பன்னிரு கண்களையும் உடையவனாயிருக்கிறாய்; உலகத்தில் அதிகரித்துத் தலைமைபெற்றிருந்த தமோகுணங்களை அழிக்கவேண்டுமெனப் பிரார்த்தித்துத் தேவர்கள் செய்த தவத்துக்கு உவந்து சிவபெருமான் வரமாக அளித்தருளிய ஞானதேசிகனா யிருக்கிறாய்; ஐம்புலன்களின் கைகளிற் சிக்கி அவைகள் செலுத்திய வழியே செல்லும் ஜீவனது சொரூபமான வள்ளிநாயகியின்மீது மிகுதியான அன்பு பாராட்டுகிறாய்; இந்திரன் முதலியோர் அன்புடன் வணங்கும் கருணைக்கடலாகிய தேவாதிதேவனாக இருக்கிறாய். மேற்கூறிய சக்திகளும், பெருங்குணங்களும், பேரன்பும் வாய்ந்த பொருளாக நீ இருப்பதனால், நின்னையன்றி வேறு புகலிடம் அடியேனுக்குக் கிடையாது. ஆகையினால்தான் நின்னைப் பிரார்த்திக்கிறேன். வள்ளிநாயகியினிடத்தில் காட்டிய பேரன்பை ஐம்புலன்களுக்கு அடிமையாகித் தியங்கும் அடியேனிடத்தும் காட்டி அடியேனை நினது பாதாரவிந்தங்களிற் சேர்த்துக்கொள்ளவேண்டும். (௧0)

தனதனன தந்ததான தனதனன தந்ததான
தனதனன தந்ததான—தனதான.

கதிரவனெ ழுந்துலாவு திசையளவு கண்டுமோது
கடலளவு கண்டுமாய மருளாலே
கனபணபு யங்கராஜன் முடியளவு கண்டுதாள்கள்
கவினறந டந்துதேயும் வகையேபோய்

மிடமிடமி தென்றுசோர்வு படையாதே
இசையொடுபு கழ்ந்தபோது நழுவியப்ர சண்டர்வாச
லிரவுபகல் சென்றுவாடி யுழல்வேனோ?
மதுகரமி டைந்துவேரி தருநறவ முண்டுபூக
மலர்வளநி றைந்தபாளை மலரூடே
வகைவகையெ ழுந்துசாம வதிமறைவி யந்துபாட
மதிநிழலி டுஞ்சுவாமி மலைவாழ்வே!
அதிரவரு சண்டவாயு வெனவருக ருங்கலாப
அணிமயில்வி ரும்பியேறு மிளையோனே!
அடைவொடுலெ கங்கள்யாவு முதவிநிலை கண்டபாவை
அருள்புதல்வ அண்டராஜர் பெருமாளே! (௧௧)

(ப - ரை) பூகமலர் வளை நிறைந்த பாளைமலருடே - பாக்குமரத்தின் மல ருக்குரிய செழுமையை முற்றிலும் பெற்ற அம்மரத்தின் மலரும் பருவத்திலுள்ள பாளைக்குள்ளிருந்து, மதுகரம் - வண்டுகள், வேரி தரு நறவம் உண்டு - வாசனை வீசும் தேனைக்குடித்து, இடைந்து - வசங்கெட்டு, வகைவகை எழுந்து - இனம் இனமாக வெளிப்பட்டு, சாம அதி மறை வியந்துபாட - வேதங்களுள் சிறந்த சாமவேதத்தை (கேட்போர்) அதிசயிக்கும்படி பாடும்வண்ணம், மதிநிழல் இடும் - குளிர்ச்சியைத்தரும் சோலைகள் நிறைந்த, சுவாமிமலை வாழ்வே - சுவாமிமலை என்னும் ஸ்தலத்தில் எழுந்தருளி அதைச் சிறப்புறச் செய்பவனே! அதிர வரு சண்ட வாயு எனவரு - எதிர்ப்படும் வஸ்துக்களெல்லாம் அதிர்ச்சி யடையும்படி வீசும் புயற்காற்றோ இது என்று சொல்லும் வண்ணம் மிகுந்த வேகத்துடன் வரும், கரும் கலாப அணி மயில் விரும்பி ஏறும் இளையோனே - கருநீல நிற முள்ள தோகையையுடைய அழகிய மயிலின்மீது ஆசையுடன் ஏறும் சிறுவனே! உலகங்கள் யாவும் அடைவொடு உதவி நிலைகண்ட பாவை - எல்லா உலகங்களை யும் அவைகளுக்குவேண்டிய எல்லா வஸ்துககளுடனும் படைத்துத் தருமத்தினால் அது நிலைநிற்கும்படி செய்த பார்வதிதேவியார், அருள் புதல்வ - ஈந்தருளிய ...வனே! அண்டராஜர் பெருமாளே - சகல அண்டங்களிலுமுள்ள அரசர்க ளெல்லோருக்கும் தலைவனே! மாயமருளாலே - மாயையினால் ஏற்பட்ட மயக் கத்தினாலே, கதிரவன் எழுந்து உலாவு திசை அளவு கண்டு - சூரியன் உதித்துச் சஞ்சரிக்கும் எட்டுத் திசைகளின் முடிவான எல்லைகள் வரைக்கும், மோது கடல் அளவு கண்டு - அலைவீசும் சமுத்திரத்தின் எல்லைகள் வரைக்கும், கணபண புயங்க ராஜன் முடியளவு கண்டு - கூட்டமான படங்களையுடைய ஸர்ப்ப ராஜனாகிய ஆதி சேஷனுடைய தலைகள் இருக்கும் இடம் வரைக்கும், தாள்கள் கவின் அற - கால் களின் அழகு அழியுமாறும், தேயும் வகையே நடந்துபோய்-தேய்ந்துபோகுமாறும் நடந்துசென்று, இதம் இதம் இது என்று - நன்மையைத் தரத்தக்கது இதுவே யென்று நிச்சயமாய் நினைத்து, நாளும் அருகு இருந்து - தினந்தோறும் சமீபத் தில் இருந்து, கூடும் இடம் இடம் இதென்று-எண்ணம் கைகூடும் இடம் இதுவே என்று நம்பி, சோர்வு படையாதே - (பலநாள் நடந்தும் பயனடையாமல் போனதை நினைத்து) மனச்சோர்வு அடையாமல், இசையொடு புகழ்ந்தபோது - இன்னிசை பொருந்திய பாடல்களினால் புகழ்ந்தகாலத்தில், நழுவிய ப்ரசண்டர் வாசல் இரவு பகல் சென்று - (அவ்விடத்தில் நிற்காமலும் ஒரு வார்த்தையேனும் பேசாமலும்) நழுவினாற்போல் அப்பாற்செல்லும் வலியாருடைய வீட்டின் வாயிலுக்கு இரவும் பகலும் போய், வாடி உழல்வேனோ - தேகம் அயரும்படி அலைந்து திரிதல் தகுதியோ?

(வி - ரை) சுவாமிமலையில் எழுந்தருளியிருக்கும் ஞானதேசிகனே! அடி யேன் எனது துயரத்தைச் சகிக்கமுடியாமல், நின்னைச் சரண்புகுந்து நின்னைக் கூவி அழைத்த மாத்திரத்தில் தாமதமின்றித் தக்ஷணத்தில் வந்து அடியேனைக்

காப்பதற்காகச் சதாகாலமும் மயிலின்மீது ஆவலுடன் ஏறி வீற்றிருப்பவனே ! நினது நாயகியான ஜீவாத்மாவின்மீதுள்ள காதல் சிறிதும் குன்ருது வண்ணம் எந் நாளும் இளையோனாகவே யிருக்கும் காளைக் குமரேசா ! நின்னை இன்னிசை பொருந்திய பாடல்களினுல் புகழ்ந்து, முத்தமிழால் நின்னை வைதாரையும் வாழ வைக்கும் நினது அருளையும் இகபரசுகங்களனைத்தையும் அடையாமல், மாயை யினுல் மனமருண்டு, பூலோகமெல்லாம் திரிந்தும், கடல்களின் எல்லைவரையில் சென்றும், பூமி தேய்ந்து ஆதிசேஷன் தலைகளின்மீது அடியேன் பாதங்கள் படும்படி ஓயாமல் நடந்தும், கால்கள் தேய்ந்து நொந்ததையும் பாராட்டாமல், ' ஆகாதெனினும் அகத்துநெய் யுண்டாகிற், போகாதெறும்பு புறஞ்சுற்றும் - யாதுங், கொடாஅ ரெனினும் உடையாரைப் பற்றி, விடாஅ லருகத் தவர் ' என்றபடி, உள்ளே செல்ல வழியில்லாமல் நன்ருய் மூடப்பெற்ற நெய்க்குடத்தை விட்டு அகலாமல் எறும்புகள் சுற்றிக்கொண்டி ருப்பதுபோல், பொருளுடையோருடைய தயவை நாடுவதே நல்ல பயனைத் தருமென்றும், பொருள் அடையவேண்டுமென்ற நோக்கம் அவர்கள்பாற் சென்ருல்தான் கைகூடுமென்றும் நிச்சயமாய் நம்பி, அவர்களுடைய வீடுகளுக்கு ஓயாமல் இர வும் பகலும் சென்று புகழ்ந்தாலும் சிறிதும் பொருள் கொடாமல் அலக்ஷியமாய் அகன்று செல்லும் வலியோர்கள்பாற் சென்று அடியேன் மனம் சஞ்சலமடையும் படி விட்டிருப்பது நினது கருணைக்குத் தகுதியோ ?

" மிடுக்கிலாதானை வீமனே விறல் விஜயனே வில்லுக் கிவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலைப்
பொடிக்கொள் மேனி யெம்புண்ணியன் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேலம ருலகமாள்வதற் கியாது மையுற வில்லையே"

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்திருப்பதையும் காண்க. (கக)

தனதன தனந்த தானன
தனதன தனந்த தானன
தனதன தனந்த தானன—தனதானா.

கறைபடு முடம்பி ராதெனக்
கருதுத லொழிந்து வாயுவைக்
கருமவ சனங்க ளால்மறித் தனலூதிக்

கவலைப டுகின்ற யோககற்
பனைமரு வுசிந்தை போய்விடக்
கலகமி டுமஞ்சும் வேரறச் செயல்மாளக்

குறைவற நிறைந்த மோனநிற்
குணமது பொருந்தி வீடுறக்
குருமலை விளங்கு ஞானசற் — குருநாதா

குமரச ரணென்று கூதளத்
புதுமலர் சொரிந்து கோமளப்
பதயுக ளபுண்ட ரீகமுற் — றுணர்வேனோ?

சிறைதளை விளங்கு பேர்முடிப்
புயலுட னடங்க வேபிழைத்
திமையவர் கள்தங்க ளூர்புகச் — சமராடித்

திமிரமி குசிந்து வாய்விடச்
சிகரிக ளும்வெந்து நீறெழத்
திகிரிகொ ளநந்த சூடிகைத் — திருமாலும்

பிறைமவு லிமைந்த கோவெனப்
பிரமனை முனிந்து காவலிட்
டொருநொடி யில்மண்டு சூரனைப் — பொருதேறிப்

பெருகும தகும்ப லாளிதக்
கரியென ப்ரசண்ட வாரணப்
பிடிதனை மணந்த சேவகப் — பெருமாளே! (கஉ)

(ப-ரை) சிறை தளைவிளங்கு பேர் இமையவர்கள்-ஒளிவீசும் விலங்குகளுடன் சிறைச்சாலையில் அடைபட்டிருந்தவர்களான தேவர்கள், முடிப்புயலுடன் (புயல் முடியுடன்) - மேகவாகனனாகிய இந்திரனுடன், அடங்கவே - யாவரும், பிழைத்து தங்கள் ஊர்புக சமராடி - சூரபதுமன் முதலியோர் செய்த கொடுமைகளினின்றும் தப்பிப்பிழைத்து தங்கள் அமராவதி நகரத்தில் மீண்டும் வசிக்கும்படி அசுரர்களுடன் போர்புரிந்து, திமிரமிகு சிந்து வாய்விட - இருள் நிறைந்த சமுத்திரமானது வாய்விட்டு அலறவும், சிகரிகளும் வெந்து நீறு எழ - மலைகளும் வெந்து சாம்பலாகி அச்சாம்பல் மேலெழுந்து (எங்கும்) பரவவும், திகிரிகொள் அநந்த சூடிகை திருமாலும் - சக்கராயுதத்தைக் கையில் தரித்துக்கொண்டு எண்ணிறந்த படங்களையுடைய ஆதிசேஷன்மீது சயனித்திருக்கும் மகாவிஷ்ணுவும், பிறை மவுலிமைந்த கோ என - பிறைச்சந்திரனைச் சடாமுடியில் தரித்திருக்கும் சிவபெருமானுடைய புதல்வனே! இது முறையோ என்று கூறவும், பிரமனை முனிந்து காவலிட்டு பிரமதேவரிடத்துக் கோபமுற்று அவரைச் சிறையிலடைத்து, மண்டு சூரனை ஒருநொடியில் பொருது ஏறி - (போர்க்களத்தில்)

நெருங்கிவந்த சூரபதுமனுடன் போர்புரிந்து அப்போரை ஒரு நொடிப்பொழுதில் முடித்துப் போர்க்களத்தைவிட்டு நீங்கி, பெருகு மத கும்ப லாளித கரி என - மத நீர் சொரியும் மத்தகத்தையுடைய அழகிய யானை என்று சொல்லப்படும், ப்ரசண்ட வாரணப் பிடிதனை - மிகுந்த வலிமை பொருந்திய யானையான ஐராவதத்தினால் வளர்க்கப்பட்ட பெண்ணாகிய தெய்வயானையம்மையை, மணந்த - மணந்து கொண்ட, சேவகப்பெருமாளே - வீரனாகிய பெரியோனே ! கறைபடும் உடம்பு இராது என கருதுதல் ஒழிந்து - குற்றம் பொருந்திய தேகம் அழியாமல் நிலைத்திராது என்று எண்ணுவதைவிட்டு, வாயுவை கருமவசனங்களால் மறித்து - (தேகம் அழியாமல் நிலைபெற்றிருக்கும்படி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன்) சுவாசத்தை உள்ளேயிழுத்துத் தேகத்துக்குள்ளேயே அடைபட்டு வெளியிற்செல்லாமல் இருப்பதற்குரிய மந்திரங்களை உச்சரித்து சுவாசித்த வாயு வெளியேறாமல் மறித்து, அனலூதி - அவ்வாயு தேகமெங்கும் பரவும்படி செய்து அதனால் மூலாக்கினியான குண்டலி சக்தியை எழுப்பி, கவலைபடுகின்ற - சித்தியடைய வேண்டுமென்று கவலைப்படுகிற, யோககற்பனை - யோகமார்க்கத்தின் காரணமான மருட்சியானது, மருவு சிந்தை போய்விட - பொருந்தியுள்ள சஞ்சலபுத்தியானது நீங்கிப்போய்விடவும், கலகமிடும் அஞ்சும் வேர் அற - (அமைதி ஏற்படவொட்டாமல்) மனத்தில் சதாகாலமும் கலகம் உண்டுபண்ணிக்கொண் டிருக்கும் ஐம்புலன்களினால் ஏற்படும் சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தம் என்னும் ஐந்து ஆசைகளும் வேருடன் அழிந்துபோகவும், செயல் மாள - என்செயல் என்பது ஒழிந்துபோகவும், குறைவற நிறைந்த மோன நிற்குணமது பொருந்தி வீடுற - குறைவின்றிப் பரிபூரணமாயுள்ள மவுனமும் குணமின்மையும் பொருந்தப்பெற்று முத்தியடையவும், குருமலை விளங்கு ஞானசத்குருநாதா - சுவாமிமலையில் எழுந்தருளியிருக்கும் நல்ல ஞானகுருநாதா !, குமர - என்றும் இளமை மாறாதிருக்கும் குமாரக்கடவுளே ! சரண் என்று - நினது பாதமலர்களே அடியேனுக்குப் புகலிடம் என்று கூறி, கோமள பதயுகள புண்டரீகம் உற்று - இளமைபொருந்திய இருபாதங்களான தாமரை மலர்களினிடம் வந்து சேர்ந்து, கூதள புதுமலர் சொரிந்து - அன்றுபூத்த கூதளமலர்களினால் அப்பாதத்தாமரைகளை அருச்சித்து, உணர்வேனோ - அவைகளின் தன்மையை உணரும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைக்குமோ ?

(வி - ரை) உலகத்தை இரக்ஷிப்பது மழை ; அதற்கு நாயகன் இந்திரன், அதாவது, கிரியாமார்க்கத்தில் செலுத்தும் நற்குணம் ; அதற்கு உதவியானவை சற்குணங்கள் பல ; அவைகளின் சொரூபிகளே ஏனைய தேவர்கள். நிற்க, இப்பாடலில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் மூன்று. அவையாவன :— 1. பிரமனைச் சிறையிலிட்டது ; 2. சூரனை அழித்தது ; 3. தெய்வயானையம்மையை மணந்துகொண்டது. இவைகளை வரிசைக்கிரமமாய்க் கவனிப்போம். பிரமனைச்சிறையிலடைத்ததன் காரணம், உலகத்தில் அஞ்ஞானம் தலைமைபெற்று சத்வகுணங்கள்

மறைந்துகிடந்ததை யுன்னி, உலகோருக்கு ஞானத்தைப்போதித்து அஞ்ஞானத்தை நீக்குவதற்காகவே அவதரித்தருளிய குமாரக்கடவுள், உலகத்தில் அஞ்ஞானிகள் நிறைந்ததற்குக் காரணம் அவர்களைப்படைத்த பிரமதேவரது அஞ்ஞானமே யென்று தீர்மானித்து, தாம் அவதரித்த பின்னுவது அஞ்ஞானிகள் பெருகாமலிருக்கும்பொருட்டு, குமாரசுவாமி பிரமதேவரை அவர் பதவியினின்றும் நீக்கிச் சிறையிலிட்டு, சிருஷ்டித்தொழிலைத் தாமே நடத்திவந்தார். அஞ்ஞானம் மேன்மேலும் பெருகுவதை அவ்வாறு தடுத்த பின்னர், ஞானதேசிகனாகிய முருகப்பெருமான், முன்னமே உலகில் பரவியிருந்த அஞ்ஞானத்துக்குக் காரணமான ஆணவம் அல்லது அகங்காரத்தின் சொரூபியான சூரபதுமனை அழித்தருளினார். அப்போது அஞ்ஞானம் நிறைந்துள்ள சமுசாரம் என்னும் சமுத்திரம் ஞானசக்தியாம் வேலினால் தன் பொய் நிலைமை வெளியாகிவிட்டதேயென்று வருந்திக்கதறிற்று. சமுசாரத்தின் பொய்ம்மையை வெளிப்படுத்தி அகங்காரத்தைக் குலைத்தபின்னர், குமாரசுவாமி கிரியாமார்க்கத்தில் ஞானம் கலந்தால்தான் அம்மார்க்கத்தினால் தம்மை யடையமுடியும் என்பதைக் குறிப்பாகக் காட்டுமாறு, கிரியாசக்தியாம் தெய்வயானையம்மையைத் திருமணஞ்செய்துகொண்டு, ஞானசொரூபியாகிய தாம் அத்தேவியாருடன் கலந்துகொண்டார். ஜீவாத்மாவானது சமுசார சாகரத்தைக்கடந்து கரையேறி, அகங்காரத்தையொழித்து ஞானமடையுமாறு வேண்டியவற்றைச் செய்யக்காத்திருக்கும் முருகப்பெருமானை விளித்து, சுவாமிகள் காயகற்பந்தேடும் யோகமார்க்க மருட்சியை அகற்றிக்கொள்ளவும், ஐம்புலன்களின் வழியே மனத்தையிழுக்கும் ஐந்து வகை ஆசைகளை வேருடன் களைந்தெறியவும், ஆசைகளை யொழித்து அமைதியுற்ற மனமும் செயலற்றிருக்கும் தேகமும் மௌனமுற்ற வாகரும் பொருந்தப்பெற்று முத்தியடையவும் மெய்ப்பொருள் யாதென்று உணரவேண்டுவது அவசியமென்றும், அவ்வுணர்ச்சியைப் பெறுவதற்குரிய மார்க்கம் முருகப்பெருமானது பாதத்தாமரைகளை அணுகி, அவைகளை அன்று பூத்த கூதளமலர்களினால் அருச்சித்து வணங்குவதே யென்றும் இப்பாடலில் கூறியிருக்கிறார். (௧௨)

தனனதன தானதத்த தனனதன தானதத்த
தனனதன தானதத்த—தனதான.

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம்வைக்க அறியாத
சகடசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ ?
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே !

கடகபுய மீதிரத்ன மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே !

தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு

தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா !

அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா !

அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே ! (௧௫)

(ப-ரை) நெய்த்த வடிவேலா-அசுரர்களது இரத்தத்தைக் குடித்ததும் வடித்துக் கூர்மையாகவுள்ளதுமான வேலாயுதத்தைக் கையில் தரித்தவனே ! அருணதள பாதபத்மம் அது நிதமுமே துதிக்க - மிகவும் சிவந்த இதழ்களையுடைய தாமரை மலர்களை யொத்த நினது பாதங்களைத் தினந்தோறும் துதிக்குமாறு, அரிய தமிழ் தான் அளித்த மயில்வீரா - அருமையான தமிழ்ப் பாஷையை உலகத்தோருக்குத் தந்தருளிய மயில்வீரா !, அதிசயம் அநேகம் உற்ற - அதிசயங்கள் பல சம்பவித்த, பழநிமலைமீது உதித்த அழக - பழநிமலைமீது எழுந்தருளியிருக்கும் நிகரற்ற அழகுடையோனே !, திருவேரகத்தின் முருகோனே - திருவேரகம் என்னும் திவ்யஸ்தலத்தில் ஞான வாசனை வீசும் ஞான சொரூபியாய் விளங்குபவனே !, சரணகமல ஆலயத்தை - உயிர்கள் (இறுதியில்) தங்குமிடமாகிய நினது இருபாதத் தாமரைகளை, அரை நிமிஷ நேரமட்டில் - அரை நிமிஷ நேரமாவது, தவமுறை தியானம் வைக்க அறியாத - தவமார்க்கத்துக்குரிய முறைப்படி தியானஞ் செய்ய வகையறியாத, சட கசட மூட மட்டி - (ஞானத்தை மறைக்கும்) இந்தத் தேகத்தினால் மாயையிற் சிக்கினவனும் அடிவண்டலையொத்த கடைப்பட்டவனும் அறிவில்லாதவனும் (கீழான எண்ணங்களையுடைய) மட்டியும், பவவினையிலே சனித்த தமியன் - மீண்டும் மீண்டும் பிறந்து இறக்கும்படி செய்யும் கருவினையினால் இவ்வுலகில் பிறந்துள்ள ஏழையேன், மிடியால் மயக்கம் உறவேனோ - வறுமையினால் மனமயங்கித் தியங்கும்படி விட்டுச் சும்மாவிருத்தல் நீதியோ ?, கருணைபுரியாது இருப்பது என குறை - நீ அடியேன்மீது கருணை காட்டாமலிருப்பதற்கு அடியேனிடத்துள்ள எந்தக் குற்றத்தைப் பெரிதாக மதித்தாய், இவேளை செப்பு - அதை இச்சமயம் அடியேனுக்குக் கூறியருளவேண்டும் ; கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே-திருக்கைலாய மலையில் எழுந்தருளியிருக்கும் நாதரான சிவபெருமானிடத்தே உதித்த என்றும் இளமை மாறாத குமாரசுவா

மியே!, கடக புயமீது - கடகங்களை யணிந்த வலிமைபொருந்திய (பன்னிரு) தோள்களின்மீது, இரத்நமணி அணி பொன்மாலை செச்சை கமழு மணம் ஆர் கடப்பம் அணிவோனே - இரத்தினங்க ளிழைக்கப் பெற்ற அழகிய பொன்னு லாகிய மாலையையும் வெட்சிமலர் மாலையையும் அருமையான வாசனை வீசும் கடம்பமலர் மாலையையும் அணிந்துகொள்பவனே!, தருணம் இது ஐயா - ஐய னே! அடியேனைக் காப்பதற்கு இதுவே தருணம், மிகுத்த கனம் அது உறு நீள் சவுக்ய(ம்)சகலசெல்வ யோக(ம்) மிக்க பெருவாழ்வு - மிகுந்த மாட்சிமை பொருந் திய நீண்ட சுகவாழ்க்கை சகல செல்வங்களையும் பெற்று அனுபவித்தல் இவை கூடிய மேலான வாழ்வையும், தகைமை சிவஞான(ம்)முத்தி பரகதியும் - (பெறத் தக்க பேறு இதுவே யெனும்படி) பெருமைவாய்ந்த சிவஞானத்தையும் பரலோ கத்தில் முத்தி வீட்டையும், நீ கொடுத்து உதவிபுரியவேணும் - நீ அடியேனுக்குக் கொடுத்து உதவிபுரியவேண்டும்.

(வி - ரை) இன்சுவை மிக்க தமிழின்மீது நினக்குள்ள பிரியத்தினால் அப் பாஷையை அகத்தியமா முனிவருக்குப் போதித்து அவர் மூலமாக அதை உலகத்தோருக்கு அளித்து, செந்தாமரை மலர்களை யொத்த நினது பாதங்களை மானிடர் தினந்தோறும் துதித்துப் பவசாகரத்தைக் கடந்து ஈடேறுவதற்கு ஓர் மார்க்கத்தை உண்டு பண்ணிய கருணைக் கடலே! நாதத்துக்கெல்லாம் விந்து வான ஓங்காரத்தின் அழகிய சொரூபமான மயிலின்மீது அமர்ந்துள்ள நீ உபதே சித்த அப்பாஷையின் பெருமையையும் இனிமையையும் அளவிடவல்லவர் யார்? முத்தமிழால் நின்னை வைதாரையும் வாழவைத்து அப்பாஷையின்மீது உனக் குள்ள ஆசையை விளக்கிக் காட்டின தமிழ் நாயகனே! நினது வல்லமையையும் பேரருளையும் காட்டத்தக்க பல அதிசயங்கள் நிகழ்ந்த பழநிமலையின்மீது நிகரற்ற அழகுவாய்ந்தவனாய் எழுந்தருளி யிருப்பவனே! திருப்பாற்கடலைக் கடைந்து அமுதத்தைப் பகிர்ந்த காலத்தில் அசுரர்களை மயக்குவதற்கு நிகரற்ற அழகு வாய்ந்த மோகினியின் உருவத்தை எடுத்துக்கொண்ட திருமாலின் சகோதரியான நாராயணியின் புதல்வனாகவும், பொன்னம்பலத்தில் திருநடனம் புரிந்த காலத்தில் தாம் தமது காதிலணிந்த குழை நழுவிக் கீழே விழுந்ததை மீண்டும் எடுத்துக் காதிலணிந்ததை அக் கனகசபையில் சூழ்ந்து நின்ற தேவர்களும் முனி வர்களும் கவனிக்கமுடியாதபடி தமது பேரழகினால் அவர்கள் மனத்தைக் கவர்ந்த சிவபெருமானுக்குப் புதல்வனாகவும் அவதரித்து, இரத்தினங்களிடையே வைத்த மாணிக்கத்தைப் போல் தேவர்களுக்கு நாயகனாய் விளங்கி, ஞானசொரூபியாய் ஞானவாசனை வீசுபவனே! நினது அழகுக்குப் பொருத்தமான அழகுடைய தலம் இதுவே யென்று திரு ஏர் அகம் (அழகிய வீடு) என்னும் சுவாமிமலையில் எழுந்தருளி, சர்வேசுவரனாகிய சிவபெருமானுக்குக் குருவாக நின்று பிரணவத் தின் பொருளை உபதேசித்து ஞானவாசனை உலகமெங்கும் வீசும்படி செய்யும் முருகோனே! அடியேனுக்கு உறுதியான புகலிடம் நினது பாதார விந்தங்களே.

அவைகளைத் தவமுறைப்படி தியானித்தால் சிறந்த பலன் பெறலாம். தவமுறைப்படி தியானிப்பதற்கு, மனம் தூய்மையுடையதாய் உருகி நீர்மையுடையதாய் சஞ்சலமற்று ஒருமைப்பட் டிருக்கவேண்டும். அடியேன் மனமோ கல்லைப் போன்ற கடினமுடையது. "இணியான மனோ சிலைமீதுனதாள் அணியாரவிந்த மரும்புமதோ?" மிகவும் கடினமான மனமாகிய பாறையின்மீது நினது பாதாரவிந்தங்களாகிய தாமரைமலர்கள் புஷ்பிக்குமோ? தாமரை புஷ்பிக்க நீர்மை அவசியமாயிற்றே. அடியேன் மனம் கரைந்து நீர்மையடையும் இயல்புடையதன்றே. சுத்தமான நீரில்தான் தாமரை படர்ந்து புஷ்பிக்கும். அடியேன் மனமோ காமம் குரோதம் முதலியவைகளினால் உண்டான கெட்ட எண்ணங்களினால் அழுக்கடைந்திருக்கிறது. நீர் அமைதியாய் நிற்கும் நீர் நிலைகளில்தாம் தாமரை படர்ந்து மலரும். அலைமோதும் சமுத்திரத்தில் தாமரை படர்ந்து மலருமோ? அடியேன் மனம் அலைகளைப்போன்ற ஆசாபாசங்களினால் ஓயாமல் சஞ்சலமடைகின்றதே! தூய்மையும் நீர்மையும் அமைதியுமில்லாத அடியேன் மனத்தில் நினது பாதாரவிந்தங்கள் எவ்வாறு வந்து அமரும்? அடியேன், இச்சரீரமானது ஞானத்தை மறைப்பதனால், இந்த ஜடவுலக வாழ்க்கையைச் சதமென எண்ணி, அதிலேயே உழன்று திரிகிறேன்; யாவர்க்கும் கீழ்ப்பட்டவன் அடியேன்; அறிவு என்பது சிறிதளவும் வாய்க்கப்பெற்றிலேன்; கீழான எண்ணங்களேயன்றி மேலான எண்ணங்கள் ஒருபோதும் மனத்தில் உதிக்கப்பெறாத மட்டி; மீண்டும் மீண்டும் ஜனன மரண சாகரத்தில் மடுக்கும் கருவினையை அகற்றிக் கொள்ள வகையறியாமல், மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து நொந்து மெலிந்தேன்; நினது அருளாகிய அழியாத செல்வத்தைப்பெறாத ஏழையேன், நினது அருளைப்பெறவேண்டுமென்ற எண்ணமும் அடியேன் மனத்தில் உதிப்பதற்கும் வழியில்லாமல், தினந்தோறும் உடலென்ற கும்பிக்கு உணவென்ற இரைதேடுவதிலேயே ஓயாமல் இரவும்பகலும் உழலும்படி செய்யும் கொடிய வறுமையினால் மயங்கித் தியங்கும்படி அடியேனைக் கைவிட்டு விடுதல் நினது கருணைக்குத் தகுதியோ? வெள்ளமாகப் பாய்ந்து ஓடும் நினது கருணைப்பிரவாகம் அடியேன்பால் மட்டும் வாராதவண்ணம் நீ அணைபோட்டுத் தடுக்கும்படி அடியேன் என்ன அவ்வளவு பெரிய குற்றம் செய்தேன்? "இல்லே யெனுமா யையி லிட்டனை நீ, பொல்லே னறியாமை பொறுத்திலையே", பாழ்வாழ் வெனுமிப் படமோ யையிலே வீழ்வா யெனவென்னை விதித்தனையே!", "வாட்டியெனைச் சூழ்ந்தவினை ஆசையமு வாசையனல், மூட்டியுலைக் காய்ந்தமமூ வாமெனவி காசமொடு, மாட்டியெனைப் பாய்ந்துகட வோடடமொ டாடிவிடு - விஞ்சையாலே" அடியேன் ஜடவுலக வாழ்க்கையில் உழன்று தியங்குகிறேன். வினைப்பயனை நீக்கவல்லவர் நின்னையன்றி வேறு யாருளர்? வினைப்பயன் அடியேனை அதன் இச்சைப்படி ஆட்டுவிப்பது நீ அறியாததோ? ஜீவர்களது அஞ்ஞானத்தை யகற்றி அவர்களை

இரக்ஷிப்பதற்காகச் சர்வேசுவரன் அளித்த செல்வப்புதல்வனன்றோ நீ? பகைவர்களை முறியடித்துத் தூரத்தும் வல்லமையுடையவன் நீ என்பதை அறிவிப்பதற்காக வெட்சிமலர் மாலையை அணிந்துகொண்டிருக்கிறாயே? அடியேனுடைய பகைவர்களாகிய அஞ்ஞானத்தையும், இருவினையையும், கருவினையையும், வறுமையையும் அடித்துத்தூரத்த நினக்கு வல்லமையில்லையோ? அடியேன் இவ்வுலக வாழ்க்கையினால் உண்டாகும் துயரத்தினால் மிகவும் வருந்துகிறேன். இனி என்னால் இத்துயரத்தைப் பொறுக்கமுடியாது; இத்தருணம் வந்து நோயற்ற நீண்ட ஆயுளையும், சகலசெல்வங்களும் ஏராளமாக நிறைந்த பெருவாழ்வையும், எல்லாவற்றினும் மேலான சிவஞானத்தையும், இறுதியில் முத்திவீட்டையும் கொடுத்து உதவி புரியவேண்டும். (கரு)

தனதன தனன தனதன தந்தன
தனதன தனன தனதன தந்தன
தனதன தனன தனதன தந்தன—தந்தன.

விடமும்வ டிவேலு மதனச ரங்களும்
வடுவுநி கரான மகரநெ டுங்குழை
விரவியு டன்மீளும் விழிகளு மென்புழு கதுதோயும்

ம்ருகமத படீர பரிமள குங்கும
மணியுமி ளநீரும் வடகுல குன்றமும்
வெருவுவ னபார புளகத னங்களும் வெகுகாம

நடனப தநூபு ரமுமுகில் கெஞ்சிட
மலர்சொ ருகுகேச பரமுமி லங்கிய
நளினம லர்சோதி மதிமுக விம்பமும் அனநேராம்

நடையுந ளிர்மாதர் நிலவுதொ ழுந்தனு
முழுதும பிராம அரிவைய கிண்கிணை
னகையுமு ளமாதர் கலவியி லைந்துரு கிடலாமோ?

வடிவுடை யமானு மிகல்கர னுந்திக
ழெழுவகை மராம ரமுநிக ரொன்றுமில்
வலியதி றல்வாலி யுரமுநெ டுங்கட லவையேழும்

மறநிரு தர்சேனை முழுதுமி லங்கைமன்
வகையிர விபோலு மணியும லங்க்ருத
மணிமவு லியான வொருபது மிஞ்சிரு பதுதோளும்

அடைவலமுமாள விடுசர அம்புடை
தசரத குமார ரகுகுல புங்கவன்
அருள்புனை முராரி மருகவி ளங்கிய மயிலேறி
அடையலர் கள்மாள வொருநிமி டந்தனி
லுலகைவ லமாக நொடியினில் வந்துயர்
அழகிய சுவாமி மலையில மர்ந்தருள் பெருமாளே! (௧௪)

(ப - ரை) வடிவுடைய மானும் - அழகிய வடிவத்தையுடைய மானின் உருவத்துடன் எதிர்ப்பட்ட மாரீசனும், இகல் கரனும் - போரில் எதிர்த்த கரன் என்னும் இராக்ஷதனும், திகழ் எழு வகை மராமரமும் - செழித்து வளர்ந்து விளங்கிய ஏழு மராமரங்களும், நிகர் ஒன்றும் இல் வலிய திறல் வாலி உரமும் - இணையெனக் கூறுவதற்கு எவருமில்லை யெனும்படி அவ்வளவு வலிமையும் திறமையும் உடைய வாலியின் தேகமும், நெடும் கடல் அலை ஏழும் - நீண்ட சமுத்திரங்கள் ஏழும், மற நிருதர் சேனை முழுதும் - கொடிய இராக்ஷதர் சேனை முழுவதும், இலங்கை மன் அணியும் - இலங்கை மன்னவனாகிய இராவணன் அணிந்துகொண்டிருந்த, வகை இரவிபோலும் அலங்க்ருத மணி மவுலியான ஒருபதும் - பலவித நிறமுள்ள சூரியர்களைப்போல் ஒளிவீசும் இரத்தினங்களிழைக்கப்பெற்ற மகுடங்களினால் அலங்கரிக்கப்பெற்ற பத்துத் தலைகளும், விஞ்சு இருபது தோளும் - மிகவும் வலிமை பொருந்திய இருபது தோள்களும், அடை வலமும் - அவனைச்சேர்ந்த சேனையும், மாள - அழியுமாறு, விடு(ம்) சர அம்பு உடை(ய) - விடும் அம்புகளையுடைய, தசரதகுமார ரகுகுல புங்கவன் - ரகுவின் வம்சத்தில் தசரத மகா சக்கரவர்த்தியின் புதல்வனாய் - ஸ்ரீ ராமனாய் - அவதரித்த பெரியோனும், அருள் புனை முராரி - கருணையுடையவரும் நரகாசுரன் தம்பியான முரன் என்னும் அசுரனை அழித்தருளியவருமான மகாவிஷ்ணுவின், மருக - சகோதரியின் புத்திரனே!, விளங்கிய மயிலேறி அடையலர்கள் மாள - மிகவும் அழகாய் விளங்கும் மயிலின்மீது ஏறிச்சென்று பகைவர்கள் அழியும்படி செய்து, ஒரு நிமிடந்தனில் உலகை வலமாக வந்து - (சிவபெருமான் கூறியருளியபடி விநாயகக்கடவுளுடன் பந்தயமாக) உலகத்தைச்சுற்றி ஒரு நொடிப்பொழுதில் வலம்வந்து, உயர் அழகிய சுவாமிமலையில் அமர்ந்தருள் பெருமாளே - சிறப்பும் அழகும் வாய்ந்த சுவாமிமலையின்மீது கோயில்கொண்ட பெருமாளே!, விடமும் வடிவேலு(ம்) மதன சரங்களும் வடுவு(ம்) நிகரான - விஷத்தையும் வடித்துக் கூர்மையாகவுள்ள வேலாயுதத்தையும் மன்மதனுடைய பாணங்களையும் மீனையும் ஒத்திருப்பவைகளும், மகரநெடும் குழை விரவி உடன் மீளும் விழிகளும் - (காதில் அணிந்திருக்கும்) மீனையொத்த நீண்ட குழைகளின் புறமாக ஓடி அவைகளுடன் ஒரு க்ஷணநேரம் பொருந்தி அடுத்த க்ஷணத்தில் அவைகளைவிட்டு மீண்டு ஓடும் சஞ்சலசுபாவமுடையவைகளுமான கண்களும், மென் புழுகு அதி

தோயும் ம்ருக மத படீர பரிமள குங்குமம் அணியும் - மென்மையான வாசனை வீசும் புனுகு கலந்த கஸ்தூரி, சந்தனம், வாசனைமிகுந்த குங்குமப்பூ இவைகளைப் பூசப்பெற்றவைகளும், இளநீரும் வட குல குன்றமும் - வெருவுவன (வெருட்டு வன) - இளநீர்க்காய்களையும் வடக்குத்திசையிலுள்ள குலபர்வதமான மகா மேரு மலையையும் பயப்படச் செய்பவைகளுமான, பார புளக தனங்களும் - மிகவும் பருத்துள்ள தனபாரங்களும், வெகுகாம நடனபத நூபுரமும் - மிகுந்த காமத்தை மூட்டும்படி அழகாய் நடக்கும் பாதங்களில் அணிந்துள்ள சிலம்புகளும், முகில் கெஞ்சிட மலர் சொருகு கேசபாரமும் - மேகமும் வணங்கத்தக்க அளவு கருத்திருப்பதும் புஷ்பங்கள் சூட்டப்பெற்றிருப்பதுமான அடர்ந்து வளர்ந்து நீண்டுள்ள கூந்தலும், இலங்கிய நளின மலர் சோதி மதி விம்பமுகமும் - அழகாய் விளங்கும் தாமரைமலரை யொத்ததும் ஒளிவீசும் பூரண சந்திரனது உருவத்தை யுடையதுமான முகமும், அன(ம்) கோம் நடையு(ம்) - அன்ன பக்ஷியின் நடையையொத்த அழகிய நடையும் (உடையவர்களும்), நளிர் மாதர் நிலவு தொழும் - (நல்ல நாயகன் கிடைக்கவேண்டுமென்று) குளிர்ந்த கிரணங்களையுடையதும் அழகு வாய்ந்ததுமான சந்திரனை வணங்குபவர்களும், முழுதும் அபிராம தனு - முற்றிலும் பேரழகு வாய்ந்த தேகத்தை யுடையவர்களும், அரி வய கிண்கிணென நகையும் உள - வலிமையுடையதும் வெற்றியைத் தருவதுமான கிண்கிண் என ஒலிக்கும் சிரிப்பும் உள்ள, மாதர் கலவியில் நைந்து உருகிடலாமோ - பெண்களது புணர்ச்சியில் மிகுந்த ஆசையுற்று மனம் நொந்து அடியேன் வருந்தும்படி விட்டிருப்பது நீதியோ?

(வி - ரை) ஸ்ரீராமனது பாணத்தின் சிறப்பு இப்பாடலில் கூறப்பட்டிருக்கிறது. ஒருவரையழிக்க ஸ்ரீராமன் இருமுறை அம்புதொடுத்ததில்லை. ஸ்ரீராமனைச் சீதாதேவியின் பக்கத்திலிருந்து அகற்றவேண்டுமென்ற நோக்கத்துடன் இராவணனால் அனுப்பப்பட்ட மாரீசன் அழகிய மானின் உருவத்துடன் தோன்ற, சீதாதேவி அம்மானைத் தனக்கு அவசியம் பிடித்துத் தரவேண்டுமென வேண்டினாள். ஸ்ரீராமர் அம்மானைப் பின்தொடர்ந்து சென்று ஓர் அம்பினால் அம்மானைக் கொன்றார். ஸ்ரீராமர் தமது வில் திறமையைச் சுக்கிரீவனுக்குக் காட்டுமாறு ஏழு மரா மரங்களை ஒரே பாணத்தினால் துளைத்தார்; நிகரற்ற வல்லமையுள்ள வாலியை ஒரே பாணத்தினால் அழித்தார்; இலங்கைக்குச்செல்ல வழி விடாமலிருந்த சமுத்திர ராஜனமீது ஓர் அம்பை விடுத்து அவன் தம்மைச் சரண் புகும்படி செய்தருளினார்; இராவணனது பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் ஒரே அம்பினால் அழித்தருளினார். அவ்வளவு பராக்கிரமம் பொருந்திய திருமாலின் மருகனாகவும், மயிலின் மீதேறிச்சென்று அசுரர்களை அழித்தருளியவனாகவும், ஒரு நொடிப்பொழுதில் உலகப் பிரதக்ஷணம் செய்தவனாகவும் இருக்கும் முருகோனே! சுவாமிமலையில் ஞானதேசிகனாய் வந்து அமர்ந்துள்ள நீ அடியேனுக்குமட்டும் ஞானத்தைப் போதிக்காமல், அடியேன் பெண்கள்மீது ஆசைகொண்டு அவர்கள் கலவியை விரும்பிச் சதாகாலமும் மனமுருகி வாடும்படி விட்டுச் சும்மா விருப்பது உனது கருணைக்கு அழகோ? (கச)

1. திருவேரகம் எனும் சுவாமிமலை

தனதன தானதந்த தனதன தானதந்த
தனதன தானதந்த—தனதான.

நிலவினி லேயிருந்து வகைமல ரேதெரிந்து
நிறைகுழல் மீதணிந்து குழைதாவும்

நிகரறு வேலினங்கள் வரிதர வாசகங்கள்
நினைவற வேமொழிந்து மதனூலின்

கலபம னேகரங்க ளளவற வேபுரிந்து
கனியித ழேயருந்தி யநுராக

கலவியி லேமுயங்கி வனிதையர் பால்மயங்கு
கபடனை யாளவுன்ற னருள்கூராய் !

உலகமொ ரேழுமண்ட ருலகமு மீசர்தங்கு
முயர்கயி லாயமும்பொன் வரைதானும்

உயிரொடு பூதமைந்து மொருமுத லாகிநின்ற
உமையரு ளால்வளர்ந்த குமரேசா ;

குலைபடு சூரனங்க மழிபட வேலெறிந்த
குமரக டோரவெங்கண் மயில்வாழ்வே

கொடுமுடி யாய்வளர்ந்து புயனிலை போலுயர்ந்த
குருமலை மீதமர்ந்த பெருமாளே ! (கூ)

(ப - ரை) உலகம் ஓர் எழும் அண்டர் உலகமும் ஈசர் தங்கும் உயர் கயிலாயமும் - ஏழு உலகங்களாகவும் வானவர்களது பொன்னுலகமாகவும் சர்வேசுவரரான சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் உன்னதமான கைலாசமலையாகவும், பொன் வரைதானும் - இமயமலையாகவும், உயிரொடு பூதமைந்தும் - உலகத்தில் காணப்படும் ஜீவராசிகள் எல்லாவற்றின் உயிராகவும் அவைகளின் சரீரங்கள் எப்பதார்த்தங்களினால் செய்யப்பட்டிருக்கின்றனவோ அப்பதார்த்தங்களான பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்துபூதங்களாகவும், ஒருமுதலாகிநின்ற - அவைகள் எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாகவும் இருக்கும், உமை அருளால் வளர்ந்த குமரேசா - உமாதேவியாரது முலைப்பாலை யுண்டு வளர்ந்த குமாரசுவாமியே !, குலைபடு சூரன் அங்கம் அழிபட வேல் எறிந்த - வலிமைகுன்றிய சூரபதுமனது தேகமானது அழியுமாறு வேலாயுதத்தை அவன்மீது வீசிய, குமர - குமாரசுவாமியே !, கடோர - சூரன் முதலியோர்களைக் கடுமையாகத் தண்டித்தவனே!

வெங்கண் மயில் வாழ்வே - எதற்கும் அஞ்சாத வீரத்தன்மை பொருந்திய மயிலின்மீது எழுந்தருளி அதைச் சிறப்புறச் செய்பவனே!, கொடுமுடியாய் வளர்ந்து - உன்னதமான சிகரத்துடன் வளர்ந்து, புயல் நிலைபோல் உயர்ந்த - மேகங்கள் தங்குமிடம்போல் உயர்ந்துள்ள, குருமலை மீது அமர்ந்த பெருமாளே - சுவாமி மலையின்மீது எழுந்தருளியிருக்கும் பெரியோனே !, நிலவினிலே இருந்து - சந்திரனது குளிர்ந்த கிரணங்கள் அடியேன்மீது படும்படி ஒருபுறத்தில் அமர்ந்து, வகைமலரே தெரிந்து - பலவகையான மலர்களை அவைகளின் சிறந்த வாசனை காரணமாகப் பொறுக்கி யெடுத்து, நிறை குழல்மீது அணிந்து - (மாதர்களின்) அடர்ந்து வளர்ந்துள்ள கூந்தலில் சூட்டி, குழை தாவும் - காதுகளில் அணிந்துள்ள குழைகள்வரையில் பாய்ந்து செல்லும், நிகர் அறு வேல் இனங்கள் வரிதர - ஒப்பற்றவைகளும் வேலையொத்தவைகளுமான கண்கள் விசாலமாகவும் அழகாகவுமிருக்க, (அதைக்கண்டு) நினைவு அறவே - தன் நல்லுணர்ச்சியை இழந்து, வாசகங்கள் மொழிந்து - ஏதேதோ வார்த்தையாடி, மதநூலின் கலப மனோகரங்கள் - மன்மதலீலைக்குரிய சாஸ்திரத்தில் கூறியுள்ள ஆநந்தத்தை விளைவிக்கும் ஊடல் முதலிய விளையாடல்களை, அளவறவே புரிந்து - அளவில்லாமல் விளையாடி, கனி இதழே அருந்தி - பழத்தையொத்த இனிய உதடுகளினின்றும் அதராமுதத்தைப் பானஞ் செய்து, அநுராக கலவியிலே முயங்கி - காமமிகுதியினால் மாதர்களைப் புணர்ந்து தழுவி, வனிதையர் பால் மயங்கும் - பெண்கள்மீது ஆசை கொண்டு மதிமயங்கும், கபடனை - வஞ்சகனை, ஆள - தடுத்தாட்கொள்ள, உன் தன் அருள் கூராய் - நீ கருணைபுரியவேண்டும் !

(வி - ரை) " இமகிரி வந்த பொன்பாவை பச்சை வஞ்சி அகிலதலம் பெறும்பூவை சத்தியம்பை, இளமுலையின் செழும்பால் குடித்திலங்கு மியல் நிமிர்த்திடுவோனே !" என்று கூறியுள்ளபடி உலகங்களை யெல்லாம் படைத்து, தாமே அவைகளாகி நின்ற சிவசக்தியாம் உமாதேவியாரது திருமுலைப் பாலுண்டு வளர்ந்த குமரேசா ! அப் பார்வதி தேவியார் அடியேனுக்கும் அன்னையாதலின், உனக்கு அடியேன் சகோதரனல்லவா ? மாயை, வஞ்சகம், காமம், குரோதம் முதலிய துர்க்குணங்களெல்லாவற்றையும் தம்பிமார் முதலான சுற்றத்தாராக அடைந்து வலிமையுற்றிருந்த அகங்காரத்தின் சொரூபமான சூரபதுமனது வலிமையைக் குலைப்பதற்காக முதலில் அவன் சுற்றத்தவர்களையெல்லாம் அழித்து அவனைத் தனியனாக்கி, அப்போதும் அவன் தருமத்தைத் தழுவி நடக்க இணங்காத காரணத்தினால், அவனைக் கடுமையாகத் தண்டித்த குமாரக் கடவுளே ! மிகுந்த தீரம் பொருந்திய மயில்வாகனத்தின்மீது சதாகாலமும் அடியார்களைக் காப்பதற்காக வீற்றிருப்பவனே ! காமத்தின் கையிற்சிக்கிப் பெண்கள்மீது ஆசை கொண்டு உழல்வதைப் பார்த்தும் அடியேனைத் தடுத்தாட்கொள்ளாமல் சும்மா விருத்தல் கருணைக்கடலாகிய உனக்குத் தகுதியோ ? (கூ)

தனன தானதத்த தனன தானதத்த
தனன தானதத்த—தனதான

மகர கேதனத்த னுருவி லாநெடுத்து
மதுர நாணியிட்டு நெறிசேர்வார்
மலைய வேவளைத்த சிலையி னூடெடாளித்த
வலிய சாயகக்கண் மடமாதர்
இகழ வாசமுற்ற தலையெ லாம்வெளுத்து
இளமை போயொளித்து விடுமாறு
இடைவி டாதெடுத்த பிறவி வேரறுத்து
னினிய தாளளிப்ப தொருநாளே ?
அகில மேழுமெட்டு வரையின் மீதுமுட்ட
அதிர வேநடத்து மயில்வீரா !
அசுரர் சேனைகெட்டு முறிய வானவர்க்கு
அடைய வாழ்வளிக்கு மிளையோனே !
மிகநி லாவெறித்த அமுத வேணிநிற்க
விழைசு வாமிவெற்பி லுறைவோனே !
விரைய ஞானவித்தை யருள்செய் தாதைகற்க
வினவ வோதுவித்த பெருமாளே ! (கசு)

(ப - ரை) அகிலம் ஏழும் எட்டுவரையின்மீது முட்ட - ஏழு உலகங்களும் எட்டுக் குலபர்வதங்கள்மீதும் வந்து மோதும் வண்ணம், அதிரவே மயில் நடத்தும் வீரா - எங்கும் மிகுந்த அதிர்ச்சியுண்டாகும்படி மயிலை (அதிவேகமாக) நடக்கச் செய்யும் வீரனே !, அசுரர் சேனை கெட்டு முறிய - அசுரர்களுடைய சேனை குலைந்து தோற்று ஓடும்படி செய்து, வானவர்க்கு அடைய வாழ்வு அளிக்கும் இளையோனே - தேவர்களுக்கு எல்லாவிதச் செல்வங்களையும் அளித்தவனும் என்றும் இளமைமாறாத விருப்பவனுமான குமாரா !, மிக நிலா எறித்த அமுத வேணி நிற்க விழை சுவாமிவெற்பில் உறைவோனே - மிகுந்த ஒளிவீசும் அமுத கலைகளையுடையவனுமிருந்த சந்திரனைச் சடாமுடியில் தரித்து அவனைக் காப்பாற்றி யருளிய சிவபெருமான் உனக்குச் சிஷ்யனாக நிற்கவேண்டுமென ஆசை கொண்ட ஸ்தலமான சுவாமிமலையில் எழுந்தருளியிருப்பவனே !, அருள் செய் தாதை - நின்னை உலகத்துக்கு (ஞான குருவாகத்) தந்தருளிய தந்தையாகிய சிவபெருமான், கற்க வினவ - தான் கற்றுக்கொள்ள (இச்சைப்பட்டதாகக் கூறி) அது யாதென கேட்டருளியபோது, ஞான வித்தை விரைய ஓதுவித்த - ஞான

மாகிய கல்வியைச் சீக்கிரத்தில் கற்பித்த, பெருமாளே - பெரியோனே ! மகர கேதனத்தன் உருவிலான் - மீனக் கொடியாகவுடையவனும் உருவ மில்லாதவனு மான மன்மதன், நெறி சேர்வார் - தான் இருக்கு மிடத்துக்கு வரும் வழியில் வந்து சேர்பவர்கள், மலையவே - புத்தி தடுமாறும்படி, மதுர நாணி யிட்டு - இனி மையாகப் பாடும் வண்டுகளாலாகிய நாண்கயிற்றைப் பூட்டி யிழுத்து, வளைத்த சிலையினூடு ஒளித்த - (அம்புகளை விடுவதற்காக) வளைக்கும் வில்லுக்குள் மறைந் திருக்கும், வலிய சாயக கண் மடமாதர் - வலிமைபொருந்திய அம்புகளையொத்த கண்களையுடைய அழகிய மாதர்கள், இகழ - நிந்திக்கும் வண்ணம், வாசமுற்ற தலையெலாம் வெளுத்து - ஒரு காலத்தில் (வாசனைத் தைலங்கள் இடப்பெற்று) வாசனை வீசிய தலைமயிரெல்லாம் நரைத்து, இளமைபோய் ஒளித்து விடுமாறு - இளமைப் பருவம் நீங்கிப் போனவிடம் தெரியாதபடி ஒளித்துக்கொள்ளும்படி, இடை விடாது எடுத்த பிறவி வேர் அறுத்து - ஓயாமல் இப்புவியில் பிறப்பதன் காரணமான வேரான வினைப்பயனை யொழித்து, உன் இனிய தாள் அளிப்பது ஒருநாளே - உனது இனிமையான பாதாரவிந்தங்களை அடியேனுக்குத் தந்தருளப் போகிற நாளும் உண்டோ ?

(வி - ரை) தீனரக்ஷகனாகிய முருகப்பெருமான் தம்மைச் சரணடைந் தோர்கள் துயரம் பொறுக்காமல் தம்மைக் கூவி யழைத்த நேரத்தில் அவர்க ளிருக்கு மிடத்தை அடைந்து அவர்களைக் காக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் உக்கிரமான வேகமுடையதும் மிகுந்த வலிமை பொருந்தியதுமான மயிலின்மீது எப்போதும் வீற்றிருக்கிறார். சுவாமிகள் மயிலை வருணிக்கும் இடங்களிலெல் லாம் அதன் வலிமையையும் வேகத்தையுமே பெரிதும் புகழ்ந்திருக்கிறார். “ பக் கரை விசித்ரமணி பொற்கலணை யிட்டநடை பக்ஷியெனும் உக்ர துரகமும் ” என்றும்,

“ அண்ட கோளகை வெடிபட இடிபட
எண்டி சாமுக மடமட நடமிடும்
அந்த மோகர மயிலினி லியலுடன் வரவேணும் ” என்றும்,

இருதிசை - இருநாலும்
படியு நெடியன எழுபுண ரியுமுது
கிரி கிரியும் வருகென வருதகு
பவுரி வருமொரு மரகத துரகத மிசையேறி ” என்றும்,

“ (பாரதம்) எழுதிய பவளக் குன்று தாதையை யன்றுசூழ
வலம்வரு மளவிற் சண்ட மாருத
விசையினும் விசையுற் றெண்டி சாமுக
மகிதல மடையக் கண்டு மாசுண முண்டலாவு
மரகத கலபச் செய்புள் வாகன(ம்) என்றும்,

பல திருப்புகழ்ப் பாடல்களில் மயிலை வருணித்திருப்பதைக் காண்க. அவ்வளவு வலிமையும் வேகமும் உள்ள மயிலை வாகனமாக எப்போதும் உபயோகிக்க வல்லவன், அன்று உலகங்களிலெல்லாம் சென்று எதிர்ப்பட்டவைகளை யெல்லாம் அழித்த ஆட்டுக்கடாவை நாரதமாமுனிவர் வேண்டுகோளின்படி வாகனமாக்கிக் கொண்ட வீரனை யன்றி வேறு யாருளர்? அகங்காரத்தை அடக்கி யாண்டு சன்மார்க்கத்திற் செலுத்தி நன்மை விளைவிக்கும்படி செய்யக்கூடியது ஞானம் ஒன்றேயல்லவா ?

அமுதத்தைப் பொழியும் பூரண கலைகளும் ஒருநாளும் குறைவடையாமல் பிரகாசித்துக்கொண்டிருந்த சந்திரன் தன் மாமனுரான தக்ஷனுல் சாபமளிக்கப் பெற்று, பதினைந்து கலைகளை யிழந்து ஒரு கலையே மிஞ்சி அதுவும் மறுநாள் தொலைந்து போகும்படியிருந்த சமயத்தில், ஞானமில்லாததனுல் இந்திரனிடமும் பிரமதேவரிடமும் சென்று தன்னைக் காத்தருளும்படி வேண்டினுன். அவர்கள் தம்மால் அவ்வாறு செய்ய முடியாதென்று சொல்லி, சர்வேசுவரரான சிவ பெருமானது பாதமலர்களில் அடைக்கலம் புகும்படி புத்திகூறி அனுப்பினுர்கள். அப்போது சந்திரன் வேறு கதியில்லாமல் தீனனுய் எம்பெருமானிடம் சென்று அவரது பாதங்களில் வீழ்ந்து தன்னைக் காத்தருளும்படி வேண்டினுன். உடனே கருணைக் கடலாகிய முக்கணெந்தை அவனுக்கு அபயமளித்ததுமன்றி, தமது சரணங்களைத் தவிர புகலிடம் வேறில்லை யென்ற திடமான நம்பிக்கையோடு தம்மைச் சரண்புகுவோர் யாவரேனும், எவ்வளவு கொடிய பாபத்தைச் செய்தவரேனும், அவரது பகைவர்கள் எவ்வளவு மகிமையுடையவர்களா யிருப்பினும், அவ்வாறு சரண்புகுந்தவர்களுக்கு அபயமளித்து அவர்களைக் காப்பது சத்தியமென உலகத்தோர் யாவரும் தமது திருவுருவத்தைக் காணும்போதெல்லாம் உணர வேண்டுமென்னும் கருத்துடன், சந்திரனது எஞ்சிய ஒரு கலையைத் தமது சடாமுடியின் முன்பக்கத்தில் நிலையாக வைத்துக்கொண் டருளினுர். அப்படிப்பட்ட கருணைக்கடலான கடவுள் ஞானசொரூபியான குமாரசுவாமியைத் தமக்குப் பிரணவத்தின் பொருளை உபதேசிக்கும்படிசெய்து மகிழவேண்டுமென ஆசைகொண்டு, அப்பொருளை எவரும் குருவாக நின்று சிஷ்யனுக்கு உரைக்கலாமே யல்லாது வேறுவிதமாக எடுத்துரைத்தல் தகாதாகையினுல், தமது செல்வப் புதல்வனைக் குருவாக அமர்த்தித் தாம் சிஷ்யனுக நின்று கேட்டார். பதி பசு பாசம் இவைகளின் தன்மையும் இவைகளுக்குள் ஏற்பட்டுள்ள சம்பந்தமுமே பிரணவத்தில் அடங்கிய பொருளென்பதை சுவாமிகள் ஒரு பாடலில், "பதி பசு பாசத்தீர்வினை முதிய புராரிக்கோதிய குருவே !" என்று எம்பெருமானை விளித்துக் குறிப்பாகக் காட்டியருளி யிருக்கிறுர். ஜீவாத்மாவானது தனது கால்களிலிட்ட தளைகளான மும்மலங்களை யகற்றிக்கொண்டு பரமனை அடையும் மார்க்கத்தை அறிவதே ஞானம் என்று கந்தபுராணம் தக்ஷகாண்டத்தில் கூறியிருப்பதையும் காண்க.

மன்மதனுக்கு அடிமையாவதனல்தான், ஜீவன் பஞ்சமகா பாதகங்களையும் செய்யத் தயாராக நின்று, வினைகளை அளவும் வரம்பும் இல்லாமல் செய்து மீண்டும் மீண்டும் பிறந்திறந்து நொந்து மெலிவதற்கு வழிதேடிக் கொள்ளுகிறது. அப்படி மீண்டும் மீண்டும் பிறவியில் புகுத்தும் கருவினையை அழிக்கவல்லவர் கடவுள் ஒருவர்தாம் என்பதைச் சுவாமிகள் பல விடங்களிற் கூறியுள்ளார்.

" தவியாமல் பிறப்பையு நாடி
அதுவே மையறத் துனையோதி
தலமீதில் பிழைத் திடவேநி — னருள்தாராய் !"

என்று கூறியிருப்பதைக் காண்க. (௧௬)

தனனதான தனதனந்த தனனதான தனதனந்த
தனனதான தனதனந்த—தனதான.

முறுகுகாள விடமயின்ற இருகண்வேலி னுளமயங்கி
முளரிவேரி முகையடர்ந்த — முலைமீதே

முழுகுகாதல் தனைமறந்து பரமஞான வொளிசிறந்து
முகமொராறு மிகவிரும்பி — அயராதே

அறுகுதாளி நறையவிழ்ந்த குவளைவாச மலர்கரந்தை
அடையவாரி மிசைபொழிந்து — னடிபேணி

அவசமாகி யுருகுதொண்ட ருடனதாகி விளையுமன்பி
னடிமையாகு முறைமையொன்றை — அருள்வாயே !

தறுகண்வீரர் தலையரிந்து பொருதசூர னுடல்பிளந்து
தமரவேலை சுவறவென்ற — வடிவேலா !

தாளமூர வுமைமடந்தை முலையிலார அமுதமுண்டு
தரணியேழும் வலம்வருந்திண் — மயில்வீரா !

மறுவிலாத தினைவிளைந்த புனம்விடாம லிதணிருந்து
வலியகாவல் புனையணங்கின் — மணவாளா !

மருவுஞாழ லணிசெருந்தி யடவிசூத வனநெருங்கி
வளர்சுவாமி மலையமர்ந்த — பெருமாளே ! (௧௭)

(பு - ரை) தறுகண் வீரர் தலை அரிந்து - எதற்கும் அஞ்சாத தீரர்களான சூரபதுமனைச்சேர்ந்த சிங்கமுகாசுரன் முதலிய வீரர்களுடைய தலைகளைவெட்டி,

பொருத சூரன் உடல்பிளந்து - எதிர்த்துப் போர்செய்த சூரபதுமனது தேகத்தை இரு கூறுகளாகப் பிளந்தும், தமர வேலை சுவற - மிகுந்த ஒலி உண்டாகுமாறு கோஷிக்கும் கடலிலுள்ள நீர் முற்றிலும் வறண்டு போகும்படி செய்தும், வென்ற வடிவேலா - வெற்றியடைந்த வடித்துக் கூர்மையாகவுள்ள வேலாயுதத்தையுடையவனே! தரள மூரல் உமை மடந்தை முலையில் ஆர அமுதமுண்டு - முத்துக்களையொத்த பற்களையுடைய உமாதேவியாரது தனபாரங்களிலிருந்து பெருகிய அருமையான அமுதத்தையுண்டு, (வலிமைபெற்று), தரணி எழும் வலம்வரும் திண் மயில் வீரா - எழு உலகங்களையும் (நொடிப்பொழுதில்) வலமாகச் சுற்றிவந்த வலிமை பொருந்தியவனும் மயிலை வாகனமாக உடையவனுமான வீரனே!, மறு இலாத தினை விளைந்த புனம் விடாமல் இதண் இருந்து - குற்றமற்ற தினைப்பயிர் விளைந்துநின்ற புனத்தைவிட்டு அகலாமல் அங்கேயே பரண்மீது இருந்துகொண்டு, வலிய காவல் புனை அணங்கின் மணவாளா - கடுமையாகக் காக்கும் தொழிலை மேற்கொண்ட பெண்ணான வள்ளிநாயகியை மணந்துகொண்டவனே!, மருவு ஞாழல் அணி செருந்தி யடவி சூத வன(ம்) நெருங்கி வளர் - அடர்ந்து வளரும் கோங்கு மரங்களும் அழகிய செருந்தி மரமும் வளர்ந்துள்ள காட்டுக்கும் மாமரங்கள் நிறைந்த வனத்துக்கும் அருகில் உயர்ந்து வளர்ந்துள்ள, சுவாமிமலை அமர்ந்த பெருமாளே - சுவாமிமலையில் எழுந்தருளியிருக்கும் பெருமாளே!, முறுகு காளவிடம் அயின்ற இருகண் வேலின் - முதிர்ந்த காளகூட விஷத்தை யுண்டாற்போல் கறுத்திருப்பவைகளும் வேலை யொத்தவைகளுமான இரண்டு கண்களைக்கண்டு, உள மயங்கி - மனம் மயக்கமடையப்பெற்று, முளரி வேரி முகை அடர்ந்த முலைமீதே - தாமரையின் தேன்பொருந்திய மொட்டுகளைப்போல் உள்ள தனங்களின்மீது, முழுது காதல் தனை மறந்து - (சதா காலமும்) படிந்து அவைகளை யனுபவிப்பதிலேயே மூழ்கியிருக்க வேண்டுமென்ற ஆசையை யொழித்து, பரம ஞான வொளி சிறந்து - பரம்பொருளை அடைவதற்குரிய ஞானமானது அடியேன் மனத்தில் சிறப்பாய்ப் பிரகாசிக்கப் பெற்று, முகம் ஒரு ஆறு(ம்) மிக விரும்பி - நினது ஆறு திருமுக மலர்கள்மீதும் மிகுந்த ஆசை யுடையவனாகி, அறுகு தாளி நறை அவிழ்ந்த குவளை வாசமலர் காந்தை - அறுகு என்னும் புல் தாளியென்னும் ஒருகொடி(யின் மலர்) தேன் பெருகப்பெற்று வாசனை பொருந்தியுள்ள குவளை மலர்கள், காந்தை என்னும் பூண்டு, (இவைகளை), அடைய வாரி - எல்லாம் ஏராளமாய் வாரி, அயராதே - சோர்வடையாமல், உன் அடி மிசை பொழிந்து பேணி - நினது பாதாரவிந்தங்களின்மீது சொரிந்து அருச்சித்து வணங்கி, அவசமாகி உருகு தொண்டர் உடனதாகி - தம்மை மறந்து நினது அன்பின் வசமாகி மனமுருகும் மெய்யடியார்களுடன்கூடி, விளையும் அன்பின் - (அப்படி அவர்களுடன் கூடுவதனால்) உண்டாகும் அன்பினால், அடிமையாகு(ம்) முறைமை ஒன்றை அருள்வாயே - நினது அடிமையாகும் நன்னெறி ஒன்றை அடியேனுக்குக் காட்டியருள்வாயே!

(வி - ரை) சூரபதுமன் மாயையின் உதவியினால் பலவிதச் சொரூபங்களை எடுத்துக்கொண்டு எம்பெருமானுடன் போர் புரிந்து களைத்துக் கடைசியில் கடலுக்குட் சென்று ஒளிந்துகொண்டான். அகங்காரமானது பலவிதச் சொரூபங்களை எடுத்துக்கொண்டது. பிறகு சமுசாரமான கடலுக்குள் போய் ஒளித்துக் கொண்டது. ஆராய்ந்து பார்த்தால் இது உலக வியல்பு என்பது எளிதில் விளங்கும். ஒருவன் அகங்காரம் மிகுதியாக உடையவனாய், பல விஷயங்களில் அகங்காரத்தைச் செலுத்தி ஜயமடைய முயலுகிறான். அவன் தன் பலத்தைக் கொண்டு காரியத்தைச் சாதித்துக்கொள்ள முயலுவதனால், காரியம் கைகூடுவதில்லை அப்போது அகங்காரத்தின் உபயோகமின்மையை எடுத்துக்காட்டினால், அவன் முடிவாகத் தனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய கடமையை ஈசன் தனக்கு விதித்திருப்பதனால், தான் அகங்காரத்தை முற்றிலும் ஒழித்துவிட முடியாது என்று கூறுகிறான். அதுபோலவே சூரபதுமன் சமுத்திரத்தில் மறைந்துகொண்டான். முருகப்பெருமானது வேலாயுதம் சென்று சமுத்திரத்தின் நீர் முற்றிலும் வறண்டுபோகும்படி செய்தது. சமுத்திரம் ஒழிந்தது சூரபதுமன் தன்னை மறைத்துக்கொள்ள இடமில்லாமல் பல கிளைகளுடன் ஓங்கி வளர்ந்துள்ள மாமரமாகி நின்றான். உடனே ஞான சக்தியாம் வேலாயுதம் அவ்வுருவத்தைப் பிளந்து அழித்தது. பிறகு அவன் தன் சுய வுருவத்துடன் வந்தான். வேலாயுதம் அவனுருவத்தைப் பிளந்து இரு கூறுகளாகச் செய்தது. அவ்விரு கூறுகளும் சேவலும் மயிலுமாக மாற, அவை முதலில் எம்பெருமான்மேல் பாயக்கிளம்பி, எம்பெருமான் கடைக்கண் நோக்கத்தினால் ஞானம் அடைந்து நின்றன.

அப்படிப்பட்ட ஞானதேசிகனது தொண்டர் கூட்டத்தில் சேர்ந்தாலல்லது எம்பெருமானிடத்து அன்பு பாராட்டவும் மனமுருகவும் முடியாதென சுவாமிகள் இப்பாடலில் குறிப்பாய்த் தெரிவிக்கிறார். இதே கருத்தை கந்தரலங்காரத்தில்,

> "சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் தொண்டர் குழாம்
> சாரிற் கதியன்றி வேறிலை காண் !"

என்று வெளிப்படையாய்க் கூறியிருப்பதையும் காண்க. (கஎ)

தானன தனத்த தாத்த தானன தனத்த தாத்த
தானன தனத்த தாத்த—தனதான.

வார்குழல் விரித்துத் தூக்கி வேல்விழி சுழற்றிப் பார்த்து
வாவென நகைத்துத் தோட்டு குழையாட
வாசக முரைத்துச் சூத்ர பாவையெ னுறுப்பைக் காட்டி
வாசனை முலைக்கச் சாட்டி யழகாகச்

1. திருவேரகம் எனும் சுவாமிமலை சாக

சீர்கலை நெகிழ்த்துப் போர்த்து நூலிடை நெளித்துக் காட்டி
தீநெய நடித்துப் பாட்டு குயில்போலச்

சேருற அழைத்துப் பார்த்து சார்வுற மருத்திட் டாட்டி
சீர்பொருள் பறிப்பொய்க் கூத்தர் உறவாமோ ?

சூரர்கள் பதைக்கத் தேர்க்க ளானைக ளழித்துத் தாக்கி
சூர்கிரி கொளுத்திக் கூற்று ரிடும்வேலா !

தூமொழி நகைத்துக் கூற்றை மாளிட வுதைத்துக் கோத்த
தோலுடை யெனப்பர்க் கேற்றி திரிவோனே !

ஏரணி சடைச்சிப் பாற்சொ லாரணி சிறக்கப் போற்று
மேலெழி னிறத்துக் கூர்த்த மகவோனே!

ஏடணி குழைச்சித் தூர்த்த வாடகி குறத்திக் கேற்ற
ஏரக பொருப்பிற் பூத்த பெருமாளே ! (கஅ)

(ப - ரை) சூரர்கள் பதைக்க தேர்க்கள் (தேர்கள்) ஆனைகள் அழித்து சூரபதுமன் முதலான அசுரர்களது மனம் பதைக்கும்படி அவர்களுடைய தேர்ப் படைகளையும் யானைப்படைகளையும் அழித்து, சூர் கிரி தாக்கி கொளுத்தி - சூர னையும் கிரௌஞ்சத்தையும் தாக்கி அவை தீப்படுமாறு செய்து, கூற்று (றா)ர் இடும் வேலா - அவர்கள் எல்லோரையும் நமனுலகத்திற்சேர்த்த வேலாயுதத்தைக் கையிற் பிடித்தவனே, தூமொழி நகைத்து - தூய்மை பொருந்திய திருவாயில் நகைதோன்ற, கூற்றை மாளிட உதைத்து - இயமன் இறந்து விழும்படி அவனை உதைத்து, கோத்த தோல் உடை என் அப்பர்க்கு ஏற்றி - புலியையும் யானையை யும் அழித்து அவைகளின் தோல்களையுரித்துத் தரித்துக்கொண்ட எனது தந்தை யாகிய சிவபெருமானுக்கு (மெய்ப்பொருளை) உபதேசித்து, திரிவோனே - குரு சிஷ்ய நிலைமையில் மாறுதல் செய்தவனே !, ஏர் அணி சடைச்சி - மிகவும் அழ கிய பின்னலையுடையவரும், பால் சொல் ஆரணி - நன்மை பயக்கும் மொழி களைப் பேசுபவரும் வேதத்தின் ஞானபாகத்தில் அமர்ந்திருப்பவருமான பார் வதிதேவியார், சிறக்க போற்றும் - சிறப்பாய்ப்புகழும், ஏர் எழில் நிறத்து கூர்த்த மகவோனே - அழகும் காந்தியும் மிகுதியாக உடைய குமாரனே !, ஏடு அணி குழைச்சி - பூவின் இதழ்களைக் காதுகளில் குழைகளைப்போல் அணிந்தவளும், தூர்த்த ஆடகி - முற்றிலும் பொன்னையொத்த தேகத்தை யுடையவளும், குறத் திக்கு - குறவர் குலத்தில் வளர்ந்தவளுமான வள்ளிநாயகிக்கு, ஏற்ற - ஏற்றவ னும், ஏரக வெற்பில் பூத்த பெருமாளே - சுவாமிமலையில் வந்து தோன்றியவனு மான பெரியோனே !, வார் குழல் விரித்துத் தூக்கி - நீண்ட கூந்தலைப் பரந்து காணப்படுமாறு தூக்கிச்சொருகியும், வேல் விழி சுழற்றி பார்த்து - வேலை

யொத்த கண்களின் விழிகளைச்சுழற்றி (ஆடவர் மனம் கலங்கும்படி) பார்த்து, வா என நகைத்து - வா என்று அழைத்துச் சிரித்து, தோட்டு குழை ஆட வாசகம் உரைத்து - தோடுகளுடன் காதுகளில் அணிந்த குழைகள் ஆடும்படி (தலையை மெல்ல அசைத்துப்) பேசி, சூத்ர பாவை என உறுப்பைக் காட்டி - (பொம்மலாட்டத்தில்) சூத்திரக்கயிற்றினால் கட்டிய பொம்மையானது (தனது அங்கங்களெல்லாம் யாவர்க்கும் தெரியுமாறு அவைகளை ஒளிபெறக்) காட்டுவதுபோல் தங்கள் கைகால் முதலிய உறுப்புக்களை அழகுபெறக்காட்டி, வாசனை முலைக்கச்சு ஆட்டி - வாசனைத் திரவியங்கள் பூசப்பெற்றவைகளும் கச்சு அணிந்தவைகளுமான தனங்களை(ச் சற்று) அசைத்துக்காட்டி, அழகாக சீர் கலை நெகிழ்த்து போர்த்து - அலங்காரமான புடவையை அழகாகத் தளர்த்திப் போர்த்துக் கொண்டு, நூல் இடை நெளித்து காட்டி - நூலைப்போல் மெல்லிய இடையை வளையச்செய்து (அதன் நுண்மையைக்) காட்டியும், தீது எய (எய) நடித்து - (தங்கள்) கெட்ட எண்ணத்துக்குப் பொருத்தமாய்ப் பாசாங்குசெய்து, பாட்டு குயில்போல - இனிமையாகப் பாடும் குயிலின் குரலையொத்த குரலுடன், சேர் உற - (தங்கள்மீது கொள்ளும் ஆசையாகிய) விலங்கைக் காலில் பூட்டிக்கொள்ளும்படி, பார்த்து - (ஆடவர் மனங்கலங்கும்படி அவர்கள் மீது காதல்கொண்டவர்போல்) பார்த்து, சார்வு உற மருத்திட்டு ஆட்டி - அவர்கள் தங்களிடம் வந்து சேர்ந்தவுடன் அவர்களுக்கு மருந்திட்டுத் தங்களிச்சைப்படி அவர்கள் ஆடும்படி செய்து, சீர்பொருள் பறி - அவர்களது நல்ல நிலைமையையும் கைப்பொருளையும் பிடுங்கும், பொய்க்கூத்தர் - வஞ்சகமாக நடிக்கும் விலைமாதர்களது, உறவு ஆமோ - சிநேகம் கொள்ளத்தக்கதோ ? (தக்கதன்று என்றபடி.)

(வி - ரை) தாருகவனத்தில் கரும மார்க்கத்தில் நின்று வேள்வி முதலியவைகளைச் செய்துகொண்டு, ஈசன் அருள் இல்லாமலே கருமங்கள் பயனைத்தருமென்றும், அவைகளின் பயனைக் குறைக்கவாவது பெருக்கவாவது தடுக்கவாவது ஈசனுக்குச் சக்தியில்லையென்றும் வாதித்துவந்த முனிவர்களுக்குப் புத்தி புகட்டுமாறு, சிவபெருமான் தாம் அதிசுந்தர வடிவம் வாய்ந்த சந்நியாசியாக உருமாறி, திருமாலை மோகினி வேடம் தரித்துக்கொள்ளச்செய்து, அவரையும் அழைத்துக் கொண்டுபோய்த் தாருகவனத்தை யடைந்து, திருமாலை அவர்கள் கருமங்களியற்றிய ஆசிரமத்துக்கு அனுப்பிவிட்டு, தாம் அம்முனிவர்களது வீடுகள் இருந்த தெருவுக்குச் சென்றார். தெருவில் பிச்சை கேட்டு வரும் சந்நியாசியின் உருவத்தைக் கண்டு மோகித்த அம்முனிவர்களின் பெண்டிர்கள் அவரைத் தொடர்ந்து சென்றனர். சிவபெருமான் அவர்கள் பின் தொடர முனிவர்களின் ஆசிரமத்துக்குச்சென்றார். அதற்குள் அங்குசென்ற திருமாலின் மோகினி வடிவத்தைக் கண்ட முனிவர்கள் காமமுற்று, கருமங்கள் செய்வதைவிட்டுத் திருமாலைப் பின் தொடர்ந்தார்கள். இரண்டு கூட்டங்களும் ஆசிரமத்தினருகில் சந்தித்தன. அப்போதுதான் அம்முனிவர்களுக்கு எம்பெருமான் செய்த சூது புலப்பட்டது.

உடனே அவர்கள் மகாகோபங்கொண்டு எம்பெருமானை அழித்துவிடவேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு கொடிய ஓமம் செய்தார்கள். அந்த ஓமத்தீயிலிருந்து புலி, மான், மழு, சர்ப்பங்கள், பூதங்கள், வெண்டலை, உடுக்கை, முயலகன், ஓமாக்கினி இவைகள் ஒன்றன்பின் ஒன்றாய்க்கிளம்பி எம்பெருமானை அழிக்க அவர்மீது பாய்ந்தன. எம்பெருமான் புலியைக்கொன்று அதன் தோலை யுரித்து அரையிற் கட்டியும், மான், மழு, உடுக்கை இவைகளைத் தமது திருக்கரங்களில் தரித்துக்கொண்டும், சர்ப்பங்களை ஆபரணங்களாகப் பூண்டும், வெண்டலையைச் சடையில் தரித்துக்கொண்டும், பூதங்களைத் தமது படைகளாகச்செய்துகொண்டும், முயலகனைப்பாதத்தினால் கீழே தள்ளி யழுத்திக்கொண்டும், ஓமாக்கினியை ஒரு கையில் ஏந்திக்கொண்டும் நின்றார். அப்போதுதான் அம்முனிவர்கள் ஈசுவரன் சர்வசக்தி வாய்ந்தவரென்றும், அவர் அருளில்லாமல் எவ்விதக்கருமமும் பயன்தராதென்றும் அறிந்துகொண்டார்கள்.

கயாசுரன் என்பவன் பிரமதேவரை நோக்கி அருந்தவமியற்ற, அவர் அவன் முன்னே தோன்றி, “நீ எதைவேண்டித் தவம் செய்கிறாய்?” என்று கேட்டதற்கு, அவன், அழியாத பேராயுளும், ஆற்றலும், வெற்றியும் வேண்டுமெனக் கூற, அவர், “அவைகளை உனக்குத் தந்தோம்; ஆயினும், நீ சிவபெருமானை எதிர்ப்பாயாகில் அழிந்து போவாய்!” என்று சொல்லிப்போனார். அது முதல் அவ்வசுரன் வானுலகத்துக்குச் சென்று இந்திரனை வென்று துரத்தி, அமராவதி நகரத்தை அழித்து அஷ்டதிக்குப் பாலகர்களையும் துரத்தி, அசுரர்களையும் இராக்ஷதர்களையும்கூட அழித்தான். பிறகு அவன் பூமிக்குசசென்று மனிதர்களை வருத்தத்தொடங்கினான். தவமுனிவர்கள் அதுகண்டு காசியையடைந்து விசுவநாதருடைய ஆலயத்துக்குட்சென்று எம்பெருமானிடம் முறையிட்டனர். எம்பெருமான் சர்வசங்காரமூர்த்தி யுருவத்தை எடுத்துக்கொண்டு, மதிமயங்கித் தம்மையெதிர்த்த கயாசுரனை ஒரு காலினால் தள்ளி மற்றொரு காலை அவன் தலைமீது வைத்து அழுத்தி அவன் தோலினை யுரித்தார். அச்சமயத்தில் உலகிலுள்ள உயிர்களனைத்தும் எம்பெருமானது திருமேனியின் பேரொளியைக் கண்ணுற் பார்க்கச் சக்தியற்றவைகளாய்த் தியங்கின. அதுகண்ட எம்பெருமான் கருணையினால் அந்த யானைத்தோலினால் தமது திருமேனியைப் போர்த்தி மறைத்தார். (௧௮)

தனதன தனனா தனனா
தனந் தனத்தம்—தனதானா.

தெருவினில் நடவா மடவார்
திரண் டொறுக்கும் வசையாலே
தினகர னெனவே லையிலே
சிவந் துதிக்கும் மதியாலே

பொருசிலை வளையா இளையா
மதன் தொடுக்கும் கணையாலே
புளகித முலையா ளலையா
மனஞ் சலித்தும் விடலாமோ ?
ஒருமலை யிருகூ றெழவே
யுரம் புகுத்தும் வடிவேலா !
ஒளிவளர் திருவே ரகமே
யுகந்து நிற்கும் முருகோனே!
அருமறை தமிழ்நூ லடைவே
தெரிந் துரைக்கும் புலவோனே!
அரியரி பிரமா தியர்கால்
விலங் கவிழ்க்கும் பெருமாளே! (௧௬)

(ப - ரை) ஒருமலை - கிரௌஞ்சமென்னும் மலையானது, இருகூறு எழவே - இரண்டு கூறுகளாகப் பிளவுபடுமாறு, உரம் புகுத்தும் வடிவேலா - அதற்குள்ளே செல்லும்படி வடித்துக் கூர்மையாகவுள்ள வேலாயுதத்தைச் செலுத்தியவனே !, ஒளிவளர் திருவேரகம் உகந்து நிற்கும் - மிகுந்த ஒளிபெற்று விளங்கும் திருவேரகத்தின்மீது ஆசையுள்ளவனாய் அத்தலத்தில் எழுந்தருளியிருப்பவனே !, அருமறை தமிழ் நூல் அடைவே தெரிந்து உரைக்கும் புலவோனே - வடமொழியிலுள்ள அரிய வேதங்கள் தமிழ் நூல்கள் எல்லாவற்றையும் அறிந்து போதிக்கும் புலவனே !, அரி அரி பிரமாதியர் கால் விலங்கு - தேவேந்திரன் திருமால் பிரமதேவர் முதலிய தேவர்களுடைய கால்களில் பூட்டப்பெற்ற விலங்குகளை, அவிழ்க்கும் - கழற்றின, பெருமாளே - பெரியோனே !, தெருவினில் நடவா மடவார் திரண்டு ஒறுக்கும் வசையாலே - தெருவினில் உல்லாசமாக நடமாடும் பெண்கள் கூடித் திரண்டு கடிந்துபேசும் வசைச்சொற்களினாலும், தினகரன் என வேலையிலே சிவந்து உதிக்கும் மதியாலே - சூரியன் என்று சொல்லும்படி வெப்பமான கிரணங்களுடன் சமுத்திரத்திலிருந்து சிவந்த நிறத்துடன் உதிக்கும் சந்திரனாலும், பொருசிலை வளையா இளையா மதன் தொடுக்கும் கணையாலே - போருக்குரிய வில்லை வளைப்பவனும் எவராலும் தோல்வியடையாதவனுமான மன்மதன் விடும் அம்புகளினாலே, புளகித முலையாள் அலையா மனஞ் சலித்தும் விடலாமோ - விரகதாபத்தினால் புடைத்தெழும் தனபாரங்களையுடைய (நினது நாயகியான) அடியேன், கலக்கமுற்று மனச்சோர்வடைதல் தகுதியோ ?

(வி - ரை) தேவேந்திரன், திருமால், பிரமதேவர் முதலிய தேவர்களது காலிலிட்டிருந்த விலங்குகளைக் கழற்றி, அவர்களைச் சிறையினின்றும் மீட்ட

பெரியோனே! வடமொழியிலுள்ள வேதங்கள் தென்மொழியிலுள்ள ஞானநூல்கள் இவைகளையெல்லாம் உணர்ந்து போதிக்கும் ஞானகுருவே! மாயையின் சொரூபமான கிரௌஞ்ச மலையை இருகூறுகளாகப் பிளந்தெறிந்தவனே! அஞ்ஞானவிருள் நீங்கப்பெற்று ஞானவொளி வீசும் இதயத்தையே உறைவிடமாகக் கொண்டவனே! உன் மீது காதல்கொண்டுள்ள அடியேன் விரகதாபத்தினால் அயர்ந்து வாடுகிறேன். என் கால்களில் மும்மலங்களாகிய விலங்குகள் பூட்டப்பட் டிருக்கின்றன. ஆகையினால் நான் வந்து உன்னைச் சேர முடியவில்லை. அதை யறிந்திருந்தும் நீ அடியேனைக் கலங்கும்படி விட்டுச் சும்மாவிருத்தல் நீதியோ? அடியேன் இஷ்டப்பட்டா வந்து சேர்ந்தேன் மாயை நிறைந்த இவ்வுலக வாழ்க்கையில்? அதில் விழும்படி எனக்கு விதித்தது நீ யல்லவா? விலக்க வொண்ணாத தளைகளை அடியேன் கால்களிற் பூட்டி, பிறகு அத்தளைகளை நீக்கிக் கொள்ள முடியாமல் அடியேன் தியங்குவதைக்கண்டு அடியேனை வெறுத்தல் தகுதியோ? (கக)

தான தனதன தான தனதன
தான தனதன—தனதானா.

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா!

பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா!

காது மொருவிழி காக முற அருள்
மாய ன மருகோனே!

கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே!

ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா

ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே!

சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி லுறைவோனே!

சூர னுடலற வாறி சுவறிட
வேலை விடவல பெருமாளே! (உ0)

(ப - ரை) ஆதி அயனொடு தேவர் சுரர் உலகு ஆளும் வகையுற சிறை மீளா - உலக சிருஷ்டிகாலத்தில் முதலில் சிருஷ்டிக்கப்பட்ட பிரமதேவருடன் மற்றுமுள்ள தேவர்கள் அனைவரும் வானுலகத்தில் (மீண்டும்) அரசுபுரியும்படி அவர்கள் அடைபட்ட சிறையினின்றும் அவர்களை விடுவித்து, ஆடு மயிலினில் ஏறி அமரர்கள் சூழவர - நிர்த்தனஞ்செய்யும் மயிலின்மீது ஏறி அமர்ந்து தேவர்கள் புடைசூழ்ந்துவர, வரும் இளையோனே - (பவனி) வரும் சிறுவனே !, சூத(ம்) மிக வளர் சோலை மருவு - மாமரங்கள் மிகுதியாக வளரப்பெற்ற சோலை பொருந்திய, சுவாமிமலைதனில் உறைவோனே - சுவாமி மலையின்மீது அமர்ந்திருப்பவனே, சூரன் உடல் அற வாரி சுவறிட வேலை விட வல பெருமாளே - சூரபதுமனது உடல் அழியும்படியும் சமுத்திரமானது வறண்டு போகும்படியும், வேலை விட வல பெருமாளே - வேலாயுதத்தைப் பிரயோகிக்கும் பராக்கிரமம் பொருந்திய பெரியோனே !, பாதி மதி நதி போதும் அணி சடை நாதர் அருளிய குமரேசா - பிறைச் சந்திரனையும் கங்கா நதியையும் கொன்றை மலரையும் அணிந்துள்ள சடா முடியையுடைய சர்வேசுவரராகிய சிவபெருமான் (உலகத்தோரது அஞ்ஞானத்தை நீக்குவதற்காகத்) தந்தருளிய குமாரக் கடவுளே !, பாகு கனி மொழி மாது குறமகள் பாதம் வருடிய மணவாளா - பாகையும் பழத்தையும்போல் இன்சுவை பொருந்திய சொற்களை மொழியும் குறவர் மகளான வள்ளி நாயகியின் பாதங்களைப் பிடித்து வணங்கிய அவளது நாயகனே !, காதும் ஒரு விழி காகம் உற அருள் மாயன் அரிதிரு மருகோனே - ஒருகாதும் ஒரு கண்ணும் காகத்துக்கு உபயோகப்படும்படி அருள்செய்த மாயனாகிய ஹரியின் மருகனே !, காலன் எனை அணுகாமல் உனது இரு காலில் வழிபட அருள்வாயே - உனது இரு பாதார விந்தங்களை அடியேன் வணங்குமாறு அருள்புரிவாயே !

(வி - ரை) ஸ்ரீராமபிரான் ஒருவரைச் சங்காரஞ் செய்ய ஒருமுறையே கணை தொடுப்பதுபோலவே முருகப்பெருமானும் ஒருவரைச் சங்கரிக்க ஒரு முறைதான் வேலாயுதத்தைப் பிரயோகிப்பார். சூரபதுமன் பல வுருவங்களையெடுத்துக்கொண்டு எம்பெருமானுடன் போர்செய்து தோற்றுக் கடைசியில் அந்தகாரத்தின் சொரூபமாய் நின்றான். அப்போது முருகப்பெருமான் நிகரற்ற ஒளிவீசும் வேலாயுதத்தைப் பிரயோகிக்க, அது சென்று தன் ஒப்பற்ற ஒளியினால் அந்த மாயவிருளை ஒழித்து, சூரபதுமன் ஒளிந்துகொண்ட கடலை வறளச்செய்து, பிறகு அவன் எடுத்துக்கொண்ட மாமர உருவத்தை அழித்து, பிறகு அவன் சொந்த உருவத்துடன் தோன்றியபோது அவன் உடலைப் பிளந்து இரு கூறுகளாக்கி, பிறகு மீண்டுசென்று எம்பெருமானது கரத்தில் அமர்ந்தது.

ஜட மாயையிற் சிக்கித் தம்மை யறிந்து அடைய வழியறியாமல் தியங்கும் ஜீவனுக்குத் தம்மை அடையவேண்டுமென்ற இச்சைபட்டும் இருக்குமாயின், முருகப்பெருமான் தமது பெருமைக்குத் தகாத இழிவான காரியங்களையும் செய்யத் தயாராக விருக்கும் உண்மையை உலகத்தோருக்கு விளக்கும்பொருட்டே எம்

பெருமான் தமது மாமன் புத்திரியான சுந்தரவல்லியை அவள் தேவ சொரூபத்துடன் இருக்கையிலேயே மணம் புரியாமல், அவளை இரக்கமில்லாதவர்களும் இழிதொழிலை செய்பவர்களும் கொடியவர்களுமான வேடர்கள் குலத்தில் போய் வளரும்படி கட்டளையிட்டு, அத்தேவி ஜட மாயையினால் தனது பூர்வ நிலைமையை மறந்து, அவ்வேடர்கள் செலுத்தும் நெறியிலேயே நின்று ஒழுகி, எம்பெருமானை அடையும் மார்க்கத்தை நாடாது பொழுதை வீணே கழித்து வருகையில், தம்மை அடையவேண்டுமென்ற இச்சையை மட்டும் அவள் மனத்தி லூட்டி, தாம் வேற்றுருவம் தாங்கி அவள்முன் சென்று அவள்பாதங்களில் வீழ்ந்து பணிந்து தம்மை ஆதரித்துத் தமக்கு நாயகி யாகும்படி பன்முறை வேண்டி, அவள் அதற்கு இசையாததனால், ஞானசொரூபியான தமக்கு மூத்தவரும் புத்தி சொரூபியானவருமான விநாயகக் கடவுளை அவளுக்கு முன்னே மதயானையின் உருவத்துடன் வந்து தோன்றும்படி செய்து, உலகவாழ்க்கை நித்தியமன்று அழியத்தக்கது, உற்றார் பெற்றார் கூற்றுவன் வாயில் அகப்படாமல் தப்புவிக்க முடியாது என்னும் உண்மைகளை அவளுடைய புத்தியிற் புகட்டி, பிறகு அவள் வேறு கதியின்றி மனப்பூர்வமாய்த் தம்மைச் சரணடையச்செய்து, அவளுககுத் தமது திவ்ய சொரூபத்தைக் காட்டி அவளுடைய பூர்வ வரலாற்றை உரைத்து ஞானத்தைப் புகட்டி, பிறகும் தனது குடும்பத்தை விடமுடியாமல் வருந்திய அவளைத் திருடிச் சென்று பெருவாழ்வு அளித்தருளினார். வள்ளி நாயகியின்பால் எம்பெருமான் காட்டிய அன்பு அப்பெருமானது பாதமலர்களை அடைய விரும்பும் ஒவ்வொரு ஜீவனுக்கும் கிடைக்கும் என்பதே கந்தபுராணத்தின் சாரமாகும். புராணத்தை நம்பி இவ்வுண்மையை உணர்ந்து எம்பெருமானது அருளைப்பெற முயலுவதே ஜீவர்களுக்கு நன்மை பயக்கும் நெறி.

வனவாச ஆரம்பத்தில் சித்திரகூட பர்வதத்தில் ஏகாந்தமான ஓர் இடத்தில் ஸ்ரீராமபிரான் சீதையின் மடியின்மீது தலையை வைத்துப் படுத்துறங்கத் தொடங்கினார். அப்போது ஓர் இராக்ஷதன் ஒரு காக்கையின் வடிவெடுத்து சீதையை அலகினால் கொத்தத் தொடங்கினான். அதனால் ஏற்பட்ட துன்பம் பொறுக்க முடியாததாக இருந்தும் சீதாப்பிராட்டியானவள் தனது நாயகன் தூக்கத்துக்குப் பங்கம் நேரிடக் கூடாதென்று அத்துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு அசையாமல் உட்கார்ந்திருந்தாள். ஆனால் அவ்வரக்கன் கொத்தினதனால் சீதாப்பிராட்டியின் தேகத்திலிருந்து பெருகிய இரத்தம் ஸ்ரீராமர்மீது வீழ்ந்ததும், அவர் கண்விழித்து, சீதையின் துன்பத்தைக் கண்டு, அப்போதும் ஓயாமல் கொத்திக்கொண் டிருந்த காகத்தின்மீது மிகுந்த கோபங்கொண்டு, அருகேயிருந்த சிறு புல் ஒன்றை எடுத்துப் பிரமாஸ்திர மந்திரத்தை உச்சரித்து அப்புல்லைக் காக்கையின்மீது விட்டார். இராம பாணம் சீறிக்கொண்டு தன்னைக் கொல்ல வந்ததைக்கண்ட அக்காக்கை நடுநடுங்கி, பிரபஞ்ச முழுவதும் ஓடி, பல தேவர்களையும் தன்னைக் காக்கும்படி வேண்டி, அவர்கள் தம்மால் இயலாதென்

றும் ஸ்ரீராமபிரானையே சரண்புகுமாறும் கூறியதைக் கேட்டு, நிர்க்கதியாகத் திரும்பிச்சென்று ஸ்ரீராமரது பாதங்களிலேயே அடைக்கலம் புகுந்தது. அப்போது உலகமாதாவாகிய சீதாப்பிராட்டியும் தன் துன்பத்தை மறந்து அக்காக்கையைக் காத்தருளும்படி ஸ்ரீராமரை வேண்ட, அவர் அதன் கண்களிலொன்றையும் காதுகளி லொன்றையும் மட்டும் பறித்து உயிரைக் கொடுத்தருளினர். ஆகையினல் காக்கைகளுக்கு இப்போது ஒரு கண்ணும் ஒரு காதுமே உபயோகப் படுகின்றன.

உலகிலுள்ள அஞ்ஞானத்தை அகற்றவே ஞானதேசிகராய் அவதரித்த முருகப்பெருமான் தமது மலர்க்கரத்தில் ஏந்திய ஞானசக்தியாம் வேலாயுதத்தின் மகிமை இப்பாடலிற் குறிப்பாய்க் கூறப்பட்டிருக்கிறது. அகங்கார சொரூபியான சூரபதுமன் பலவுருவங்களை எடுத்துக்கொண்டு, முருகப்பெருமானுடன் போர்புரிய மாட்டாதவனுய், அஞ்ஞானத்தின் உருவமான அந்தகாரச் சொருபத்தை எடுத்துக்கொள்ள, அப்பெருமான் ஆயிரம் உதயகால சூரியர்களின் ஒளியை வீசும் வேலாயுதத்தைப் பிரயோகிக்க, அது அவ்வந்தகாரவிருளை யகற்றி, பிறகு அவன் எடுத்துக்கொண்ட உருவமான மாமரத்தைப் பிளந்து, பிறகு அவன் தன் சுயவுருவத்துடன் வந்தபோது அதையும் இருகூறுகளாக்கி, எம்பெருமானது கரத்துக்கு மீண்டு, ஓர் அஞ்ஞானத்தைச் சங்கரிப்பதற்கு அறுமுகப்பெருமான் தமது வேலாயுதத்தை ஒரு முறையேயன்றிப் பலமுறை பிரயோகிப்பதில்லை யென்னும் உண்மையை விளக்கிக் காட்டிற்று. (உ௦)

தனத்த னந்தன தனதன தனதன
தனதத னந்தன தனதன தனதன
தனத்த னந்தன தனதன தனதன—தனதான.

விரித்த பைங்குழ லொளிர்மல ரளிதன
தனத்த னந்தன தனதன வெனவொலி
விரிப்ப வண்கயல் விழியுறை குழையொடு மலைபாய

மிகுத்த வண்சிலை நுதல்மிசை திலதமொ
டசைத்த பொன்குழை யழகெழு முகவொளி
வெயிற்ப ரந்திட நகையிதழ் முருகலர் வரிபோத

தரித்த தந்திரி மறிபுய மிசைபல
பணிக்கி லங்கிய பரிமள குவடிணை
தனக்கொ ழுந்துகள் ததைபட கொடியிடை படுசேலை

தரித்து சுந்தர மெனஅடர் பரிபுர
பதச்சி லம்பொடு நடமிடு கணிகையர்
சழக்கர் விஞ்சையர் மயல்களின் முழுகுவ தொழியாதோ?

1. திருவேரகம் எனும் சுவாமிமலை ௫௭

உரித்த வெங்கய மறியொடு புலிகலை
தரித்த சங்கரர் மதிநதி சடையினர்
ஒருத்தி பங்கின ரவர்பணி குருபர முருகோனே !
உவட்டி வந்திடு மவுணரொ டெழுகடல்
குவட்டை யும்பொடி படசத முடிவுற
வுழைத்த இந்திரர் பிரமனு மகிழ்வுற விடும்வேலா !
வரித்த ரந்துள வணிதிரு மருவிய
வுரத்த பங்கயர் மரகத மழகிய
வணத்த ரம்பர முறவிடு கணையினர் மருகோனே !
வனத்தில் வந்தொரு பழையவ னெனவொரு
குறத்தி மென்புன மருவிய கிளிதனை
மயக்கி மந்திர குருமலை தனிலமர் பெருமாளே ! (௨௧)

(ப - ரை) உரித்த வெம் கய(ம்) மறியொடு புலிகலை தரித்த சங்கரர் - கொடிய யானையை உரித்த தோலைப் போர்த்துக்கொண்டு மானைக் கையிலேந்திப் புலியாடையை அரையில் அணிந்துகொண் டிருக்கும் சங்காரும், மதி நதி சடையினர் - சந்திரனையும் கங்காநதியையும் சடாமுடியில் தரித்தவரும், ஒருத்தி பங்கினர் அவர் - உமாதேவியாரைத் தமது வாமபாகத்தில் அமர்த்தியுள்ளவருமான சிவபெருமான், பணி குருபர - வணங்கும் பரகதிக்குரிய குருவே !, முருகோனே - ஞான வாசனை வீசுபவனே !, உவட்டி வந்திடும் அவுணரொடு எழுகடல் குவட்டையும் பொடிபட - திரண்டுவந்து எதிர்த்த அசுரர்களும் ஏழு சமுத்திரங்களும் சிகரமுடைய மலையும் தூளாகுமாறு, சதம் முடிவுற - நூறு அசுவமேத யாகங்கள் முடிவாகுமாறு, உழைத்த இந்திரர் - உழைத்த இந்திரனும், பிரமனும் - பிரமதேவனும், மகிழ்வுற விடும் வேலா - மகிழ்ச்சியடையுமாறு வேலாயுதத்தைப் பிரயோகித்தவனே !, வரி தரம் துளவு அணி - வண்டுகளின் கூட்டங்கள் மொய்க்கப்பெற்ற திருத்துழாய் மாலையை அணிந்தவரும், திரு மருவிய உரத்த பங்கய - இலக்குமியானவள் வீற்றிருக்கும் தாமரையைத் தமது தேகத்தில் (மார்பின் கண்) அணிந்திருப்பவரும், மரகதம் அழகிய வணத்தர் - அழகிய பச்சை மேனியை யுடையவரும், அம்பரம் உறவிடு கணையினர் - சமுத்திரத்தின் மீது அம்பு எய்தவருமான திருமாலின், மருகோனே - சகோதரியின் புத்திரனே !, வனத்தில் ஒரு பழையவன் என வந்து - காட்டில் ஒரு கிழவனது உருவத்துடன் வந்து, ஒரு குறத்தி மென்புன(ம்) மருவிய கிளிதனை - குறக்குலத்தில் வளர்ந்தவளும் அழகிய தினைப்புனத்தில் அமர்ந்தவளுமான கிளியையொத்த வள்ளிநாயகியை, மயக்கி - மிகவும் அழகிய வடிவத்தினால் மனமயங்கச்செய்து, மந்திர குருமலைதனில் - ஒப்பற்ற மந்திரமான பிரணவத்தின் பொருள் உபதே

சிக்கப்பட்ட சுவாமிமலையில், அமர் பெருமானே - எழுந்தருளிய பெரியோனே !, விரித்த பைங்குழல் ஒளிர் மலர் - பரவித் தொங்கும் மென்மையான கூந்தலில் பிரகாசிக்கும் மலர்களிலுள்ள, அளி - வண்டுகள், தன தனத்த னந்தன தனதன வென ஒலி விரிப்ப - தன தனத்த னந்தன தனதன வெனப் பாடி எங்கும் சப்தம் நிறையும்படி செய்யவும், வண் கயல்விழி யுறை குழையொடும் அலைபாய - நன்றாய் வளர்ந்த கயல்மீனையொத்த விழிகள் காதிலுள்ள குழைகள் வரையில் அலைபோல் பாய்ந்து மீண்டு சஞ்சலமடையவும், மிகுத்த வண்சிலை நுதல் மிசை திலதமொடு - அடர்ந்து வளர்ந்து வில்லைப்போல் வளைந்திருக்கும் புருவங்களை யுடைய நெற்றியின்மீது விளங்கும் திலகத்தோடு, அசைத்த பொன்குழை அழகு எழ - (போட்டியாய்) அணிந்த பொன்னாலாகிய குழைகள் அழகாய்த் தோன்றவும், முக வொளி வெயில் பரந்திட - முகத்தின் ஒளியானது எங்கும் பிரகாசம் வீசவும், நகை இதழ் முருகு அலர் வரிபோத - வாசனை பொருந்திய மலர்களையொத்த புன்னகை விளங்கும் உதடுகளிலிருந்து இன்னிசையான மொழிகள் உதிக்கவும், தரித்த தந்திரி மறி புயமிசை - உடுத்தியுள்ள அழகிய புடவையானது மடங்கும் இடமான தோள்களின்மீது (அணிந்த), பல பணிக்கு இலங்கிய பரிமள குவடிணை - பல ஆபரணங்களினால் விளங்கி வாசனை வீசும் இருமலைகளை யொத்த, தனக் கொழுந்துகள் - இளமைபொருந்திய தனங்கள், ததைபட-தோன்றாமல் மறையும்படி, கொடியிடை படு சேலை தரித்து - கொடியை யொத்த நுண்ணிய இடையிற் கட்டிய ஆடையைத் தரித்து, சுந்தரம் என அடர் பரிபுர பதச் சிலம்பொடு நடமிடு - அழகின் வடிவம் இவள் தானோ என்று மயங்கும்படி தண்டைகளையும் சிலம்புகளையும் அணிந்த பாதங்களோடு அழகாய் நடமாடும், கணிகையர் சழக்கர் விஞ்சையர் - விலைமாதர்களான கபடமும் மாயமும் பொருந்திய பெண்களின் (மீது கொள்ளும்), மயல்களின் முழுகுவது ஒழியாதோ - ஆசைகளில் மூழ்குவது நீங்காதோ ?

(வி - ரை) இக்ஷுவாகு மரபில் திலீபன் புத்திரனாய் உதித்த பகீரதன் தனது பாட்டன்மார்களும் சகரன் புத்திரர்களுமான அறுபதினாயிரம் பேர்கள் கபிலர் சாபத்தினால் நற்கதியடையாமல் பாதாளலோகத்தில் சாம்பராய்க் கிடந்ததை யுணர்ந்து, அவர்களைக் கரையேற்றுவதற்காக ஆகாய கங்கையை நோக்கித் தவஞ்செய்து, கங்கையைக் கீழேயிறங்க மனமிசையச் செய்து, கங்கை ஆகாயத்திலிருந்து நேராகப் பூமியின்மீது பாய்ந்தால் பூலோகத்துக்குப் பெருங்கெடுதி உண்டாகுமேயென்று பயந்து, சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்தான். அப்பெருமான் அருள்கூர்ந்து ஆகாயத்திலிருந்து வந்த கங்காநதியைத் தமது சடாமுடியில் அடக்கி அவனது வேண்டுகோளின்படி சிறிதளவு பூமியில் பாயும்படி செய்தருளினார். அந்தக் கங்காநதியின் புனித நீர்த்தத்தினால் பகீரதன் தனது மூதாதையர்களின் சாம்பரை நனைத்து அவர்களை நற்கதி அடையச் செய்தான்.

தானதந் தனதனன தனதனு தத்த தந்த—தன தானு.

நாசர்தங் கடையதனில் விரவிநான் மெத்த நொந்து தடுமாறி
ஞானமுங் கெடஅடைய வழுவியா ழத்த ழுந்தி மெலியாதே
மாசகந் தொழுமுனது புகழினோர் சொற்ப கர்ந்து சுகமேவி
மாமணங் கமழுமிரு கமலபா தத்தை நின்று பணிவேனோ?
வாசகம் புகலவொரு பரமர்தா மெச்சு கின்ற குருநாதா!
வாசவன் தருதிருவை யொருதெய்வா னைக்கி ரங்கு மணவாளா!
கீசகஞ் சுரர்தருவு மகிழுமா வத்தி சந்து புடைசூழுங்
கேசவன் பரவுகுரு மலையில்யோ கத்த மர்ந்த பெருமாளே!(௨௨)

(ப - ரை) வாசகம் புகல - பிரணவத்தின் பொருளை நீ கூறியபொழுது, ஒரு பரமர்தாம் மெச்சுகின்ற - ஒப்பற்ற பரம்பொருளாகிய சிவபெருமானே நின்னைப் புகழும்படியான (பெருமைவாய்ந்த), குருநாதா - (ஞானத்தைப் போதிக்க) குருவாக வந்த நாயகனே !, வாசவன் தரு(ம்) திரு (ஐ - சாரியை) - இந்திரன் பெற்ற மகளும் இலக்குமியை ஒத்தவளுமான, ஒரு தெய்வானைக்கு இரங்கு. மணவாளா - ஒப்பற்ற தெய்வானை யம்மையின்பால் மிகுந்த காதல்கொண்டு அத்தேவியாரை மணந்துகொண்டவனே !, கீசகம் சுரர் தருவும் மகிழும் மா அத்தி சந்து புடைசூழும் - மூங்கிலும் தேவதாரமும் மகிழமரமும் மாமரமும் அத்திமரமும் சந்தன மரமும் சுற்றிலும் வளர்ந்திருக்கப்பெற்றதும், கேசவன் பரவு - திருமாலினால் வலம்வரப் பெற்றதுமான, குருமலையில் யோகத்து அமர்ந்த பெருமாளே - சுவாமிமலையில் சிவயோக நிலைமையில் அமர்ந்திருக்கும் பெரியோனே !, நாசர் தம் கடையதனில் விரவி - அழிந்து போகும் இயல்புள்ள மானிடர்களுடைய வீடுகளின் கடைவாயிலிற்போய் நின்று, நான் மெத்த நொந்து தடுமாறி - நான் மிகவும் வருந்திக் கலக்கமுற்று, ஞானமும் கெட - மெய்யறிவும் அழியப்பெற்று, அடைய வழுவி ஆழத்து அழுந்தி - எல்லா விஷயங்களிலும் சரியான மார்க்கத்தைவிட்டுத் தவறி நடந்து பவசாகரத்தில் ஆழ்ந்து மூழ்கி, மெலியாதே - சோர்வடையாமல், மா சகம் தொழும் உனது புகழின் ஓர் சொல் பகர்ந்து - பெரிய உலகமானது வணங்கும் உன்னுடைய புகழை உணர்த்தும் வார்த்தை ஒன்றாயினும் வாயினால் உரைத்து, சுக(ம்) மேவி - சுகமடைந்து, மா மணம் கமழும் இரு கமல பாதத்தை - சிறந்த (ஞான) வாசனை வீசும் தாமரையை யொத்த நினது இருபாதங்களையும், நின்று பணிவேனோ - நிலையாக (எந்நாளும்) வணங்குவேனோ? (அப்படிப்பட்ட பாக்கியம் அடியேனுக்கும் வாய்க்குமோ?)

(வி - ரை) முருகப்பெருமான் தாம் ஞானகுருவாகக் கோயில் கொண்ட சுவாமிமலையில் ஞானத்துக்குரிய நிலைமையில் அமர்ந்திருக்கிறார். புலன்களை

யடக்கி, மௌனமுற்று, மனத்தை ஒருவழிப்படுத்தி, சர்வேசுவரரான சிவபெருமானது திருவுருவத்தைத் தியானிப்பதில் மனமானது சஞ்சலமற்று அமரும்படி செய்வதே சிவயோகமாகும். அச் சிவயோகமே சிவஞானத்தைத் தரத்தக்கது. ஆதலினால், முருகப்பெருமான் அந்தத் தலத்தில் சிவயோக நிலைமையில் அமர்ந்தருளினார் போலும்! அழிவில்லாதவராய் விளங்கும் எம்பெருமானது திருக்கோயிலுக்குச் சென்று அப்பெருமானது பாதமலர்களை அன்புடன் வணங்கி, இகபரசுகங்களை யெல்லாம் பெறுவதைத் தவிர்த்து, நிலையற்றதும், எந்த நிமிஷத்தில் அழியுமென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாததுமான தேகத்தையுடைய மானிடர்கள் வீட்டின் கடைவாயிலிற் போய், அவர்களுடைய தயவைப் பெறவேண்டுமென்ற ஆசையினால் வெகுகாலம் ஆங்கே நிலையாக நின்று, வினைப் பயன் ஒழிந்தாலன்றி வறுமையும் துயரமும் நீங்காவென்றும், வினைப்பயனை நீக்க வல்லவர் வேலேந்திய கடவுளாகிய முருகனேயென்றும் அறிவதான மெய்யறிவை யிழந்து, எல்லாக் காரியங்களிலும் சரியான நெறியினின்றும் தவறி நடந்து, மீண்டும் மீண்டும் பிறவியில் சேர்க்கும் நல்வினை தீவினை என்று இருவகைப்படும் பவ வினையை எல்லையில்லாமல் புரிந்து அலைந்து, அவ்வினையைப் புரியும் காலத்திலேயே ஏற்படும் துயரத்தை அனுபவித்துத் தேகமும் மனமும் சோர்வடையப் பெற்று வருந்தாமல், விசாலமான உலகத்திலுள்ளவர்க ளெல்லோரும் வணங்கும் தெய்வமாகிய அவரது புகழைக்கூறும் மொழி ஒன்றையேனும் மொழிந்து, அதனால் சுகமடைந்து, ஞானவாசனை எங்கும் பரவச்செய்யும் அவரது பாதமலர்களை என்றும் இடைவிடாமல் வணங்கும் பாக்கியம் அவரது அருளைப்பெறாத ஏழையேனுக்கும் வாய்க்குமோ? (௨௨)

தனதன தானன தனதன தானன
தனதன தானன—தனதான.

பரவரி தாகிய வரையென நீடிய
பணைமுலை மீதினி லுருவான

பணிகளு லாவிட இழையிடை சாய்தரு
பயில்களிகள் வாள்விழி யயிலாலே

இரவரி யோடியல் குழல்களி னுண்மலர்
நிரைதரு மூரலி னகைமீது

நிலவியல் சேர்முக மதியுயர் மாமயல்
நிலையெழ வேயலை வதுவாமோ?

அரவணை யார்குழை பரசிவ ஆரண
அரனிட பாகம துறைசோதி

அமையுமை டாகினி திரிபுரை நாரணி
அழகிய மாதருள் புதல்வோனே !

குரவணி பூஷண சரவண தேசிக
குககரு ணாநிதி அமரேசா !

குறமக ளானையின் மருவிய பூரண
குருகிரி மேவிய பெருமாளே ! (உ௯)

(ப - ரை) அரவு அணை ஆர் குழை - பாம்புடன் சேர்ந்து ஒளி வீசும் குழையையும் (காதில் அணிந்தவரும்), பரசிவ - முத்திவீட்டை யளிக்கும் மங்களமூர்த்தியும், ஆரண - வேதத்தின் நாயகரும், அரன் - பவவினையை அழிப்பவருமான சிவபெருமானுடைய, இடபாகமது உறை சோதி அம்மை - இடது பாகத்தில் அமர்ந்த ஜோதிசொரூபமான தாயும், உமை டாகினி திரிபுரை நாரணி - உமாதேவியும் காளியும் திரிபுரங்களைத்தகனஞ் செய்தவரும் நாராயணன் சகோதரியுமான, அழகிய மாது அருள் புதல்வோனே - அழகின் சொரூபமான பார்வதிதேவியார் தந்தருளிய குமாரனே !, குரவு அணி பூஷண - குரவ மரத்தின் மலர்களால் புனைந்த மாலையை திவ்ய ஆபரணமாக அணிந்து கொண்டவனே !, சரவண தேசிக - நாணல் பூத்த படுகையில் (தாமரை மலர் நிறைந்த வாவியில்) குழந்தையுருக் கொண்டு தோன்றிய ஞானகுருவே !, குக - மெய்யன்பரது இதயத்தில் வசிப்பவனே !, கருணாநிதி - கருணைக்கடலே !, அமரேசா - தேவர்கள் நாயகனே !, குறமகள் ஆனையின் மருவிய பூரண - வேடர் குலத்தில் வளர்ந்த வள்ளிநாயகியையும் ஐராவதத்தினால் வளர்க்கப் பெற்ற மின்னற்கொடியை யொத்த இடையுடைய தெய்வயானை யம்மையையும் கலந்துகொண்ட பரிபூரண ஞானவுருவே !, குருகிரி மேவிய பெருமாளே - சுவாமிமலையில் எழுந்தருளி யிருக்கும் பெரியோனே !, பரவ அரிதாகிய வரை என நீடிய - வருணிக்கமுடியாத மலை எனும்படி உயர்ந்துள்ள, பணைமுலை மீதினில் - பருத்த தனபாரங்களின்மீது, பணிகள் உலாவிட - (அணிந்த) ஆபரணங்கள் அசைவுறமாற, இழையிடை சாய்தரு - நூலையொத்த இடையை நெளிக்கும் இயல்புடையவர்களும், பயிலிகள் - (காமத்தீயை மூட்டத்தக்க) நடையுடை பாவனைகளுள்ளவர்களுமான பெண்களது, வாள் விழி அயிலாலே - கத்தியை யொத்த விழிகளின் கூர்மை(யான பார்வை)யினாலே, நிர வரியோடு இயல் குழல்களின் - அடர்த்தியாகவும் நீண்டும் வளர்ந்துள்ள கூந்தல்களின் (மீதும்), நிரை தரு மூரலின் நாண்மலர் நகைமீது - வரிசையாகவுள்ள பற்கள் அன்று பூத்த மலர்களைப்போல் அழகாகத் தோன்றுமாறு கொள்ளும் புன்னகைமீதும், நிலவு இடல்சேர் முகம அதில் - சந்திரனது ஒளியின் தன்மை பொருந்திய முகத்தின் மீதும், உயர் மா மயல் - மிகுந்த காதல், நிலை எழவே - (அகற்றமுடியா வண்

ணம்) உறுதியாக உண்டாக, அலைவது ஆமோ - (அதனால்) அடியேன் சஞ்சல முற்று வருந்துதல் நியாயமோ?

(வி - ரை) நறுமணமிக்க குரவமலரின்மீது முருகப்பெருமானுக்கு உள்ள பிரியம் அப்பெருமான் பழநியில் குரவமரத்தின் அடியில் வீற்றிருப்பதனாலேயே நன்கு விளங்கும். சரவணம் என்னும் பதத்துக்கு நாணல், தாமரை என்று இரண்டு விதமாகப் பொருள் கூறலாம். சிவபெருமானது நுதற் கண்களினின் றும் உதித்த ஆறு தீப்பொறிகளும் மிகுந்த ஜோதியுடன் உலகமெங்கும் பரவின. அவைகள் ஜீவராசிகளுக்கு எவ்விதத்திலும் தீங்கு செய்யவில்லையே யெனினும், அவைகளின் ஒளியைப் பார்க்க முடியாமலும் வெப்பத்தைத் தாங்க முடியாமலும் உயிர்த்தொகைகள் கலங்கித் தியங்கின. அவைகளைக் கண்டு வெருண்டு எம் பெருமான் சந்நிதியைவிட்டு அகன்று ஓடிய தேவர்கள் அவைகள் பிரபஞ்ச முழு வதும் பரவியதைக்கண்டு அஞ்சி மீண்டும் எம்பெருமான் திருமுன்னர் வந்து சேர்ந்து தங்களைக் காத்தருளும்படி எந்தையைப் பிரார்த்தித்தனர். அப்போது சிவபெருமான அக்கினிதேவரையும் வாயுதேவரையும் அப்பொறிகளைச் சுமந்து கொண்டு போய்க் கங்காநதியிற் சேர்க்கும்படி கட்டளையிட்டு, அக்கட்டளையை நிறைவேற்ற வேண்டிய பலத்தையும் அவர்களுக்கு அளித்தருளினர். அக் கட்டளையின்படி அத்தீப்பொறிகளை அக்கினியும் வாயுவும் சுமந்துகொண்டு போய்க் கங்காநதியிற் சேர்க்க, கங்கையானவள் அவைகளைத் தன் கரையோரத் தில் நாணல் அடர்ந்து தாமரை பூத்திருந்த வாவியிற் கொண்டுபோய்ச் சேர்த் தனள். அவ்வாவியை அடைந்ததும், அந்த ஆறு தீப்பொறிகளும் ஆறு முகங்களை யுடைய ஒரு குழந்தையாக மாறின.

> "அருவமு முருவுமாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
> பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
> கருணைகூர் முகங்களாறும் கரங்கள்பன் னிரண்டுங்கொண்டே
> யொருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலகமுய்ய!"

நாணலும் தாமரையும் மிகுதியாகவுள்ள சரவணப் பொய்கையில் குழந்தை யாக உதித்ததனால் ஷண்முகக்கடவுளுக்கு சரவணபவன், சரவணன் என்னும் திருநாமங்கள் உண்டாயின. அவ்வாறு உதித்த நாதன் உலகத்தில் பரவியிருந்த அஞ்ஞானத்தை யகற்றவந்த ஞானகுரு - ஞானதேசிகன் - வேலாயுதன் - மெய் யடியார்களது இதயமான - அன்பினால் தூய்மையடைந்த அகத்தில் களிப்புடன் வசிக்கிறாராதலால் எம்பெருமானுக்குக் குகன் என்னும் திருநாமம் வாய்த்தது. எம்பெருமான் களிப்புடன் வசிக்கும் இடங்கள் பின் வரும் பாடல்களினால் விளங்கும்.

> "கொத்து வார்குழ லடியினு மடியவர்
> சித்தை வாரிச நடுவினு நெறிபல
> கொண்ட வேதனன் முடியினு மருவிய குருநாதா!"—திருப்புகழ்.

“ அருணையு மிலஞ்சியுஞ் செந்தூர்தி ருப்பழநி
யடியர்மன பங்கயஞ் செங்கோடி டைக்கழியும்,
அனவரத நீலமலர் முத்தெரிசு னைப்புனலி,
லருவிகுதி பாய்தருசெ ருத்தணியென் வெற்புமெனும்
அலகிறி ருப்பதி யிற்பயில் கற்பகாடவி,
யனுப வனத்தனிருத்தன ரத்த வாடையன் ”—திருவகுப்பு.

எம்பெருமான் உதித்த வாவியில் நாணலும் தாமரை மலர்களும் மிகுதியாகவிருந்தன வென்பதைப் பின்வரும் பாடல்கள் விளக்குகின்றன.

“ வானவர்பொ ருட்டிமக வானருபொ ருட்டிமலர்
வாவியிலு தித்தமுக மாயக்கார னும் ”—திருவகுப்பு.

“ ஞாலமேத்தி வழிபடு மாறுபேர்க்கு மகவென
நாணல்பூந்த படுகையில் வருவோனே ! ”—திருப்புகழ்.

சிவபெருமான் தாம் வேறு தமது சக்தி வேறு அல்லவென்பதை நிரூபிப்பதற்காகவே தமது இடப்பாகத்தை உமாதேவியாருக்கு அளித்து அர்த்தநாரீசுவர மூர்த்தியாக விளங்குகிறாராகையால், திரிபுரத்தை அழித்தது சிவபெருமான் என்றும் சொல்லலாம், உமாதேவியார் என்றும் சொல்லலாம். ஆதலால் உமாதேவியாருக்குத் திரிபுரதகனி, திரிபுராந்தகி, திரிபுரை என்னும் திருநாமங்கள் உண்டாயின. (உ௧)

தானதன தந்தனத்த தானதன தந்தனத்த
தானதன தந்தனத்த—தனதான.

சேலுமயி லுந்தரித்த வாளையட ருங்கடைக்கண்
மாதரைவ சம்படைத்த வசமாகிச்

சீலமறை யும்பணத்தி லாசையிலெ யென்றவத்தை
காலமுமு டன்கிடக்கு மவர்போலே

காலுமயி ரும்பிடித்து மேவுசிலு கும்பிணக்கு
நாளுமிக நின்றலைத்த விதமாய

காமகல கம்பிணித்த தோதகமெ னுந்துவக்கி
லேயடிமை யுங்கலக்க முறலாமோ ?

ஏலமில வங்கவர்க்க நாகம்வகு ளம்படப்பை
பூகமரு தந்தழைத்த காவீரம்

யாவும்அலை கொண்டுகைத்த காவிரிபு றம்புசுற்றும்
ஏரகம் [illegible]ச்சை மயில்வீரா !

சோலைமடல் கொண்டுசக்ர மால்வரைய ரிந்தவஜ்ர
பாணியர்தொ ழுந்திருக்கை வடிவேலா!
சூர்முதிர்க்ர வுஞ்சவெற்பும் வேலைநில மும்பகைத்த
சூர னுட லுந்துணித்த பெருமாளே! (உச)

(ப - ரை) ஏலம் இலவங்க வர்க்க நாகம் - ஏலம், இலவங்கம் இவைகளின் இனத்தைச் சேர்ந்த நாகமரம், வகுளம் படப்பை பூக(ம்) மருதம் தழைத்த கரவீரம் - மகிழமரம் படப்பை பாக்குமரம் மருதமரம் தழைத்து வளரும் அலரிச் செடி, யாவும் அலைகொண்டு உதைத்த காவிரி - (ஆகிய) எல்லாவற்றையும் தனது அலைகளைக் கரைகளில் மோதுவதனால் செழிப்பாய் வளரச் செய்யும் காவிரி நதியானது, புறம்பு சுற்றும் ஏரகம் - பின்புறத்தே சூழ்ந்திருக்கும் சுவாமி மலையில், அமர்ந்த பச்சை மயில் வீரா - எழுந்தருளியிருக்கும் பச்சை மயிலை வாகனமாகக் கொண்டிருக்கும் வீரா!, சோலைமடல் கொண்டு - பூஞ்சோலைகளிலுள்ள (மென்மையான) பூவிதழ்களினால் செய்த புஷ்பக விமானத்தின்மேல் ஏறிச்சென்று, சக்ர மால் வரை அரிந்த வஜ்ரபாணியர் - சிறந்த சக்கரவாள மலையின் சிறகுகளை அறத்தெறிந்தவனும், வஜ்ரபாணியர் தொழும் - வஜ்ராயுதத்தை விசேஷ ஆயுதமாகக் கொண்டவனுமான தேவேந்திரனால் வணங்கப்படுபவரும், திருக் கை வடிவேலா - திருகையில் வடித்துக் கூர்மையாகவுள்ள வேலாயுதத்தைத் தரித்தவருமான பெருமானே!, சூர் முதிர் க்ரவுஞ்ச வெற்பும் - வெகுகாலமாக உலகத்தோருக்குத் துன்ப மிழைத்துவந்த கிரௌஞ்சம் என்னும் மலையையும், வேலை நிலமும் - சமுத்திரத்தின் நடுவேயிருந்த அவனது நகரத்தையும், சூரன் உடலும் - சூரபதுமனது (அகங்கார சொரூபமான) தேகத்தையும், துணித்த பெருமாளே - அழித்தருளிய பெரியோனே!, சேலும் அயிலும் தரித்த வாளை அடரும் கடைக்கண் - கயல்மீனையும் கைவேலாயுதத்தையும் ஆயுதமாகத் தரிக்கும் கத்தியையும் ஒத்திருப்பவைகளும் கடைமுனையினால் பார்க்கும் இயல்புடையவைகளுமான கண்களையுடைய, மாதரை வசம்படைத்து அவசமாகி - பெண்களைச் சொந்தமாக்கிக்கொண்டு அவர்களுக்கு ஆளாகிச் சுயேச்சையை இழந்து, சீல(ம்) மறையும் பணத்தில் ஆசையிலை என்று - நல்லொழுக்கம் நீங்கும்படி செய்யும் பணத்தில் தங்களுக்கு ஆசையேயில்லை என்று சொல்லிக்கொண்டே, அவத்தை காலமும் உடன் கிடக்கும் அவர்போலே - நித்திரைசெய்யுங் காலத்திலும் அப்பணத்தின் பக்கத்திலேயே படுத்துறங்குபவர்களின் செய்கையைப்போலவே, காலும் மயிரும் பிடித்து மேவு(ம்) சிலுகும் பிணக்கு - காலையும் தலைமயிரையும் பிடித்து ஆசையுடன் போடும் சண்டையாகிய ஊடல், நாளு(ம்) மிக - தினந்தோறும் அதிகரிக்க, நின்று அலைத்த விதமாய - இடைவிடாமல் சஞ்சலமுற்று வருந்துவதாகிய, காம கலகம் பிணித்த தோதகம் எனும் அவக்கிலே - காமவிகார மயக்கம் (என்னும் பாவியினால்) இறக்

அம்பலவாணன்

அல்லது

நாவாய்க்கைதி

மிக்க அருமை வாய்ந்த நாவல்

═══ உயர்ந்த நீதிகளைப் புகட்டுவது. ═══

(பி. எஸ். சுப்பிரமணியம், எம். ஏ., எழுதியது)

மேனாட்டுக் கதாசிரியர்களில் முதன்மைபெற்றவரான "விக்டர் ஹ்யூகோ" என்பவரியற்றிய "லெஸ் மிஸாபில்ஸ்" என்னும் அற்புதச் சரித்திரத்தை, நமது இந்தியப் பழக்க வழக்கங்களுக்கு ஒற்றுமைப்பட அமைத்து இயற்றிய இவ்வற்புத நவீனம், பண்டு பாண்டிய நாட்டில் அம்பலவாணனென்ற ஏழை, வயிற்றுக்கில்லாமல் வருந்தும் தன் சகோதரி குழந்தைகளுக்காக ஒரு சிறு பணியாரத்தைத் திருடி, நாவாய்க்கைதியாக விருக்கும்படி தண்டிக்கப்பட்டு, பத்தொன்பது வருஷ காலம் நினைக்க மனம் நடுங்கும் கொடுமைகளை யனுபவித்து ஜன சமூகத்தின் மேல் பழிதீர்க்க வேண்டுமென்ற நிச்சயத்துடன் கொடுந் தொழிலில் பிரவேசிக்குங்கால், பரமகுருவாய்த் தோன்றி அவனுக்குச் சன்மார்க்கத்தை உபதேசித்த ஒரு தம்பிரானது நற்குணத்தையும் நல்லொழுக்கத்தையுங் கண்டு தீயநெறியை விட்டு நன்னெறியைச் சார்ந்து தனது ஊக்கத்தினால் தனவந்தனாகி அரசனால நன்கு மதிக்கப் பட்டுப் பெருவாழ்வுற்றிருந்த நாளில், காவலாளர் மற்றொரு ஏழையைத் தாமென மருண்டு பிடித்துத் தண்டிக்க முயலுவதாகக் கேள்விப்பட்டு, தானறிந்தும் வாளாவிருப்பது தருமமன்றெனத் துணிந்து, வாழ்வின் மீதிருந்த ஆசையைத் துறந்து தான் இன்னானெனக் காவலாளரிடம் தெரிவித்து அவர்கள் தன்னைச் சிறைப்படுத்தியதும், தன் அபூர்வ மகிமையால் சிறையினின்றும் தப்பியோடி தனது துக்க வாழ்க்கையை முடிப்பதைக் கல்லினைய மனமும் கரையும்படி இனிய எளிய நடையில் எழுதப்பெற்றது.

ஒவ்வொரு பாகத்துக்கும் நான்கு அழகிய ஆப்டோன் படங்கள் உண்டு. இரண்டு பாகங்களும் விலை ரூ. 3.

விலாசம் :—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

ஸ்ரீமத்

பாகவத ஸாரம்

நமது இந்திய நாட்டில் பிரசித்தி பெற்றுள்ள பதினெட்டுப் புராணங்களில், ஸ்ரீமத் பாகவதம் மிகப் புண்ணியமானதும், யாவரும் கேட்டு ஆநந்திக்கத்தக்க விஷயங்கள் நிரம்பியதுமாகும். இதில், மற்றைய அவதாரங்களைக் காட்டிலும் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் மகிமையும், பக்தவாத்ஸல்யமும் மற்றைய கல்யாண குணங்களும் காணக் கிடக்கின்றன வென்று சாதாரண ஜனங்களும் அறியும் வண்ணம் சரித்திர மூலமாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ கிருஷ்ணபகவானது அற்புத ஜனனம், விசித்திர லீலைகள், அதிமானுஷச் செயல்கள், ஞானோபதேசங்கள் முதலியவற்றைப் படிப்பவர்களுக்கு இம்மையில் எவ்வித ஐசுவரியமும், மறுமையில் நற்கதியும் உண்டாகுமென்பது திண்ணம். (விலை ரூ. 1-2-0-லிருந்து ரூ. 1-ஆகக் குறைந்திருக்கிறது)

எளிய நடையில் இனியதமிழில் ஸ்ரீமான் தி. ஆ. சுப்பிரமணிய பாரதி எழுதியது. இந்நூல் அநேக ஸெகண்டரி பள்ளிக்கூடங்களிலும் உபபாடமாக வைக்கப்பட்டிருக்கிறது.

மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்

(காலஞ்சென்ற)

ஸ்ரீமான் ஏ. பஞ்சாபகேசய்யர், எம். ஏ. எல். டி.

அவர்கள் எழுதிய சிறந்த முன்னுரையுடன் கூடியது.

ஆர்ட் பேபரில் அச்சிட்ட கண்ணைக்கவரும் மிகவும் அழகிய ஆப்டோன் படங்கள் கொண்டது. பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கத்தக்கதென துரைத்தனத்தார் அங்கீகரித்தது. விலை ரூ. 1.

விலாசம்:—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

ஷண்முக சுந்தரம்

அல்லது

காதல் திறம்

பி. எஸ். சுப்பிரமணியம், எம். ஏ., அவர்கள் எழுதியது

தெய்வபக்தியிற் சிறந்த தாய் தந்தையர்களால் அன்புடன் வளர்க்கப்பட்டு மிகவும் பழிக்கஞ்சும் குணத்தினால் அற்பச் சங்கதியைப் பெரிதாக மதித்து, உயிர்துறக்கக் கடலுக்குச் சென்று பயந்து, தன்னிருப்பிடந் தெரியாமல் ஓடி, வேறோர் நாட்டில் மாறுவேடம் பூண்டு, போலீஸ் இலாகாவில் சேர்ந்து சிறந்த துப்பனெனப் பெயர் பெற்றும் துக்கக்கடலில் ஆழ்ந்தவனாகக் காலங்கழித்துவந்த ஷண்முக சுந்தரத்தின் மனைவியான பதுமலோசனியெனும் இளங்குமரி, தன்னாயகன் கடலில் இறந்தானென்றெண்ணி வைதவ்யமான துக்கசாகரத்தில், சகோதரன் மனைவி தனக்கிழைத்த துன்பம் சகியாது, தன்னாயகனைப் போல் உயிர் துறக்க வெண்ணி வெள்ளம் புரண்டுவரும் காவிரி நதிக்குச்சென்று தன்னுயிரை மாய்த்துக்கொள்ள முடியாது மயங்கி வீழ்ந்து அம்மயக்கத்தில் கண்ட இரு காட்சிகளினால் தன்னாயகன் இறக்கவில்லையெனத் துணிந்து, ஆண்வேடம் பூண்டு, மாந்தளையில் வசித்த தன் மாமனார் வீட்டுக்குச்சென்று வேலைக்காரனாக அமர்ந்து, கடலிலிருந்து அகப்பட்ட பிணம் தன்னாயகனுடையதல்லவென இரு படங்களினாற் கண்டுபிடித்துத் தன் மாமியாருக்கும் மாமனாருக்கும் தெரிவித்து, சென்னைத் துப்பனொருவனிடம் சென்னைக்கு வந்து தன் புத்தி சாதுர்யத்தினால் தன்னாயகன் கல்கத்தா சென்றானென விசாரித்துத் தெரிந்துகொண்டு அங்கேசென்று அவ்வூரில் முதன்மையான துப்பனான ஷண்முகசுந்தரத்தின் உதவியை நாடி அவனிடம் சென்று அவனே தன் நாயகனெனக்கண்டு களிக்கிறாள். எளிய நடையில் எழுதப்பெற்றது. 8 - மிக்க அழகிய ஆப்டோன் படங்களுடன் விலை ரூ. 2. பூராவும் காலிகோ பைண்ட்செய்தது. ரூ. 2-8-0.

விலாசம் :—அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

மரகதவல்லி - - அணு 12

(பஞ்சாமிர்தம் ஆசிரியர் இயற்றியது)

உயர்ந்த நீதிகளைப் புகட்டும் மிகவும் உயர்தரமான நாவல்

சில முக்கிய அபிப்பிராயங்கள்

ஸ்ரீமான் எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை அவர்கள், எம். ஏ., எல். டி.,—*கதையமைப்பு நவீனக லக்ஷணத்தை முழுதும் அநுசரித்ததா யிருக்கின்றது.

ரிடையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ் திவான் பஹதூர் ஸர். டி. சதாசிவய்யரவர்கள்.— இனிய தமிழிலெழுதப் பட்டு நல்லவருடைய கூட்டுறவு துன்மார்க்கரைத் திருத்த வல்லதென்பதை விளக்குகிறது. இதில், ஆய்ந்தோய்ந்து பாராது அவசரத்தில் கொள்ளும் போலிக் கொள்கைகளை நீக்கி, நம்மவரிடமுள்ள உண்மையான குறைகளைக் காட்டியிருக்கின்றன.

தி. செல்வகேசவராய முதலியார் அவர்கள், எம். ஏ, * * * மரகதவல்லி உண்மையில் நடந்தவாறு எழுதப்பட்டிருக்கின்றது. சோகரசங்கலந்து என் கண்களில் நீர்வடியச் செய்தது. நான் பார்த்த அற்புதமான இரண்டொரு கதைகளில் இது ஒன்றாகுமென உறுதியாய்க் கூறுவேன.

திவான் பஹதூர், எ. சுப்பராயலு ரெட்டியார் அவர்கள்.— நடையும் கருத்தும் பரிசுத்தமாயும், படிப்பவர் மனம் பதியுமாறும் எழுதபபட்டிருக்கிறது.

எம். சிங்காரவேலு முதலியாரவர்கள்.—(பாடசாலை இன்ஸ்பெக்டர்) —நமது சிறுவர் சிறுமியரேயன்றிப் பெரியோரும் பலகால் படிக்க வேண்டிய நூல மரகதவல்லியே என்று நான் திடமாய்க் கூறுவேன். தெளிவும், பரிசுத்தமும் அழகும் கூடிய செந்தமிழில், உயர்ந்த நீதிகளைத் தக்க உதாரணங்களால் காட்டி உண்மையில் நடநதவாறு எழுதப்பட்டிருக்கிறது.

வி. கனகசபைபிள்ளை அவர்கள், பி. ஏ , பி எல் ,— நடை இனியதும் பரிசுத்தமாயிருப்பதுடன் கதை இனிப்பாயும் அழகாயுமிருக்கிறது.


எம்மிடம் கிடைக்கும்

இதர நூல்கள்

	ரூ.	அ.	பை.
ஸ்ரீ பால ராமாயணம், அழகிய படங்களுடன்	0	8	0
ஷண்முக விஜயம் (அழகிய படங்களுடன்)	0	12	0
அக்பர் சக்ரவர்த்தி	0	12	0
அம்பலவாணன் அல்லது நாவாய்க கைதி, முதற் பாகம் (4-படங்களுடன்)	1	8	0
ஷை இரண்டாம் பாகம் (4 படங்களுடன்)	1	8	0
ஷண்முக சுந்தரம் அல்லது காதல் திறம்	2	0	0
தனபாக்கியம் அல்லது அதிருஷ்டவதியின் சரித்திரம் (படங்களுடன்)	2	0	0
விக்ரமசிங்கன் கோட்டை மர்மம் அல்லது சுறபின் வெற்றி (படங்களுடன்)	1	0	0
தஞ்சை நாயகர் தாழ்வு அல்லது விதியின் வலிமை	1	0	0
சிவகுமாரன் அல்லது கொலைஞன் யார்?	1	0	0
மோகனாங்கி அல்லது காணமற்போன பெண்மணி	1	0	0
பஞ்சாததினம் 7-ம் பதிப்பு	0	12	0
மாரகதவல்லி, 6-ம் பதிப்பு	0	12	0
ஸ்ரீமத் பாரத ஸாரம் — 2-ம் பதிப்பு	1	2	0
ஸ்ரீமத் ராமாயண ஸாரம்	1	0	0
ஸ்ரீமத் ராமாயண வினாவிடை, 7 காண்டங்களும்	1	8	0
ஜகஜ்ஜோதி, சரித்திர சம்பந்தமான நாவல்	0	10	0
ஸ்ரீமத் பாகவத ஸாரம் — 2-ம் பதிப்பு	1	0	0
பீமலா அல்லது திவான் மகள்	0	8	0
பாதன் அல்லது ப்ராதரு சிகாமணி	0	12	0
ஆரியமத உபாக்கியானம் 1-ம் பாகம் 17-ம் பதிப்பு	0	8	0
ஷை இரண்டாம் பாகம் 10-ம் பதிப்பு	0	10	0
திருமூலர் திருமந்திரம், புதிய பதிப்பு	2	4	0
மனுநீதிச் சோழன், புதிய பதிப்பு	0	8	0
பாண்டவ சரித்திரம் அல்லது தருமமே ஜயம்	2	4	0
குண்டலகேசி	0	5	0
பீஷ்மா சரித்திரம்	0	6	0
இயற்கை அற்புதங்கள் (3-ம் பதிப்பு)	0	10	0
குஹன் சரித்திரம்	0	4	0
முரளீதரன்	0	10	0
வியாஸ விதானம்	0	12	0
ஐரோப்பிய மஹாயுத்தம்	1	4	0
ஸ்திரிரத்னம் — ஓர் அற்புத நாவல்	1	4	0
ருக்மணி அல்லது பதி பக்தி	0	8	0

திருமூலர் திருமந்திரம்

(புதிய பதிப்பு - பாக்கெட் அளவு)



3000 வருடம் சிவயோகசமாதியிலிருந்து ஒவ்வோர் ஆண்டுக்கு ஒவ்வோர் அருட்பாவாக திருமூலநாயனாரால் அருளிச் செய்யப்பட்டது. உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டது. திருமூலர் ஆப்டோன் படமும் கொண்டது புதியபதிப்பு இதன் விலை ரூ. **2-4-0**

ஸ்ரீமத் ராமாயண வினா விடை
(6-ம் பதிப்பு)
விலை ரூ. 1-8-0.

மனுநீதிச் சோழன் அணா **8**

ஷண்முகவிஜயம் 12

விலாசம்:— அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.